வெளியீடு. 26-10-98

Issued 26-10-98

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

2

திங்கட்கிழமை, மார்ச் 30, 1998 – தொகுதி 41 – எண் 2

**Monday the 30th March, 1998 – Volume 41 – No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Fort St. George,**
**Chennai-600 009**

[Price Rs. 3.00

H14/99

30-3-1998

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **1. வினாக்கள்-விடைகள்—** | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் | 53-105 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (ஐந்தாவது மற்றும் ஆறாவது பட்டியல்கள்) | 105-173 |
| **2. அறிவிப்புகள்—** | |
| (அ) அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டம் | 77 |
| (ஆ) முன்பண மானியக் கோரிக்கைகள், 1998-99, மொழிதல் (ஆ.செ.) | 179 |
| (இ) தமிழ்நாடு நிதி ஒதுக்க (முன்னளி மானிய வாக்களிப்புச்) சட்டமுன்வடிவு, 1998 (ஆ.செ.) | 184 |
| (ஈ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1997-98, மொழிதல் (ஆ.செ.) | 185 |
| (உ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 1998 (ஆ.செ.) | 189 |
| **3. இறுதித் துணை நிதிநிலை அறிக்கை, 1997-98, அளித்தல்—** | 173-179 |
| *மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 173-179 |
| **4. முன்பண மானியக் கோரிக்கைகள், 1998-99, வாக்கெடுப்பு—** | 180-183 |
| *மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 180 |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**பங்குனி 16, ஈஸ்வர - திருவள்ளுவர் ஆண்டு 2029**
**1998 மார்ச் 30, திங்கட்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு"

நீதி வழுவாமல் நன்மைகளைச் செய்து பிறருக்குப் பயன்படப் பணியாற்றுகிறவர்களின் நல்ல பண்பை உலகம் பாராட்டும்.

## 1. வினாக்கள்-விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 61, திரு. இ.ஏ.பி. சிவாஜி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**61—**

### காவல் நிலையம் திறத்தல்

***7706—திரு. இ.ஏ.பி. சிவாஜி:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி தொகுதி, திருவள்ளூர் வட்டம், மப்பேடு காவல் நிலையம் எப்போது திறக்கப்படும்?

| | பக்கங்கள் |
|---|---|
| **5.** அரசினர் சட்டமுன்வடிவுகள் **(அறிமுகம் செய்தல்)—** | |
| (அ) தமிழ்நாடு நிதி ஒதுக்க (முன்னளி மானிய வாக்களிப்புச்) சட்டமுன்வடிவு, *1998* | 184 |
| (ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, *1998* | 189-190 |
| **6.** கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், **1997-98**—வாக்கெடுப்பு | 185-189 |
| *மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 185 |
| **7.** அரசினர் தீர்மானம்— | |
| சட்டமன்றப் பேரவை விதி *30, 130* மற்றும் *132*-ஐத் தளர்த்தல் | 190-191 |
| **8.** அரசினர் சட்டமுன்வடிவுகள் **(ஆய்வு செய்தல்)—** | |
| (அ) தமிழ்நாடு நிதி ஒதுக்க (முன்னளி மானிய வாக்களிப்புச்) சட்டமுன்வடிவு, *1998* | 191-193 |
| மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 191, 193 |
| (ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, *1998* | 193-194 |
| *மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 193, 194 |
| **9.** பேரவை விதி **110-ன்கீழ் தொழிலாளர் நலத் துறை** அமைச்சரின் அறிக்கை— | 195-197 |
| பி. அண்டு சி. ஆலைத் தொழிலாளர் பிரச்சினை குறித்து தொழிலாளர் ஆணையர் முன்பு நடந்த சமரசப் பேச்சுவார்த்தையில் இருதரப்பினரும் ஏற்றுக்கொண்டு நிறைவேற்றப்பட்ட ஒப்பந்தம். | |


218451.




| | பக்கங்கள் |
|---|---|
| **10.** வரவு-செலவுத் திட்டம், **1998-99**, பொது விவாதம்— | 197-264 |
| திரு. டி. சுதர்சனம் | 197-214 |
| திரு. சி.டி. தண்டபாணி | 214-225 |
| திரு. ஜி. பழனிசாமி | 225-237 |
| திரு. குழந்தை தமிழரசன் | 238-246 |
| திரு. ரா. ஈஸ்வரன் | 246-251 |
| * திரு. செங்கை சிவம் | 252-257 |
| டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் | 257-264 |
| ***11.*** பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— | 265-268 |


D
Y211,31'N98
N98.41.2

[1998 மார்ச் 30

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மப்பேடு காவல் நிலையம் புதிய கட்டடத்தில் 27-3-1997 முதல் இயங்கி வருகிறது.

**திரு. இ.ஏ.பி. சிவாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அசுர வேகத்தில் பணி முடித்துக் கொடுத்த அரசுக்கும், தமிழக முதல்வர் மாண்புமிகு கலைஞர் அவர்களுக்கும் மப்பேடு பகுதி மக்கள் சார்பாக என் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் ஆ. ஞானசேகரன்.

**டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரும் நிதியாண்டில் எத்தனை காவல் நிலையங்கள் அமைவதற்கு வாய்ப்பு உள்ளது? அப்படி அமைக்கப்படும் காவல் நிலையங்களில் ஒரு காவல் நிலையத்தை என்னுடைய தொகுதியான மேல்மலையனூருக்கு வழங்கிட கருணை உள்ளம்கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி முதலமைச்சர்:** தலைவர் அவர்களே, எத்தனை காவல் நிலையங்கள் அமைக்கப்படவிருக்கின்றன என்ற அந்த விவரங்களை காவல் துறை மானியத்திலேதான் விளக்க வேண்டியுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பரிதி இளம்வழுதி.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழகத்தில் எத்தனை வகையான காவல் நிலையங்கள் உள்ளன என்பதை அறிய விரும்புவதோடு, ஒரு காவல் நிலையத்தை அமைப்பதற்கு அரசுக்கு எவ்வளவு செலவாகிறது என்பதையும் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது தமிழகத்தில் ஐந்து வகையான காவல் நிலையங்கள் உள்ளன. மாநகர் காவல் நிலையம், மாவட்டத் தலைநகரக் காவல் நிலையம், நகராட்சித் தலைமையிடக் காவல் நிலையம், காவல் வட்டத் தலைமையிடக் காவல் நிலையம், கிராமப்புறக்



1998 மார்ச் 30]

காவல் நிலையம் என்று ஐந்து வகையான காவல் நிலையங்கள் இருக்கின்றன. முழுக் காவல் நிலையத்தை ஏற்படுத்த ஆகின்ற செலவு, மாநகரக் காவல் நிலையத்திற்குத் தொடரும் செலவினம் 33,85,236 ரூபாய்; தொடராச் செலவினம் 6,76,228 ரூபாய். மாவட்டத் தலைநகரக் காவல் நிலையத்திற்குத் தொடரும் செலவினம் 27,23,436 ரூபாய்; தொடராச் செலவினம் 6,31,301 ரூபாய். நகராட்சித் தலைமையிடக் காவல் நிலையத்திற்குத் தொடரும் செலவினம் 20,17,497 ரூபாய்; தொடராச் செலவினம் 5,78,961 ரூபாய். காவல் வட்டத் தலைமையிட காவல் நிலையத்திற்குத் தொடரும் செலவினம் 14,08,044 ரூபாய்; தொடராச் செலவினம் 5,77,584 ரூபாய். கிராமப்புறக் காவல் நிலையத்திற்குத் தொடரும் செலவினம் 10,38,586 ரூபாய்; தொடராச் செலவினம் 5,24,970 ரூபாய்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் நிலையத்தைப் பொறுத்தவரையிலே அதற்கான அவசியமும், தேவையும் உள்ள இடங்களிலே உருவாக்குவதுதான் பொருத்தமாக இருக்கும். அந்த அடிப்படையில் இன்றைக்கு சாதி, மத மோதலுக்குரிய, பதட்டமாக இருக்கக்கூடிய பகுதிகளைத் தேர்வு செய்து அந்த இடங்களிலே காவல் நிலையங்களை உருவாக்குவதற்கு மாநில அரசு முன்னுரிமை தரவேண்டும் என்று நான் கேட்டு, திருப்பூர் தொகுதியில் மங்கலம் பகுதியில் அத்தகைய பதட்டம் அடிக்கடி நிலவுகிற காரணத்தினால் திருப்பூர், மங்கலம் பகுதியில் ஒரு புதிய காவல் நிலையத்தை அமைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்தகைய சூழ்நிலை உள்ள இடங்களில் சிறப்பு நேர்வாகக் கருதிப் அதுபற்றி, பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

முற்பகல் 9-35

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம், பவானி நகரில் துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம், ஆய்வாளர் அலுவலகம், உதவி ஆய்வாளர் அலுவலகம், இவைகள் எல்லாம் கடந்த 35 ஆண்டுகளுக்கு முன்பாக கட்டிய கட்டடங்கள் ஆகும். அவைகள் பழுதடைந்த

[1998 மார்ச் 30

சூழ்நிலையில் இருப்பதால் அவைகளை மாற்றுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்—காவலர்களுக்கு உறுதுணையாக இருக்கும் அவர்கள்—அதனைச் செய்து கொடுப்பார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, பல காவல் நிலையங்கள் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போல இருக்கின்றன என்பது உண்மை. அவை பற்றியெல்லாம் அரசு பரிசீலித்து உரிய நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது. இந்த மூலக் கேள்வியில் இடம் பெற்றுள்ள திருவள்ளூர் வட்டம், மப்பேடு காவல் நிலையம்கூட 1928-லிருந்து இதுவரையிலே வாடகைக் கட்டிடத்திலேதான் இயங்கி வந்தது. இப்போதுதான் அதற்கு ஒரு புதிய கட்டிடம் வழங்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் தீவிரவாதிகள், அவர்களுடைய வேலையைச் செய்வதற்காக வெடிகுண்டுகள், ஆயுதங்கள் போன்றவைகளை ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குக் கடத்திச் செல்கின்றார்கள். முன்பு மெயின் ரோடுகளில் எல்லாம் ஜாதிக் கலவரங்களை ஒடுக்குவதற்காக போலீஸ் சோதனைக் காவல் நிலையம் வைத்திருந்தார்கள். அப்படிப்பட்ட சோதனைக் காவல் நிலையங்களை மெயின் ரோடு ஓரங்களில் அதிகப்படுத்த அரசு ஆவன செய்யுமா? இப்போது அப்படிப்பட்ட காவல் நிலையங்கள் எத்தனை இருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றிய விவரம் என்னிடத்திலே இல்லையென்றாலும்கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய இந்த அரிய கருத்து ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, அதுபற்றிப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நம்முடைய காவல் துறையைச் சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கக்கூடிய இந்த நேரத்திலே, இன்னும் காவலர்களுடைய எண்ணிக்கை எல்லாம் கூடுகின்ற இந்த நேரத்திலே



1998 மார்ச் 30]

பெண் உதவி ஆய்வாளர்களைத் தேர்வு செய்வதாக அறிவித்திருக்கின்றார்கள். கிரேடு-I என்று சொல்லக்கூடிய பெண் காவலர்கள் ஏற்கெனவே 10, 15 ஆண்டுகளுக்கு முன்பாகத் தேர்வு செய்யப்பட்டு பதவி உயர்வு வழங்கப்படாமல் தற்போது இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாகத்தான் அவர்களுக்குப் பதவி உயர்வு வழங்கப்பட்டது. இப்போது பெண் உதவி ஆய்வாளர்கள் தேர்வு செய்யப்படக்கூடிய நேரத்திலே, ஏற்கெனவே தேர்வு செய்யப்பட்டவர்களுக்குத் தகுதியின் அடிப்படையிலே, சீனியாரிட்டி அல்லது பட்டம் பெற்றவர்களுக்கெல்லாம் பதவி உயர்வு வழங்கி மீதம் உள்ளவர்களைத் தேர்வு செய்வதற்கு வாய்ப்பினை ஏற்படுத்தித் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய இந்தக் கருத்து கோரிக்கையாக அரசுக்கு ஏற்கெனவே வந்துள்ளது. அந்தக் கோரிக்கை பற்றியும், புதிய நிலையிலே எடுக்க வேண்டிய முடிவுகளைப் பற்றியும் அரசு ஆராய்ந்து கொண்டிருக்கின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குத்தாலம் பி. கல்யாணம்.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிகார எல்லையை அதிகமாகக் கொண்டுள்ள பெரிய காவல் நிலையங்கள் இரண்டாகப் பிரிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றியும் யோசிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் கோரிக்கை விடுத்ததுபோல, தலைமைக் காவலர் பதவி உயர்வு கொடுக்கப்பட்டது. ஆனால் அதற்கு அடுத்த கட்டமாக இருக்கிற உதவி ஆய்வாளர் பதவி உயர்வு தேக்கமாக இருக்கிறது. ஆகவே, அந்தப் பதவி உயர்வு மற்றவர்களுக்கு வழங்கப்பட்டதுபோல காவலர்களுக்கும் வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும், இதற்கும் தொடர்பு இல்லை. மூலக் கேள்வியிலே

[1998 மார்ச் 30

அனைவரும் ஒளிந்துகொண்டு தங்களுடைய கேள்விகளைக் கேட்கின்ற காரணத்தினால் நான் எல்லா விவரங்களையும் வைத்திருக்க இயலவில்லை. பெண் காவலர் மீது, அவர்களுடைய பதவி உயர்வு மீது அதிக அக்கறை உறுப்பினர்களுக்கு இருக்குமேயானால் தனியாகக் கேள்வி கேட்டால் நல்ல விவரங்களோடு வந்து மாண்புமிகு உறுப்பினர்கள் மனம் ஆறுதல் பெறக்கூடிய அளவிற்குப் பதிலை வழங்க முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது எங்கே பார்த்தாலும் வெடிகுண்டுகளும், திருட்டு மற்றும் வழிப்பறிக் கொள்ளைகளும் அதிகமாக இருக்கின்ற இந்த நேரத்தில் எல்லாக் காவல் நிலையங்களுக்கும் இரவு நேரத்தில் ரோந்து வருவதற்கு வசதியாக ஈப்புகளை ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் வழங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது போதுமான அளவிற்கு இந்த வாகனங்கள் காவல் நிலையங்களுக்கு வழங்கப்பட்டுதான் வருகின்றன. அவ்வப்போது தேவைக்கு ஏற்றபடி வழங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பாண்டில் தமிழகத்தில் பெண் காவல் நிலையங்களைத் திறப்பதற்கு அரசு முயற்சி செய்யுமா? எத்தனை இடங்களில் அப்படித் திறப்பதற்கு அரசு முயற்சி செய்யும் என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-40

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** இப்போது தமிழகத்தில் 57 மகளிர் காவல் நிலையங்கள் இருக்கின்றன. மேலும் நிலையங்களைத் தொடங்குவதுபற்றி காவல் துறை மானியம் வரும்போதுதான் எடுத்துக் கூற முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ச. அழகிரி.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



1998 மார்ச் 30]

காவல் துறையில் எந்தத் தகுதியில் பணியாற்றுபவர்களானாலும் 10 ஆண்டுகள் பணியாற்றியவர்களுக்குப் பதவி உயர்வு அளிக்கின்ற குறிப்பு அரசினுடைய கையில் இருக்கிறதா? அப்படி 10 ஆண்டுகள் பணியாற்றியவர்களுக்குப் பதவி உயர்வு கொடுத்தால் காவல் துறையிலே பல பேர்களுடைய பிரச்சினை தீரும் என்று பரவலாகச் சொல்லப்படுகிறது. அதை அரசு அறியுமா என்று தங்கள் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதே சர்வீஸ் அடிப்படையிலே அப்படிப்பட்ட பதவி உயர்வுகள் தரப்படுவதாகத்தான் எனக்கு நினைவு. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வியின் அடிப்படையில் அதை ஆராய்ந்து வேறொரு கட்டத்திலே விளக்கம் அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அரசு புதிதாக உதவி ஆய்வாளர்களை நியமிக்க விளம்பரம் தந்துள்ளது. ஏற்கெனவே, கடந்த கால ஆட்சியில் தேர்வு செய்து எடுக்கப்பட்டவர்களிலே 98 சப்-இன்ஸ்பெக்டர்களுக்கு நியமன உத்தரவு கொடுக்கப்படாமல் விடுபட்டிருக்கிறது. அவர்கள் பயிற்சிக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. அதைப்போல 336 காவலர்கள் பதவிக்கு ஆட்கள் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கும் நியமன உத்தரவு கொடுக்கப்படாமல் நிலுவையில் இருக்கிறது. 1993 ஆம் ஆண்டு....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இக்கேள்விக்கு ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லி விட்டார்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது சரியாக clarify ஆகவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படியானால் நீங்கள் சரியாகக் கவனிக்கவில்லை என்றுதான் அர்த்தம்.

**திரு. சி. ஞானசேகரன்:** நிச்சயமாக அப்படி இல்லை. இதை மட்டும் கேட்டு விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் இதை நான் அனுமதிக்கமாட்டேன். திரு. வ. அன்பழகன்.

[1998 மார்ச் 30

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.....

**HON. SPEAKER:** He has given a reply. (Interruption) No.

**THIRU C. GNANASEKARAN:** Sir, I want a clarification.

**HON. SPEAKER:** Then, you have not been listening to the reply.

**THIRU C. GNANASEKARAN:** Sir, I will take only one minute.

**HON. SPEAKER:** It is not a question of minute. It is a question of repeating a question. (Interruption) Alright. Go on.

**THIRU C. GNANASEKARAN:** Sir, I want only one clarification.

**HON. SPEAKER:** Hon. Chief Minister has already said that it will be sympathetically considered. What more clarification do you want? 98 பேர்களுக்குக் கிடைக்கவில்லை என்று சொன்னதற்கு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். இன்னும் என்ன சொல்ல வேண்டியிருக்கிறது?

**திரு. சி. ஞானசேகரன்:** 336 காவலர்களும் விடுபட்டுப் போய்விட்டார்கள். அதைப்பற்றித்தான் சொல்ல வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் கேளுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி. அப்படி விடுபட்டுப்போன 336 காவலர்களுக்கும், 98 சப்-இன்ஸ்பெக்டர்களுக்கும் வாழ்வு அளிக்கப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன். அதேபோல, தற்போது காவலர்களுக்கு அளிப்பதாக அறிவிக்கப்பட்ட ரொக்கப் பரிசுத் தொகையை, தீயணைப்புப் படைக் காவலர்களும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் அந்தப் பரிசுத் தொகை அளிக்கப்படுமா என்பதையும் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் குறிப்பிட்டதைப்போல ஏற்கெனவே இதற்கான விடை அளிக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும், எத்தனை காவலர்கள் என்று உச்சவரம்பு வைக்கப்பட்டு, அவர்கள் எடுக்கப்பட்ட பிறகு,



1998 மார்ச் 30]

ஏதோ சில காரணங்களுக்காக, 98 சப்-இன்ஸ்பெக்டர்கள், 336 காவலர்கள் அதிகமாக எடுக்கப்பட வேண்டிய ஒரு சூழ்நிலை உருவாகி, அவர்களையும் எடுத்துக் கொள்வதற்கு, நாமே அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலைமை உருவாகி இருப்பதை நான் மறுக்கவில்லை. அதை அனுதாபத்தோடு கவனிக்கலாம் என்று குறிப்பிட்டிருக்கிறேன். அப்படி அனுதாபத்தோடு கவனிக்கப்படும்போது, 'இப்படியும் ஆகலாம், அப்படியும் ஆகலாம்' என்பதையும் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்து, இப்போது தரப்படுகின்ற 1,000 ரூபாய் பரிசு காவல் துறையினருக்கு என்றுதான் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இன்றுள்ள சூழ்நிலையில் அபாயகரமான இடங்களிலே, அபாயத்தை எதிர்நோக்கி, அதைப்பற்றிக் கவலைப்படாமல், உயிருக்குத் துணிந்து பணியாற்றுகின்ற காவலர்களுக்கு மாத்திரம்தான் அந்த ஆயிரம் ரூபாய் பரிசு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வ. அன்பழகன்.

**திரு. வ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுமக்களுடைய வசதிக்காக தமிழ்நாட்டில் காவல் நிலைய எல்லைகள் திருத்தியமைக்கப்படுமா என்பதை அறிந்துகொள்ள விரும்புவதோடு, சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகளை உடனுக்குடன் கவனிக்க ஒவ்வொரு மாவட்டத்திலும் நடமாடும் காவல் நிலையங்கள் அமைக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதையும் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவலர்களே இப்போது நடமாடிக் கொண்டிருக்கிற காரணத்தினால், நடமாடும் காவல் நிலையம் தேவையில்லை. (சிரிப்பு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 62, திரு. க. மணிவர்மா, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**62—**

## தொழிலில் பின்தங்கிய வட்டமாக அறிவித்தல்

***10606—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்டராம்பட்டு வட்டத்தைத் தொழிலில் மிகவும்

[1998 மார்ச் 30

பின்தங்கிய வட்டமாக அறிவிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): திருவண்ணாமலை மாவட்டத்தில், செங்கம் வட்டத்தில் உள்ள தண்டராம்பட்டு ஊராட்சி ஒன்றியம் தொழிலில் மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதியாக அரசாணை நிலை எண் 41, தொழில் துறை, நாள் 18-3-1996-ல் அறிவிக்கப்பட்டுள்ளது.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி. கடந்த கால ஆட்சியினர் தண்டராம்பட்டில் தொழிற்பேட்டை துவங்குவதாக அறிவித்து, அதை அறிவிப்போடு விட்டுவிட்டார்கள். தண்டராம்பட்டு பகுதியிலே வாழ்கின்ற மக்கள் மிகவும் பின்தங்கிய நிலையிலே, விவசாயத்தையே நம்பி வாழ்கின்றார்கள். அந்தப் பகுதியில் வாழ்கின்ற இளைஞர்கள் வேலை தேடி வெளிமாநிலங்களுக்குச் செல்கிறார்கள். அதைத் தடுக்கின்ற வண்ணம், மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடந்தகால ஆட்சியினரால் அறிவிக்கப்பட்ட அந்தத் தொழிற்பேட்டையைத் தொடங்க ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 9-45*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிவிக்கப்பட்ட இடங்களில் எல்லாம் தொழிற்பேட்டைகள் தொடங்குவதுதான் இந்த அரசினுடைய நோக்கம். அதை இந்த அரசு படிப்படியாக நிறைவேற்றும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலில் மிகவும் பின்தங்கிய வட்டமாக அரசு அறிவிக்கின்றது. அதுபோல பின்தங்கிய வட்டமாகவும் அறிவிக்கின்றது. மிகவும் பின்தங்கிய வட்டங்களாக அரசு அறிவித்தபிறகு, பின்தங்கிய வட்டங்களாக அறிவித்த பிறகு, மீண்டும் அதை மாற்றியமைக்க அரசு எவ்வளவு காலக்கெடு நிர்ணயிக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.



1998 மார்ச் 30]

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பின்தங்கிய வட்டங்கள் முன்னேறிய வட்டங்களாக மாறுவதுதான் காலக்கெடு. இந்த அறிவிப்பு—1970 ஆம் ஆண்டு இந்த அரசு ஆட்சிப் பொறுப்பிலே இருந்த அந்தக் காலத்திலே, தமிழகத்தில் சில வட்டங்கள் தொழிலில் வளர்ச்சியடையாத வட்டங்கள், 'Industrially under-developed' என அறிவிக்கப்பட்டு, அங்கே அமைக்கப்படும் தொழிற்சாலைகளுக்கு மின் கட்டண விகிதங்களில் சில சலுகைகள் வழங்கப்பட்டன. அதற்குப் பிறகு 1971 ஆம் ஆண்டில் பின்தங்கிய பகுதிகளில் அமைக்கப்படும் தொழிற்சாலைகளுக்கு மைய அரசு வழங்கிய 'ஊக்கு உதவித் திட்டம்' — Central Investment Subsidy Scheme - தமிழகத்திலே உள்ள 33 வட்டங்களில் செயல்படுத்தப்பட்டது. பின்னர் தமிழ்நாட்டில் 1979 ஆம் ஆண்டில் 24 வட்டங்கள் தொழிலில் பின்தங்கிய வட்டங்களாக அறிவிக்கப்பட்டன. தமிழ்நாட்டில் தற்போது மொத்தம் 194 வட்டங்கள் உள்ளன. 1989 ஆம் ஆண்டில், அவற்றில் 105 வட்டங்கள் தொழிலில் பின்தங்கிய வட்டங்களாக அறிவிக்கப்பட்டன. பின்னர் 1990 ஆம் ஆண்டு நான் குறிப்பிட்ட 105 வட்டங்களில், 30 வட்டங்கள் தொழிலில் மிகவும் பின்தங்கிய வட்டங்களாக, 'Industrially Most Backward' என்று அறிவிக்கப்பட்டன. இதன் காரணமாக மீதமுள்ள 75 வட்டங்கள் பின்தங்கிய வட்டங்களாக இருந்தன. மற்றவை மிகவும் பின்தங்கிய வட்டங்களாக அறிவிக்கப்பட்டன. இதற்கு ஒரு காலக்கெடு இல்லை. அந்தந்த வட்டங்கள் பின்தங்கிய நிலையிலிருந்து முன்னேறுகிற வரையிலேதான் காலக்கெடு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிப்பட்டு வட்டத்தைப் பொறுத்தவரையில் 1-3-1996 அன்று அது மிகவும் பின்தங்கிய வட்டமாக அறிவிக்கப்பட்டிருந்தது. 1-3-1996-க்குப் பிறகு, இந்த அரசு பொறுப்பேற்ற பின்பு, அந்தச் சலுகை விலக்கப்பட்டு, திரும்பப் பெறப்பட்டிருக்கிறது. பிறகு ஒன்றியமாகப் பிரிக்கப்பட்டு, ஆர்.கே. பேட்டை ஒன்றியம் மட்டும் மிகவும் பிற்பட்ட ஒன்றியமாக இருந்ததை மாற்றி, 'வெறும் பின்தங்கிய யூனியன்' என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் திரு. ஆற்காடு வீராசாமி அவர்களும், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. க. பொன்முடி அவர்களும் என்னுடைய தொகுதிக்கு நேரடியாக வருகை தந்து சிறப்பித்திருக்கிறார்கள். அவர்கள்கூட அங்கே ஒரு தொழிற்சாலையைப் பார்த்ததாகக் கூற

[1998 மார்ச் 30

பின்தங்கிய பகுதியாக அறிவிக்குமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அறிவிக்காததற்கான காரணத்தை மாண்புமிகு உறுப்பினரே முதலில் சொல்லிவிட்டார். எனவே, இதைப்பற்றி இப்போது ஆராய்வதற்கில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரா. சேதுநாதன்.

**திரு. ரா. சேதுநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிட்கோ நிறுவனம் தமிழகத்திலே எத்தனை இடங்களில் நில ஆர்ஜிதம் செய்து தொழிற்பேட்டை அமைக்காமல் இருக்கிறது என்பதை அறிய விரும்புவதோடு, திண்டிவனத்திலே சிட்கோ நிறுவனம் 40 ஏக்கர் நிலத்தை ஆர்ஜிதம் செய்து, அதைப் பல ஆண்டுகளாக அப்படியே வைத்து இருக்கிறார்கள்; அங்கு எப்போது தொழிற்பேட்டை துவக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அரசாங்க பாஷையிலே சொல்ல வேண்டுமானால் விரைவில் தொடங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பின்தங்கிய பகுதிகளாக சில வட்டங்கள் அறிவிக்கப்படுகின்ற நேரத்திலே, சில பகுதிகளிலே வேலையில்லாத் திண்டாட்டம் அதைவிட மிக அதிகமாக இருந்து கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட பகுதியாக என்னுடைய ஆண்டிமடம் தொகுதியிலே செந்துறை இருக்கிறது அங்கே சிமெண்ட்டுக்கான மூலப்பொருள் ஏராளமாகக் கிடைக்கிறது. அங்கே தனியே 2 சிமெண்ட் தொழிற்சாலைகள் இருக்கின்றன. எனவே, அத்தகைய பகுதிகளைக் கணக்கில் எடுத்துக்கொண்டு தொழிற்பேட்டை தொடங்குவதற்கு அரசு இந்த ஆண்டு ஆவன செய்யுமா என்று நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தங்கள் மூலமாக கோரிக்கையாக வைக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியவாறு, இதுபோன்று வேலைவாய்ப்புகளே இல்லாத இடங்களில் தொழிற்பேட்டை தொடங்குவதும், தொழில்கள் தொடங்குவதும்தான் அரசினுடைய நோக்கமாக இருந்து வருகின்றது.



1998 மார்ச் 30]

அந்த அடிப்படையிலே, அவர் குறிப்பிட்ட ஆண்டிமடம் தொகுதியிலே உரிய பரிசீலனை செய்து அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும். என்ன செய்வது? தொகுதியின் பெயரே ஆண்டிமடம். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பின்தங்கிய வட்டத்தில் தொழில் தொடங்குபவர்களுக்கு அரசு எத்தனை வகையான சிறப்புச் சலுகைகளை அளிக்கிறது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, குறிப்பாகவும் சிறப்பாகவும் மின்கட்டண விகிதங்களிலே சலுகைகள் வழங்கப்படுகின்றன. ஏனைய சலுகைகளைப்பற்றி தனிக் கேள்வி கேட்க வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 63, திரு. பா. வேல்துரை, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**63—**

**மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு ஊதிய உயர்வு**

***1772—திரு. பா. வேல்துரை:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழக அரசு ஊழியர்களில் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியம் வழங்க ஆவன செய்யப்படுமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழக அரசு ஊழியர்களில் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு மத்திய அரசினுடைய முதல்வர் என்ற அந்தப் பதவிக்கு ஈடான ஊதியம் வழங்குவது என்பது இயலாது. மத்திய அரசின் முதல்வர் பதவி மற்றும் அவருடைய பணியோடு மாநில மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் மற்றும் அவருடைய செயல்பாட்டையும் ஒப்பிட இயலாது. எனவே, மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையாக

மாட்டார்கள். ஒரு தொழிற்சாலைகூட தோன்றாத என்னுடைய பள்ளிப்பட்டு தொகுதியை மிகவும் பிற்பட்ட தொகுதியாக அறிவித்து இருந்து வாபஸ் பெற்றதை, நம்முடைய அரசின்மீது ஒரு குறையாக தொகுதி மக்கள் கூறுகிறார்கள். உண்மை நிலையை ஆராய்ந்து, இதற்கு ஒரு விடிவு காலம் வரவேண்டுமென்று கருதி, மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு உத்தரவு போட்டார்கள். இதற்காக தொழிற் துறைச் செயலாளர் அவர்கள் எனக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார்கள். அந்தக் கடிதத்தில் என்ன எழுதியிருந்தார்கள் என்றால்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உரை நிகழ்த்துகிறீர்கள். இது உரையாற்றும் நேரம் அல்ல. துணை வினாவைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் பகுதியிலே தொழிற்சாலையில் பணிபுரிகிறவர்களின் விகிதாச்சாரம் அதிகம் என்ற நிலையில் அந்தச் சலுகை வாபஸ் பெறப்பட்டிருக்கின்றது என்று எழுதியிருந்தார்கள். அந்தத் தொழிற்சாலைகளில் பணிபுரிகிற நபர்கள் யார் என்றால், வீடுகளில் உள்ள விசைத்தறி நெசவாளர்கள் என்று அவர்கள் கணக்கிட்டுக் கூறியிருந்தார்கள். ஆகவே, இந்த அநீதியைப் போக்க இந்த அரசு உரிய நடவடிக்கை எடுத்து இதற்குப் பரிகாரம் தேடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே வட்டங்கள் 'பின்தங்கிய' அல்லது 'மிகவும் பின்தங்கிய' என்ற நிலையிலே பிரிக்கப்பட்டிருந்தன. பிறகு 1995 ஆம் ஆண்டில் ஓர் அரசாணை மூலமாக வட்டாரங்கள் அவ்வாறு பிரிக்கப்பட்டன. Blocks—அவையும் அவ்வாறு பிரிக்கப்பட்டன. அதன் காரணமாக மாண்புமிகு உறுப்பினருடைய அந்தப் பகுதி பாதிக்கப்பட்டிருக்கக்கூடும். வட்டத்திலே சேர்ந்திருக்கும்போது அது பின்தங்கிய பகுதியிலே சேர்ந்திருந்தது. வட்டாரமாகப் பிரிக்கப்பட்டிருந்தபோது, அந்த நிலையை அது இழந்து இருக்கிறது. ஆனாலும் மாண்புமிகு உறுப்பினர் கூறுகின்ற அந்த நிலை அங்கே உள்ளதா என்பதை மீண்டும் ஆராய்ந்து உரிய நடவடிக்கை தேவைப்பட்டால் எடுக்கப்படும்.

*முற்பகல் 9-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி.





**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் எல்லாப் பகுதிகளும் சமச்சீர் வளர்ச்சியோடு தொழில் வளர்ச்சியில் முன்னேற வேண்டும் என்ற அக்கறையோடு இப்படிச் சில பகுதிகள் தொழில் ரீதியாகப் பின்தங்கிய வட்டங்களாக அறிவிக்கப்படுகின்றன. கடந்த 18-3-1996 அன்று சில பின்தங்கிய வட்டங்கள் முன்னேறியதாக அறிவிக்கப்பட்டன. பிறகு நமது அரசு வந்ததற்குப் பிறகு, அது 1997 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரை அந்தச் சலுகைகள் மீண்டும் தொடரும் என்று அறிவிக்கப்பட்டது. இருந்தாலும்கூட, அது போதுமான கால அவகாசமாக இல்லை. குறிப்பாக பெருந்துறை, ஊத்துக்குளி, சென்னிமலை ஒன்றியங்கள் அடங்கிய பெருந்துறை வட்டத்திற்கு மேலும் ஓரிரு ஆண்டுகள் சலுகைகளை நீட்டித்துத்தர முதலமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இறுதியாக எழுப்பிய கோரிக்கை பற்றி ஆராயப்படும். ஆனால் பின்தங்கிய, மிகவும் பின்தங்கிய என்று பிரிப்பது ஒரு சமநிலையை உருவாக்க உதவுமா என்ற ஒரு கேள்வியை, அவருடைய கருத்து இங்கே எழுப்பி இருக்கின்றது. சமுதாய மக்களிலேயே பின்தங்கிய மக்கள், மிகவும் பின்தங்கிய மக்கள் என்று பிரிக்கப்பட்ட காரணத்தால்தான் சமூக நீதி, சம நீதி கிடைக்கும் என்று நாம் கருதுகின்றோம். எனவே, இந்தப் பகுதிகளையும் அப்படிப் பிரித்தால்தான் மொத்தமாக நம்முடைய மாநிலத்திலே சமச்சீரான ஒரு நிலை தொழில் வளத்திலே ஏற்படும் என்று அரசு கருதுகிறது. உறுப்பினர் அதிலே வேறுபடமாட்டார் என்று நம்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான ஒட்டன்சத்திரத்தில் எந்தத் தொழிற்சாலையும் இல்லை என்று அரசின் ஆய்வில் தெரியவந்துள்ளது. தொழிலாளர்கள் நூற்றுக்கு 2.16 விழுக்காடு இருப்பதால், தொழிலில் மிகவும் பின்தங்கிய பகுதியாக ஒட்டன்சத்திரத்தை அறிவிக்க முடியாது என்று அரசின் நிலை உள்ளது. அங்குள்ள மக்கள் விவசாயத்தை நம்பித்தான் வாழ்கின்றார்கள். அங்கு எந்தத் தொழிற்சாலையும் இல்லை. எனவே, அரசு மறுபரிசீலனை செய்து ஒட்டன்சத்திரத்தை, தொழிலில்

[1998 மார்ச் 30

**டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்தக் கேள்வியை எழுப்பியதே, உலக வங்கி உதவியுடன் நடப்பாண்டில் செயல்படுத்தப்பட்டு வரும் மகளிர் மற்றும் குழந்தைகள் நலத் திட்டத்தின்கீழ் எப்படியும் கிருஷ்ணகிரி பொது மருத்துவமனைக்கு ஒரு புதிய கட்டிடத்தைக் கேட்டு வாங்க வேண்டுமென்பதற்காகத்தான். மாண்புமிகு முதல்வர் அவர்கள் அளித்துள்ள ஈடிணையற்ற நிதிநிலை அறிக்கையில்கூட, உலக வங்கி நிதியுதவியுடன் 23.14 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, மகளிர் மற்றும் குழந்தைகள் நலத் திட்டம் செயல்பட்டு வருவதைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கின்றார்கள். ஒரு ஐ. ஏ. எஸ். அதிகாரியும் இத்திட்டத்திற்கென குழந்தைகள் நலத் திட்ட இயக்குநராக நியமிக்கப்பட்டிருக்கிறார். இதன் முன்னோடித் திட்டமாக....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துணை வினாவா இது?

**Dr. KANCHANA KAMALANATHAN:** Hon. Speaker, Sir, I am sure my question is going to be an informative one. If you permit me....

**HON. SPEAKER:** No, It must be very short. It cannot be a speech.

**டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** Pilot Project என்ற முன்னோடிச் செயல் திட்டம் ஏற்கெனவே பரீட்சார்த்தமாக இரண்டொரு ஊர்களில் நடத்தப்பட்டிருக்கிறது. இவற்றை மனதாரப் பாராட்டுகிற அதேநேரத்தில், நான் கேட்பதெல்லாம், கிருஷ்ணகிரி பொது மருத்துவமனையில் சுற்றுச் சுவர்கள் மற்றும் மேல் கூரைகள் எல்லாம காரை பெயர்ந்தும், கூரை உச்சிகள் உதிர்ந்தும், போதுமான கழிப்பறை வசதிகள் இல்லாமலும், more infection prone என்ற அளவில் அதிகம் தொற்றுநோய்கள் எளிதில் வரும் நிலையில் பிரசவ வார்டு என்று பெயரளவில் இருந்து வரும் பகுதிக்குப் பதிலாக....

**HON. SPEAKER:** No, No. I cannot allow it. You are a very senior Member. But you are making a speech.

**Dr. KANCHANA KAMALANATHAN:** I have not yet completed Sir.

**HON. SPEAKER:** No. You cannot ask half-a-dozen questions in one supplementary. Hon'ble Minister may reply.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வி,



1998 மார்ச் 30]

கிருஷ்ணகிரி பொது மருத்துவமனையில் மகப்பேறுப் பிரிவு தொடங்கும் செயற்குறிப்பு உள்ளதா என்பது. அதற்கு ஏற்கெனவே அங்கே மகப்பேறுப் பிரிவு உள்ளது என்று நான் பதில் சொல்லியிருக்கிறேன். ஆனால் உறுப்பினர் அவர்களுடைய கேள்வியின் உள்நோக்கம், மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளபடி உலக வங்கித் திட்டத்தின் மூலம் கிருஷ்ணகிரியிலும் அந்தப் பிரிவு விரிவுபடுத்தப்படுமா என்பதாக அறிகிறேன். மிகவும் பின்தங்கிய பகுதிகளான உசிலம்பட்டி போன்ற பகுதிகளில்தான் உலக வங்கித் திட்டத்தின் மூலம் மகளிர் மற்றும் குழந்தைகள் பாதுகாப்புக்கான நிதி இப்போது ஒதுக்கப்பட்டிருக்கிறது. கிருஷ்ணகிரியும் மிகப் பின்தங்கிய பகுதி என்ற நிலை வருமானால் அங்கேயும் இதுபற்றி ஆராயப்படும்.

முற்பகல் 10-00

**டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகவும் பின்தங்கிய பகுதி என்பதற்காக அல்ல. ஏற்கெனவே பிரசவ வார்டு என்று பெயரளவில் இப்போதிருக்கின்ற அந்தக் கட்டிடம் மிகவும் பழுதடைந்த நிலைமையில் இருக்கின்றது. அதற்காகத்தான் இந்த ஒரு திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்டிருக்கின்ற நிதியை ஒதுக்கீடு செய்து, அனைத்து உபகரணங்களையும் உள்ளடக்கி ஒரு புதிய லேபர் வார்டு கொண்ட ஒரு புதிய கட்டிடம் கட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரியிலுள்ள அந்த மருத்துவமனையைப் பார்வையிட இந்த மாதம் செல்லவிருக்கின்றேன். நான் நேரடியாகப் பார்வையிட்டு, தேவைப்பட்டால் அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 66. டாக்டர் இ. எஸ். எஸ். இராமன். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**66—**

**ஆரம்பச் சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்துதல்**

***10090—டாக்டர் இ. எஸ். எஸ். இராமன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1998 மார்ச் 30

மாநில அரசு மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்கும் கோரிக்கைக்கு இடமில்லை.

முற்பகல் 9-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 64. திரு. மீ.அ. வைதியலிங்கம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.*

**64—**

### மாவட்டக் கல்வி அலுவலகம்

***8610—திரு. மீ.அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் மாவட்டத்திற்கான மாவட்டக் கல்வி அலுவலகத்தை, வட்டாரத் தலைமையிடமான தாம்பரத்திலும் துவக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வருவாய்க் கோட்டங்களில்தான் மாவட்டக் கல்வி அலுவலர் அலுவலகம் அமைக்கப்படுகிறது. எனவே, வட்டார அளவில் தாம்பரத்தில் ஒரு மாவட்டக் கல்வி அலுவலகம் அமைத்திட வாய்ப்பில்லை.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா மாவட்டத்தை இரண்டாகப் பிரித்தபோது, அந்த மாவட்டத்திலிருந்த 4 கல்வி மாவட்டங்களில் இரண்டு கல்வி மாவட்டங்கள், காஞ்சியில் ஒன்றும், செங்கல்பட்டில் ஒன்றும் உருவாக்கப்பட்டு, அதில் காஞ்சியில் 80 பள்ளிகளும், செங்கல்பட்டில் 120 பள்ளிகளும் அடங்குகின்றன. தாம்பரம் பகுதியைச் சுற்றிலும் சற்றொப்ப 50 பள்ளிக்கூடங்கள் இருக்கின்ற காரணத்தால், அவர்கள் 40 கிலோ மீட்டர் தூரம்கூடச் செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே அதிகமான எண்ணிக்கையில் செங்கல்பட்டில் இருக்கின்ற பள்ளிகளிலிருந்து 60 பள்ளிக்கூடங்களைப் பிரித்து, தாம்பரம் தலைமையிடத்தில் ஒரு டி. ஈ. ஓ. அலுவலகம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.



1998 மார்ச் 30]

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டங்கள் பிரிக்கப்படுகிறபோது, பிரிக்கப்படுகின்ற ஒவ்வொரு மாவட்டத்திலும் தலைமையிடக் கல்வி அதிகாரிகள் நியமிக்கப்படுகின்றார்கள். அப்படிப் பிரிக்கப்படும்போது வருவாய்க் கோட்டமாகப் பிரிக்கப்படுகின்ற அந்த வருவாய்க் கோட்டங்களுக்குத்தான் மாவட்டக் கல்வி அலுவலர்கள் (D.E.O.) என்ற பதவி வழங்கப்படுகிறது. இதன்படி புதிய வருவாய்க் கோட்டமான மதுராந்தகத்தில்தான் புதிய மாவட்டக் கல்வி அலுவலர் அலுவலகம் அமைக்கப்பட வேண்டும். செங்கல்பட்டில் ஏற்கெனவே ஒரு மாவட்டக் கல்வி அலுவலர் அலுவலகம் உள்ளது. செங்கல்பட்டு கல்வி மாவட்டத்தில் செங்கல்பட்டு, திருக்கழுக்குன்றம், தாம்பரம் ஆகிய வட்டங்கள் உள்ளன. எனவே இந்த வருவாய்க் கோட்டத்தில் உள்ள தாம்பரத்தில் ஒரு மாவட்டக் கல்வி அலுவலர் அலுவலகம் அமைத்திட வாய்ப்பு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 65, டாக்டர் காஞ்சனா கமலநாதன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.*

**65—**

### மகப்பேறுப் பிரிவு துவக்குதல்

***8375—டாக்டர் காஞ்சனா கமலநாதன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி பொது மருத்துவமனையில் மகப்பேறுப் பிரிவு துவக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையில் ஏற்கெனவே மகப்பேறுப் பிரிவு இயங்கி வருவதால் தற்போது அம்மருத்துவமனையில் மகப்பேறுப் பிரிவு துவங்கும் செயற்குறிப்பு அரசிடம் ஏதும் இல்லை.

[1998 மார்ச் 30

திருவள்ளூர் மாவட்டம், பொதட்டூர்பேட்டையில் உள்ள ஆரம்பச் சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவள்ளூர் மாவட்டம், பொதட்டூர்பேட்டை ஆரம்பச் சுகாதார நிலையம், பள்ளிப்பட்டு ஊராட்சி ஒன்றியத்தில் உள்ளது. பள்ளிப்பட்டு ஆரம்பச் சுகாதார நிலையம் வட்டார மருத்துவமனையாக நிலை உயர்த்தப்பட்டுச் செயல்படுவதாலும், பொதட்டூர்பேட்டை ஆரம்பச் சுகாதார நிலையத்தால் பயனடையும் உள்நோயாளிகள் மற்றும் வெளி நோயாளிகளின் எண்ணிக்கை குறைவாக உள்ளதாலும் பொதட்டூர்பேட்டை ஆரம்பச் சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்தும் வாய்ப்பேதுமில்லை.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிப்பட்டு வட்டத்திலே அதிகம் மக்கள் தொகை கொண்ட பேரூர் பொதட்டூர்பேட்டை ஆகும். அங்கே வருகின்ற நோயாளிகளின் எண்ணிக்கை போதுமான அளவிலே இல்லையென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்குக் காரணம், அங்கே மருத்துவர்கள் சரியாக வருவதில்லை என்பதுதான். என்னுடைய சொந்த ஊராக இருக்கின்ற அந்த பொதட்டூர்பேட்டையிலே ஏறக்குறைய 28 கிராமங்கள் சூழ்ந்துள்ளன. மேலும் 50,000 மக்கள் தொகை கொண்ட அந்தப் பகுதியிலுள்ள ஆரம்பச் சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக உயர்த்துவதன் காரணமாக பல்வேறு நலன்கள் அந்தப் பகுதி மக்களுக்குக் கிடைக்கும். ஆகவே, இந்த உரிய கோரிக்கையினை, தகுதியான கோரிக்கையினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த மருத்துவமனைக்கு நானே நேரில் சென்றிருக்கிறேன். பொதட்டூர்பேட்டை கிராம மக்கள் தொகை 5286. பொதட்டூர்பேட்டைக்கு 9 கிலோமீட்டர் தொலைவிலே பள்ளிப்பட்டு வட்டார மருத்துவமனை உள்ளது. பொதட்டூர்பேட்டை ஆரம்பச் சுகாதார நிலையம் 6 படுக்கைகள் கொண்டது. அந்த ஆரம்பச் சுகாதார நிலையத்தினால் பயன்பெறும் உள் நோயாளிகள் மாதம்



1998 மார்ச் 30]

ஒன்றுக்குச் சராசரியாக 32 பேர்கள்தான். புற நோயாளிகள் 90 பேர்கள்தான். எனவே, இந்தச் சூழ்நிலையில் மேலும் அந்த ஆரம்பச் சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்தும் வாய்ப்பு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சீ.வெ. கிருஷ்ணன்.

**திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் இருக்கிற ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு, சென்ற ஆண்டு ஆம்புலன்ஸ் வேன்கள் வழங்கப்பட்டன. ஆனால், பல இடங்களிலும் ஓட்டுநர் பதவி காலியாக இருக்கிறது. ஓட்டுநர் பதவி காலியாக இருக்கின்ற இடங்களில் ஓட்டுநர்கள் நியமிக்கப்படுவார்களா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டு நிதி வழங்கி இந்த ஆண்டு ஏறக்குறைய 400-க்கும் மேற்பட்ட ஆம்புலன்ஸ் வேன்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. எங்கெங்கே ஆம்புலன்ஸ் வேன்கள் வழங்கப்பட்டனவோ அங்கெல்லாம் ஓட்டுநர்களும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். குறிப்பிட்டு எங்கேயாவது அந்தக் குறைபாடு இருக்குமானால் அரசு அதை நிச்சயமாக நிவர்த்தி செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வெ.அ. ஆண்டமுத்து.

**திரு. வெ.அ. ஆண்டமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பவானிசாகர் தொகுதியிலே, புளியம்பட்டியிலே ஆரம்பச் சுகாதார நிலையம் ஒன்று இருக்கின்றது. அது 50,000 மக்கள் குடியிருக்கின்ற பேரூராட்சியாக விளங்கி வருகின்றது. அந்த மருத்துவமனையினுடைய தரத்தை உயர்த்துவதற்கு அரசிடம் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா? மேலும், எனது தொகுதியிலே ஒரு அரசு மருத்துவமனைகூட இல்லை என்பது ஒரு வருந்தத்தக்க சூழ்நிலையாக இருப்பதால், அதை அரசு மருத்துவமனையாக மாற்றுவதற்கோ அல்லது இருக்கின்ற பி.எச்.சி.யைத் தரம் உயர்த்துவதற்கோ அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றுள்ள நிதி நிலைமையைக் கருத்தில்கொண்டு, எங்கே புதிய வட்டாரங்கள் தொடங்கப்படுகின்றனவோ அங்கே புதிய அரசு மருத்துவமனைகள் தொடங்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த அந்த மருத்துவமனை, மக்கள் தொகையும் அதிகம்

[1998 மார்ச் 30

இருந்து. நோயாளிகளும் அதிகம் வருவார்களேயானால் அதை 24 மணிநேர மருத்துவமனையாக உயர்த்த முடியுமா என்பதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புவனகிரி தொகுதியில், புவனகிரி ஒன்றியத்தில், சேத்தியாத்தோப்பு மற்றும் புவனகிரியில் 2 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் மட்டுமே உள்ளன. அந்த இரண்டு ஆரம்பச் சுகாதார நிலையங்களும் வசதிகளற்ற நிலையில் இருக்கின்றன. அவற்றிற்கு மருத்துவர்களும் சரியாக வருவதில்லை. எனவே அரசு, புவனகிரி ஆரம்பச் சுகாதார நிலையத்தையாவது அல்லது சேத்தியாத்தோப்பு ஆரம்பச் சுகாதார நிலையத்தையாவது அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்தி அந்தப் பகுதி மக்கள் பயன்படும் வகையில் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-05

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதுள்ள நம்முடைய அரசாங்க உத்தரவின்படி, ஒரு தாலுக்கா புதியதாக உருவாக்கப்பட்டால்தான் அங்கே அரசு மருத்துவமனை தொடங்கப்படும்; இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்தக் கருத்தை அரசு பரிசீலித்து, அங்கே தேவையான வசதிகள் மக்களுக்கு உடனடியாகக் கிடைக்க வேண்டும் என்பதற்காக, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்த ஆண்டு புதிதாக 126 மருத்துவமனைகளை, 24 மணி நேர மருத்துவமனைகளாக ஆக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அதன்படி இந்த அரசு அதைப் பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. மனோகரன்.

**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பல தடவை இந்த மாமன்றத்திலே பதில் அளிக்கும்போது, புதிதாக ஆரம்பச் சுகாதார நிலையங்களை அமைக்க வேண்டும் என்றால், 30 ஆயிரம் மக்கள் தொகையும், 8 கிலோ மீட்டர் தூரமும் இருக்க வேண்டும் என்ற விதிமுறையைக் கூறியிருக்கிறார்கள். எனவே, தர்மபுரி தொகுதியில், தர்மபுரி ஒன்றியத்தில், சுமார் 1 இலட்சம் வாக்காளர்களும், சுமார் 1½ இலட்சம் பேருக்கு



1998 மார்ச் 30]

மேல் மக்கள் தொகையும் இருக்கின்றது; இங்கு இரண்டே இரண்டு ஆரம்பச் சுகாதார நிலையங்கள் மட்டும் உள்ளன. 5 நிலையங்களாவது இங்கு இருக்க வேண்டும். அது முடியாவிட்டாலும், வரும் ஆண்டில், ஒரு ஆரம்பச் சுகாதார நிலையத்தைப் புதிதாக அமைக்க மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரியிலே மாவட்ட மருத்துவமனையே இயங்கக்கூடிய காரணத்தால், தனியாக ஆரம்பச் சுகாதார நிலையம் அருகிலே ஆரம்பிப்பதற்கான வாய்ப்பு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. மோகன் கந்தசாமி.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலுள்ள சந்திராபுரத்திலே, ஒரு சிறந்த மருத்துவமனை, குறிப்பாக, மகப்பேறு மருத்துவமனையாக இருந்த மருத்துவமனை, இன்றைக்கு டாக்டர்கள் சரியாகச் செல்லாத காரணத்தினால் களையிழந்து காணப்படுகிறது. புதிதாக ஒரு வாகனம்கூடக் கொடுக்கப்பட்டு இருக்கிறது; அதற்குரிய ஓட்டுநர்கள் இல்லை என்று சொல்கிறார்கள். கடந்த ஆண்டே அமைச்சர் அவர்கள் கடுமையான உத்தரவிட்டதன் பேரிலே, டாக்டர்கள் போட்டும்கூட, quarters-ல் தங்காமல், கோவையிலே இருந்து வந்து செல்வதன் காரணமாக நோயாளிகள் துன்பப்படுகிறார்கள். எனவே கடுமையான நடவடிக்கை எடுத்து, பழையபடி அது சிறந்த மருத்துவமனையாகத் திகழ்வதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற அந்த மருத்துவமனையில், அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், டாக்டர்களை நியமித்திருக்கிறார்கள். வாகனங்கள்கூடக் கொடுத்திருக்கிறோம். ஆனால் சில குறிப்பிட்ட டாக்டர்கள், இன்னமும்கூட, குறிப்பிட்ட மருத்துவமனைக்கு அருகில் தங்காமல், கோயம்புத்தூரில் இருந்தும், மற்ற இடங்களிலே இருந்தும் வந்து கொண்டிருக்கிறார்கள். அதைத் தவிர்க்க வேண்டும் என்று பலமுறை ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும், கோவையிலே இருந்து வரக்கூடிய அந்த மருத்துவர்கள் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுத்து, குறிப்பிட்ட அந்த இடத்திலேயே பணியாற்ற வேண்டும் என்று அரசாங்கம் அவர்களை வற்புறுத்தும்.

(அ) நாமக்கல் மாவட்டம், நாமக்கல் வட்டத்தை இரண்டாகப் பிரித்து, கொல்லிமலையைத் தலைமையிடமாகக் கொண்டு தனி வட்டம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே.

(அ) இப்பொருள் குறித்து செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. கே.கே. வீரப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொல்லிமலையில் மொத்தம் 40 ஆயிரம் மலைவாழ் மக்கள் வாழ்கிறார்கள். அவர்கள் நாமக்கல் மற்றும் ராசிபுரம் ஆகிய பகுதிகளிலேயுள்ள தாலுக்கா அலுவலகத்திற்குச் சென்று, தாசில்தாரைச் சந்திக்கவேண்டும் என்றால், 70 கிலோ மீட்டர் தூரம் வரையில் செல்ல வேண்டியதாக இருக்கிறது. அவர்கள் சென்று வருவதற்கு இரண்டு நாட்கள் ஆகிவிடுகின்றன. ஆகவே, அந்தப் பகுதி மக்களுடைய நீண்டகாலக் கோரிக்கையை ஏற்றும், அதேபோன்று இன்றைக்கு நாமக்கல் தாலுக்காவும் மிகப் பெரிய தாலுக்காவாக இருக்கின்ற காரணத்தால், நாமக்கல் தாலுக்காவை இரண்டாகப் பிரித்தும், கொல்லிமலையைத் தலைமையிடமாகக் கொண்டு தனித் தாலுக்கா ஒன்றை அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா? மேலும், அவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிநிலை அறிக்கையில், மாண்புமிகு முதல்வர் அவர்கள், புதிதாக 9 வட்டங்களை அமைப்பதற்கு அனுமதி வழங்கி இருக்கின்றார்கள். அதோடு இந்தக் கொல்லிமலையையும், சேர்த்து தனித் தாலுக்காவாக, வட்டமாக அமைப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களோடு கலந்து பேசி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அதற்கான ஏற்பாடுகளைச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது உறுப்பினர் எழுப்பிய இந்தக் கேள்வியைப் போல் பல கேள்விகள், இதற்கு முன்னால் அவையில் எழுப்பப்பட்டன. அதற்கு நான் அளித்த பதிலையே இங்கேயும் தெரிவிக்க விரும்புகிறேன். ஓர் ஆண்டில் புதிய வட்டங்கள் மற்றும் புதிய வருவாய்க் கோட்டங்கள் போன்ற நிர்வாக அமைப்புகளை நிதிநிலை காரணமாக உருவாக்குவதில்லை என்று 20-6-1997-ல் அரசு முடிவு எடுத்துள்ளது.



எனவே, வரும் 20-6-1998-க்குப் பிறகு உறுப்பினரின் கோரிக்கை பரிசீலிக்கப்படும் எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வி.ஜி. தனபால்.

**திரு. வி.ஜி. தனபால்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் வட்டம் 3 சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களைக் கொண்ட பெரிய வட்டமாக இருக்கின்றது. அதிலிருந்து காட்பாடியைத் தலைமையிடமாகக் கொண்டு, ஒரு புதிய வட்டம் அமைக்கப்படுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே பேசிக்கொண்டிருப்பது நாமக்கல் வட்டத்தைப் பற்றி. குடியாத்தம் எனது கவனத்திற்கு வரவில்லை. தொலைதூரம் செல்வதற்கும் நான் விரும்பவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் இருக்கின்ற உடையார்குப்பம், பெருங்களத்தூர், புனிதம் போன்ற கிராமங்களில் இருக்கும் மக்கள் சுமார் 70 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள செங்கத்திற்குச் சென்றால்தான், சாதிச் சான்றிதழ், பள்ளிச் சான்றிதழ்கள் போன்றவற்றை எல்லாம் பெற முடிகின்றது. செங்கம் வட்டத்தை இரண்டாகப் பிரித்து தண்டராம்பட்டைத் தலைநகராகக் கொண்டு தனி வட்டமாக அமைப்பதற்கு அரசுக்குச் செயற்குறிப்பு வந்திருக்கிறது. ஆகவே, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கருணை உள்ளத்தின் ஆதரவோடு தாங்கள் தண்டராம்பட்டைத் தனி வட்டமாகப் பிரிக்க ஆவன செய்வீர்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் அளித்த விடைதான் இதற்கும் பொருந்தும் எனக் கருதி நான் இங்கே தெரிவிக்க விரும்புவது, ஓராண்டிற்குப் புதிய வட்டங்கள் மற்றும் புதிய வருவாய்க் கோட்டங்கள் போன்ற நிர்வாக அமைப்புகளை நிதிநிலை காரணமாக உருவாக்குவதில்லை என்று 20-6-1997-ல் அரசு முடிவு எடுத்துள்ளது. எனவே, வரும் 20-6-1998-க்குப் பிறகு உறுப்பினரின் கோரிக்கை பரிசீலிக்கப்படும் எனத் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்குமேல் கேள்விகளுக்கு இடம் இல்லை என்றும் கருதுகின்றேன். (சிரிப்பு)

[1998 மார்ச் 30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 24 மணி நேரம் இயங்கும் ஆரம்பச் சுகாதார மையங்களில், கடந்த ஆண்டு 126 ஆரம்பச் சுகாதார மையங்கள், 24 மணி நேரமும் இயங்கும் என்று அறிவிக்கப்பட்டது. அதில் என்னுடைய தொகுதியில்கூட வடக்கன்குளத்திற்கு, 24 மணி நேரம் இயங்கக்கூடிய ஆரம்பச் சுகாதார நிலையத்தைத் தந்தீர்கள். அதற்கு நன்றி. 24 மணி நேரம் இயங்கக்கூடிய ஆரம்பச் சுகாதார மையங்களில், எல்லா ஆரம்பச் சுகாதார மையங்களிலும், நீங்கள் குறிப்பிட்ட அளவிற்கு மருத்துவர்கள் நியமனம் செய்யப்படவில்லை. படித்த ஏராளமான டாக்டர்கள் வேலையின்றி இருக்கிறார்கள். அவர்களை நீங்கள் பணியில் அமர்த்த வேண்டும். ஒரு திட்டத்தை ஆரம்பிக்கும் முன்பு, அதற்குத் தகுந்த பணி இடங்களையும் நிரப்ப வேண்டும். அதற்காக வரும் ஆண்டுகளில் 24 மணி நேர ஆரம்பச் சுகாதார நிலையங்களை ஆரம்பிக்கும்போது எல்லாப் பணி இடங்களையும் நிரப்பிய பின்பு, உத்தரவுகளைப் பிறப்பிப்பார்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் முதன் முதலிலே 24 மணி நேரம் இயங்கக்கூடிய ஆரம்பச் சுகாதார நிலையங்களை, கடந்த ஆண்டு தொடங்கி வைத்தோம். ஆரம்பத்திலே போதுமான மருத்துவர்கள் இல்லை. ஆனால் கடந்த ஆண்டு, சர்வீஸ் கமிஷனுக்கு எழுதி, 500 புதிய டாக்டர்களை நியமனம் செய்து, 8 மணி நேரத்திற்கு ஒரு டாக்டர் என்று நியமித்து, 3 டாக்டர்கள்தான் ஒரு மருத்துவமனைக்கு இருக்க வேண்டும் என்று சொன்னாலும், மருத்துவர்களிலே ஒருவர் விடுமுறைக்குச் சென்றாலோ, வராமல் நின்று விட்டாலோ, எதற்கும் reserve ஆக ஒரு டாக்டர் இருக்கட்டும் என்று சொல்லி, நான்கு டாக்டர்கள் ஒவ்வொரு மருத்துவமனைக்கும் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். எனவே, 24 மணி நேர மருத்துவமனையைப் பொறுத்தவரையிலே, எல்லா மருத்துவமனைகளிலேயும் 4 மருத்துவர்கள் இப்போது நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். குறைபாடு எங்கேயாவது இருக்குமானால், அதைப் பற்றி அரசு நடவடிக்கை எடுக்கும்.

*முற்பகல் 10-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.



1998 மார்ச் 30]

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேன்கள் வசதி செய்து கொடுக்கப்படாத தூத்தூர், பத்துகாணி போன்ற ஆரம்பச் சுகாதார நிலையங்களில், வேன்கள் வசதி செய்து கொடுக்கப்படுமா? மேலும், தூத்தூர் பகுதியிலே உள்ள ஆரம்பச் சுகாதார நிலையம் 24 மணி நேரமும் செயல்படுகின்ற நிலையமாகத் தரம் உயர்த்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்தினுடைய தேவை 500 ஜீப்புகள், ஆம்புலன்ஸ்கள். இருந்தாலும், 400தான் கடந்த ஆண்டு நமக்குக் கிடைத்திருக்கிறது. மேலும் 100 ஆம்புலன்ஸ்கள் வாங்குவதற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டிருக்கின்றோம். நிதி வசதி கிடைத்தவுடன், நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற மருத்துவமனைகளுக்கு அந்த வசதிகள் செய்து தரப்படும்.

## 2. அறிவிப்புகள்

### (அ) அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. ஏற்கெனவே அலுவல் ஆய்வுக் குழுவிலே எடுத்த முடிவில் ஒரு முக்கியமான மாற்றம் செய்யவேண்டிய சூழ்நிலை இருப்பதால், அலுவல் ஆய்வுக் குழு உறுப்பினர்கள், குறிப்பாக கட்சித் தலைவர்கள், அருள்கூர்ந்து என்னுடைய அறைக்கு வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

## 1. வினாக்கள்—விடைகள்—தொடர்ச்சி.

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்—தொடர்ச்சி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 67, திரு. கே.கே. வீரப்பன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**67—**

**நாமக்கல் வட்டத்தை இரண்டாகப் பிரித்தல்**

***10029—திரு. கே.கே. வீரப்பன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1998 மார்ச் 30

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 68, திரு. இரா. மதிவாணன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**68—**

**நடமாடும் சுகாதார நிலையம் துவக்குதல்**

***8041—திரு. இரா. மதிவாணன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராயபுரம் பகுதியில் நடமாடும் சுகாதார நிலையம் துவக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. இரா. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது எப்படி Point to Point முறையிலே பேருந்து நின்று செல்கிறதோ, அதேபோல மாநகராட்சி மூலமாக ஒரு பகுதிக்கு ஒரு மணி நேரம் அல்லது இரண்டு மணி நேரம் என்ற அடிப்படையிலே, இதையே கோரிக்கையாக ஏற்று, நடமாடும் சுகாதார நிலையம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்து, ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இராயபுரம் பகுதியில் நடமாடும் சுகாதார நிலையம் துவங்க தற்போது உத்தேசம் இல்லை. சென்னை மாநகராட்சியின் சுகாதாரத் துறையின்கீழ் இராயபுரம் பகுதியில் பனைமரத்துத் தொட்டி மற்றும் கிரேஸ் கார்டனில் மருத்துவமனைகளும், எஸ்.என். செட்டித் தெருவில் தாய்சேய் நல மருத்துவமனையும், அருகில் தொற்றுநோய் மருத்துவமனையும் உள்ளன. இவை தவிர, அதே பகுதியில் மருத்துவக் கல்வித் துறையின்கீழ் இயங்கும் ஸ்டான்லி மருத்துவமனையும், இராஜா சர் இராமசாமி முதலியார் நினைவு மகப்பேறு மருத்துவமனையும் உள்ளன. எனவே, இப்படிப்பட்ட நடமாடும் சுகாதார நிலையம் அத்தியாவசியம் அற்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1998 மார்ச் 30]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. செங்கை சிவம்.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சியால் நடத்தப்படும் பல்வேறு மருத்துவமனைகளில் அறுவைச் சிகிச்சைக்காகவும், ஸ்கேன் மற்றும் பல்வேறு சோதனைகளுக்காகவும், நோயாளிகளை அழைத்துச் செல்வதற்கு ஆம்புலன்ஸ் தேவைப்படுகின்றது. பல இடங்களில் ஆம்புலன்ஸ் இல்லை. இதுகுறித்து மாநகராட்சி அரசுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறது. அதுமட்டும் அல்லாமல், மகப்பேறு மருத்துவமனைகளில் 24 மணி நேரமும் வேலைபார்ப்பதற்குத் தேவையான டாக்டர்கள் தேவை என மாநகராட்சி அரசுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறதா? ஆம் எனில், அதற்கான உத்தரவு எப்போது பிறப்பிக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மூலக் கேள்விக்கும் துணைக் கேள்விக்கும் தொடர்பில்லை என்பதால், இதுகுறித்துத் தயவுசெய்து தனிக் கேள்வி போட்டால் விவரம் வைக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 69, திரு. க.வெ.வீ. இராசமாணிக்கம், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**69—**

**பாதாள சாக்கடைத் திட்டம்**

***11726—திரு. க.வெ.வீ. இராசமாணிக்கம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலூரில் பாதாள சாக்கடைத் திட்டம் அமல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

[1998 மார்ச் 30

(அ) மேலூர் நகராட்சியில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேலூரில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம் இல்லை என்று அமைச்சர் அறிவித்தார்கள். வேலூரில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம் அரசுக்கு உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேலூர் பற்றிய கேள்வியில் வேலூருக்கு இடம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 70, திரு. ஆர்.ஆர். சேகரன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**70—**

### குளிர் சாதனக் கிடங்கு அமைத்தல்

***3755—திரு. ஆர்.ஆர். சேகரன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதியில் காடையாம்பட்டி ஜோடுகுளி பகுதியில் அதிக அளவில் விளையும் தக்காளிப் பழங்களுக்கென குளிர் சாதனக் கிடங்கு அமைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பகுதியிலே விளைச்சல் சமயங்களிலே தக்காளி அதிக விளைச்சலாகி, கூடை 2 ரூபாய், 3 ரூபாய் அளவு இருக்கக்கூடிய ஒரு அவல நிலை ஏற்படுகின்றது. சில சமயங்களில் அந்த விலைகூட



1998 மார்ச் 30]

இல்லாமல் கால்நடைகளுக்கு அந்தத் தக்காளிப் பழங்களைத் தீவனமாகக் கொடுக்கக்கூடிய நிலை ஏற்படுகிறது. ஆகவே, பாடுபட்ட விவசாயிகளின் துயரங்களைப் போக்க இந்தப் பகுதியிலே குளிர் சாதனக் கிடங்கு ஏற்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன். அல்லது நபார்டு வங்கி மூலமாக வேளாண் வளர்ச்சி நிதி நிறுவனத்தின் மூலமாக அந்தப் பகுதியிலே ஒரு பழக்கூழ்த் தொழிற்சாலை துவங்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஓமலூர் பகுதியில் 617 ஹெக்டேரிலேதான் தக்காளி பயிர் செய்கின்றார்கள். ஒரு குளிர் பதனக் கிடங்கு கட்ட வேண்டுமானால் 2.5 கோடி ரூபாய் செலவாகும். அந்த அளவுக்குச் செலவு செய்து பழங்களைச் சேகரித்து வைக்கக்கூடிய அளவுக்குப் பழ உற்பத்தி அந்தப் பகுதியிலே இல்லை. இன்னொன்று, அந்தப் பக்கம் விளைகின்ற தக்காளிப் பழத்தை உடனடியாக பஸ் மூலம் பெங்களூருக்கு எடுத்துச் சென்று அங்கு விற்பனை செய்வதற்கான வாய்ப்பு எல்லாம் அதிக அளவிலே இருக்கிறது. ஆகவே, அங்கு குளிர் பதனக் கிடங்கு கட்ட வேண்டிய அவசியம் இல்லை என்று அரசு கருதுகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** துணைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற குளிர் சாதனக் கிடங்குகள் தமிழ்நாட்டில் எங்கெங்கு இருக்கின்றன? அவையெல்லாம் செம்மையாகச் செயல்படுகின்றனவா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே தனியார் இதுபோன்ற குளிர் பதனக் கிடங்குகளைக் கட்டி அந்தக் கிடங்குகளுக்குப் பழம், காய்கறிகளையெல்லாம் விற்பனைக்கு எடுத்துச் சென்று விற்றுப் பயன் பெறுகிறார்கள். அதைப்போல சென்னை மாவட்டத்திலே 5 இடங்களில் தனியார் அதுபோன்ற கிடங்குகளைக் கட்டியிருக்கிறார்கள். தர்மபுரி மாவட்டத்திலே 3 இடங்களிலும், கோயம்புத்தூர் மாவட்டத்திலே 2 இடங்களிலும், மதுரை மாவட்டத்திலே 2 இடங்களிலும், திருச்சி மாவட்டத்திலே ஒரு இடத்திலும் இதுபோன்ற குளிர் பதனக் கிடங்குகள் இப்போது இருக்கின்றன.

[1998 மார்ச் 30

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்திலே ஓமலூர், காடையாம்பட்டி, மேச்சேரி போன்ற வட்டாரங்களிலும், தர்மபுரி மாவட்டத்திலே பெண்ணாகரம், தர்மபுரி போன்ற வட்டாரங்களிலும் தக்காளி அதிகமாகப் பயிரிடப்படுகிறது. பயிரிடப்படக்கூடிய தக்காளி போதிய விற்பனை இல்லாமல் அழுகிவிடக்கூடிய நிலை இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதி விவசாயிகளின் நிலைமைகளை நன்கு உணர்ந்தவர். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஆர்.ஆர். சேகரன் அவர்களுக்குப் பதில் சொன்ன நேரத்திலே குளிர் சாதனக் கிடங்கு அமைப்பதற்கு 2.5 கோடி ரூபாய் செலவாகும் என்று சொன்னார்கள். மேற்கண்ட பகுதிகளை எல்லாம் உள்ளடக்கி அங்கே குளிர் சாதனக் கிடங்கு அமைப்பதோடு தக்காளி ஜூஸ், தக்காளி ஊறுகாய் போன்றவற்றைத் தயாரிக்கக்கூடிய மிகப் பெரிய தொழிற்சாலை ஒன்றை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தக்காளி அதிகமாக விளையக்கூடிய பகுதியில் ஒரு குளிர் பதனக் கிடங்கு கட்டினால் பயன்படும் என்று கருதினால்தான் அரசு பரிசீலிக்க இயலும். ஓமலூர் தொகுதி காடையாம்பட்டி ஜோடுகுளி பகுதியில் இப்படிக் கட்டப்படுமா என்று அவர் கேள்வி கேட்டார். அவர் தர்மபுரி மாவட்டத்தை இணைத்துச் சொல்கிறார். நான் மாண்புமிகு உறுப்பினர் சேகரன் அவர்களுக்குச் சொன்ன பதிலைத்தான் நம்முடைய ஜி.கே. மணி அவர்களுக்குச் சொல்ல வேண்டும். தக்காளி ஓசூர் பகுதியிலே அதிகமாக விளைகிறது. நாள்தோறும் பெங்களூருக்கு எடுத்துச் சென்று அங்கு விற்பனை செய்து வருகின்றார்கள். அதைப்போல இன்னும் தர்மபுரி மாவட்டத்திலே இருப்பவர்கள் எல்லாம் அங்குதான் எடுத்துச் செல்கிறார்கள். ஆகவே இப்போது இரண்டு மாவட்டத்திற்கும் சேர்த்து அப்படி ஒரு குளிர் பதனக் கிடங்கு கட்ட வேண்டிய அவசியம் ஏற்படாது என்று கருதுகிறேன். அப்படியே ஏற்பட்டாலும்கூட தர்மபுரி மாவட்டத்திலே இருக்கக் கூடியவர்கள் இங்கு கொண்டு வந்து விற்க மாட்டார்கள். அதைப்போல ஓமலூர் காடையாம்பட்டியிலே இருப்பவர்கள், தர்மபுரி எல்லையிலே கட்டினால் 'அது தூரம் எங்களுக்கு வேண்டாம்' என்றுதான் சொல்வார்கள். தற்போது பரிசீலனையில் இல்லை என்பதுதான் பதில்.



1998 மார்ச் 30]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 71, திரு. எல். மூக்கையா, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**71—**

## கவுஞ்சி-கோணலாறு நீர்த்தேக்கத் திட்டம்

***8390—திரு. எல். மூக்கையா:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடைக்கானல் ஒன்றியம், கவுஞ்சி-கோணலாறு நீர்த்தேக்கத் திட்டத்தை நிறைவேற்ற அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்பொழுது நிறைவேற்றப்படும்?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இத்திட்டம் ஆய்வில் உள்ளது.

**திரு. எல். மூக்கையா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கவுஞ்சி பகுதியில் கோணலாறு ஒரு வற்றாத ஜீவ நதியாக ஓடிக்கொண்டிருக்கிறது. இந்தக் கோணலாறு நீர்த் தேக்கத் திட்டத்தை நிறைவேற்றித் தந்தால் கவுஞ்சி, பூண்டி, போளூர், கிளாவரை விவசாயிகளின் சுமார் 2,000 ஏக்கர் மானாவாரி நிலம் பாசன வசதி பெறும். மேலும் கொடைக்கானல் மேல்மலைப் பகுதி விவசாயிகளுக்கு, கிணற்றுப் பாசனமோ, கண்மாய்ப் பாசனமோ கிடையாது. மழையை நம்பித்தான் மானாவாரியாக உருளைக்கிழங்கு, பூண்டு, கோஸ், காரட், நூல்கோல் போன்ற காய்கறிகளை எல்லாம் பயிரிடுகிறார்கள். மழை பொய்த்து விடுகின்ற காலங்களில் மிகப் பெரிய நஷ்டத்திற்கு ஆளாகின்றார்கள். எனவே இந்த கவுஞ்சி-கோணலாறு நீர்த்தேக்கத் திட்டத்தை, மானாவாரியாக விவசாயம் செய்து பெருத்த நஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்ற அந்த விவசாயிகளுக்கு இந்த ஆண்டே நிறைவேற்றித் தருவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

|1998 மார்ச் 30

முற்பகல் 10-25

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோணலாற்றில் ஏற்கெனவே கவுஞ்சி பகுதியில் ஒரு மண் புறம்பு அமைத்து, அங்கிருந்து தண்ணீரை ஆறம்பள்ளி பாறைக்குக் கொண்டு சென்று இப்போது அந்த ஊர் மக்கள் பயனடைந்து கொண்டிருக்கிறார்கள். இதற்கிடையில் அந்த ஊரில் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்கவேண்டும்; நீங்கள் சொன்னது போல் நிலத்தடி நீரைப் பெருக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவரை அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் அதுகுறித்து வனத்துறையோடு கலந்து ஆலோசித்து ஒரு check dam கட்டலாம் என்று 31-3-1997 அன்று 5 லட்சம் ரூபாய் ஒதுக்கி அதற்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே, பொதுப்பணித் துறையின் மூலம் அங்கு ஒரு நீர்த்தேக்கம் கட்ட வேண்டும் என்பதிலே எங்களுக்கு மாறுபட்ட கருத்து இல்லை. எனவே, திட்டத்தினுடைய அமைப்பை மாற்றவேண்டும். அதுகுறித்து ஆய்வுகளை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அங்கு கட்டுவதில் அரசுக்கு மாறுபட்ட கருத்து இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஏ. ராசேந்திரன்:

**திரு. ஏ. ராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம், கணியம்பாடி ஒன்றியத்தில் அமிர்தி நீர்த்தேக்கம் கட்டவேண்டும் என்று பல ஆண்டு காலமாக கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. மண்ணின் மைந்தரான மாவட்ட அமைச்சர் அவர்கள் அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தர முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமிர்தி குறித்தும் ஒரு ஆய்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. த. பூவேந்தன்.

**திரு. த. பூவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிழல் கணினியைப்போல ஞாபகம் வைத்து பணியாற்றக் கூடியவர்கள். பழனி தொகுதியில் பச்சையாறு அணைகட்ட வேண்டும் என்பதற்காக 1990 ஆம் ஆண்டு



1998 மார்ச் 30|

ஆய்வு செய்யப்பட்டு, அதற்கான மதிப்பீடும் தயார் செய்யப்பட்டது. அன்றையதினம், இன்றைக்கு பொதுப்பணித் துறை அமைச்சராக இருக்கின்றவர்தான் குதிரை ஆறு அணைக்கட்டைத் திறந்து வைப்பதற்கு வருகை தந்தார்கள். அந்தப் பகுதி மக்களுக்கு வாக்குறுதி அளித்தார்கள். ஆகவே, அந்த அடிப்படையிலாவது இந்த ஆண்டு பழனி தொகுதியிலுள்ள பச்சையாறு அணைக்கட்டை மறுஆய்வு செய்து எடுத்துக் கொள்வார்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1990 ஆம் ஆண்டு கலைஞர் ஆட்சி பச்சையாறு குறித்து ஆய்வு நடத்தியது. 1991-ல் அந்த ஆட்சி கவிழ்க்கப்பட்டது. இடையில் நின்று போனது. மீண்டும் கலைஞர் ஆட்சி வந்திருக்கிறது. அதுகுறித்தும் துறை ஆய்வு நடத்திக் கொண்டிருக்கிறது.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 72, திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**72—**

**கூடுதல் இரயில்கள் இயக்குதல்**

***3573—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரக்கோணத்திலிருந்து தாம்பரத்திற்குக் கடற்கரை வழியாக அகலப் பாதையில் கூடுதலாக இரயில்களை இயக்க மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சென்னை எழும்பூரில் வண்டித்தொடர்கள் இருப்பு இல்லாததாலும், செயல்பாட்டில் இடர்ப்பாடுகள் இருப்பதாலும், மேற்கொண்டு இரயில் வண்டிகள் இயக்கச் சாத்தியமில்லை என, தென்னக இரயில்வே

[1998 மார்ச் 30

தெரிவித்துள்ளது. ஆயினும், நிலைமை சீரடையும்போது அரக்கோணம்-தாம்பரத்திற்கும் இடையே நேரடியாக இரயில் இயக்குவதுபற்றிப் பரிசீலிக்கப்படும். எனவே, மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்தும் கருத்துரு ஏதுமில்லை.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்துகளில் இப்போது மக்கள் நெரிசல் எங்கு பார்த்தாலும் அதிகமாகிக்கொண்டு வருகிற நேரம். அரக்கோணத்திலிருந்தும், தாம்பரத்திலிருந்தும் சென்னைக்கு வரவேண்டும் என்று சொன்னாலும் அரசு ஊழியர்கள், கல்லூரி மாணவ, மாணவிகள் எல்லாம் காலையிலும், மாலையிலும் செல்வதற்கு மிகவும் இடர்ப்பாடான நிலை இருக்கிற காரணத்தால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தென்னக இரயில்வே துறைக்கு எடுத்துரைத்து, வற்புறுத்தி, இந்த இரயில் பாதை, அதிலும் குறிப்பாக இப்போது மின்சார இரயில் பாதையாக இருக்கின்ற காரணத்தால் இதை இயக்குவதற்கு உடனடியாக மத்திய அரசை வலியுறுத்த ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது ஆவடி முதல் தாம்பரம் வரை கடற்கரை வழியாக அகல இரயில் பாதையில் இரயில்கள் இயக்கப்படுகின்றன. ஆவடியிலிருந்து அரக்கோணம் வரை நீட்டிப்பது குறித்து இப்போது எதுவும் பரிசீலனையில் இல்லை. 4 இணைப்பு இரயில் வண்டிகள் இப்போது இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆகவே, வருங்காலத்தில் இதுகுறித்துப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சொக்கர்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தாம்பரத்திலிருந்து திருச்சி வரையில் அகல இரயில் பாதையாக மாற்றக்கூடிய பணி நடைபெறுவதாலும், அது ஜூன் 20 ஆம் தேதி முடிந்த பிறகு திருச்சியிலிருந்து திண்டுக்கல் வரையில் அகல இரயில் பாதையாக மாற்றும் பணி நடைபெறவிருப்பதாலும், தென் மாவட்டங்களிலிருந்து, திருநெல்வேலி, தூத்துக்குடி, விருதுநகர், மதுரை போன்ற மாவட்டங்களிலிருந்து சென்னைக்கு வருபவர்களுக்குப் போதிய இரயில் வண்டிகள் தற்போதில்லை. திருநெல்வேலியிலிருந்து அல்லது நாகர்கோவிலிலிருந்து கூடுதலாக இரயில் வண்டிகளை இயக்கவும், அங்கே மாலை நேரங்களில் புறப்பட்டு சென்னைக்கு வரும்போது



1998 மார்ச் 30]

அதிகாலையில் வரக்கூடிய அளவிலே இரயில்களை இயக்கவும் மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சங்கடம் குறித்து மாநில அரசு பரிசீலனை செய்து பேருந்துகளை அதிகமாக இயக்கிக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் புதிய இரயில் வண்டிகளை விடவேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கின்ற காரணத்தினால், அவருடைய கருத்தை, தென்னக இரயில்வேக்குப் பரிந்துரை செய்யலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரத்திலிருந்து ஆவடிக்கு அகல இரயில் பாதையில் செல்கின்ற இரயில் வண்டிகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவது குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளதா? அதற்கான முயற்சிகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற்கொள்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரயில் வண்டிகளுக்கு நாம் பரிந்துரைதான் செய்யலாம். தென்னக இரயில்வேக்கு அடிக்கடி சுட்டிக்காட்டிக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய கருத்தை அரசின் மூலமாக அவரே கொடுத்தால் அனுப்பி வைக்கத் தயாராக இருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 73, திரு. கி. வேணு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**73—**

## அரசுப் பேருந்துகளை இயக்குதல்

*6396-**திரு. கி. வேணு:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டியிலிருந்து பெரியபாளையம், ஆவடி வழியாக, தாம்பரம் வரை அரசுப் பேருந்துகளை இயக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): கும்மிடிப்பூண்டி-தாம்பரம், பெரியபாளையம், ஆவடி வழியாக உள்ள தடத்தின் நீளம் 92 கி.மீ. ஆகும். இத்தடம் ஒரு சுற்று வழித்தடமாக இருப்பதாலும், பயண நேரம் அதிகம் என்பதாலும், வருவாய் அதிகம் ஈட்ட வாய்ப்பில்லாததாலும் இத்தடத்தில் பேருந்தை இயக்கும் திட்டம் தற்போதில்லை.

**திரு. கி. வேணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வழித்தடம் மிக அவசியமான வழித்தடம் என்பதாலும், கும்மிடிப்பூண்டியிலிருந்து ஆவடிக்கு ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் செல்கின்ற காரணத்தினாலும், அதே நேரத்திலே, தமிழகத்திலே மிக முக்கியமான கோவிலாக விளங்குகின்ற பவானியம்மன் கோவில் பெரியபாளையத்திலே இருக்கின்ற காரணத்தினாலும், இதையெல்லாம் எண்ணி நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து கும்மிடிப்பூண்டியிலிருந்து பெரியபாளையம், ஆவடி வழியாக தாம்பரம் வரை பேருந்துகளை இயக்குவாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக ஆவடியிலிருந்து பெரியபாளையம் வரை போதிய நகரப் பேருந்துகள் இயங்குகின்றன. அதேபோல, தாம்பரத்திலிருந்து சென்னை சென்ட்ரலுக்கும், சென்ட்ரலிலிருந்து, கும்மிடிப்பூண்டிக்கும் குறைந்த இடைவெளியில் மின்சார இரயில்களும் இயங்கிக்கொண்டிருக்கின்றன. ஆகவே. அது சுற்று வழித்தடம் என்கிற காரணத்தினால், 92 கி.மீ. தூரம் இருக்கின்ற காரணத்தினால், நெடுந்தூரப் பயணிகள் அதிகமாக வருவதற்கு வாய்ப்பில்லை. ஆகவே, இந்த வழித் தடங்களில் பேருந்துகள் இயக்குகின்ற காரணத்தினால், உறுப்பினர் கோரிக்கையைப் பரிசீலிப்பதற்கு வாய்ப்பில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.லெ. சுப்பிரமணியன்.



**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினர் கோரிக்கையையும் நிறைவு செய்கின்ற வகையில் சென்ற ஆண்டு ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினர் தொகுதிக்கும், அந்தத் தொகுதி உறுப்பினருடைய பரிந்துரையின்பேரில் இரண்டு புதிய வழித்தடங்கள் தருவதற்கான ஆணையை அரசு பிறப்பித்தது. அதை இன்னும் கூட்டி, இந்த ஆண்டும் இரண்டு வழித்தடங்களை சட்டமன்ற உறுப்பினர்கள் பரிந்துரை செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று கேட்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு இவ்வாறு விட்டதன் காரணமாகவே ஏறத்தாழ ஆயிரத்திற்கும் மேற்பட்ட புதிய வழித்தடங்களில் மாநகரப் போக்குவரத்துக் கழகம் மற்றும் மற்ற போக்குவரத்துக் கழகங்கள் மூலமாகப் பேருந்துகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. மேலும் இந்த ஆண்டு ஆயிரம் பேருந்துகளை இயக்குவது என்பது அவ்வளவு சாத்தியக்கூறாக இருக்காது. உறுப்பினர் வேண்டுமானால் முக்கிய வழித்தடங்களைக் கூறுவார்களேயானால் அதைப்பற்றி பரிசீலித்து அவ்வப்போது முடிவு எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 74, திரு. மு.பெ. சாமிநாதன், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**74—**

**மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி மூலம் கடன் வழங்குதல்**

***8199—திரு. மு.பெ. சாமிநாதன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயிகளுக்கு, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் பயிர்க் கடன் தருவது போல் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி மூலம் நேரடியாகக் கடன் வழங்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் நடைமுறைப்படுத்தப்படும்?

[1998 மார்ச் 30

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்தியக் கூட்டுறவு வங்கி மூலம் வேறு வகையான கடன்கள் வழங்கப்படுகின்றனவா? ஆம் எனில், எவ்வகையான கடன்கள் வழங்கப்படுகின்றன என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்தியக் கூட்டுறவு வங்கி மூலமாக விவசாயிகளுக்கு நேரிடையாக வழங்குவதில்லை. ஆனால், கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக்கு, கூட்டுறவு நூற்பாலைகளுக்கு, இதுபோன்று இருக்கின்ற பெரிய ஆலைகளுக்கு மத்தியக் கூட்டுறவு வங்கி மூலமாக நேரிடையாக வழங்கப்படுகிறது. விவசாயிகளுக்கு நேரிடையாகத் தருவது என்று இல்லாமல், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி மூலமாக— மத்திய வங்கியிலிருந்து கடன் உதவி விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. வெங்கடாசலம்.

**திரு. அ. வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மத்தியக் கூட்டுறவு வங்கியில் விவசாயிகளுக்குக் கடன் வழங்குவதோடு, தனியார் இயக்குகின்ற பேருந்துகளுக்கு, பஸ் பெர்மிட்டை வைத்துக்கொண்டும், தனியார், நகராட்சியில் பெரிய காம்ப்ளக்ஸ் கட்டிடம் கட்டுவதற்கு அவர்களது மூலப் பத்திரங்களை வாங்கிக்கொண்டும், தொடர்ந்து கடன்கள் வழங்கப்பட்டன. இப்போது அந்தக் கடன்கள் வழங்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே சொல்லி, அவர்கள் கடன்களை வழங்குவதாக உறுதிமொழி தந்தாலும்கூட, இன்னும் அந்தக் கடன்கள் வழங்கப்படவில்லை. ஆகவே, அப்படிப்பட்ட தனியார்களுக்கு, பேருந்துகளுக்கான பெர்மிட்டை வாங்கி வைத்துக்கொண்டு, பெரிய பெரிய கட்டடங்களைக் கட்டக்கூடியவர்களுக்கும் மத்தியக் கூட்டுறவு வங்கியின் மூலம் கடன்களை வழங்குவதற்குரிய நடவடிக்கையினை விரைவாக எடுப்பார்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.



1998 மார்ச் 30]

முற்பகல் 10-35

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்தியக் கூட்டுறவு வங்கியே, எந்தெந்தப் பகுதி மக்களுக்குப் பயன்படவேண்டுமோ அந்தந்தப் பகுதி மக்களுக்காகப் பயன்பட வேண்டும் என்பதற்காகத்தான் அந்த வங்கி பணியாற்றி, பயன்பட்டுக் கொண்டிருக்கிறது. இடையிலே நான்கு, ஐந்து ஆண்டு காலம் சரியான நிர்வாகம் இல்லாத காரணத்தால், அதைச் சீர் செய்ய வேண்டும் என்ற ஒரு நோக்கத்தோடு இந்த அரசு எடுத்த பல முயற்சிகளிலே வெற்றியும் கண்டிருக்கிறது. கூட்டுறவு நிறுவனங்களிலே, கடந்த காலத்திலே திராவிட முன்னேற்றக் கழக அரசு நான்காவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றுக்கொண்டபோது, 8,000 கோடி ரூபாய்தான் வைப்பு நிதியாக இருந்தது. இன்றைய தினத்திலே 10,000 கோடி ரூபாயாக வைப்பு நிதி இருக்கிறது, நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் கூட்டுறவு வங்கிகளிலே புதியதாக ரூபாய் 10 இலட்சம் வரை கடன் வழங்கவும், அதேபோல் பொறியாளர்களுக்கு, மருத்துவர்களுக்குக் கடன்கள் வழங்குவதற்கும் வசதிகளைச் செய்து தந்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தச் செய்திபற்றி உடனே விசாரித்து, அங்கு அவர்கள் தந்த கோப்புகள் எல்லாம் சரியாக இருக்குமானால் கடன் வழங்குவதற்குரிய முயற்சி நிறைவேற்றித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. சண்முகம்.

**திரு. ம. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயிர்க் கடன்கள் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் மூலமாகக் கொடுக்கப்படுகின்றன. அதேபோல், நிலவள வங்கிகளிலேயும் இன்றையதினம் நகைக் கடன்களும் மற்றும் இதரக் கடன்களும் கொடுத்து வருகிறார்கள். ஆகவே, குறைந்தபட்சம், நிலவள வங்கிகளில் கடன்களைப் பெறுகின்ற விவசாயிகளுக்காவது பயிர்க் கடனை அந்த வங்கிகளிலே வழங்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு வங்கிக்கும் ஒவ்வொரு பணி ஒதுக்கப் பட்டிருக்கிறது. 'நபார்டு' நிறுவனத்திலிருந்து குறைந்த வட்டிக்குக் கடன் பெற்று, மாநிலக் கூட்டுறவு வங்கியிலேயிருந்து மத்திய வங்கிக்குத் தந்து, மத்திய வங்கியிலேயிருந்து தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கும்,

[1998 மார்ச் 30

அதேபோல் பிற, தேவைப்படுகின்ற நிதி நிறுவனங்களுக்கும் மற்றும்
அத்தனை பேருக்கும் தருவதற்கான உரிய முயற்சிகள் இன்று
நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நிலவள வங்கியின் மூலமாகப்
பயிர்க் கடன்கள் என்று இதுவரை தரப்படவில்லை. அவர்களுக்கு
விவசாய உபகரணங்களை வாங்குவதற்கும், மற்ற பொருட்களை
வாங்குவதற்கும் தான் நிலவள வங்கியின் மூலமாகத தரப்படுகிறது.
மாண்புமிகு உறுப்பினர்கள், தேவைப்பட்டால், எந்தெந்தப் பகுதிகளிலே
விவசாயிகள் அதிகமான கடன் வசதிகளைப் பெறவேண்டும் என்று
விரும்புகிறார்களோ, அங்கெல்லாம் புதிய கூட்டுறவுச் சங்கங்களை
உருவாக்குவதற்குரிய முயற்சிகளை எடுப்பார்களேயானால், இந்த அரசு
அந்தப் புதிய சங்கங்களை உருவாக்குகிற விவசாயிகளுக்குக் கடன்
வழங்குகின்ற அந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யும் என்பதையும்
தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 75, திருமதி ஆர்.
சரஸ்வதி, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**75—**

**தாராபுரத்தில் நீதிமன்றம் கட்டுதல்**

***8083—திருமதி ஆர். சரஸ்வதி:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு
விடையளிப்பாரா—

தாராபுரம் நகரில் நீதிமன்றம் எப்போது கட்டப்படும்?

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே,

தாராபுரம் நகரில் சார்பு நீதிமன்றக் கட்டடமும், பிற துணைக்
கட்டடங்களும் கட்டுவதற்கு 1 கோடியே 24 இலட்சத்து 40,000 ரூபாய்
ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதற்கான ஒப்பந்தப் புள்ளி விவரங்களும்
21-4-1997-ல் இறுதி செய்யப்பட்டு, இப்போது கட்டடப் பணிகள்
நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. வருகிற ஜூன் மாதத்திற்குள்
அந்தக் கட்டடப் பணிகள் முடிந்துவிடும் என்று எனக்குத் தகவல்
தரப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி ஆர். சரஸ்வதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,
கடந்த 1993ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பிலிருந்து ஐந்து



1998 மார்ச் 30]

அமைச்சர்களால் அடிக்கல் நாட்டப்பட்ட நீதிமன்றக் கட்டடம், 1996
வரை எழுப்பப்படாமல் இருந்தது. 1996ஆம் ஆண்டுக்குப்பின்
மாண்புமிகு....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போதுதான் கட்டடப் பணி
ஆரம்பிக்கப்பட்டு அது முடியப்போகிறது என்று மாண்புமிகு அமைச்சர்
சொல்லியிருக்கிறாரே! அதைத் தொடர்ந்து உங்கள் கேள்வியைக்
கேளுங்கள்.

**திருமதி ஆர். சரஸ்வதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு சட்டத் துறை
அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக
நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எல். மூக்கையா.

**திரு. எல். மூக்கையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,
பெரியகுளத்தில் 100 ஆண்டுகளுக்கு மேலாக குற்றவியல் நீதிமன்றம்,
உரிமையியல் நீதிமன்றம் ஆகியவை இயங்கிக் கொண்டு வருகின்றன.
அந்த வளாகத்திற்குள்ளேயே, தேனி மாவட்ட அளவிலான நீதிமன்றங்களை
அமைப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-40

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மூலக் கேள்வி, தாராபுரத்தில் நீதிமன்றம் கட்டுவது
தொடர்பானது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் கேட்பது
நீதிமன்றத்தையே மாற்றுவது தொடர்பானது. எனவே, மூலக் கேள்விக்கு
வினா தொடர்புடையதாக இல்லை. மேலும், இது கொள்கை அளவில்
முடிவு எடுக்கப்பட வேண்டிய பிரச்சினை. மாண்புமிகு முதல்வர்
அவர்கள்தான் இதில் முடிவு எடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,
ஸ்ரீவில்லிபுத்தூரில் மாவட்ட நீதிமன்றம் ஒன்று செயல்பட்டு வருகின்றது.
கடந்த 1990 ஆம் வருடம் அப்போதைய சட்ட அமைச்சராக இருந்த
திரு. சாதிக் பாட்சா அவர்கள், இராமநாதபுரம் மாவட்டம் மூன்றாகப்
பிரிந்தபோது, ஸ்ரீவில்லிபுத்தூரில் மாவட்ட நீதிமன்றம் அமைக்கப்படும்
என்று சொல்லி, அப்போதைய திராவிட முன்னேற்றக் கழக அரசால்

[*1998 மார்ச் 30*

கொள்கை முடிவு எடுக்கப்பட்டது. அதன்படி மானியக் கோரிக்கையிலும் அறிவிக்கப்பட்டு, பின்னர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்தில் ஸ்ரீவில்லிபுத்தூரில் மாவட்ட நீதிமன்றம் அமைக்கப்பட்டு, அது தற்போது இயங்கிக் கொண்டிருக்கிறது. அந்த நீதிமன்றத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்காக 12 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு, இடமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் வினாவுக்கு வாருங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** அங்கே இயங்கிக் கொண்டிருக்கின்ற அந்தக் கோர்ட் ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து விருதுநகருக்கு மாற்றப்படும் மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் என்று அறிவித்தார்கள். இது சம்பந்தமாக நான் சாலை மறியல் நடத்தினேன். அதன்பிறகு மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள், 'மாற்றமாட்டேன்' என்று அறிவித்தார்கள். அந்தச் செய்தி சன் டி.வி. யிலும் பத்திரிகையிலும் வந்தது. ஆனால் இப்பொழுது பழையபடி சட்ட அமைச்சரே, சட்டத்தைக் கெடுக்கின்ற அளவில், 'விருதுநகருக்கு மாற்றப்படும்' என்று அறிவித்தார்கள். இது தொடர்பாக வக்கீல்களெல்லாம் போராட்டம் நடத்துகின்றார்கள், சாலை மறியல், பஸ் மறியல், ஊர்வலம் நடத்துகின்றார்கள், உண்ணாவிரதம் இருக்கின்றார்கள். வக்கீல்களெல்லாம் கோர்ட்டுக்குப் போகாமல் இருக்கின்றார்கள். எனவே, இந்த அரசு கொள்கை முடிவை மாற்றிக்கொண்டு, இதற்கு ஒரு நல்ல முடிவை அறிவிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் நீதிமன்றம் தொடர்பான பிரச்சினையில் வழக்கறிஞர்கள் போராடிக் கொண்டிருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் சொன்னார்கள். திரு. தாமரைக்கனி மூலமாக, வழக்கறிஞர்கள் போராட்டத்தை நிறுத்திக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், அவர் சொன்னால் நடக்கும், இல்லாவிட்டால் போராட்டம் நடக்காது என்பது எனக்கு நன்றாகத் தெரியும். எனவே, இந்தப் பிரச்சினையில் அரசு அவசரமாக எந்த முடிவையும் எடுக்காது என்பதையும், மாவட்டங்கள் பிரிக்கப்பட்டபோது இருந்த முன்னுதாரணங்கள் பின்பற்றப்படும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



*1998 மார்ச் 30*]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சிவானந்தம்.

**திரு. ஆர். சிவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரணி தொகுதியில் நடைபெறுகின்ற நீதிமன்றங்கள் ஜாகீர் காலத்துக் கட்டடங்களில், குதிரை லாயங்களில் நடைபெற்று வருகின்றன. இவையனைத்தும் இடிந்து விழுகின்ற நிலையில் உள்ளதால், புதிய கட்டடங்கள் கட்டவேண்டுமென்று பலமுறை நான் அமைச்சர் அவர்களுக்கு மனு செய்திருக்கிறேன். எனவே, அந்த நீதிமன்றங்களுக்குப் புதிய கட்டடம் கட்டப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்த இடங்களிலெல்லாம் நீதிமன்றங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டவேண்டும், எங்கெல்லாம் வாடகைக் கட்டடங்களில் இயங்குகின்றன, எந்தெந்த இடங்களில் புதிதாக நீதிமன்றம் அமைக்கப்படும் என்பது குறித்து சென்னை உயர் நீதிமன்றம் Master Plan என்ற ஒரு பெரிய திட்டத்தைத் தயாரித்து அரசுக்கு அனுப்பி வைத்திருக்கிறது. அது அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. எனவே, எங்கெல்லாம் நீதிமன்றங்களுக்குக் கட்டடம் கட்டவேண்டும், வழக்கறிஞர்கள் சங்கக் கட்டடம் கட்டவேண்டும், வழக்கறிஞர்கள் குடியிருப்புக் கட்டவேண்டும், அலுவலர்கள் குடியிருப்புக் கட்டவேண்டும் என்பது குறித்து அப்பொழுது ஆய்வு செய்யப்படும் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானாமதுரையில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் இருக்கிறது. 1996-ல் நமது ஆட்சி பொறுப்பேற்றவுடன், அதே நீதிமன்றத்தோடு குற்றவியல் நீதிமன்றம் அமைக்கப்படுமா என்ற கேள்விக்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்த இடத்தில் நிச்சயமாகக் குற்றவியல் நீதிமன்றம் அமைக்கப்படும் என்று இந்த அவையிலேயே உறுதி அளித்தார்கள். ஆனால், இதுவரை குற்றவியல் நீதிமன்றம் அமைக்கப்படுவதற்கான வேலைகள் துவங்கப்படவில்லை. எனவே, இந்த ஆண்டிலாவது குற்றவியல் நீதிமன்றம் மானாமதுரையில் அமைக்கப்பட ஆவன செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த முறை மானியக் கோரிக்கையின்போது புதிய

நீதிமன்றங்கள் அமைப்பது தொடர்பாக உறுதி அளித்தேன் என்பது உண்மை. அது தொடர்பாக உயர் நீதிமன்றத்தின் ஒப்புதல் இன்னும் கிடைக்கப்பெறவில்லை. கிடைத்தவுடன் அது அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 76, திரு. இ.ஜி. சுகவனம், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.*

**76—**

**மகளிர் தொழிற்பேட்டை கட்டுமானப் பணியை மீண்டும் துவக்குதல்**

***7910-திரு. இ.ஜி. சுகவனம்:**

*மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பர்கூர் தொகுதியில் நிறுத்தப்பட்டுள்ள மகளிர் தொழிற்பேட்டை கட்டுமானப் பணி மீண்டும் எப்போது துவங்கும்?*

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*தொழில் துவங்க வரும் தொழில் முனைவோர் எண்ணிக்கையைப் பொறுத்து மீண்டும் கட்டுமானப் பணி மேற்கொள்ளப்படும்.*

**திரு. இ.ஜி. சுகவனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலத்திலே அது துவக்கப்பட்டு, Single Tender முறைக்கு விடப்பட்டு, அது சரியான முறையில் கட்டி முடிக்கப்படாத ஒரு அவல நிலையுள்ளது. நான் நேற்றைக்குக்கூட அங்கு சென்று பார்த்தபோது, ஏறத்தாழ 20 கட்டடங்கள் சரியான முறையில் கட்டப்படாமல், பாதி நிலையிலேயே நிறுத்தப்பட்டு, அங்குள்ள செங்கற்கள் மழையின் காரணமாக இடிந்து விழக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது. அங்கே தண்ணீர்த் தொட்டி இல்லாத சூழ்நிலை இருக்கிறது. மின்சார வசதியில்லை. அங்கு நான் சென்று பார்த்தபோது, யாரும் கேட்பாரற்ற நிலையில், அங்கு சமூக விரோதச் செயல் நடைபெறும் சூழ்நிலை ஏற்பட்டு விடுமோ என்று அச்சப்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, விரைவிலே அது துவக்கப்பட வேண்டும். அங்கே 20 கட்டடங்கள் இருக்கின்றன. மிக அதிகமாக டெண்டர் கோரப்பட்டு





இருக்கின்றது. குறைந்த விலைக்கு டெண்டர் விட்டு, அந்தப் பகுதியிலே தொழிற்கூடத்தைத் துவங்குவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-45*

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பர்கூரில் ஏற்கெனவே 20 தொழிற்கூடங்கள் முடிக்கப்பட்டு 7 பேர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. அந்த 7 பேர்களும் இதுவரையில் பணம் கட்டவில்லை. பணம் கட்டவில்லை என்று தெரிந்த உடனே அந்த 7 நபர்களும் தவணை முறையில் பணத்தைக் கட்டலாம் என்று அனுமதி தந்திருக்கிறோம். தவணை முறையில் பணத்தைக் கட்டலாம் என்று அனுமதி கொடுக்கப்பட்டும், இதுவரையில் அவர்கள் பணம் கட்ட முன்வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல, 20 சிறு தொழிற்கூடக் கட்டடங்கள் ஜன்னல் அளவில் நிற்கின்றன. 5 தொழிற்கூடக் கட்டடங்கள் அடிமட்டத்திலே இருக்கின்றன. இதற்குக் காரணம், ஒரு தொழிற்கூடத்தை, தொழில் முனைவர் கேட்டு அவர்கள் பெறுகின்ற நிலையிலே வருவார்களேயானால், அவர்கள் பணம் கட்டியவுடன் மின்சார வசதி, தண்ணீர் வசதி செய்து தருவது வழக்கம். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டு, யாராவது தொழில் துவங்குவதற்கு முன் வந்தால் அவர்களுக்கு இந்த வசதிகளை நாங்கள் செய்து தருவதற்குத் தயாராக இருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 77, திரு.இ. புகழேந்தி, மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.*

**77—**

**தொலைக்காட்சிகளில் அரசு நலத் திட்டங்கள்**

***9819—திரு. இ. புகழேந்தி:**

*மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சென்னைத் தொலைக்காட்சி மற்றும் தனியார் தொலைக்காட்சிகளில் அரசு நலத் திட்டங்களை செய்திப் படங்களாகத் தயாரித்து வெளியிடும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

[1998 மார்ச் 30

25-3-1998 அன்று, இவ்விடுதியைக் கட்டுவதற்கு ஒப்பந்தப்புள்ளி நிர்ணயிக்கப்பட்டு அதற்கு ஏற்பளிக்கப்பட்டுள்ளது. கூடிய விரைவில் அதற்கான கட்டுமானப் பணிகள் துவங்கப்படும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 79, திரு. பொ. முருகேசன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**79—**

**காஞ்சிபுரத்தை அழகுபடுத்துதல்**

***3787—திரு. பொ. முருகேசன்:**

மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சுற்றுலா நகராக அறிவிக்கப்பட்ட காஞ்சிபுரத்தை அழகுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சுற்றுலாத் தலமாக அறிவிக்கப்பட்டுள்ள காஞ்சிபுரத்திற்கு ரூ.15.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அரசு ஆணை எண் 50, செய்தி மற்றும் சுற்றுலா (சுற்றுலா-4)த் துறை, நாள் 7-3-1995-ல் முதற்கட்டமாக குடிநீர் வசதி, கழிப்பறை, தெரு விளக்குகள் போன்ற பணிகள் நிறைவேற்றப்பட்டு, நகராட்சியின் பராமரிப்பிற்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது. இங்கு மேலும் சுற்றுலா வசதிகளை ஏற்படுத்த தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**திரு. பொ. முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய அறிவிப்பிற்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேநேரத்தில், சுற்றுலா நகராக அறிவிக்கப்பட்டுள்ள நகரங்களில் சுற்றுலாத் துறையின் மூலமாக என்னென்ன செயல் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன என்பதை அறிய விரும்புவதோடு, காஞ்சிபுரத்தில் என்னென்ன செயல் திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.



1998 மார்ச் 30]

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலாத் துறையினுடைய மானியக் கோரிக்கையின்போது, என்னென்ன செயல் திட்டங்கள் திட்டப்பட்டுள்ளன என்பது தெரியப்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பவானி நகரத்தில் அமைந்துள்ள அருள்மிகு சங்கமேஸ்வர் ஆலயத்தைச் சுற்றுலா மையமாக அமைத்து, அங்கு பல்வேறு சமயங்களில் 5,000, 10,000 சுற்றுலாப் பயணிகள் வந்துபோகக்கூடிய சூழ்நிலையில், அவர்கள் தங்கிச் செல்லக்கூடிய அளவில் ஒரு சிறந்த தங்கும் விடுதி சுற்றுலாத் துறையின் மூலமாகக் கட்டிக் கொடுக்கப்படுமா - கட்டிக் கொடுக்க வேண்டும் - மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகின்ற காலகட்டத்தில் நிதிநிலைமையைப் பொறுத்து மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எல். மூக்கையா.

**திரு. எல். மூக்கையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைகளின் இளவரசியாக விளங்குகின்ற கொடைக்கானலை அழகுபடுத்த அரசிடம் என்னென்ன திட்டங்கள் இருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலாத் துறையினுடைய மானியக் கோரிக்கையின்போது கொடைக்கானலை அழகுபடுத்த என்னென்ன பணிகள் மேற்கொள்ளப்படும் என்பது தெரிவிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒகேனக்கல் ஒரு சுற்றுலா மையம் என்பது எல்லோரும் அறிந்த ஒன்று.

[1998 மார்ச் 30

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அரசு நலத் திட்டங்களை சுமார் 25 நிமிட நேரத்திற்குத் தயார் செய்து சென்னைத் தொலைக்காட்சி மற்றும் தனியார் தொலைக்காட்சிகள் மூலம் ஒளிபரப்பப்பட்டு வருகிறது.

(ஆ) அரசின் நலத் திட்டங்களான ஓராண்டுச் சாதனைகள் 7-7-1997 அன்றும், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம் ஆகிய வளர்ச்சிப் பணிகள் குறித்த செய்தி மலர் 8-8-1997 அன்றும், பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் பல்கலைக்கழகம், அண்ணல் அம்பேத்கர் பல்கலைக்கழகம், மதுரை மனிதச் சங்கிலி போன்ற நிகழ்ச்சிகளை உள்ளடக்கிய செய்தி மலர் 28-10-1997 அன்றும் சென்னைத் தொலைக்காட்சி மற்றும் தனியார் தொலைக்காட்சிகளான சன் டி.வி., ராஜ் டி.வி., விஜய் டி.வி. போன்ற தனியார் தொலைக்காட்சி நிறுவனங்கள் மூலம் ஒளிபரப்பப்பட்டன. இந்தப் பணிகள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசினுடைய சாதனைகளையும், திட்டங்களையும் இப்படி 25 நிமிடங்கள் அல்லது 30 நிமிடங்களுக்கான படங்களாகத் தயாரித்து வெளியிடுவதற்குப் பதிலாக, பெரிய திட்டங்கள் என்பதைவிட, மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் பெயரில் இருந்து வருகிற திருமண உதவித் திட்டத்தைப் போன்ற மகளிர், மக்கள் நலத் திட்டங்களைச் சிறிய அளவில், ஓரிரு நிமிடங்கள் இருக்கின்ற அளவில் எடுத்து, விளம்பரங்கள் வருவதைப் போல, இறுதியாக முதல்வர் அவர்களைக் காட்டி, இத்தகைய திட்டங்கள் எவ்வளவு சிறப்பாக நடைபெறுகின்றன, எத்தனை பேர்கள் இதனால் பயன்படுகிறார்கள் என்ற கருத்தைக் கூறும் விதமாக விளம்பரங்களாக, துண்டுப் படங்களாக எடுத்து அவர்கள் வெளியிடுவார்களா, அவ்வாறு அரசு செயல்படுத்த முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன். அடுத்தபடியாக, வன்முறை, தீவிரவாதம் போன்றவற்றிற்கு, எதிர்பாராதவிதமாக ஒருசில சுயநலப் பேராசைக்காரர்களுக்குப் பலியாகிவிட்ட சில இளைஞர் குழுக்களைத் திருத்துகின்ற விதமாக, மாண்புமிகு முதலமைச்சரே காட்சியிலே தோன்றி, ஓரிரு நிமிடங்கள் தன்னுடைய கருத்தைக் கூறி, அவர்களை நல்வழிப்படுத்த ஆலோசனை கூறுகின்ற விதமாக, செய்தித் தொகுப்புகளாக, அனைத்துத் தொலைக்காட்சிகளிலும், தனியார்



D V24, 31.3.98 N98.41.2

1998 மார்ச் 30]

தொலைக்காட்சிகளிலும் வெளியிடுவதற்கும், சமூக நலனைப் பாதுகாப்பதற்கும் இந்த வழியை அரசு பின்பற்றி, நடவடிக்கை மேற்கொள்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதில் முதலமைச்சரே தோன்றி அறிவுரை கூற வேண்டுமென்பதில்லை. தமிழகத்தில் உள்ள ஆன்றோர்கள், சான்றோர்கள் மற்றும் மடத் தலைவர்கள்—மடாதிபதிகளாக இருக்கின்றவர்கள், அவர்களையெல்லாம் கொண்டு அறிவுரை கூறச் செய்து, அப்படிப்பட்ட ஆக்கப் பணிகளை ஆற்றலாம். அதுகுறித்து இப்போதே சில தொலைக்காட்சி நிலையங்களோடு, குறிப்பாக சென்னைத் தொலைக்காட்சி நிலையத்தோடு பேசப்பட்டிருக்கிறது. அந்த முயற்சி விரைவில் செயல் வடிவம் பெறும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 78, திரு.செ. மதிவாணன், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

**78—**

## ஆதிதிராவிடர் விடுதிக்குக் கட்டடம் கட்டுதல்

**•3447—திரு. செ. மதிவாணன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அச்சரப்பாக்கம் தொகுதி, சூனாம்பேடு பகுதியில் ஆதிதிராவிடர் விடுதிக்குத் தனிக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): 1997-98 ஆம் ஆண்டில் அச்சரப்பாக்கம் தொகுதி, சூனாம்பேடு என்ற இடத்தில் ஒரு ஆதிதிராவிடர் மாணவியர் விடுதி கட்டுவதற்கு அரசு ஆணை [illegible] மேலும் கடந்த

28457.

[1998 மார்ச் 30

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், திருப்பூர் தொகுதி, முருகம்பாளையம், இடுவம்பாளையம் ஆகிய பகுதிகளில் நூலகம் அமைப்பதற்கு இதுவரை கோரிக்கை ஏதும் அரசுக்கு வரவில்லை.

(ஆ) இடுவம்பாளையம் என்பது முருகம்பாளையம் ஊராட்சியில் அடங்கியுள்ள குக்கிராமங்களில் ஒன்றாகும். மக்கள் தொகை அடிப்படையில் நூலகம் திறப்பதற்கான சாத்தியக்கூறுகள் முருகம்பாளையம் கிராமத்தில் மட்டுமே இருப்பதால் அவ்வூர்ப் பொதுமக்கள் உடனடியாக நூலகம் திறக்கத்தக்க வகையில் இலவச காலிமனை வழங்கினால், அவ்வூரில் பகுதிநேர நூலகமோ அல்லது ஊர்ப்புற நூலகமோ செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன.

2—

### கிளை நூலகம் அமைத்தல்

**வினா 11526—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, ஏலகிரி ஊராட்சியைச் சேர்ந்த சாமிசெட்டிப்பட்டியில் கிளை நூலகம் ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

தற்சமயம் இவ்வூரில் கிளை நூலகம் திறப்பதற்கான வாய்ப்புகள் இல்லை. இருப்பினும், தமிழ்நாடு முழுவதும் 625 ஊர்ப்புற நூலகங்கள் திறக்க அனுமதிக்கப்பட்ட அரசாணை நிலை எண் 66, கல்வி, நாள் 30-1-1996-ன்படி தருமபுரி மாவட்டத்திற்கு, அனுமதிக்கப்பட்ட 41 ஊர்ப்புற நூலகங்களில், ஊர்ப்புற நூலகம் திறப்பதற்குத் தேவையான நிபந்தனைகளை நிறைவேற்றித் தராத கிராமங்களேதுமிருப்பின், அக்கிராமத்திற்கு அனுமதிக்கப்பட்ட ஊர்ப்புற நூலகத்தை, அதற்கான நிபந்தனைகளை சாமிசெட்டிபட்டி ஊர்ப் பொது மக்கள் நிறைவேற்றித்தரும் பட்சத்தில் அவ்வூருக்கு மாற்றம் செய்து அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் உள்ளன.



1998 மார்ச் 30]

3—

### கிளை நூலகம் அமைத்தல்

**வினா 12618—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், திருச்சிற்றம்பலம் ஊராட்சியில் ஒரு கிளை நூலகம் துவங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

தற்சமயம் இவ்வூராட்சியில் கிளை நூலகம் திறப்பதற்கு வாய்ப்பில்லை. இருப்பினும் அவ்வூர்ப் பொதுமக்கள் பகுதிநேர நூலகம் திறப்பதற்குரிய நிபந்தனைகளை முழுமையாகப் பூர்த்தி செய்துதரும் பட்சத்தில் அவ்வூரில் ஒரு பகுதிநேர நூலகம் திறக்க வழிவகையுள்ளது.

4—

### நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்குதல்

**வினா 12724—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாவட்டம், ஊத்துக்குளி ஒன்றியம், பல்லகவுண்டன் பாளையத்திலுள்ள அரசு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

1998-99 ஆம் கல்வி ஆண்டில் இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தக் கோரி கருத்துரு பெறப்பட்டால், பள்ளிகளைத் தரம் உயர்த்த வகுக்கப்பட்ட நெறிமுறைகள் அடிப்படையிலும், உயர்மட்டக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையிலும் உரிய நடவடிக்கை எடுக்க இயலும்.

[1998 மார்ச் 30

5—

## விளையாட்டு மைதானம் அமைத்தல்

**வினா 13636—திரு. ரா. சேதுநாதன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டிவனம் நகரத்தில் விளையாட்டு மைதானம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

திண்டிவனம், மாவட்டத் தலைநகரான விழுப்புரத்திலிருந்து சுமார் 30 கி.மீ. தூரத்தில் உள்ள நகரம். ஒவ்வொரு மாவட்டத்தின் தலைநகரிலும், மாவட்ட விளையாட்டு வளாகம் அமைக்கும் அரசின் கொள்கைப்படி, விழுப்புரத்தில் மாவட்ட விளையாட்டு வளாகம் கட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் இடம் தேர்வு செய்யும் பணி நடவடிக்கையில் உள்ளது. இதற்காக மாநில அரசு பகுதி-2 திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இந்நிலையில் திண்டிவனம் நகரத்தில் விளையாட்டு மைதானம் அமைக்க செயற்குறிப்பு ஏதும் இல்லை.

6—

## காலித் கமிஷன் பரிந்துரை விவரம்

**வினா 10740—திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காலித் கமிஷன் பரிந்துரையின் பேரில் பணியமர்த்தப் பட்டவர்கள் இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் பணியமர்த்தப் பட்டார்களா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): காலித் கமிஷன் தமது 11-2-1991 நாளிட்ட பரிந்துரையில் 18,006 ஒப்பந்தத் தொழிலாளர்களை அவர்களது பணிக்கால அனுபவத்திற்கேற்றபடி படிப்படியாகப் பணி நிரந்தரம் செய்திடப்



1998 மார்ச் 30]

பரிந்துரைத்துள்ளது. இப்பரிந்துரையினை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் தமிழ்நாடு மின்சார வாரியத்தினால் எதிர்மனு தாக்கல் செய்யப்பட்டது. உச்சநீதிமன்றம் 5-5-1995-ல் காலித் கமிஷன் பரிந்துரை செய்துள்ள அனைத்து 18,006 ஒப்பந்தத் தொழிலாளர்களையும் 31-3-1998-க்குள் பணி நிரந்தரம் செய்திட வேண்டும் என தீர்ப்பளித்துள்ளது. இத்தீர்ப்பிலேயே இவர்கள் அவர்களது இனத்திற்கேற்ப (Community) இன ஒதுக்கீடு விதிகள் அடிப்படையில் பொருத்தப்பட வேண்டும். அப்படி பொருத்தப்படுவதில் இவ்வினத்திற்குச் சேர வேண்டிய எண்ணிக்கையில் குறைவுகள் இருப்பின், கூடுதல் ஆட்தேர்வு நடத்தப்பட வேண்டுமென உச்சநீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

உச்ச நீதிமன்றத்தின் உத்தரவின்படி இதுவரை 12,500 ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு நேர்காணல் நடத்தப்பட்டு இதுவரையில், 8,350 ஒப்பந்தத் தொழிலாளர்கள் பணி நிரந்தரம் செய்யப்பட்டுள்ளார்கள். மீதமுள்ள 5,506 நபர்களுக்கு நேர்காணல் நடத்தப்பட்டு 31-3-1998-க்குள் பணி நிரந்தரம் செய்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

காலித் கமிஷனால் அளிக்கப்பட்ட 18,006 நபர்கள் பட்டியலில் அவர்களது இனம் பற்றிய விவரங்கள் தெரிவிக்கப்படவில்லை. இன ஒதுக்கீடு அடிப்படையினை, பூர்த்தி செய்வதற்காகப் பணி நியமன உத்தரவு வழங்கும்போது, அவர்களது இனச் சான்றிதழ் பெற வேண்டுமென மேற்பார்வைப் பொறியாளர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள். எனவே, உச்ச நீதிமன்றத்தின் உத்தரவின்படி அனைத்து 18,006 ஒப்பந்தத் தொழிலாளர்கள் பணி நிரந்தரம் செய்யப்படும்போது இட ஒதுக்கீடு நடைமுறைப்படுத்தப்படும்.

7—

## மகப்பேறு மருத்துவர் நியமனம் செய்தல்

**வினா 11171—திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி மாவட்டம், செய்துங்கநல்லூரில் உள்ள மருத்துவமனையில் மகப்பேறு மருத்துவர் நியமனம் செய்யப்பட்டு படுக்கை வசதியுடன் விரிவுபடுத்தப்படுமா?

அது அபிவிருத்தி அடையாத ஒரு மையமாக இருந்து வருகிறது. அங்கே பயணிகள் தங்குவதற்குக் குறைந்த வாடகையில் அறைகள் கிடைக்கின்ற வகையில் விடுதிகள் கட்டப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும், அங்கே பொழுதுபோக்கு அம்சங்கள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று சொல்லி பலமுறை வற்புறுத்தியும், அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொண்டும் இதுவரையிலும் எவ்விதக் காரியங்களும் அங்கே நிறைவேற்றப்படவில்லை. ஆகவே, நடப்பு ஆண்டிலே அந்தச் சுற்றுலா மையத்தை மேம்படுத்த அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலைமையைப் பொறுத்து முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 80, திரு. சி. கோபு, மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.

**80—**

**அணைக்கட்டில் உள்ள கூடை முடைவோர் சங்கம்**

***8572—திரு. சி. கோபு:**

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், அணைக்கட்டு, கூடை முடைவோர் சங்கம் நலிவடைந்துள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இது குறித்து அரசு எடுத்திருக்கும் நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : அணைக்கட்டு, கூடை முடைவோர் கூட்டுறவுச் சங்கம் அரசினை அணுகினால் சங்க வளர்ச்சிக்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சி. கோபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலிற்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அணைக்கட்டு ஒன்றியத்திலே கூடை



முடைவோர் சங்கம் ஒன்றுதான் இருக்கின்றது. இச்சங்கத்திற்கு வசதியான கட்டடம் இருக்கிறது. நிறைவான நிர்வாகம்—அதாவது, தலைவர், இயக்குநர்கள், உறுப்பினர்கள் என்று செயல்பட்டு வருகிறார்கள். ஆனால், நிதியாதாரம் இல்லை. அந்த நிதியாதாரத்திற்காகத்தான் இந்தக் கேள்வியையே நான் தொடுத்தேன். இந்த நிதியினை எவ்வாறு, உறுப்பினர்களோ, இயக்குநர்களோ அல்லது தலைவரோ அரசிடமிருந்து பெற வழி இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-55*

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவுச் சங்கத்திற்கு வாரியத்தின் மூலமாக, மூலதனக் கடனாக 12 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. இருப்பினும், விளிம்புக் கடன் தொகை வழங்குவதற்கும் வாரியத்தில் வழிவகை இருக்கிறது. இந்தக் கூடை முடைவோர் கூட்டுறவுச் சங்கம், வனத் துறையின்மூலம், மூங்கில்கள் வெட்டியெடுப்பதற்கு முறையாக அனுமதி பெறவேண்டும். உற்பத்தி செய்யப்படுகின்ற கூடைகள் மற்றும் பல்வேறு உபகரணப் பொருட்களை விநியோகம் செய்வதற்கு, அரசின் பட்டு வளர்ப்புத் துறையின் மூலம் அனுமதி பெறவேண்டும். ஆகவே, அதற்குண்டான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

## ஐந்தாவது பட்டியல்

**1—**

**நூலகம் அமைத்தல்**

**வினா 6719—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், திருப்பூர் தொகுதி, முருகம்பாளையம், இடுவம்பாளையம் பகுதிகளில் நூலகம் அமைக்கும் கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

[1998 மார்ச் 30

10—

## பேரூராட்சியை வட்டமாக மாற்றுதல்

**வினா 13702—டாக்டர் ஆ. ஞானசேகரன் :** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதி, செஞ்சி ஒன்றியம், அனந்தபுரம் பேரூராட்சியை வட்டமாக மாற்ற அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், மேல்மலையனூர் தொகுதி, செஞ்சி ஒன்றியம், அனந்தபுரம் பேரூராட்சியை வட்டமாக மாற்றுவது குறித்து செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

11—

## காவிரி நீர் வழங்குதல்

**வினா 8116—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியப் பகுதிகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீருக்காக பூலாம்பட்டி, ராசிபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்படாத பகுதிகள் எத்தனை?

(ஆ) விடுபட்ட பகுதிகளையும் உடனடியாக அந்தக் குடிநீர்த் திட்டத்தில் சேர்த்து காவிரி நீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) 27 கிராமங்கள்.

(ஆ) இக்கிராமங்களுக்கு இருப்பாளி குடிநீர்த் திட்டத்திலிருந்து மிகுதியாக உள்ள நீரைக் கொண்டு குடிநீர் வழங்க சாத்தியக்கூறுகள் உள்ளன.



1998 மார்ச் 30]

12—

## பள்ளிக் கட்டடம் சீர் செய்தல்

**வினா 11219—திரு. மா. இராமச்சந்திரன் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், தெக்கூர் கிராமம், குணாளர் தெருவிலுள்ள பள்ளி பழுதடைந்துள்ளதைச் சீர் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், தெக்கூர் கிராமம், குணாளர் தெருவிலுள்ள பள்ளிக் கட்டடம் பழுதுபார்க்கும் பணி ரூ.22,000 மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

13—

## சிற்றூராட்சிகளுக்கு அலுவலகக் கட்டடம்

**வினா 11330—திரு. நா. பெரியசாமி :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பாண்டியம்பாளையம் மற்றும் தோரணவாவி சிற்றூராட்சிகளுக்கு அலுவலகக் கட்டடம் இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனைக் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

[1998 மார்ச் 30

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

செய்துங்கநல்லூரில் தற்போது மருத்துவமனை ஏதும் இல்லை. அங்கு உள்ளது ஒரு துணைச் சுகாதார நிலையம் மட்டுமே. இது தூத்துக்குடி மாவட்டம் கருங்குளம் ஊராட்சி ஒன்றியம், கருங்குளம் ஆரம்பச் சுகாதார நிலையத்திற்குட்பட்டதாகும். கருங்குளம் ஊராட்சி ஒன்றிய மக்கள் தொகை 77,546 ஆகும். மத்திய அரசினால் வரையறுக்கப்பட்ட நெறிமுறைகளின்படி, 30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்கப்பட வேண்டும். மக்கள் தொகை அடிப்படையில் கருங்குளம் ஊராட்சி ஒன்றியத்தில் தற்போதுள்ள மூன்று ஆரம்பச் சுகாதார நிலையங்கள் இயங்கி வருகின்றன. இவை போதுமானதாக உள்ளன. அதனால் இந்த ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த செய்துங்கநல்லூர் கிராமத்தில் புதிய மருத்துவமனை அமைக்க அவசியமில்லை.

8—

**பிரேதப் பரிசோதனை அறையை மருத்துவமனை வளாகத்திலேயே அமைத்தல்**

**வினா 12490-திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் அரசு மருத்துவமனையில் உள்ள பிரேதப் பரிசோதனை அறையை நவீன வசதியுடன் மருத்துவமனை வளாகத்திலேயே அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தாலுகா மற்றும் தாலுகா அல்லாத எல்லா அரசு மருத்துவமனைகளிலும் உள்ள பிரேதப்



1998 மார்ச் 30]

பரிசோதனை அறையை நவீன வசதியுடன் மருத்துவமனை வளாகத்திலேயே அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

இதன் முதல் கட்டமாக, 1997-98—பகுதி-2 திட்டத்தில் 8 தாலுகா மருத்துவமனைகளில் பிரேதப் பரிசோதனை அறைகள் குளிர்சாதன வசதி கொண்டதாகச் செய்து கொடுக்கப்பட்டன. 1998-99—பகுதி-2 திட்டத்தில் 4 தாலுகா மருத்துவமனைகளில் பிரேதப் பரிசோதனை அறைகளுக்குக் குளிர் சாதன வசதி கொடுக்க மாநிலத் திட்டக் குழு பரிந்துரை செய்து நிதிநிலைக் குழுவில் வைக்கப்படவுள்ளது.

ஓமலூர் அரசினர் மருத்துவ மனையில் பிரேதப் பரிசோதனை அறையை நவீன வசதியுடன் அமைக்க அவசியம் ஏற்பட்டால், 1999-2000 ஆம் ஆண்டு, பகுதி-2 திட்டத்தின்போது பரிசீலிக்கப்படும்.

9—

**பெரிய கிராமங்களை இரண்டாகப் பிரித்தல்**

**வினா 10201—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி புதிய வட்டத்தில் உள்ள பெரிய கிராமங்களை நிர்வாக வசதிக்காக இரண்டாகப் பிரிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்தக் கிராமங்கள் அவ்வாறு பிரிக்கப்பட உள்ளன?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி புதிய வட்டத்தில் உள்ள பெரிய கிராமங்களை நிர்வாக வசதிக்காக இரண்டாகப் பிரிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

[1998 மார்ச் 30

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* ஆம்.

*(ஆ)* வரும் நிதியாண்டில் *(1998-99)* ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 65% ஊராட்சிப் பங்கு வேலைகள் தேர்வு செய்யும் சமயத்தில் இரண்டு ஊராட்சிகளுக்கும் தனித்தனியே அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கு மாவட்ட அளவில் தக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

**14—**

### பள்ளிக் கட்டடங்களைப் புதுப்பித்தல்

**வினா 12256—திரு. ப. கோவிந்தன் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், மேச்சேரி ஒன்றியம், வெள்ளார் ஊராட்சி, அரசமரத்தூர், கோயில் வெள்ளார், எருமைப்பட்டி, வெள்ளப்பம்பட்டி மற்றும் உப்பாரப்பட்டி ஆகிய இடங்களிலுள்ள பள்ளிக் கட்டடங்களைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வெள்ளப்பம்பட்டி, உப்பாரப்பட்டி ஆகிய இடங்களிலுள்ள பள்ளிக் கட்டடங்கள் பழுதுபார்க்கப்பட்டுள்ளன. மீதமுள்ள அரசமரத்தூர், கோயில் வெள்ளார் மற்றும் எருமைப்பட்டி பள்ளிக் கட்டடங்களைப் பழுதுபார்க்கும் பணி நடந்து வருகிறது.

**15—**

### ஐ.ஆர்.டி.பி. கடன் திட்டம்

**வினா 12845—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1998 மார்ச் 30]

*(அ)* ஐ.ஆர்.டி.பி. கடன் திட்டத்தில் கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஆட்சித் தலைவருக்கான ஒதுக்கீட்டில் 1997-98க்கான பயனாளிகள் எந்த அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டனர்?

*(ஆ)* அதன் மீது ஏதாவது புகார் அரசுக்கு வந்துள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

*(அ)* மாவட்ட ஆட்சித் தலைவரால் நடத்தப்படும் மக்கள் குறை தீர்க்கும் நாள், மனு நீதி நாள், சுற்றுப்பயணத்தின்போது பெறப்படும் மனுக்கள் மற்றும் மக்களால் தேர்வு செய்யப்பட்ட பிரதிநிதிகளால் பெறப்பட்ட கொடுக்கப்பட்ட மனுக்கள் நேரடி விசாரணைக்காக சம்பந்தப்பட்ட வட்டாரத்தைச் சேர்ந்த கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கு விசாரணைக்காக அனுப்பப்படுகின்றன.

சம்பந்தப்பட்ட கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் உரிய வங்கி அலுவலர்கள் இத்தகைய மனுதாரர்களை நேரடியாக விசாரணை செய்கிறார்கள். விசாரணையின்போது மனுதாரர்கள் உண்மையிலேயே வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழ்பவரா, முன்னமே ஏதாவது அரசு நலத் திட்டங்களில் பயன்பெற்றுள்ளவரா, இதர வங்கிகளில் கடன் பெற்றுள்ளவரா, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்ட விதிமுறைகளின்படி மனுதாரர் கடன்பெறத் தகுதியுள்ளவரா போன்றவற்றைக் கண்டறிந்து இதில் தகுதி வாய்ந்த மனுக்களை மீண்டும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு சிறப்பு ஒதுக்கீட்டின்கீழ் மானியத்துடன் கூடிய கடன் வழங்க, கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலரால் உரிய வங்கி அலுவலரின் ஒப்புதலுடன் பரிந்துரை செய்யப்படுகிறது. இந்தப் பரிந்துரையின் அடிப்படையில், உரிய மனுக்களை மாவட்ட ஆட்சித் தலைவரின் ஒப்புதலுடன் மீள சம்பந்தப்பட்ட கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலருக்கு உரிய படிவத்தில் மானியப் பிரேரணைகளை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு அங்கீகாரத்திற்கும், மானியம் விடுவிக்கும் பொருட்டும். அனுப்பப்படுகிறது.

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையில், இவ்விதம் கிடைக்கப் பெறும் பிரேரணைகள், பரிசீலனைக்குப்பின் அங்கீகாரம் வழங்கப்பட்டு, சம்பந்தப்பட்ட வங்கிக்கு மானியம் விடுவிக்கப்படுகிறது. இவ்விதம்

[1998 மார்ச் 30

பெறப்படும் மனுக்களின் விவரம், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலகங்களில் பதிவு செய்யப்பட்டுத் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

(ஆ) அரசுக்கு எந்தவிதமான புகாரும் வரவில்லை.

16—

**கால்வாயை மராமத்துச் செய்தல்**

**வினா 8771—திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், பழையலூர் கண்மாய்க்குச் செல்லும் கால்வாயை மராமத்து செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது பணி துவங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) மதுரை மாவட்டம், விரகலூர் ரெகுலேட்டரின் வலது புறக்கால்வாயிலிருந்து பிரியும் 23 உப கால்வாய்களில் பழையலூர் உப கால்வாயும் ஒன்றாகும்.

உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு நீர்வள ஆதார ஒருங்கிணைப்புத் திட்டம் கிரடிட் எண் 2745 ஐ.எண்.மூலம் பெறப்படும் நிதி ஆதாரத்தைக் கொண்டு மராமத்துப் பணிகள் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

வலது புற உபகால்வாய்களை மராமத்துச் செய்வதற்காக ரூ.39.60 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, மதிப்பீட்டுக் குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. அரசின் ஆட்சி ஒப்பளிப்பு கிடைக்கப் பெற்றவுடன் தொழில்நுட்ப ஒப்புதலளிக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரி 1998-99 ஆம் ஆண்டில் மராமத்துப் பணிகள் நிறைவேற்றிடத் திட்டமிடப்பட்டுள்ளது என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.



1998 மார்ச் 30]

17—

**வாய்க்கால் தூர் எடுக்கும் திட்டம்**

**வினா 9748—திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டன்சத்திரம் தொகுதி, தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியம், காளிப்பட்டி குளம், பொருளூர் குளம், பாப்பன்பட்டி புதூர் குளம் மற்றும் நீர்வரத்து வாய்க்கால் தூர் எடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்பொழுது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இல்லை.

18—

**வாய்க்கால் தூர் எடுக்கும் திட்டம்**

**வினா-9751—திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியம், விருப்பாட்சி அருகிலுள்ள பெருமாள் குளம் மற்றும் நீர்வரத்து வாய்க்கால் தூர் எடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியத்தில் மேற்கூறியுள்ள குளம் மற்றும் நீர்வரத்து வாய்க்காலில் தூர் எடுக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

[1998 மார்ச் 30

**19—**

**குளங்களில் தூர் எடுத்தல்**

**வினா 10582—திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டன்சத்திரம் தொகுதி, தொப்பம்பட்டியில் அமைந்துள்ள அரண்மனைக் குளம், தாசரிபட்டியிலுள்ள பாலசமுத்திர குளம், சத்திரப்பட்டியிலுள்ள கரிசல் குளம், வெள்ளியின்வலசில் அமைந்துள்ள குளம், பழனிசிரனூரில் அமைந்துள்ள குளம், காவேரியம்மாபட்டியில் அமைந்துள்ள குளம் ஆகியவற்றைத் தூர் எடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தற்போது மேற்கூறியுள்ள குளங்களில் தூர் எடுக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**20—**

**வடிகால் வசதி செய்தல்**

**வினா 11158—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், இழஞர் ஏரியிலிருந்து சின்னபருத்திக்கோட்டை இறவை நீர்ப்பாசனப் பம்பு வரை வடிகால் செய்துதர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

ஒரத்தநாடு வட்டம், அய்யனார் ஏரியிலிருந்து சின்னபருத்திக்கோட்டை இறவை பாசனத் திட்டம் வரையிலுள்ள உளூர் வடிகால் வாய்க்காலில் இந்த ஆண்டு (1997-98), மண் அகற்றும் இயந்திரம் மூலம் ரூ.4.51 இலட்சத்திற்குப் பணி செய்து முடிக்கப்பட்டுள்ளது.



1998 மார்ச் 30]

**21—**

**குளம் தூர்வாரி மராமத்துச் செய்தல்**

**வினா 12659—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பெரியகுத்திக்கோட்டை குளத்தைத் தூர் எடுத்து, மராமத்துச் செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பெரியகுத்திக்கோட்டை ஏரி 1996-97 ஆம் நிதியாண்டில் புல்டோசர் மூலம் தூர் வாரி கரையைப் பலப்படுத்தும் பணி செய்து முடிக்கப்பட்டுள்ளது.

**22—**

**ஏரியை மராமத்துச் செய்தல்**

**வினா-12664—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கொளக்குடி பெரிய ஏரியை மராமத்துச் செய்துதர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கொளக்குடி பெரிய ஏரியை 1998-99 ஆம் ஆண்டில் முன்னுரிமை அடிப்படையில் மராமத்துச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**23—**

### சாலையை அகலப் பாதையாக்குதல்

**வினா 3046—திரு. இரா. மூக்கப்பன் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சின்ன சேலம், கூட்டுரோடு முதல் வேப்பூர் வரையுள்ள தார்ச் சாலையை அகலப் பாதையாக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) இப்பணியை மேற்கொள்ள ரூ.347.60 இலட்சம் தேவைப்படுவதால், தற்பொழுது இப்பணியை மேற்கொள்ளும் சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**24—**

### தார்ச் சாலை அமைத்தல்

**வினா 7016—திரு. ஐ. கணேசன் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் பேரூராட்சி, கொங்கணாபுரம் மூலப்பாறையிலிருந்து கோர்ணம்பட்டி புதுப்பாளையம், சமுத்திரம் வரை உள்ள தார்ச் சாலை மிகவும் பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், தார்ச் சாலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இச்சாலையில் மிகவும் பழுதடைந்துள்ள கி.மீ. 4/0-5/0 பகுதி நபார்டு திட்டத்தின் வாயிலாக மேம்பாடு செய்யப்பட்டு





வருகிறது. இச்சாலையின் மீதமுள்ள பகுதிகள் நல்லமுறையில் வாகனப் போக்குவரத்திற்கு ஏற்ற நிலையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**25—**

### சாலை செப்பனிடல்

**வினா 7658— திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாசுதேவநல்லூர் தொகுதி, ஒத்தக்கடை-கூடலூர் சாலை, வாசுதேவநல்லூர் நெல்கட்டும் சாலை, சிவகிரி-இராயகிரி நெடுஞ்சாலை, சிவகிரி-தெற்குச் சத்திரம் சாலை, உள்ளார்-இராயகிரி நெடுஞ்சாலை, இராயகிரி-இராமநாதபுரம் நெடுஞ்சாலை, கரிவலம்வந்தநல்லூர்-சுப்புலாபுரம் நெடுஞ்சாலை, இராஜபாளையம்-சங்கரன்கோயில் நெடுஞ்சாலை, ரெட்டியப்பட்டி-விலங்குமாங்குடி நெடுஞ்சாலை, சிந்தாமணி- பேரிப்புதூர்-நாணாபுரம்-திருமலாபுரம் நெடுஞ்சாலை, தரணி-தலையணை சாலை ஆகியவற்றைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

வினாவில் குறிப்பிட்டுள்ள சாலைகளில் திருமலாபுரம் சாலை நல்ல நிலையில் உள்ளது. தரணி-தலையணை சாலை தேசிய நெடுஞ்சாலைப் பிரிவால் மத்திய சாலை நிதித் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ளது. நெடுஞ்சாலை ஊரகப் பணித் துறையின் பராமரிப்புக்கு இன்னும் ஒப்படைக்கப்படவில்லை. ரெட்டியப்பட்டி சாலை நபார்டு வங்கி கடன் உதவியுடன் மேம்பாடு செய்யப்படவுள்ளது. எஞ்சிய சாலைகள் நிதி நிலையினையும், சாலையின் போக்குவரத்து முக்கியத்துவத்தையும் கருத்தில் கொண்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன.

**26—**

### போக்குவரத்துத் தொழிலாளர்களின் பென்சன்

**வினா 13254—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1998 மார்ச் 30

(அ) அரசுப் போக்குவரத்தின் முன்னாள் தொழிலாளர்களுக்கு அரசு ஆணை 378-ன்படி, பென்சன் வழங்குவது குறித்த உயர் நீதிமன்றத் தீர்ப்பை அரசு அமல்படுத்த மறுப்பதேன்?

(ஆ) எப்போது தீர்ப்பு அமலாக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிட்டுள்ள அரசாணை எண் 378, நிதித் துறை, நாள்:18-4-1975-ன்படி, அரசுப் பணியாளர்களாகப் பணியாற்றி, பின் அவர்களது சொந்த விருப்புரிமைப்படி பல்வேறு அரசுப் பொது நிறுவனங்களில் (Public Undertakings) நிரந்தரமாகப் பணியில் அமர்த்தப்பட்ட பணியாளர்களுக்கு அவர்களது அரசுப் பணிக்காலம் 10 ஆண்டுகளுக்கு மேல் இருந்தால் ஓய்வு ஊதியம் மற்றும் பணிக்கொடையும், அரசுப் பணிக்காலம் 10 ஆண்டுகளுக்குக் குறைவாக இருப்பின் பணிக்காலப் பணிக்கொடை (Service Gratuity) மற்றும் இறப்பு—ஓய்வுகாலப் பணிக்கொடையும் (Death cum Retirement Gratuity) மட்டுமே அவர்களது அரசுப் பணிக்காலத்திற்கு ஏற்ப வழங்க இயலும். இதுவேதான் தமிழ்நாடு ஓய்வு ஊதிய விதி 43(2)-லும் குறிப்பிடப்பட்டுள்ளது.

2. மேற்குறிப்பிட்ட அரசு ஆணை மற்றும் ஓய்வு ஊதிய விதிப்படி, பல்வேறு போக்குவரத்துக் கழகங்களில் அவர்களது விருப்புரிமைப்படி நிரந்தரமாகப் பணியில் அமர்த்தப்பட்ட முன்னாள் அரசுப் போக்குவரத்துத் துறைப் பணியாளர்களில், 10 ஆண்டுகளுக்கு மேல் அரசுப் பணிக்காலம் உள்ளவர்களுக்கு உயர்நீதிமன்ற ஆணைப்படி ஓய்வு ஊதியமும், இறப்பு ஓய்வுக் கால பணிக்கொடையும் (Death cum Retirement Gratuity) ஏற்கெனவே தீர்வு செய்யப்பட்டு விட்டது. இவர்கள், போக்குவரத்துக் கழகத்தில் அளிக்கப்படும் மாதச் சம்பளத்துடன் அரசுப் பணிக்காலத்திற்குரிய மாத ஓய்வு ஊதியமும் பெற்று வருகிறார்கள். அரசுப் பணிக்காலம் 10 ஆண்டுகளுக்குக் குறைவாக உள்ளவர்களுக்கு அவர்களது பணிக்காலத்திற்கேற்ப பணிக்காலப் பணிக்கொடையும் (Service Gratuity) மற்றும் இறப்பு ஓய்வுகால பணிக்கொடையும் (Death cum Retirement Gratuity) தீர்வு செய்யப்பட்டுள்ளது. அரசுப் பணிக்காலம் 10 ஆண்டுகளுக்குக் குறைவாக உள்ளவர்களுக்கு ஓய்வு ஊதியம் வழங்க தமிழ்நாடு ஓய்வு ஊதிய விதியில் வழிவகை இல்லை.



1998 மார்ச் 30]

3. அரசு ஆணை எண் 378, நிதித் துறை, நாள் : 18-4-1975-ன் பேரில் வழங்கப்பட்ட உயர் நீதிமன்றத் தீர்ப்பு, மேலே பத்தி 2-ல் குறிப்பிட்டுள்ளபடி ஏற்கெனவே அரசாணை எண் 1028, போக்குவரத்துத் துறை, நாள் 23-9-1985-ன் மூலமாக போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு அமல்படுத்தப்பட்டுள்ளது.

**27—**

**பாம்பன் பாலத்தில் இறந்தவர்கள் விவரம்**

**வினா 13533—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்த ஆண்டு பாம்பன் பாலத்தில் பேருந்து விபத்தில் இறந்தவர்கள் எத்தனை?

(ஆ) அந்தக் குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகை எவ்வளவு?

(இ) ஆம் எனில், எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) பாம்பன் பாலத்தில் பேருந்து விபத்தில் இறந்தவர்கள் 8 பேர்கள்.

(ஆ) அக்குடும்பங்களுக்கு இழப்பீட்டுத் தொகையாக மொத்தம் ரூ.3/- இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

(இ) இக்கேள்வி எழவில்லை.

**28—**

**தரமான உணவு விடுதிகளில் சிற்றுண்டி வசதி**

**வினா 13575—டாக்டர் வே. ஆல்வன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் தொலைதூரம் செல்லும் பயணிகளுக்காக போக்குவரத்துத் துறை மூலம் தரமுள்ள சிற்றுண்டி அளிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தமிழகத்தில் தொலைதூரம் செல்லும் பயணிகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட தரமான உணவு விடுதிகளில் பேருந்துகள் நிறுத்தப்பட்டு பயணிகளுக்கு சிற்றுண்டி அருந்த வசதி செய்யப்படுகிறது. இந்நிலையில் போக்குவரத்துத் துறை மூலம் தரமுள்ள சிற்றுண்டி வழங்க வேண்டிய அவசியம் எழவில்லை.

**29—**

### போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைத்தல்

**வினா 13584—செல்வி க. ராணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தம்மம்பட்டியில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தம்மம்பட்டியிலிருந்து சுமார் 30 கி.மீ. தொலைவில் உள்ள ஆத்தூரிலும், வாழப்பாடியிலும் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகப் பணிமனை இயங்கி வருவதால் தம்மம்பட்டியில் தற்போது பணிமனை அமைக்கும் தேவை ஏதும் ஏற்படவில்லை.

**30—**

### தனித்தனி வீடுகள் அமைக்கும் திட்டம்

**வினா 6363—திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குடிசை மாற்று வாரியத்தின் மூலம் கட்டித் தரப்படும் அடுக்குமாடி வீடுகளை பேரூராட்சிப் பகுதியிலும், கிராமப் பகுதியிலும் தனித்தனி வீடுகளாக அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?



விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

இல்லை.

**31—**

### விவசாயிகளுக்குக் கடன் தொகை அளித்தல்

**வினா 11662—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பிரதம பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் நிலமற்ற சிறு ஏழை விவசாயிகளுக்குக் கறவை மாடு, எருமைகள் வாங்குவதற்கும், பராமரிப்பதற்கும் வழங்கப்படும் கடன் தொகையை விரைவாக அளிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

ஆதிதிராவிடர் நலத் திட்டம், ஆதிதிராவிடர்களில் கிறிஸ்தவராக மதம் மாறியவர்களுக்கான திட்டம் மற்றும் மத்திய அரசின் சிறப்பு நிதியுதவி, தாட்கோ திட்டங்களின் மூலம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள பயனாளிகளுக்கு ஆண்டுதோறும் கறவை மாடுகள் வாங்குவதற்கான மானியம், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தால் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களுக்கு வழங்கப்படுகிறது. மேற்படி மானியத்தை அரசு ஆணை வெளியிட்டவுடன் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் கிராம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்குகின்றன. இத்திட்டங்களுக்கான கடன் தொகையை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் வங்கிகளிலிருந்து பெற்று, பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்குகின்றன. நிலமற்ற சிறு விவசாயிகளுக்குக் கறவை மாடு, எருமைகள் வாங்க வழங்கப்படும் கடன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட பயனீட்டாளர்களுக்கு வழங்கப்படுகிறது.

32—

### கூட்டுறவுச் சங்கங்களுக்கு சொந்தக் கட்டடம்

**வினா 12593—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், வெள்ளார் ஊராட்சி, அரசமரத்தூர், எருமைப்பட்டி மற்றும் வெள்ளப்பம்பட்டி ஆகிய இடங்களில் பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், வெள்ளார் ஊராட்சியில் உள்ள அரசமரத்தூர் மற்றும் எருமைப்பட்டி பால் உற்பத்தியாளர் சங்கங்களுக்கு அடி நிலமாக ஒதுக்கீடு செய்ய அரசு நிலம் ஏதும் இல்லாததாலும், வெளிச்சந்தையில் அடி நிலம் வாங்க சங்கங்களுக்குப் போதிய நிதி வசதி இல்லாத காரணத்தாலும், இச்சங்கங்களுக்குக் கட்டடம் கட்டித் தர வாய்ப்புகள் இல்லை. வெள்ளப்பம்பட்டி பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு, அரசுக்குச் சொந்தமான ஊர்நத்தத்தில் ரூ.1.90 இலட்சம் மதிப்பீட்டில் கட்டடம் கட்டப்பட்டு வருகிறது.

33—

### சிறப்பு வழக்குரைஞரை நியமனம் செய்தல்

**வினா 10723—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில், பீடித் தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட பல வழக்குகள் நிலுவையில் உள்ளதால் அந்த வழக்குகளைத் திறம்பட நடத்துகின்ற வகையில் ஒரு சிறப்பு வழக்குரைஞரை (Special Public Prosecutor) நியமனம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?



விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): திருநெல்வேலி மாவட்டத்தில் பீடித் தொழிலாளர்கள் அதிக அளவில் செறிந்துள்ளதால் அவர்களின் நலம் பேணப்படாமை குறித்த பல வழக்குகள் நிலுவையில் உள்ளதாகவும், பல வழக்குகள் அரசிற்கு எதிராக, பீடி நிறுவனங்களுக்குச் சாதகமாக முடிவுற்றுள்ளதாகவும் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. பீடித் தொழிலாளர்களின் நலம் பேணப்படுவதற்காக, சட்டங்களுக்குட்பட்டுப் போடப்படும் வழக்குகளைத் திறம்பட நடத்துவதற்கும், தோல்வி காணாத வகையில் ஆதாரங்களைச் சமர்ப்பித்து அரசின் சார்பாக வாதிடுவதற்கும் பிரத்தியேகமாக ஒரு சிறப்பு அரசு வழக்குரைஞரை (Special Public Prosecutor) 1973-ஆம் வருடத்திய குற்றவியல் நடைமுறை விதித் தொகுப்பின் பிரிவு 24-ன் உட்பிரிவு 8-ன்கீழ் தகுதி வாய்ந்த வழக்குரைஞராகத் தேர்வு செய்து நியமனம் செய்வதற்கு நடவடிக்கை மிகத் துரிதமாக அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

34—

### மாணவர் விடுதி அமைத்தல்

**வினா 13477—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதி, சோலைக்கொட்டாய், பாளையம்புதூர் மற்றும் அதகபாடிக்கு பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

தருமபுரி தொகுதி, சோலைக்கொட்டாய், பாளையம்புதூர் மற்றும் அதகபாடிக்கு பிற்படுத்தப்பட்டோர் மாணவர்களுக்கான புதிய விடுதிகள் துவங்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**35—**

### மிகப் பிற்படுத்தப்பட்ட மாணவர்க்கு விடுதி

**வினா 13478—திரு கு. மனோகரன் :** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, தருமபுரி நகரில் அரசுக் கலைக் கல்லூரியில் பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு விடுதி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எபபோது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தருமபுரி தொகுதி, தருமபுரி நகரில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மாணவர்களுக்கென கல்லூரி மாணவர் விடுதி துவங்குவதற்கு செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**36—**

### இரயில் நிலையம் செல்ல பாதை

**வினா 9194—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், ஏலகிரி மலையிலுள்ள மங்களம் என்ற கிராமத்தில் ஒதுக்கக் காட்டுப் பகுதியிலுள்ள காட்டிலாக்காவின் இரயில் நிலையத்திற்குச் செல்ல பாதை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

(அ) இப்பொருள் தொடர்பான செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.



(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**37—**

### காட்டுப்பன்றிகளால் சேதம் ஏற்படுவதைத் தடுத்தல்

**வினா 12578—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், கணவாய்ப்புதூர், நாராயணபுரத்தில் விவசாயப் பயிர்களையும், வீடுகளையும் மலையிலிருந்து வரும் காட்டுப்பன்றிகள் இரவு நேரங்களில் சேதப்படுத்துவதால், இவற்றைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

தலைமை வன உயிரினக் காப்பாளரின் கூற்றுப்படி, காடையாம்பட்டி ஒன்றியம், கணவாய்ப்புதூர் ஊராட்சி, நாராயணபுரம் கிராமம், சேர்வராயன் வடக்கு வனச்சரகம் ஏரிமலை காப்புக்காட்டைச் சார்ந்த கிராமம் ஆகும். மேற்படி கிராமத்தையும், அதைச் சூழ்ந்த மலையடிவாரத்தையும் தணிக்கை செய்ததிலும், கிராம மக்களை விசாரித்ததிலும் காட்டுப்பன்றிகளால் விவசாய நிலங்களுக்கு எந்தவிதச் சேதாரமும் இல்லை. இனியும் காட்டுப்பன்றிகள் நடமாட்டம் இருந்தால் அவைகளால் சேதாரம் எதுவும் ஏற்படாமல் பாதுகாக்க, தக்க நடவடிக்கை சரகர் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் இதுபோன்ற நிகழ்வுகளுக்கு நிவாரணம் கோரி இதுவரை விண்ணப்பங்கள் எதுவும் பெறப்படவில்லையாதலால் நிவாரணம் எதுவும் வழங்கப்படவில்லை.

**38—**

### பதிவுத் துறை அலுவலகத்திற்குப் புதிய கட்டடம்

**வினா 8787—திரு. அ. சுடலைமுத்து:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

போடிநாயக்கனூர் தொகுதி, போடிநாயக்கனூரில் உள்ள பத்திரப் பதிவுத் துறை அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

[1998 மார்ச் 30

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

இல்லை.

**39—**

**குத்தாலம் தொகுதியில் சத்துணவு மையங்கள்**

**வினா 9601—திரு. குத்தாலம் பி. கல்யாணம் :** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் தொகுதியில் சொந்தக் கட்டடங்களில் எத்தனை சத்துணவு மையங்கள் நடைபெறுகின்றன?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

குத்தாலம் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் 76 பள்ளி சத்துணவு மையங்களும், 50 குழந்தைகள் நல மையங்களும், சொந்தக் கட்டடங்களில் நடைபெறுகின்றன.

**40—**

**சத்துணவுக் கூடங்களுக்குச் சொந்தக் கட்டடம்**

**வினா 10848—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி நகராட்சியில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் சத்துணவுக் கூடங்கள் எத்தனை உள்ளன?

(ஆ) அதற்குக் கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?



1998 மார்ச் 30]

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) எடப்பாடி நகராட்சியில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் சத்துணவுக் கூடங்கள் மூன்று உள்ளன.

(ஆ) எடப்பாடி நகராட்சியில் மேற்படி கட்டடம் கட்டித் தரப் போதிய நிதிவசதி இல்லை. இவ்வாறு புது சத்துணவுக் கூடங்கள் கட்டுவதற்கு அரசிடம் தற்போது திட்டம் ஏதும் இல்லை.

**41—**

**நினைவகம் ஆக்குதல்**

**வினா 14047—திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை திருமங்கலத்தில் தியாகி விஸ்வநாத தாஸ் வாழ்ந்த இல்லத்தை நினைவகம் ஆக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : ஆம். மதுரை மாவட்டம் திருமங்கலத்தில் தியாகி விசுவநாத தாஸ் வாழ்ந்த இல்லத்தை அரசு நினைவிடமாக்கி, படிப்பகம், நூலகம் மற்றும் திருமண மண்டபம் அமைத்திட ரூ.50.00 இலட்சத்திற்கு ஒப்பளிப்புச் செய்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

**42—**

**சத்துணவு மையத்திற்குக் கட்டடம்**

**வினா 13083—திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, தளபதிசமுத்திரம், கீழூர் சத்துணவு மையத்திற்குக் கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): நாங்குநேரி தொகுதி, தளபதிசமுத்திரம், கீழூர் சத்துணவு மையத்திற்குப் புதிய கட்டடம் கட்டித்தர தற்போது நிதி ஒதுக்கீடு ஏதும் இல்லை. எனவே, 1998-99 ஆம் நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு பெற்று, முன்னுரிமை கொடுத்து கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**43—**

## இலவச வீட்டுமனைப் பட்டா

**வினா 11625—திரு. மு. பெ. சாமிநாதன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெள்ளக்கோவில் தொகுதி, மேட்டுப்பாளையம் ஊராட்சிக்குட்பட்ட மேட்டுப்பாளையம், அ. நால்ரோடு ஆதிதிராவிடர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): மேற்படி கிராமத்தில் க.ச.எண் 1112, சாலையில் 3.24.0 எக்டேர் நிலங்கள் நேரடிப் பேச்சுவார்த்தை மூலம் நிலக்கிரயம் செய்ய ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்நடவடிக்கை முற்றுப் பெறாததால் தொகை வழங்கப்படாமல் உள்ளது. மேற்படி நடவடிக்கைகள் அனைத்தும் முடித்து விரைவில் பட்டா வழங்கப்படும்.



**44—**

## ஆதிதிராவிடர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா

**வினா 13086—திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெள்ளக்கோவில் தொகுதி, காங்கயம் வட்டம், கம்பளியம்பட்டி, கரட்டுப்பாளையம், வேலம்பாளையம், காட்டுப்பாளையம், அய்யம்பாளையம் ஆகிய பகுதிகளில் வசிக்கும் ஆதிதிராவிடர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பட்டா வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) வெள்ளக்கோவில் தொகுதிக்குட்பட்ட ஊடையம் கிராமம், கரட்டுப்பாளையத்தில் வசிக்கும் ஆதிதிராவிடர்களுக்கு வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்க, மேற்படி கிராமம் க.ச.229/2 சாலையில் 0.82.0 எக்டேர் நிலம் தமிழ்நாடு நில எடுப்புச் சட்டம் 31/78-ன்கீழ் நில எடுப்புச் செய்து, பட்டாக்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எனவே, நில எடுப்பு நடவடிக்கைகள் முடிவுற்றதும் பட்டாக்கள் வழங்கப்படும்.

**45—**

## இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

**வினா 13093—திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெள்ளக்கோவில் தொகுதி, தாராபுரம் வட்டம், கொமராபாளையம் ஊராட்சி, எல்லப்பட்டி கிராம ஆதிதிராவிட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

[1998 மார்ச் 30

(ஆ) ஆம் எனில், எப்போது பட்டா வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : ஈரோடு மாவட்டம், வெள்ளக்கோவில் தொகுதி, தாராபுரம் வட்டம், கொமராபாளையம் கிராம ஆதிதிராவிட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க, மேற்படி கிராமம், க.ச. எண் 66/1-ல் 0.59.5 எக்டேர் நிலம் தமிழ்நாடு நில எடுப்புச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை முடிவு பெற்றுள்ளது. இவர்களுக்கு விரைவில் வீட்டுமனைப் பட்டாக்கள் இலவசமாக வழங்கப்படும்.

**46—**

## இலவச வீட்டுமனைப் பட்டா

**வினா 13094—திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெள்ளக்கோவில் தொகுதி, தாராபுரம் வட்டம், நஞ்சியம்பாளையம் ஊராட்சி, தெக்காலூர் ஆதிதிராவிட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது பட்டா வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தெக்காலூரில் வசிக்கும் 44 ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க மேற்படி கிராமம் க.ச.94/2சி-ல் 0.75.5 எக்டேர் நிலம் தமிழ்நாடு நில எடுப்புச் சட்டம் 31/78-ன்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு, முன்விலைப் பட்டியல்



1998 மார்ச் 30]

அங்கீகாரம் செய்யப்பட்டுள்ளது. நில எடுப்பு நடவடிக்கைகள் முடிவுற்றதும் பட்டா வழங்கப்படும்.

**47—**

## ஆதிதிராவிட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா

**வினா 13095—திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெள்ளக்கோவில் தொகுதி, தாராபுரம் வட்டம், ஆலாம்பாளையம் கிராம கருங்காலிவலசில் வசிக்கும் ஆதிதிராவிட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது பட்டா வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : ஈரோடு மாவட்டம், வெள்ளக்கோவில் தொகுதி, தாராபுரம் வட்டம், ஆலாம்பாளையம் கிராமம், கருங்காலிவலசில் வசிக்கும் ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க, நேரடிப் பேச்சுவார்த்தை மூலம் நில எடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்நடவடிக்கைகள் முடிவுற்றதும் நிலக் கிரயம் செய்யப்பட்டு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படும்.

**48—**

## இளைஞர் விடுதிகள்

**வினா 7898—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள இளைஞர் விடுதிகள் எத்தனை?

விடை—

**மாண்புமிகு திரு. என். சுரேஷ்ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் கட்டுப்பாட்டில் தற்போது எட்டு இளைஞர் விடுதிகள் இயங்கி வருகின்றன. (உதகமண்டலம், முதுமலை, கன்னியாகுமரி, இராமேஸ்வரம், ஏற்காடு, சென்னை, மாமல்லபுரம் மற்றும் குன்னூர்)

**49—**

**தும்பு தொழிற்சாலை வருமானம் விவரம்**

**வினா 9180—திரு. டி. மணி:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், குளச்சலில் கதர் கிராம வாரியத்திற்குச் சொந்தமான தும்பு தொழிற்சாலையில் 1996-97-ல் எவ்வளவு வருமானம் வந்துள்ளது?

(ஆ) மொத்த உற்பத்தித் திறன் எவ்வளவு? எவ்வளவு இலாபம் ஈட்டியுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:**

(அ) 1996-97 ஆம் ஆண்டில் 212 மெட்ரிக் டன் உற்பத்தி செய்து ரூ.60,26,940.10 மதிப்பிற்கு தும்பு உற்பத்தியின் மூலம் வருமானம் ஈட்டியுள்ளது.

(ஆ) இதன் உற்பத்தித் திறன் ஓர் ஆண்டுக்கு சுமார் 425 மெட்ரிக் டன் ஆகும். இந்த ஆண்டில் 329 மெட்ரிக் டன் எடையுள்ள தும்பு உற்பத்தி செய்யப்பட்டு, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ததன் மூலம் ரூ.8,25,000/- நிகர இலாபம் கிடைத்துள்ளது.

**50—**

**தமிழ்நாட்டு மீனவர்கள் விடுதலை விவரம்**

**வினா 13975—திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) இலங்கைக் கடற்படையினரால் பிடித்து வைக்கப்பட்டிருந்த தமிழ்நாட்டு மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனரா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். கடந்த 1996 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் இதுநாள்வரை இலங்கைக் கடற்படையினரால் பிடித்து வைக்கப்பட்ட தமிழக மீனவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

(ஆ) அதன் விவரம் வருமாறு:

| வ.எண் (1) | பிடிக்கப்பட்ட நாள் (2) | அழைத்து வரப்பட்ட நாள் (3) | அழைத்து வரப்பட்ட மீனவர்களின் எண்ணிக்கை (4) |
|---|---|---|---|
| 1. | 29-11-95 | 27-1-96 | 3 |
| 2 | 19-12-95 | 12-2-96 | 4 |
| 3 | 4-5-96 | 24-5-96 | 4 |
| 4 | 10-6-96 | 25-6-96 | 9 |
| 5 | 20-7-96 | 14-8-96 | 4 |
| 6 | 3-8-96 | 22-9-96 | 13 |
| 7 | 30-12-96 | 15-1-97 | 2 |
| 8 | 5-11-96 | 10-2-97 | 15 |
| 9 | 6-11-96 | 5-3-97 | 2 |
| 10 | 17-9-96 | 11-3-97 | 4 |
| 11 | 7-9-96 | 10-4-97 | 4 |
| 12 | 21-4-97 | 6-5-97 | 4 |
| 13 | 18-9-96 | 21-6-97 | 4 |

| வ.எண் (1) | பிடிக்கப்பட்ட நாள் (2) | அழைத்து வரப்பட்ட நாள் (3) | அழைத்து வரப்பட்ட மீனவர்களின் எண்ணிக்கை (4) |
|---|---|---|---|
| 14 | 14-11-96 | 28-7-97 | 16 |
| 15 | 15-2-97<br>18-8-97 | 21-10-97 | 20 |
| 16 | 14-7-97 | 24-12-97 | 3 |
| | | மொத்தம் | 111 |

## ஆறாவது பட்டியல்

1—

### கட்டுமானச் செங்கல் தயாரிப்பு விவரம்

**வினா 10758—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அனல் மின் நிலையங்களில் வீணாகும் சாம்பலைக் கொண்டு கட்டுமானச் செங்கல் தயாரிக்கும் "Technical Know-How" அரசிடம் உள்ளதா?

(ஆ) இதிலே தனியார்களை ஊக்குவிக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): ஆம். கட்டுமானச் செங்கல் தயாரிப்பில் எரிசாம்பலைப் பெருமளவில் பயன்படுத்துவதை ஊக்கப்படுத்தவும், தனியார்களை ஊக்குவிக்கவும், அரசு கொள்கை முடிவை எடுத்துள்ளது. அரசாணை எண் 248, தொழில், நாள்: 22-9-97-ல் இதற்கான உத்தரவை அரசு பிறப்பித்துள்ளது.



2—

### பொது நூலகம் அமைத்தல்

**வினா 12250—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், மேச்சேரி ஒன்றியம், அரங்கனூர் ஊராட்சியில் பொது நூலகம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

தமிழ்நாடு பொது நூலகச் சட்டத்தின்படி, ஒரு கிராமத்தில் பொது நூலகம் அமைப்பதற்கு அக்கிராமத்தில் குறைந்தபட்ச மக்கட்தொகை 5000 ஆக இருக்க வேண்டும். ஆனால், அரங்கனூர் கிராமத்தில் மக்கட்தொகை 4481 மட்டுமே உள்ளது. எனவே, இவ்வூரில் பொது நூலகம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. இருப்பினும், அக்கிராமப் பொது மக்கள் பகுதிநேர நூலகம் திறப்பதற்குத் தேவையான நிபந்தனைகளைப் பூர்த்தி செய்து கொடுக்க முன்வந்தால், அவ்வூரில் பகுதிநேர நூலகம் திறப்பதற்கு வழிவகையுள்ளது.

3—

### நூலகம் அமைத்தல்

**வினா 12626—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், உடையநாடு கிராமத்தில் கிளை நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

நிதிப் பற்றாக்குறையின் காரணமாக தற்போது உடையநாடு கிராமத்தில் கிளை நூலகம் திறக்க அரசால் அனுமதி அளிக்கப்படவில்லை. எனவே, தற்போது உடையநாடு கிராமத்தில் கிளை நூலகம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. ஆயினும், அவ்வூர்ப் பொது மக்கள் பகுதிநேர

[1998 மார்ச் 30

நூலகம் திறப்பதற்கு உரிய ஐந்து நிபந்தனைகளையும் முழுமையான அளவில் பூர்த்தி செய்துதரும் பட்சத்தில் உடையநாடு ஊராட்சியில் ஒரு பகுதிநேர நூலகம் திறக்க வழிவகையுள்ளது.

4—

## பொது நூல் நிலையம் அமைத்தல்

**வினா 13475—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதியிலுள்ள வெள்ளக்கல்பட்டி, கோட்டக்கவுண்டம்பட்டி, சரக்கல் பிள்ளையூர், சின்னத் திருப்பதி ஆகிய இடங்களில் பொது நூல் நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

அரசின் தற்போதைய நிதிப் பற்றாக்குறையின் காரணமாக ஓமலூர் தொகுதியிலுள்ள வெள்ளக்கல்பட்டி, கோட்டக்கவுண்டம்பட்டி, சரக்கல் பிள்ளையூர், சின்னத் திருப்பதி ஆகிய இடங்களில் நடப்பு நிதியாண்டில் நூல் நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. மேற்கூறிய இடங்களில், சின்னத் திருப்பதி என்ற இடத்தில் பகுதிநேர நூலகம் செயல்பட்டு வருகிறது. எனவே, வெள்ளக்கல்பட்டி, கோட்டக்கவுண்டம்பட்டி, சரக்கல் பிள்ளையூர் ஆகிய கிராமங்களில் பகுதிநேர நூலகங்கள் திறப்பதற்கு உரிய கீழ்க்கண்ட நிபந்தனைகள் அனைத்தையும், அவ்வூர்ப் பொது மக்கள் நிறைவு செய்துதரும் பட்சத்தில் பகுதிநேர நூலகம் திறக்க வழிவகையுள்ளது.

1. நூலகம் இயங்க வாடகையில்லாத இலவசக் கட்டிடம் வேண்டும்.
2. பின்னால் நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு 5 சென்ட் முதல் 10 சென்ட் வரை இலவசக் காலிமனை பெறப்பட வேண்டும்.
3. 200 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.
4. ரூ.6000/- மதிப்புள்ள தளவாடங்கள் வழங்கப்பட வேண்டும்.
5. ரூ. 1000/- தொகை செலுத்தி புரவலர்கள் சேர்க்கப்பட வேண்டும்.



1998 மார்ச் 30]

5—

## தெலுங்கு, தமிழ் இடைநிலை ஆசிரியர்கள் பணியிடம் விவரம்

**வினா 13650—திரு. பி. வெங்கடசாமி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(a) How many Telugu graduate and Secondary Grade Teachers' posts are converted into Tamil Posts in Hosur Boys Higher Secondary School and Government Higher Secondary School at Bagalur in Hosur Taluk?

(b) If so, the reasons thereof?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): ஓசூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் ஆறு தெலுங்கு ஆசிரியர் பணியிடத்தில் போதுமான தெலுங்கு மாணவர் வருகையின்மையால் ஒரு தெலுங்கு பி.டி. ஆசிரியர் பணியிடம் தமிழ் ஆசிரியர் பணியிடமாக மாற்றப்பட்டது. இடைநிலை ஆசிரியர்களில் எந்த மாற்றமும் இல்லை. பாகலூர் அரசு மேல்நிலைப் பள்ளியிலும் போதுமான தெலுங்கு மாணவர்கள் வருகையில்லாததால் ஐந்து தெலுங்கு பி.டி. பணியிடங்களில் ஒரு தெலுங்கு பி.டி. பணியிடம், தமிழ் பி.டி. பணியிடமாக மாற்றப்பட்டது. இடைநிலை ஆசிரியர்களில் எந்த மாற்றமும் இல்லை.

6—

## நூலகம் திறக்க நடவடிக்கை

**வினா 13662—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியத்தில் சித்தூர் கிராமத்திலுள்ள கிளை நூலகத்தில் நூலகப் பொறுப்பாளர் இல்லாததால் நூலகம் திறக்கப்படாமல் இருப்பது அரசிற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அந்த நூலகத்தைத் திறக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

[1998 மார்ச் 30

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியத்தில் செயல்பட்டுவரும் கிளை நூலகம் மூடப்படவில்லை. இந்நூலகத்தில் மூன்றாம் நிலை நூலகர் பணியிடம் காலியாக இருந்த காலத்தில் பிரிதொரு பணியாளர் இந்நூலகத்தைச் செயல்படுத்தி வந்துள்ளார்.

(ஆ) சித்தூர் கிளை நூலகத்தில் 9-11-97 முதல் திருமதி கே. மகேஸ்வரி என்பவர் மூன்றாம் நிலை நூலகராக நியமனம் செய்யப்பட்டு, அன்னார் அந்நூலகத்திற்கு முழுநேர நூலகப் பொறுப்பாளராக இருந்து, இக்கிளை நூலகத்தைச் செயல்படுத்தி வருகிறார்.

7—

**விருந்தினர் விடுதி செலவு விவரம்**

**வினா 3929—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முன்னாள் முதலமைச்சர், முன்னாள் அமைச்சர்கள் ஈரோடு மின் வாரிய விருந்தினர் விடுதி மற்றும் நரேந்திரதேவ் இல்லத்தில் தங்கிய வகையில் அரசுக்கு 1991-92, 1992-93, 1993-94, 1994-95 மற்றும் 1995-96 ஆம் ஆண்டுகளில் செலவு செய்யப்பட்ட தொகை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

1991-92 முதல் 1995-96 ஆம் ஆண்டு வரை ஈரோடு மின் வாரிய விருந்தினர் விடுதியில் முன்னாள் முதலமைச்சர், முன்னாள் அமைச்சர்கள் தங்கிய வகையில் எவ்விதச் செலவும் செய்யப்படவில்லை. ஆனால் அவர்கள் இந்த விருந்தினர் விடுதியில் தங்கியிருந்த காலங்களில் தொலைபேசியைப் பயன்படுத்திய வகையில் தொலைபேசிக் கட்டணமாக ரூ.72,647.45 செலவு செய்ததை பல்வேறு துறைகள் ஏற்றுக்கொள்ள வேண்டும். இது தொடர்பாக, ஈரோடு மாவட்ட அலுவலகத்துடன்



1998 மார்ச் 30]

தொடர்பு கொண்டு, சம்பந்தப்பட்ட துறைகளிடம் வசூல் செய்ய மின் வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

பொதுப்பணித் துறை, ஈரோடு கீழ்பவானி வடிநிலக் கோட்டத்தின் கட்டுப்பாட்டின்கீழ் நரேந்திரதேவ் இல்லம் உள்ளது. முன்னாள் அமைச்சர்கள் ஈரோடு நரேந்திரதேவ் இல்லத்தில் தங்கிய வகையில் அரசுக்கு 1991-92, 1992-93, 1993-94, 1994-95 மற்றும் 1995-96 ஆம் ஆண்டுகளில் செலவுத் தொகை ஏதுமில்லை.

8—

**ஆம்புலன்ஸ் வண்டிகளை இயக்க நடவடிக்கை**

**வினா 6551—திரு. டி. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் அரசு தலைமை மருத்துவமனையில் இயங்காமலிருக்கும் ஆம்புலன்ஸ் வண்டிகளை இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) அதற்குத் தேவையான உதிரிப் பாகங்கள் வாங்கப்பட்டுள்ளதா?

(இ) தற்போது இயங்கிக் கொண்டிருக்கும் வாகனங்கள் எத்தனை?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ), (ஆ) மற்றும் (இ): நாகர்கோவில், அரசு தலைமை மருத்துவமனையில் தற்சமயம் உள்ள மூன்று அவசர கால ஊர்திகளில் ஒன்று மட்டும் இயங்கும் நிலையில் உள்ளது. மேலும் புதிய அவசர கால ஊர்தி ஒன்று விரைவில் வழங்கப்படும். ஓடா நிலையில் உள்ள பழைய இரண்டு அவசர கால ஊர்திகள் 10 ஆண்டுகளுக்கும் மேல் பயன்பாட்டிலிருந்து தற்போது முதிரா நிலையில் கழிவு செய்திட உரிய நடவடிக்கை நாகர்கோவில் சுகாதாரப் பணிகள் இணை இயக்குநரால் மேற்கொள்ளப்படுகிறது. கழிவு செய்திட ஆணைகள் வழங்கப்பட்ட பின், பதில் ஊர்திகள் வருடாந்திர நிதி ஒதுக்கீடு பெற்று வழங்கப்படும்.

[1998 மார்ச் 30

**9—**

### உதவி மின் பொறியாளர் அலுவலகம் அமைத்தல் குறித்து

**வினா 8268—திரு. ரா. சேதுநாதன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டிவனம் தொகுதியில் ஓர் உதவி மின் பொறியாளர் அலுவலகம் திறக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

திண்டிவனம் நகர்ப் பிரிவில் 9131 மின் இணைப்புகள் உள்ளன. வேலைப் பளுவின்படி, 7200 மின் இணைப்புகளுக்கு ஒரு பிரிவு அலுவலகம் அமைக்கவும், அதிகப்படியாக 8400 மின் இணைப்புகள் வரை ஒரு பிரிவு அலுவலகத்தில் இருக்கலாம் எனவும் ஒப்பந்தம் உள்ளது. எனவே, மீதமுள்ள 731 மின் இணைப்புகளுக்காக திண்டிவனம் நகர்ப் பிரிவில் மற்றொரு உதவி மின் பொறியாளர் அலுவலகம் திறக்க தற்போது சாத்தியக்கூறு இல்லை.

**10—**

### மின் கம்பங்களை மாற்றுவது குறித்து

**வினா 10480—திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சாயும் நிலையிலுள்ள மின் கம்பங்களை மாற்றும் திட்டத்தில் இராமநாதபுரம் போன்ற கடற்கரைப் பகுதிகளுக்கு முக்கியத்துவம் தரப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**



1998 மார்ச் 30]

சாயும் நிலையிலுள்ள மின் கம்பங்களை மாற்றும் திட்டத்தில் இராமநாதபுரம் மற்றும் கடற்கரைப் பகுதிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, கம்பங்கள் மாற்றப்பட்டு வருகின்றன.

**11—**

### குற்றாலத்தில் மருத்துவக் குழு அமைத்தல்

**வினா 12029—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி அரசு தலைமை மருத்துவமனையிலிருந்து மினி ஆம்புலன்ஸ் வசதியுடன் ஒரு மருத்துவக் குழுவை குற்றாலத்தில் ஜூன் முதல் செப்டம்பர் வரை குற்றால நகரிய மருந்தகத்தில் தயார் நிலையில் வைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தென்காசி அரசு தலைமை மருத்துவமனையிலிருந்து ஒரு ஆம்புலன்ஸை மருத்துவக் குழுவினருடன் ஜூன் முதல் செப்டம்பர் வரை குற்றால நகரிய மருந்தகத்தில் தயார் நிலையில் முகாமைப் பணியில் அனுப்பி வைக்க உரிய ஆணைகள் தென்காசி இணை இயக்குநர், நலப் பணிகள் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. எனவே, ஜூன் 1998 முதல் மேற்படி ஏற்பாடு செயல்முறைப்படுத்தப்படும்.

**12—**

### கூடுதல் மின் கம்பங்கள் அமைத்தல்

**வினா 12473—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் பேரூராட்சிப் பகுதியில் கூடுதலாக மின்மாற்றிகளை அமைத்து மின்சாரம் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

[1998 மார்ச் 30

மின்மாற்றியில் தற்போதுள்ள மொத்த மின் பளுவும் 63 கே.வி.ஏ. கொள்ளளவுக்குள் உள்ளது என்பதனாலும், கூடுதல் மின் பளு வழங்கும் அளவிற்கு மின்மாற்றியில் வாய்ப்பு உள்ளதாலும், விண்ணப்பங்கள் எதுவும் நிலுவையில் இல்லாத காரணத்தால் மின் அழுத்தம் சீராக இருப்பதாலும், கூடுதல் மின்மாற்றி தாளப்பள்ளத்தில் தற்போது அமைக்க வாரியத்தில் சாத்தியக்கூறு இல்லை.

**15—**

**புதிய மின்மாற்றி அமைக்க நடவடிக்கை**

**வினா 12510—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேச்சேரி ஒன்றியம், எம். காளிப்பட்டி ஊராட்சி, ராயப்பனேரியில் மின் அழுத்தம் குறைவாக உள்ளதால் அங்கு புதிய மின்மாற்றி அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

மேச்சேரி ஒன்றியம், எம். காளிப்பட்டி பகுதிக்கு 110/11 கே.வி. ரங்கவள்ளி துணை மின் நிலையத்திலிருந்து 11 கே.வி. மல்லிகுந்தம் மின்னூட்டியின் மூலம் தீராப்பட்டி மின்மாற்றி மற்றும் மூர்த்திப்பட்டியில் அமைந்துள்ள எம்.காளிப்பட்டி மின்மாற்றி எண்ணிலிருந்தும் ராயப்பனேரி பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி மல்லிகுந்தம் மின்னூட்டியின் வழித் தடத்தின் தூரம் சுமார் 25 கி.மீ. ஆகும். எனவே இந்த மின்னூட்டியில் இணைக்கப்பட்டுள்ள எம். காளிப்பட்டி மற்றும் தீராப்பட்டி மின்னூட்டிகளுக்கு தாழ்வு மின் அழுத்தம் இருந்து வருகிறது. எம்.காளிப்பட்டி மின்மாற்றி மற்றும் தீராப்பட்டி மின்மாற்றி ஆகியவற்றின் மின்னழுத்தத்தை 8-10-97 அன்று கணக்கிடும்பொழுது கீழ்க்கண்டவாறு கண்டறியப்பட்டது:

எம்.காளிப்பட்டி மின்மாற்றி :

| | | | |
|---|---|---|---|
| பேஸ்-எர்த் | - | 220 வோ. | மின்மாற்றியில் |
| பேஸ்-பேஸ் | - | 380 வோ. | |



1998 மார்ச் 30]

| | | | |
|---|---|---|---|
| பேஸ்-எர்த் | - | 210 வோ. | மின்மாற்றியின் கடைசியில் இணைக்கப்பட்டுள்ள மின் இணைப்பில். |
| பேஸ்-பேஸ் | - | 360 வோ. | |

தீராப்பட்டி மின் மாற்றி:

| | | | |
|---|---|---|---|
| பேஸ்-பேஸ் | - | 380 வோ. | மின்மாற்றியில் |
| பேஸ்-எர்த் | - | 220 வோ. | |
| பேஸ்-பேஸ் | - | 360 வோ. | மின்மாற்றியின் கடைசியில் இணைக்கப்பட்டுள்ள மின் இணைப்பில். |
| பேஸ்-எர்த் | - | 210 வோ. | |

எனவே மின்மாற்றியில் உள்ள மின் அழுத்தமும் கடைசி இணைப்பிலுள்ள மின்னழுத்தமும் சற்றேறக்குறைய ஒரே அளவாக இருப்பதால் புதிய மின்மாற்றி அமைப்பதால் மட்டும் குறைந்த மின் அழுத்தத்தைப் போக்க சாத்தியக்கூறு இல்லாததால், மேச்சேரியில் புதியதாக 110/11 கே.வி. துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகின்றது. அத்திட்டம் நிறைவேறிய பின்பு மேச்சேரி ஒன்றியம், ராயப்பனேரிப் பகுதியில் நிலவும் குறைந்த மின் அழுத்தம் சீரடையும்.

**16—**

**புதிய மின்மாற்றி அமைக்க நடவடிக்கை**

**வினா 12511—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேச்சேரி ஒன்றியம், எம். காளிப்பட்டி ஊராட்சி, சித்திக்குள்ளனூரில் மின் அழுத்தம் குறைவாக உள்ளதால் அங்கு புதிய மின்மாற்றி அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

[1998 மார்ச் 30

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

ஓமலூர் தொகுதி, ஓமலூர் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் தற்போது மொத்தம் 1513 கே.வி.ஏ. திறனுள்ள 10 மின்மாற்றிகள் நிறுவப்பட்டு மின்சாரம் சீராக விநியோகிக்கப்பட்டு வருகிறது. மேலும், பேரூராட்சிப் பகுதிகளில் அதிகரித்து வரும் மின்சாரத் தேவைகளை நிறைவு செய்ய, ஓமலூர், ஈஸ்வரன் கோயில் அருகே புதிய மின்மாற்றி ஒன்று ரூ.1.6 இலட்சம் செலவில் அமைக்கத் திட்டமிடப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் ஒரு புதிய மின்மாற்றி அரசு மருத்துவமனை அருகே நிறுவ மதிப்பீடு தயாரிக்கப்படுகிறது.

**13—**

## மின் அழுத்தக் குறைவினைப் போக்க நடவடிக்கை

**வினா 12503—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், தெத்திகிரிப்பட்டி ஊராட்சியில் மின் அழுத்தம் குறைவாக உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அங்கு புதிய மின் மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், தெத்திகிரிப்பட்டி ஊராட்சிப் பகுதிக்கு 110/11 கே.வி. மேட்டூர் துணை மின் நிலையத்திலிருந்து 11 கே.வி. மேச்சேரி மின்னூட்டியின் மூலம் தெத்திகிரிப்பட்டி எஸ்.எஸ். 63 கே.வி.ஓ./11 கே.வி. மின்மாற்றியின் மூலம் மின்சாரம் விநியோகிக்கப்பட்டு வருகிறது. 11 கே.வி. மேச்சேரி மின்னூட்டியில் மின் அழுத்தம் ஒரே சீராக, தேவையான அளவு கிடைப்பதற்காக உப்புபள்ளம் என்ற இடத்தில் ரூ.2.83 லட்சம் செலவில் சன்ட்கெபாசிடர் நிறுவப்பட்டு 28-7-97 அன்று இயக்கி வைக்கப்பட்டு



1998 மார்ச் 30]

உள்ளது. அதன் பின்பு 11 கே.வி. மின்னூட்டியில் தாழ்வு மின் அழுத்தம் சீரடைந்துள்ளது. 63 கே.வி.ஏ., தெத்திகிரிப்பட்டி மின்மாற்றியில் 26-9-97 அன்று காலை சுமார் 9 மணி அளவில் மின் பளு உச்சகட்டத்தில் இருக்கும்போது மின் அழுத்தம் கீழ்க்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது:

| | | | |
|---|---|---|---|
| பேஸ்-எர்த் | - | 220 வோ. | மின் மாற்றியில் |
| பேஸ்-பேஸ் | - | 380 வோ. | |
| பேஸ்-எர்த் | - | 220 வோ. | மின் மாற்றியில் கடைசி மின் இணைப்பில் |
| பேஸ்-பேஸ் | - | 380 வோ. | |

எனவே, தெத்திகிரிப்பட்டி பகுதியில் மின்சாரம் சீராக கிடைக்கப்பெறுவதால் புதிய மின்மாற்றி அமைக்கும் தேவை ஏற்படவில்லை.

**14—**

## தாளப்பள்ளத்தில் கூடுதல் மின்மாற்றி அமைத்தல்

**வினா 12506—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேச்சேரி ஒன்றியம், புக்கம்பட்டி ஊராட்சி, தாளப்பள்ளத்தில் கூடுதலாக ஒரு மின்மாற்றி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

மேச்சேரி ஒன்றியம், புக்கம்பட்டி ஊராட்சி, வெள்ளார் பிரிவு அலுவலகத்திற்குட்பட்ட தாளப்பள்ளத்தில் தாரளகுட்டை எஸ்.எஸ். 63 கே.வி.ஏ./22 கி.வோ. மின்மாற்றி ஒன்று, தும்பிப்பாடி துணை மின் நிலையத்திலிருந்து செல்லும் கொங்குபட்டி 22 கி.வோ. மின்னூட்டியில் அமைக்கப்பட்டு உள்ளது. மேற்படி மின்மாற்றியில் 15 விவசாய மின் இணைப்புகளும், அதாவது, 71 குதிரைத் திறன் மற்றும் 1.4 கிலோ வாட்ஸ் உள்ள 31 வீட்டு மின் இணைப்புகளும், ஆக மொத்தம் 46 மின் இணைப்புகள் மட்டுமே உள்ளன. மேற்படி தாரளகுட்டை

[1998 மார்ச் 30

மேச்சேரி ஒன்றியம், எம்.காளிப்பட்டி பகுதிக்கு 110/11 கே.வி. நங்கவள்ளி துணை மின் நிலையத்திலிருந்து 11 கே.வி. மல்லிகுந்தம் மின்னூட்டியின் மூலம் சித்திக்குள்ளனூரில் அமைக்கப்பட்டுள்ள எம்.காளிப்பட்டி மின்மாற்றி எண். V-க்கு மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி மல்லிகுந்தம் மின்னூட்டியின் வழித்தடத்தின் தூரம் சுமார் 25 கி.மீ. ஆகும். எனவே இந்த மின்னூட்டியில் கடைசிப்பகுதியில் உள்ள எம்.காளிப்பட்டி ஊராட்சி சித்திக்குள்ளனூரில் தாழ்வு மின்னழுத்தம் இருந்து வருகிறது. எம்.காளிப்பட்டி மின்மாற்றி எண் V-ல் மின் அழுத்தத்தை 26-9-97 அன்று கணக்கிடும்பொழுது கீழ்க்கண்டவாறு கண்டறியப்பட்டது:

| | | |
|---|---|---|
| பேஸ்-எர்த் - | 200 வோ. | மின்மாற்றியின் கடைசியில் |
| பேஸ்-பேஸ் - | 360 வோ. | |
| பேஸ்-எர்த் | 190 வோ. | மின்மாற்றியின் கடைசியில் உள்ள மின் இணைப்பு |
| பேஸ்-பேஸ் - | 350 வோ. | |

எனவே, மின்மாற்றியிலுள்ள மின் அழுத்தமும், கடைசிப்பகுதி மின் இணைப்பில் உள்ள மின் அழுத்தமும் ஏறக்குறைய ஒரே அளவாக இருப்பதால் புதிய மின்மாற்றி அமைப்பதால் மட்டும் குறைந்த மின் அழுத்தத்தைப் போக்க சாத்தியக்கூறு இல்லை. எனவே, மேச்சேரியில் 110/11 கே.வி. துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகின்றது. அத்திட்டம் நிறைவேறிய பின் சித்திக்குள்ளனூர் உள்ளிட்ட மேச்சேரி பகுதியில் நிலவும் குறைந்த மின் அழுத்தம் சீரடையும்.

**17—**

**குடிசை வீடுகளுக்கு இலவச மின்சாரம்**

**வினா 13195—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதியில் இலவச மின் விளக்குப் பெறாத குடிசை வீடுகளுக்கு இலவச மின்சாரம் வழங்க அரசு முன்வருமா?



1998 மார்ச் 30]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதியில் உள்ள 7,154 குடிசைகளில் 5,777 குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுவிட்டது. 1,250 விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ளன. 1997-98 ஆம் ஆண்டுக் குறியீட்டிற்கு மின் இணைப்பு வழங்கப்பட்டு விட்டது. வாரியம் நிர்ணயிக்கும் ஆண்டுக் குறியீட்டின் அடிப்படையில் நிலுவையில் உள்ள விண்ணப்பங்களுக்கு வரிசைக்கிரமப்படி மின் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**18—**

**50 வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்குதல்**

**வினா 13331—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், தளி ஒன்றியம், தொட்டமஞ்சு ஊராட்சியில் கெம்பாகரை ஊரில் இதுவரை மின் இணைப்பு இல்லாத நிலையில் உள்ள 50 வீடுகளுக்கு மின் இணைப்பு வேண்டி விண்ணப்பித்துள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், விரைவில் மின் இணைப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தருமபுரி மாவட்டம், தளி ஒன்றியம், தொட்டமஞ்சு ஊராட்சியில் கெம்பாகரை ஊரில் இதுவரை மின் இணைப்பு இல்லாத நிலையில் உள்ள 54 வீடுகளுக்கு மின் இணைப்புக் கோரி 17-7-1996-ல் விண்ணப்பங்கள் பெறப்பட்டுப் பதிவு செய்யப்பட்டுள்ளன. மேற்படி விண்ணப்பங்களை ஆய்வு செய்தபொழுது மின் சாதனங்கள் பொருத்தி, தயார் நிலையில் இல்லாமையால் அவ்விண்ணப்பங்கள் அனைத்தும் 23-11-96-ல் தள்ளுபடி செய்யப்பட்டு

[1998 மார்ச் 30

உள்ளன. எனவே, தற்பொழுது எந்த விண்ணப்பங்களும் நிலுவையில் இல்லை.

கெம்பாகரை கிராமத்தில் உள்ள வீடுகளுக்கு மின் விஸ்தரிப்புச் செய்ய வேண்டுமெனில் சுமார் 8.5 கி.மீ உயர் மின் அழுத்தப் பாதை மற்றும் 6.5 கி.மீ. தாழ் மின் அழுத்தப் பாதை அமைத்து ஒரு புதிய 63 கே.வி.ஏ. மின்மாற்றியும் அமைக்க வேண்டும். மேலும் மின் பாதைகள் அனைத்தும் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதி வழியாகத்தான் கொண்டு செல்லப்பட வேண்டும் என்பதால் வன இலாக்காவினர் அனுமதியும் பெறப்படல் வேண்டும். மேலும் இம்மின் விஸ்தரிப்புப் பணிகளுக்கான மதிப்பீடு சுமார் 17.00 லட்சம் ரூபாய் ஆகும்.

**19—**

### புயல், மழையினால் உயிர் இழந்தவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம்

**வினா 13919—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1997 நவம்பர் வரை தமிழகத்தில் புயல், மழையினால் உயிரிழந்தவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அரசு, உயிர் இழந்தவர்களின் குடும்பங்களுக்கு என்னென்ன நிவாரண உதவிகள் செய்துள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த்துறை அமைச்சர்:**

(அ) மொத்தம் 234 நபர்கள் உயிரிழந்துள்ளனர்.

(ஆ) இறந்தவர்களில் 191 பேர் நிவாரணம் பெறத் தகுதி உள்ளவர்கள். அவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து, இறந்த நபர் ஒருவருக்கு ரூ.15,000/- வீதம் நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது. இது தவிர, மத்திய அரசு நிவாரணமாக நபர் ஒருவருக்கு ரூ.50,000/- வீதம் பாரதப் பிரதமர் தேசிய நிவாரண நிதியிலிருந்து வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 43 பேர் நிவாரணம் பெறத் தகுதியற்றவர்கள்.



1998 மார்ச் 30]

**20—**

### தொகுப்பு வீடுகள் விவரம்

**வினா 4394—டாக்டர் பத்மா:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1967-ல் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகள் பழுதடைந்த நிலையில் உள்ளதால் அவற்றைப் பழுது பார்க்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், ஒவ்வொரு வீட்டிற்கும் எவ்வளவு தொகை ஒதுக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 1989-90-க்கு முன் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட ஓட்டு வீடுகள் முற்றிலும் பழுதடைந்திருப்பின் அவற்றினை முழுவதுமாக புதிதாகக் கட்டித்தர, சாதாரண மண்ணில் கட்டப்படும் வீடுகளுக்கு ரூ. 27,000, கரிசல் மண்/ மணற்பாங்கான பகுதி வீடுகளுக்கு ரூ.29,000 வழங்கப்பட்டுள்ளது.

**21—**

### தரைப் பாலம் அமைத்தல்

**வினா 6264—திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தென்னாற்காடு வள்ளலார் மாவட்டம், கடலூர் நகரப் பகுதியில் கெடிலம் ஆற்றில் தரைப் பாலம் அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

[1998 மார்ச் 30

கடலூர் பகுதியில் கெடிலம் ஆற்றின் குறுக்கே தரைப் பாலம் அமைக்கும் பணியினை நெடுஞ்சாலைத் துறையிடம் ஒப்படைக்க கடலூர் நகர்மன்றம் தீர்மானித்து, தொடர் நடவடிக்கை எடுக்கிறது.

**22—**

### ஆழ்துளைக் கிணறு பழுதுபார்த்தல்

**வினா 6974—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி ஒன்றியம், செட்டிமாங்குறிச்சி என்ற ஊரிலுள்ள புக்காடு, எழனிக்கவுண்டன்வளவில் ஆழ்துளைக் கிணறு பழுதடைந்து செயல்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அந்த செட்டிமாங்குறிச்சி ஆழ்துளைக் கிணற்றைச் செப்பனிட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) : சேலம் மாவட்டம், எடப்பாடி ஒன்றியம், செட்டிமாங்குறிச்சி ஊராட்சியில் எழனிக்கவுண்டன்வளவு என்ற இடத்திற்குப் பக்கத்திலுள்ள மாங்காடு என்னுமிடத்தில் உள்ள ஆழ்துளைக் கிணறு நல்லமுறையில் செயல்பட்டு வருகிறது. மேற்படி ஊராட்சியில் புக்காடு என்ற இடம் இல்லை. செட்டிமாங்குறிச்சியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் உள்ள விசைப்பம்பு மூலம், குடிநீர் தினசரி விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

**23—**

### ஜீவன்தாரா திட்டத்தின் விவரம்

**வினா 7311—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1998 மார்ச் 30]

(அ) ஊரக வளர்ச்சித் துறை மூலம் வழங்கப்படும் ஜீவன்தாரா கிணறு அமைக்கும் திட்டம் தாழ்த்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்பட்டவர்களுக்குத் தொடர்ந்து வழங்கப்படுகின்றனவா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 1994-95 முதல் 1996-97 வரை பிற இனத்தவர்களுக்கு ஒதுக்கப்பட்ட கிணறுகளின் விவரம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1994-95 | 5832 | |
| 1995-96 | 2060 | |
| 1996-97 | 2060 | - வேலைகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. |

**24—**

### சேரன்மகாதேவி ஒன்றியத்தை விரிவுபடுத்துதல்

**வினா 8696—திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, சேரன்மகாதேவி ஒன்றியம், 12 கிராமப் பஞ்சாயத்துக்களில் 20,000 வாக்காளர்களுடன் தமிழகத்திலேயே சிறிய ஒன்றியமாக இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், மற்ற ஒன்றியங்களைப் போன்று விரிவுபடுத்துவது எப்போது ?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

[1998 மார்ச் 30

(அ) மற்றும் (ஆ) : சேரன்மகாதேவி ஊராட்சி ஒன்றியத்திலிருந்து பேரூராட்சிகள் தனியே பிரிந்து விட்டதால் அதன் வாக்காளர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது. இதனால் ஊராட்சி ஒன்றியம் செயல்படுவது பாதிக்காது. இதனை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு தற்போது ஏதுமில்லை.

**25—**

**பன்றிகளால் சுகாதாரக் கேடு ஏற்படுவதைத் தடுத்தல்**

**வினா 10143—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பவானி நகரப் பகுதிகளிலும், ஊராட்சிப் பகுதிகளிலும் பன்றிகளினால் சுகாதாரக் கேடு ஏற்படுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பவானி நகராட்சிப் பகுதியிலும், ஊராட்சிப் பகுதிகளிலும் 1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு மக்கள் நல்வாழ்வுச் சட்டம், அத்தியாயம்-6, வரிசை எண். 41, 3 ஆம் பிரிவில், (25) ஆம் கூறில் அடங்கியுள்ள 'தொல்லைகளைக் களைதல்' என்ற சட்டத்தின்படி சம்பந்தப்பட்ட அலுவலர்கள் பன்றிகளின் தொல்லையை ஒழிக்க தக்க நடவடிக்கை எடுக்க, பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து இயக்குநரால் அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள். மேலும், நகராட்சிப் பகுதியில் உள்ள பன்றிகளை ஒழிக்க டாம் டாம் மூலம் நகர் முழுவதும் தண்டோரா செய்யப்பட்டுள்ளது. மேலும் செய்தித் தாள் மூலம், பன்றிகளை அப்புறப்படுத்தக் கோரியும், தவறினால் சுட்டுக் கொல்லப்படும் என விளம்பரம் செய்யப்பட்டுத் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**26—**

**கசிவு நீர்க்குட்டைகள் அமைத்தல்**

**வினா 10294—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1998 மார்ச் 30]

சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம் விழுதாசம்பட்டி கிராமத்தில் பழங்கோட்டை குப்பனூர் மற்றும் மல்லி குந்தம் ஊராட்சி அருகம்பள்ளம் ஆகிய இடங்களில் கசிவு நீர்க்குட்டைகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

அருகம்பள்ளம் என்னுமிடத்தில் 1997-98 ஆம் ஆண்டு, பத்து லட்சம் கிணறுகள் திட்டத்தின் கீழ் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு கசிவுநீர்க் குட்டைகள் அமைக்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. விழுதர்சம்பட்டி கிராமத்தில் பழங்கோட்டை என்னுமிடத்தில் தடுப்பணை பணிக்கு 1997-98 ஆம் ஆண்டு வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் நடவடிக்கை மேற்கொள்ள சர்வே மற்றும் மதிப்பீடு தயாரிக்கும் பணி நடைபெறுகிறது. குப்பனூரில் கசிவு நீர்க்குட்டை அமைக்க தொழில் நுட்ப ரீதியாக வாய்ப்புகள் இல்லை.

**27—**

**நகராட்சிப் பூங்காவினைப் பராமரிப்புச் செய்தல்**

**வினா 12191—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை பேருந்து நிலையத்திற்கு அருகிலுள்ள நகராட்சிப் பூங்கா பராமரிப்பற்று இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், நல்லமுறையில் பூங்காவைப் பராமரிக்கவும், நிதி ஒதுக்கீடு செய்யவும் அரசு ஆவன செய்யுமா ?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

[1998 மார்ச் 30

(அ) மற்றும் (ஆ): நேரு வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் இப்பூங்காவினைப் பராமரிக்க 1994-95 ஆம் ஆண்டில் ரூ.80,000 மும் 1996-97 ஆம் ஆண்டில் ரூ.55,000/-ம் சுற்றுச்சுவர் கட்டும் பணிக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் முடிக்கப்பட்டன. மேலும், இப்பூங்காவை, ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் (IUDP) கீழ் நிதியுதவி பெற்று மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**28—**

**பூங்காவைச் சீர்படுத்துதல்**

**வினா 12215—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி, ராஜகோபால் கவுண்டர் பூங்காவைச் சீர்படுத்த அரசு ஆவன செய்யுமா ?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆம். ராஜகோபால் பூங்கா அபிவிருத்திப் பணிக்கு ரூ.1.20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தொலைக்காட்சிப் பெட்டி அறை கட்டவும், சுற்றுச் சுவரை உயர்த்தவும், நடைபாதை அமைக்கவும் பணிகள் நடைபெற்று வருகின்றன. ரூ.55,000/- மதிப்பில் மின் விளக்குகள், தொலைக்காட்சிப் பெட்டி ஆகியவை சப்ளை செய்வதற்கு டெண்டர் கோரப்பட்டுள்ளது. ரூ.50,000/-க்கு, குழந்தைகள் விளையாட்டுச் சாமான்கள் வாங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**29—**

**தொகுப்பு வீடுகள் கட்ட நடவடிக்கை**

**வினா 12857—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நெறிப்பறைச்சல் ஊராட்சியில் 100 தொகுப்பு வீடுகள் கட்ட வேண்டுமென அரசிற்குக் கோரிக்கை வந்துள்ளதா ?



1998 மார்ச் 30]

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் நெறிப்பறைச்சல் ஊராட்சிக்கு 51 வீடுகள் ஒதுக்கப்பட்டு வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

**30—**

**திருப்பூர் மேம்பாட்டுத் திட்டத்தைத் தெளிவுபடுத்துதல்**

**வினா 13140—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மேம்பாட்டுத் திட்டத்தைச் சிலர் அரசியல் உள்நோக்கத்தோடு எதிர்த்து வருவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், மக்களுக்குத் தெளிவுபடுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ): சில அரசியல் கட்சிகள் இத்திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன. இருப்பினும், உண்மை நிலையை மக்களுக்கு விளக்கும்முகமாக புதிய திருப்பூர் வளர்ச்சித் திட்ட நிறுவனம் இந்தத் திட்டத்தைப் பற்றி ஒரு விளக்க ஏடு ஒன்றை, தயாரித்து வருகின்றது.

[1998 மார்ச் 30

**31—**

## வாழை விவசாய நோய்த் தடுப்பு நடவடிக்கை

**வினா 13616—திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் தொகுதி, சிறுமலை மலைப் பகுதியில் வாழை விவசாயம் நோயினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) அறியும்.

(ஆ) திண்டுக்கல் மாவட்டத்தில் கீழ்ப் பழனிமலை மற்றும் சிறுமலைப் பகுதிகளில் 'மலைவாழைக்கு மறுவாழ்வு' அளிக்கும்பொருட்டு நடப்பு நிதியாண்டில், 'திண்டுக்கல் மாவட்டத்தில் மலைவாழைச் சாகுபடியினைப் புதுப்பித்தல், திட்டத்திற்கு, அரசு ஆணை எண் 421, நாள் : 8-10-97-ல் ஒப்புதல் வழங்கியுள்ளது. ரூ.23.75 இலட்சம் மதிப்பீட்டில் இத்திட்டம் மூன்றாண்டு காலத்தில் செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்தின்கீழ் முடிக்கொத்து நச்சரி நோய்த் (Bunchy Top) தாக்கம் இல்லாத, திசு முறையில் உற்பத்தி செய்யப்பட்ட வாழைக் கன்றுகள் 50 சதவீத மானியத்தில், மலைவாழைச் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு வழங்கப்பட உள்ளது. இத்திட்டம் செயல்படுத்தப்படும் விவரங்கள் கீழ் வருமாறு:-

| | | |
|---|---|---|
| முதலாம் ஆண்டு (1997-98) | — | முடிக்கொத்து நோய் தாக்கம் பற்றி சர்வே எடுத்தல். இந்த முதல் ஆண்டில் 750 எக்டேர் பரப்பளவு சர்வே செய்யப்பட்டுள்ளது. |
| இரண்டாம் ஆண்டு | — | 200 எக்டேர். |
| மூன்றாம் ஆண்டு | — | 500 எக்டேர் பரப்பளவில். |

திசு முறையில் உற்பத்தி செய்யப்பட்ட வாழைக் கன்றுகள், 50 சதவீத மானியத்தில் தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளது.



1998 மார்ச் 30]

**32—**

## உணவுப் பொருள் பதனப் பயிற்சி மையங்கள் ஏற்படுத்துதல்

**வினா 14026—திரு. கு. மனோகரன் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு வேளாண்மைத் தொழில் கழகம் (T.A.I.) மூலம் தருமபுரி மாவட்ட ஊரகப் பகுதிகளில் உணவுப் பொருள் பதனப் பயிற்சி மையங்கள் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர் :**

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு வேளாண் நிறுவனம் மூலம் தருமபுரி மாவட்ட ஊரகப் பகுதிகளில் உணவுப் பொருள் பதனப் பயிற்சி மையங்கள் ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஒன்று தருமபுரி மாவட்ட ஆட்சியரிடமிருந்து வரப்பெற்றது. அந்தச் செயற்குறிப்பினைப் பரிசீலித்து தமிழ்நாடு வேளாண் நிறுவனம் அதை மைய அரசு உணவு பதப்படுத்தும் தொழில்கள் அமைச்சகம், புதுடெல்லிக்கு 18-8-1997 அன்று அனுப்பியுள்ளது. மைய அரசிடமிருந்து ஒப்பளிப்பு எதிர்பார்க்கப்படுகிறது. மைய அரசு இத்திட்டத்திற்குரிய நிதியுதவியை, தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு நேரடியாக அளிக்கும்.

**33—**

## கால்வாய்களைச் செப்பனிடவும், ஆக்கிரமிப்புகளை அகற்றவும் அரசு நடவடிக்கை

**வினா 3145—திரு. கோ. சண்முகம்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, ஏரிகளின் நீர்வரத்துக் கால்வாய்களைச் செப்பனிடவும், ஆக்கிரமிப்புகளை அகற்றவும் அரசு ஆவன செய்யுமா ?

[1998 மார்ச் 30

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் :**

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் உள்ள பொதுப்பணித் துறை ஏரிகள் யாவும் முறைப்படுத்தப்படாத சிறு பாசன ஏரிகள் ஆகும். இப்பாசன ஆதாரங்களிலே, பராமரிப்புக்கு என ஆண்டுதோறும் அரசு ஒதுக்கீடு செய்யும் நிதி நிலைமைக்கேற்ப பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**34—**

**பாசன வாய்க்காலைச் சீர்செய்தல்**

**வினா 11275—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், கலியரான் விடுதி கிராமத்தில் பழுதடைந்துள்ள பாசன வாய்க்காலைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், கலியரான் விடுதி கிராமத்திற்குச் செல்லும் பாசன வாய்க்காலான அக்கரவட்டம் மெயின் வாய்க்காலில், மண் தங்கும் இயந்திரம் மூலம் 1997-98-ல் தூர் அகற்றப்பட்டுள்ளது. மேலும், அதில் இருந்து பிரிந்து செல்லும் அக்கரவட்டம் எண்.1 வாய்க்காலில் தொலைக்கல் 0/00-0/32 வரையிலும் பழுதடைந்த கட்டுமானங்களும் நடப்பு ஆண்டில் (1997-98) சீர் செய்யப்பட்டுள்ளன.

**35—**

**பூம்புகார் கலைக்கூடத்தைப் பாதுகாக்க அரசு நடவடிக்கை**

**வினா 12777—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பூம்புகார் கலைக்கூடத்தைக் கடல் அரிப்பிலிருந்தும், ஆக்கிரமிப்பிலிருந்தும் பாதுகாக்க அரசு ஆவன செய்யுமா ?



1998 மார்ச் 30]

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

ஆம். நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், கலைக்கூடம் அமைந்துள்ள பூம்புகாரில் கடல் அரிப்பைத் தடுக்க, தடுப்புச் சுவர் கட்டும் பணிக்காக ரூ.86.54 இலட்சம் தற்பொழுது ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

**36—**

**பகுதி நேர நியாய விலைக் கடை தொடங்குதல்**

**வினா 8107—திரு. லி. அய்யலுசாமி:** மாண்புமிகு உணவு, பொதுவிநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவில்பட்டி தொகுதி, குருவிகுளம் ஊராட்சி ஒன்றியம், ராமலிங்கபுரத்திலுள்ள நியாய விலைக் கடையைப் பிரித்து நயினாம்பட்டி கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை தொடங்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

நயினாம்பட்டி கிராமத்திலுள்ள 152 குடும்ப அட்டைகள் தற்போது இராமலிங்கபுரம் நியாய விலைக் கடையுடன் இணைக்கப்பட்டு உள்ளன. தற்போது நடைமுறையிலுள்ள அரசாணையின்படி ஒரு கிராமப்புற முழுநேரக் கடையில் குறைந்த, பட்சம் 500 குடும்ப அட்டைகள் இருக்கவேண்டும். ஆனால் இராமலிங்கபுரம் நியாய விலைக் கடையில் 420 குடும்ப அட்டைகளே உள்ளன. மேலும் பகுதிநேர நியாய விலைக் கடைகள் துவங்க அக்கிராமத்தில் குறைந்தபட்சம் 200 குடும்ப அட்டைகளும், இரு நியாய விலைக் கடைகளுக்கு இடையே 2 கிலோ மீட்டர் தூரமும் இருக்க வேண்டும் என்ற நிபந்தனை உள்ளது. இந்நிலையில் 152 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ள நயினாம்பட்டி கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. அவ்வாறு 152 குடும்ப அட்டைகளுக்காக ஒரு பகுதிநேரக் கடை துவக்கப்பட்டால் தாய்க் கடையான இராமலிங்கபுரம் நியாய விலைக் கடையின் செயல்பாடு மிகவும் பாதிப்புக்குள்ளாகும்.

[1998 மார்ச் 30

37—

**நெல் கொள்முதல் நிலையம் கட்ட நடவடிக்கை**

**வினா 11218—திரு. மா. இராமச்சந்திரன் :** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், ஆதனக்கோட்டை கிராமத்தில் நெல் கொள்முதல் நிலையம் கட்ட அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :**

(அ) தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், ஆதனக்கோட்டை கிராமத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் கட்ட நிலம் தேர்வு செய்யப்பட்டுக் கையகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த 1997-98 ஆம் ஆண்டுத் திட்டப் பணியின்கீழ்க் கட்டப்படவுள்ள ஐந்து நேரடிக் கொள்முதல் நிலையங்களில் இதுவும் ஒன்றாகத் தேர்வு செய்யப்பட்டு, கட்டுமானப் பணிக்காக மதிப்பீடு தயார் செய்யப்படுகிறது.

(ஆ) இந்த ஆண்டிலேயே கட்டி முடிக்கத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

38—

**நியாய விலைக் கடை அமைக்க நடவடிக்கை**

**வினா 11448—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், திப்பணம்பட்டி கிராமம், திப்-மீனாட்சிபுரம் பகுதிகளில் உள்ள குடும்ப அட்டைகளைத் தனியாகப் பிரித்து அங்கு ஒரு நியாய விலைக் கடை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?



1998 மார்ச் 30]

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :**

திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், திப்பணம்பட்டி கிராமம், திப்-மீனாட்சிபுரம் கிராமத்தைச் சேர்ந்த மொத்தம் 226 குடும்ப அட்டைகள் திப்பணம்பட்டியில் இயங்கிவரும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நியாய விலைக் கடையில் இணைக்கப்பட்டுள்ளன. புதிய நியாய விலைக் கடையோ அல்லது பகுதி நேரக் கடையோ அமைக்க, ஏற்கெனவே இயங்கிவரும் கடையிலிருந்து அப்பகுதி குறைந்தபட்சம் 2 கிலோ மீட்டர் தூரமாவது இருக்க வேண்டும் என்று அரசு வழிகாட்டி நெறிமுறைகள் வகுத்துள்ளது. திப்பணம்பட்டியில் இயங்கிவரும் நியாய விலைக் கடைக்கும், திப்-மீனாட்சிபுரம் கிராமத்திற்கும் இடையே 0.4 கிலோ மீட்டர் (400 மீட்டர்) தூரமே உள்ளதால் இக்கிராமத்திற்கென்று தனியாகப் புதிய முழுநேரக் கடையோ அல்லது பகுதிநேரக் கடையோ அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

39—

**மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தில் வேலைவாய்ப்பு**

**வினா 7542—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் சுற்றுப்புறச் சூழ்நிலை அறிவியல் முதுகலைப் பட்ட வகுப்புப் பயின்ற மாணவர்களுக்கு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் வேலைவாய்ப்புகளில் முன்னுரிமை அளிக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) சுற்றுப்புறச் சூழ்நிலை அறிவியல் பாடத்தில் முதுகலைப் பட்டம் பெற்ற மாணவர்களுக்கும் மற்றோருக்கு நிகராக மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் அறிவியல் பணிகளில் வேலைவாய்ப்புகள் அளிக்கப்பட்டுள்ளன.

(ஆ) தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரிய ஆய்வகத்தில் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பணிகள் குறித்தும், தொழிற்சாலைக் கழிவுநீர், நீர் நிலைகள் மற்றும் காற்று ஆகியவற்றின் தன்மைகள் பற்றி பகுப்பாய்வு செய்யும் பொருட்டும் சுற்றுப்புறச் சூழ்நிலை அறிவியல் படித்த முதுகலைப் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புகள் உள்ளன. பல்வகையான பகுப்பாய்வுப் பணிகள் செய்வதால் சுற்றுச் சூழல் அறிவியல் முதுகலைப் பட்டம் பயின்ற மாணவர்களுக்கு மட்டும் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்பது ஏற்புடையதன்று.

**40—**

**கைத்தறிச் சங்கங்களின் விவரம்**

**வினா 9104—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் கைத்தறிச் சங்கங்கள் எத்தனை உள்ளன ?

(ஆ) தொடக்க காலத்தில் இருந்து எந்தெந்தச் சங்கங்கள் இலாபத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன ?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் 96 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன.

(ஆ) தொடக்க காலத்திலிருந்து எந்தவொரு சங்கமும் இலாபத்தில் இயங்கவில்லை. கடந்த 15 ஆண்டு காலமாக கீழ்க்கண்ட சங்கங்கள் இலாபத்தில் இயங்கி வருகின்றன:

1. தியாகி குமரன் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்
2. மல்லூர் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்
3. எடப்பாடி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்
4. நிலவாரப்பட்டி பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்
5. சேலம் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்.





**41—**

**கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம்**

**வினா 10709—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிங்கப்பூரில் துவங்கப்பட்ட கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தின் தற்போதைய நிலை என்ன ?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர் :**

சிங்கப்பூரில் துவங்கப்பட்ட கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் இலாபகரமாக இயங்காததால் 1983-84 ஆம் ஆண்டு மூடப்பட்டு விட்டது. கோ-ஆப்டெக்ஸிற்கு தற்பொழுது வெளிநாடுகளில் எந்த விற்பனை நிலையங்களும் இல்லை.

**42—**

**கூரை வீடுகள் விவரம்**

**வினா 13551—திரு. ஐ. கணேசன் :** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, நெசவாளர் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தறிக்கூடத்தோடு கூரை வீடுகள் எவ்வளவு ஒதுக்கப்பட்டுள்ளன ?

(ஆ) இல்லையெனில், நெசவாளர் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் வீடுகளை ஒதுக்கிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): 1995-96 மற்றும் 1996-97 ஆம் ஆண்டுகளுக்கு, தொகுப்பு வீடு கட்டும் திட்டம் மற்றும் பரவலாக வீடு கட்டும் திட்டத்தின்கீழ் 82 வீடுகளும், 1997-98 ஆம் ஆண்டுக்கு, பரவலாக வீடு கட்டும் திட்டத்தின் கீழ் 15 வீடுகளும் ஒதுக்கப்பட்டுள்ளன.

**43—**

### வனத் துறையால் நடப்பட்ட மரக்கன்றுகள் விவரம்

**வினா 12400—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1996-97 ஆம் ஆண்டில் வனத் துறையால் நடப்பட்ட மரக்கன்றுகள் எத்தனை ?

(ஆ) அவற்றில் மரமாக வளர்ந்துள்ள கன்றுகள் எத்தனை ?

(இ) பட்டுப்போனவை எத்தனை ?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

(அ) 1996-97 ஆம் ஆண்டில் வனத் துறையால் நடப்பட்ட மரக்கன்றுகளின் எண்ணிக்கை - 3,30,67,699

(ஆ) அவற்றில் மரமாக வளர்ந்துள்ள கன்றுகள் - 2,77,38,840

(இ) பட்டுப்போனவை - 53,28,859

**44—**

### சமூக வனத் திட்டத்திற்கு இலவச உதவி நிறுத்தப்பட்ட விவரம்

**வினா 12404—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமூக வனத் திட்டத்திற்கு ஸ்வீடன் நிறுவனம் வழங்கி வந்த இலவச உதவி நிறுத்தப்பட்டு விட்டதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.



(ஆ) ஸ்வீடன் பன்னாட்டு நிதியுதவி 1-4-1994 முதல் நிறுத்தப்பட்டது.

**45—**

### சந்தனக் கட்டைகள் ஏற்றுமதி விவரம்

**வினா 12887—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், சந்தனக் கிடங்கிலுள்ள சந்தனக் கட்டைகளைத் தனியாருக்கு ஏலம் விடாமல் அரசே நேரடியாக ஏற்றுமதி செய்ய நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு வனத் துறையில் சேலம், சத்தியமங்கலம், திருப்பத்தூர் கிடங்கில் இருப்பிலுள்ள சந்தனக் கட்டைகளில் 300 டன்கள் சந்தனக் கட்டைகளை திருச்சியிலுள்ள தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம் மூலம் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்ய 3-11-97-ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், தமிழக அரசு மத்திய அரசுடன் தொடர்பு கொண்டு, அரசே நேரடியாக அனைத்து வகை சந்தனக் கட்டைகளையும் வெளிநாடுகளுக்கு அளவு, எடை போன்ற தடங்கலின்றி ஏற்றுமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மத்திய அரசின் அனுமதி வரப்பெற்றதும், அரசே நேரடியாகவோ அல்லது அதன் சார்பு நிறுவனமான தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம் மூலமாகவோ ஏற்றுமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

**46—**

### வீடு கட்டும் சங்கம் தனியாக அமைக்க அரசு அனுமதி

**வினா 7861—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மன்னார்குடி, அரவத்தூர் கிராமத்தில், தமிழ்நாடு விஸ்வகர்மா கைவினைஞர்கள் சங்கம் சார்பில் அரசு ஒப்புதல் அளித்த 347 வீட்டுமனைகளில் வீடுகள் கட்டுவதற்குக் கடன் வழங்கக்கூடிய வீடு கட்டும் சங்கம் தனியாக அமைக்க அரசு அனுமதி அளிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டு வசதித் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு விஸ்வகர்மா கைவினைஞர்கள் சங்கத்தால், மனை ஒதுக்கீடு பெற்றவர்களில் பெரும்பாலோர் தனியாக தினக்கூலியாகப் பணியாற்றி வருவதாலும், நிரந்தர வருவாய் பெறக்கூடியவர்களாக இல்லாததாலும், இவர்களுக்காக தனியாக ஒரு வீட்டுவசதிச் சங்கம் அமைக்கும் எண்ணம் இல்லை. எனினும், இவர்கள் மன்னார்குடியில் செயல்பட்டு வரும் வட்ட மற்றும் நகரக் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள் மூலம் வீடுக் கட்ட கடன் பெற்றுக்கொள்ளும் வகையில், கடனுதவி பெற்று வீடு கட்ட விருப்பம் தெரிவிக்கின்ற கைவினைஞர்களை உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொண்டு கடன் வழங்குமாறு துணைப் பதிவாளர் (வீட்டுவசதி), தஞ்சாவூர் அவர்களுக்கு தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

47—

**வீட்டுவசதி வாரியக் குடியிருப்புகள் கட்ட அரசு நடவடிக்கை**

**வினா 10705—திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் நகரிலுள்ள கிழக்குப் பகுதியின் ஏரியைத் தூர்த்து வீட்டுவசதி வாரியக் குடியிருப்புகள் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டு வசதித் துறை அமைச்சர்:**

(அ) தற்போது, அரக்கோணம் நகரிலுள்ள கிழக்குப் பகுதியில் ஏரியைத் தூர்த்து அங்கு குடியிருப்புகள் கட்டும் செயற்குறிப்பு எதுவும் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.



48—

**கோடை விடுமுறைக் காலங்களில் ஊதியம் வழங்க நடவடிக்கை**

**வினா 10886—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் சத்துணவுப் பணியாளர்களுக்கு, கோடை விடுமுறைக் காலங்களிலும் ஊதியம் வழங்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் சத்துணவுப் பணியாளர்களுக்கு, கோடை விடுமுறைக் காலங்களில் பள்ளி சத்துணவு மையங்கள் செயல்படாத காரணத்தால் அக்காலங்களில் ஊதியம் வழங்கப்படுவதில்லை என்ற தற்போதைய நடைமுறையில் எவ்வித மாற்றமும் இல்லை.

49—

**விதவை மறுமணத் திட்டத்தின்கீழ் நிதியுதவி வழங்கியதன் விவரம்**

**வினா 5612—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் விதவை மறுமணத் திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டத்தில் எத்தனை பேருக்கு நிதியுதவி வழங்கப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:**

டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் திட்டத்தின்கீழ் சேலம் மாவட்டத்தில் 1996-97 ஆம் ஆண்டில் 6 பயனாளிகளுக்கு ரூ. 5,000/- வீதம் ரூ. 30,000/- வழங்கப்பட்டுள்ளது. 1997-98 ஆம் ஆண்டில் 31-1-1998 முடிய 6 பயனாளிகளுக்குத் தலா ரூ. 7,000/- வீதம் ரூ. 42,000/- வழங்கப்பட்டுள்ளது.

[1998 மார்ச் 30

**50—**

**பெண் சிசுக் கொலையைத் தடுக்க நடவடிக்கை**

**வினா 9626—திரு. இ.ஜி. சுகவனம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண் சிசுக் கொலையில் தருமபுரி மாவட்டம் தமிழ்நாட்டிலேயே இரண்டாவது இடத்தில் இருப்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசின் திட்டம் என்ன ?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். பெண் சிசுக் கொலையில் தருமபுரி மாவட்டம் தமிழ்நாட்டிலேயே இரண்டாவது இடத்தில் இருப்பது உண்மை.

(ஆ) பெண் சிசுக் கொலையினை ஒழித்திட அரசு ஏற்படுத்தியுள்ள திட்டங்களின் பயனாக "பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்" ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், ஒரு பெண் குழந்தையாய் இருப்பின் ரூ.3,000/-ம், இரு பெண் குழந்தைகளாய் இருப்பின் தலா ரூ.1,500/-க்கான வைப்புத் தொகை இரசீது அளித்து, 20 ஆண்டுகள் முடியும் தருணத்தில் முறையே, அதிகபட்சம் ரூ.29,000/-ம் ரூ.58,000/-ம் என வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் மைய அரசினால் ஏற்படுத்தப்பட்ட "பாலிகா சமிரிதி யோஜனா" திட்டத்தின்படி 15-8-1997 முதல் பிறக்கும் பெண் குழந்தைகள் பயனடைய வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. மேலும், சுகாதாரக் கல்வி (டானிடா) ஆரம்பக் கல்வித் திட்டம் செயல்படுத்தப்பட்டு, புத்தகங்கள் மற்றும் நோட்டுப் புத்தகங்கள் வழங்கும் திட்டத்தின்கீழ் அளிக்கப்படும் உதவித் தொகை ரூ.50/- முதல் ரூ.600/- வரை உயர்த்தப்பட்டுள்ளது.

"ஏழை விதவையரது மகள் திருமண நிதியுதவித் திட்டத்தின்"கீழ் ரூ.2,000/- வழங்கப்படுகிறது. "மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின்"கீழ் 8 ஆம் வகுப்பு மற்றும் அதற்கு மேலும் பயின்ற ஏழைப் பெண்களுக்குத் திருமண உதவியாக ரூ.1,000/-வழங்கப்படுகிறது. "டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி அம்மையார் நினைவு மகப்பேறு உதவித் திட்டத்தின்"கீழ் ரூ.500/- பெண்களுக்கு வழங்கப்படுகிறது. இத்தகைய நலத் திட்டங்கள் மூலம் பெண் சிசுக் கொலை நாளாவட்டத்தில் குறையும் என அரசு நம்புகிறது.



1998 மார்ச் 30]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 3. இறுதித் துணை நிதிநிலை அறிக்கை, 1997-98, அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1997-98 ஆம் ஆண்டுக்கான செலவு குறித்த இறுதித் துணை நிதிநிலை அறிக்கை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1997-98 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றத்தின் முன் வைக்கிறேன். மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவான அறிக்கை மன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இத் துணை மதிப்பீடு மொத்தம் ரூபாய் 1242 கோடியே 71 இலட்சம் நிதி ஒதுக்கத்திற்கு வகை செய்கிறது. இதில், ரூபாய் 913 கோடி வருவாய்க் கணக்கிலும், ரூபாய் 329 கோடியே 71 இலட்சம் மூலதனம் மற்றும் கடன் கணக்குகளிலும் அடங்கும்.

2. இந்த மானியக் கோரிக்கைகளில் இடம்பெறுகின்ற சில முக்கியமான திட்டங்கள், திட்டப் பணிகள் குறித்து நான் சுருக்கமாகக் கூற விழைகிறேன்.

3. "மானியக் கோரிக்கை 8 - தேர்தல்கள்" என்பதன்கீழ் நாடாளுமன்றத் தேர்தல் குறித்த செலவுக்கெனக் கூடுதலாக ரூபாய் 51 கோடியே 60 இலட்சம் இந்தத் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

4. "மானியக் கோரிக்கை 15 - காவல் துறை" என்பதன்கீழ் சிவகாசியில் தமிழ்நாடு சிறப்புக் காவல் படையின் புதிய பிரிவை ஏற்படுத்தவும், 12 புறக்காவல் நிலையங்களை, முழுநிலைக் காவல் நிலையங்களாக நிலை உயர்த்தவும் ரூபாய் 16 கோடியே 81 இலட்சம் கூடுதல் நிதி ஒதுக்கம் இந்தத் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

[கலைஞர் மு. கருணாநிதி] [1998 மார்ச் 30

5. "மானியக் கோரிக்கை 18 - மருத்துவம்" என்பதன்கீழ் மருத்துவக் கல்வி இயக்குநரின் கட்டுப்பாட்டில் வரும் அரசு மருத்துவ நிலையங்களுக்கு, தமிழ்நாடு மருத்துவப் பணிகள் நிறுவனத்தின் மூலம் மருந்துகள் மற்றும் அறுவைச் சிகிச்சைப் பொருட்கள் வழங்க ரூபாய் 7 கோடியே 1 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. சில அரசு மருத்துவமனைகளில் "கோபால்ட்" முறை மருத்துவப் பிரிவுச் சாதனங்கள் வாங்குவதற்காக ரூபாய் 3 கோடியே 49 இலட்சம் கூடுதலாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. எய்ட்ஸ் நோய்க் கட்டுப்பாட்டுத் திட்டத்திற்கு ரூபாய் 14 கோடியே 36 இலட்சம் கூடுதலாக நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இவை, இறுதித் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளன.

6. விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கியதற்காக அரசுக்குச் சேர வேண்டிய வழிவகை முன்பணம், வட்டி மற்றும் அரசின் பங்குத் தொகையிலிருந்து ரூபாய் 228 கோடியே 21 இலட்சம் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு அளிக்க வேண்டிய கூடுதல் மானியமாகக் கருதப்பட வேண்டும் என அரசு ஆணையிட்டுள்ளது. இத்தொகை, இந்தத் துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை 20 - வேளாண்மை" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

7. "மானியக் கோரிக்கை 25 - கைத்தறியும் துணித் தொழிலும்" என்பதன்கீழ் இலவச சேலை, வேட்டிகள் வழங்கும் திட்டத்திற்கும், விற்பனை மேம்பாட்டு உதவித் திட்டத்திற்கும் கூடுதலாக ரூபாய் 7 கோடியே 42 இலட்சம் இந்தத் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

8. "மானியக் கோரிக்கை 26 - கதர் - கிராமத் தொழில்கள்" என்பதன்கீழ் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திற்குக் கதர்த் துணி விற்பனை குறித்த நிலுவையாக உள்ள தள்ளுபடிக்காக (rebate) ரூபாய் 9 கோடியே 79 இலட்சம் கூடுதல் நிதி ஒதுக்கம், இந்தத் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

9. "மானியக் கோரிக்கை 27 - ஊரக வளர்ச்சி" என்பதன்கீழ் நடப்பாண்டிற்கு "இந்திரா வீட்டு வசதித் திட்டத்திற்கு" ரூபாய் 45 கோடியே 40 இலட்சம் கூடுதலாக அரசு அனுமதித்துள்ளது. இதற்காக, ரூபாய் 2 கோடியே 21 இலட்சம் இறுதித் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

10. வறட்சி நிவாரணப் பணிகள் மற்றும் பெருமழையினால் ஏற்பட்ட இழப்பீடுகள், சாலை பழுதுபார்த்தல் போன்ற துயர் தணிப்புப்



1998 மார்ச் 30] [கலைஞர் மு. கருணாநிதி]

பணிகளுக்காகக் கூடுதல் ஒதுக்கீடு தேவைப்படுகிறது. இதற்காக, "மானியக் கோரிக்கை 40 - இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு" என்பதன் கீழ் இந்தத் துணை மதிப்பீடுகளில் ரூபாய் 97 கோடியே 86 இலட்சம் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

11. "மானியக் கோரிக்கை 48 - குடிநீர் வழங்கல்" என்பதன்கீழ் உவர்த் தன்மை நீக்கும் சிறு சாதனங்களை நிறுவுவதற்காகவும், சென்னை இரண்டாவது குடிநீர் வழங்குத் திட்டத்திற்காகவும் ரூபாய் 19 கோடியே 10 இலட்சம் அரசு அனுமதித்துள்ளது. இதற்காக, இறுதித் துணை மதிப்பீடுகளில் ரூ. 7 கோடியே 71 இலட்சம் சேர்க்கப்பட்டுள்ளது.

12. போக்குவரத்துக் கழகங்கள் தங்களது நிதி இடர்ப்பாட்டைச் சமாளிக்க இயலும் வகையில் மாநில அரசுக்குச் சேரவேண்டிய கடன்கள் மற்றும் வழிவகை முன்பணங்களாக இருந்த ரூபாய் 150 கோடியே 53 இலட்சத்தைப் போக்குவரத்துக் கழகங்களின் சமபங்கு மூலதனமாகக் கருதவேண்டுமென்று அரசு ஆணையிட்டுள்ளது. இத்தொகை இறுதித் துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை 58 - சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு" என்ற தலைப்பின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

13. தமிழ்நாடு மின் வாரியத்திலிருந்து அரசுக்குச் சேரவேண்டிய கடனாக இருந்த ரூபாய் 87 கோடியே 34 இலட்சத்தை மாநில அரசின் சமபங்கு மூலதனமாக மாற்றவேண்டும் என்று அரசு முடிவு செய்துள்ளது. இதற்காக ரூபாய் 4 கோடியே 75 இலட்சம் "மானியக் கோரிக்கை 61-பல்வகை மூலதனச் செலவு" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

14. இத்துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ள பல்வேறு செலவினங்களின் முக்கிய அம்சங்கள் குறித்து நான் இங்கு மிகச் சுருக்கமாகக் குறிப்பிட்டுள்ளேன். இவை குறித்தும் மற்றும் ஏனைய இனங்கள் குறித்தும் உரிய முழு விவரங்கள் பேரவைமுன் வைக்கப்பட்டுள்ள விளக்கக் குறிப்பில் விரிவாக இடம் பெற்றுள்ளன.

15. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1997-98 ஆம் ஆண்டுக்கான இறுதித் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றம் ஏற்று இசைவளிக்குமாறு வேண்டுகிறேன்.

வணக்கம்.

[திரு. கலைஞர் மு. கருணாநிதி] [1998 மார்ச் 30

**1997-98 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்**

| கோரிக்கை (1) | (ரூபாய் ஆயிரத்தில்) (2) |
|---|---|
| **அ. வருவாய்க் கணக்கில் செலவு** | |
| 2. மாநில ஆயத் தீர்வை துறை | 60,64 |
| 3. இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் | 3,61,54 |
| 4. பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிருவாகம் | 7,18,82 |
| 5. முத்திரைத் தாள்கள்—நிருவாகம் | 2,01,87 |
| 6. ஆவணப் பதிவு | 3,06,77 |
| 7. மாநிலச் சட்டமன்றம் | 1,32,80 |
| 8. தேர்தல்கள் | 51,59,79 |
| 9. மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் | 17,65,08 |
| 10. பால் வழங்கு செயல் திட்டங்கள் | 36,92 |
| 11. மாவட்ட நிருவாகம் | 50,59,54 |
| 12. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் | 50,18 |
| 13. நீதி நிருவாகம் | 9,84,24 |
| 14. சிறைச்சாலைகள் | 11,12,96 |
| 15. காவல் துறை | 79,44,55 |
| 16. தீயணைப்புப் பணிகள் | 3,43,23 |
| 17. கல்வி | 18,76,99 |
| 18. மருத்துவம் | 35,65,82 |



1998 மார்ச் 30] [திரு. கலைஞர் மு. கருணாநிதி]

| (1) | (2) |
|---|---|
| **அ. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி.** | |
| 19. மக்கள் நல்வாழ்வு | 15,95,02 |
| 20. வேளாண்மை | 2,42,98,29 |
| 21. மீனளம் | 3,76,10 |
| 22. கால்நடை வளர்ப்பு | 2,05,46 |
| 23. கூட்டுறவு | 2,04,98 |
| 24. தொழில்கள் | 3,76,18 |
| 25. கைத்தறியும் துணித் தொழிலும் | 9,82,39 |
| 26. கதர்-கிராமத் தொழில்கள் | 10,26,02 |
| 27. ஊரக வளர்ச்சி | 16,74,52 |
| 28. தொழிற்சாலைகள் உள்ளடங்கலான தொழிலாளர் நலன் | 1,69,95 |
| 29. சமூக நலன் | 30,81,55 |
| 30. பட்டியல் பழங்குடியினர், பட்டியல் சாதியினர் முதலியோர் நலன் | 34,77,67 |
| 31. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் நலன் | 4,56,45 |
| 32. வீட்டு வசதி | 11,52,20 |
| 33. நகர்ப்பகுதி வளர்ச்சி | 4 |
| 34. நுகர்பொருள் வழங்கல் | 9,12,97 |
| 35. பாசனம் | 8,83,66 |
| 36. பொதுப் பணிகள்—கட்டடங்கள் | 10,90,64 |
| 38. சாலைகளும் பாலங்களும் | 17,58,10 |
| 39. சாலைப் போக்குவரத்துப் பணிகளும், கப்பல் போக்குவரத்தும் | 1,47,40 |

[திரு. கலைஞர் மு. கருணாநிதி] [1998 மார்ச் 30

| (1) | (2) |
| --- | --- |
| அ. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி. | |
| 40. இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 97,85,65 |
| 41. ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும் | 2 |
| 42. பல்வகை | 3 |
| 44. காட்டுவளத் துறை | 16,98,47 |
| 45. இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும் | 51,31 |
| 46. செய்தி திரைப்படத் தொழில் நுட்பவியல் | 1,15,42 |
| 47. ஊரகத் தொழில்கள் | 3,47,67 |
| 48. குடிநீர் வழங்கல் | 9,43,25 |
| 49. நகராட்சி நிருவாகம் | 2 |
| 50. சுற்றுலா | 1,82,11 |
| 51. தமிழ் வளர்ச்சி-பண்பாடு | 5,97,93 |
| 52. சுற்றுச்சூழல் | 1 |
| மொத்தம்—அ. வருவாய்க் கணக்கில் செலவு | **9,02,73,21** |
| ஆ. வருவாய்க் கணக்கின் கீழ்வராத மூலதனச் செலவு | |
| 53. வேளாண்மை குறித்த மூலதனச் செலவு | 7 |
| 54. தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு | 1 |
| 55. பாசனம் குறித்த மூலதனச் செலவு | 9 |
| 56. பொதுப் பணிகள்—கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு | 16,40,09 |
| 57. சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு | 4 |
| 58. சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு | 174,27,55 |



1998 மார்ச் 30] [திரு. கலைஞர் மு. கருணாநிதி]

| (1) | (2) |
| --- | --- |
| ஆ. வருவாய்க் கணக்கின் கீழ்வராத மூலதனச் செலவு—தொடர்ச்சி | |
| 59. காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு | 1 |
| 61. பல்வகை மூலதனச் செலவு | 28,70,45 |
| மொத்தம்—வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு | **2,19,38,31** |
| இ. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும் | |
| 62. மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் | 1,08,74,74 |
| பெருமொத்தம் | **12,30,86,26** |

முற்பகல் 11-00

## 2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

**(ஆ) முன்பண மானியக் கோரிக்கைகள், 1998-99, மொழிதல் (ஆ.செ.)**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1998-99 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது:—

"In pursuance of Clause 2 of Article 206, read with Clause 3 of Article 203 of the Constitution of India, I, M. Fathima Beevi, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demands for Grants in advance during the financial year 1998-99."

[1998 மார்ச் 30

## 4. முன்பண மானியக் கோரிக்கைகள், 1998-99, வாக்கெடுப்பு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1998-99 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1998-99 ஆம் ஆண்டிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் அடங்கிய 27-3-1998 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகை 1998-99 ஆம் ஆண்டிற்கான உடனடிச் செலவிற்காக அரசுக்கு முன்பணமாக வழங்கப்பெற வேண்டும்"

என்ற தீர்மானத்தை நான் மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

### நிறைவேற்றப்பெற்ற 1998-99 ஆம் ஆண்டிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள்

| கோரிக்கை (1) | | (ரூபாய் ஆயிரத்தில்) (2) |
|---|---|---|
| அ. வருவாய்க் கணக்கில் செலவு | | |
| 1. | நில வருவாய்த் துறை | 4,06,13 |
| 2. | மாநில ஆயத் தீர்வைத் துறை | 4,25,47 |
| 3. | இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் | 5,08,23 |



1998 மார்ச் 30]

| (1) | | (2) |
|---|---|---|
| அ. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி | | |
| 4. | பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிருவாகம் | 25,21,52 |
| 5. | முத்திரைத் தாள்கள்—நிருவாகம் | 1,62,24 |
| 6. | ஆவணப் பதிவு | 10,28,93 |
| 7. | மாநிலச் சட்டமன்றம் | 2,36,19 |
| 8. | தேர்தல்கள் | 7,33,03 |
| 9. | மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் | 38,19,08 |
| 10. | பால் வழங்கு செயல் திட்டங்கள் | 2,74,17 |
| 11. | மாவட்ட நிருவாகம் | 1,14,70,01 |
| 12. | 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய—அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் | 5,30,62 |
| 13. | நீதி நிருவாகம் | 28,84,63 |
| 14. | சிறைச்சாலைகள் | 12,94,19 |
| 15. | காவல் துறை | 1,77,32,34 |
| 16. | தீயணைப்புப் பணிகள் | 14,36,66 |
| 17. | கல்வி | 9,00,26,93 |
| 18. | மருத்துவம் | 1,60,93,43 |
| 19. | மக்கள் நல்வாழ்வு | 1,00,49,63 |
| 20. | வேளாண்மை | 1,84,75,05 |
| 21. | மீனளம் | 10,67,59 |
| 22. | கால்நடை வளர்ப்பு | 36,96,80 |
| 23. | கூட்டுறவு | 13,47,93 |
| 24. | தொழில்கள் | 3,94,59 |
| 25. | கைத்தறியும் துணித் தொழிலும் | 43,48,53 |
| 26. | கதர்-கிராமத் தொழில்கள் | 4,68,18 |

[1998 மார்ச் 30

| (1) | (2) |
|---|---|
| **அ. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி** | |
| 27. ஊரக வளர்ச்சி | 2,96,40,63 |
| 28. தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும் | 24,78,40 |
| 29. சமூக நலன் | 1,14,56,53 |
| 30. பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் | 76,13,69 |
| 31. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் நலன் | 22,36,16 |
| 32. வீட்டு வசதி | 11,79,30 |
| 33. நகர்ப்பகுதி வளர்ச்சி | 2,59,67 |
| 34. நுகர்பொருள் வழங்கல் | 2,91,56,97 |
| 35. பாசனம் | 1,38,92,16 |
| 36. பொதுப் பணிகள்—கட்டடங்கள் | 26,79,84 |
| 37. சுற்றுச்சூழல் | 2,61,51 |
| 38. சாலைகளும் பாலங்களும் | 1,52,09,90 |
| 39. சாலைப் போக்குவரத்துப் பணிகளும், கப்பல் போக்குவரத்தும் | 4,50,72 |
| 40. இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 17,50,52 |
| 41. ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும் | 4,87,95,79 |
| 42. பல்வகை | 3,12,89,75 |
| 43. எழுதுபொருள்—அச்சுத் துறை | 14,81,78 |
| 44. காட்டுவளத் துறை | 35,08,86 |
| 45. இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும் | 29,93,78 |
| 46. செய்தி திரைப்படத் தொழில் நுட்பவியல் | 4,22,49 |
| 47. ஊரகத் தொழில்கள் | 26,12,20 |
| 48. குடிநீர் வழங்கல் | 51,89,37 |
| 49. நகராட்சி நிருவாகம் | 1,28,38,27 |
| 50. சுற்றுலா | 73,06 |
| 51. தமிழ் வளர்ச்சி—பண்பாடு | 6,15,84 |
| மொத்தம்—அ. வருவாய்க் கணக்கில் செலவு | **41,95,19,29** |



1998 மார்ச் 30]

| (1) | (2) |
|---|---|
| **ஆ. வருவாய்க் கணக்கின் கீழ்வராத மூலதனச் செலவு—** | |
| 52. வேளாண்மை குறித்த மூலதனச் செலவு | 9,09,81 |
| 53. தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு | 29,66 |
| 54. பாசனம் குறித்த மூலதனச் செலவு | 1,04,93,38 |
| 55. பொதுப் பணிகள்-கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு | 65,15,00 |
| 56. சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு | 1,90,73,33 |
| 57. சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு | 50,05,62 |
| 58. காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு | 40,59,50 |
| 59. ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு | 13,24 |
| 60. பல்வகை மூலதனச் செலவு | 84,52,99 |
| மொத்தம்—ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு | **5,45,52,53** |
| **இ. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும்—** | |
| 61. மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் | 1,21,86,35 |
| பெருமொத்தம் | **48,62,58,17** |

## 2. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (இ) தமிழ்நாடு நிதி ஒதுக்க (முன்னளி மானிய வாக்களிப்புச்) சட்டமுன்வடிவு, 1998 (ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (முன்னளி மானிய வாக்களிப்புச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்யவும், மற்றும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு நிதி ஒதுக்க (முன்னளி மானிய வாக்களிப்புச்) சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (முன்னளி மானிய வாக்களிப்புச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (முன்னளி மானிய வாக்களிப்புச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.



## 2. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஈ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1997-98—மொழிதல் (ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1997-98 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது:

"In pursuance of Clause 2 of Article 205 read with Clause 3 of Article 203 of the Constitution of India, I, M. Fathima Beevi, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demands for Further Grants for the financial year, 1997-98."

## 6. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1997-98—வாக்கெடுப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1997-98 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

"1997-98 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 30-3-1998 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றுக்கும் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 1997-98 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"
என்ற தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

[1998 மார்ச் 30

## நிறைவேற்றப்பெற்ற 1997-98 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

| கோரிக்கை (1) | (ரூபாய் ஆயிரத்தில்) (2) |
|---|---|
| அ. வருவாய்க் கணக்கில் செலவு | |
| 2. மாநில ஆயத் தீர்வைத் துறை | 60,64 |
| 3. இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் | 3,61,54 |
| 4. பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிருவாகம் | 7,18,82 |
| 5. முத்திரைத் தாள்கள்—நிருவாகம் | 2,01,87 |
| 6. ஆவணப் பதிவு | 3,06,77 |
| 7. மாநிலச் சட்டமன்றம் | 1,32,80 |
| 8. தேர்தல்கள் | 51,59,79 |
| 9. மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் | 17,65,08 |
| 10. பால் வழங்கு செயல் திட்டங்கள் | 36,92 |
| 11. மாவட்ட நிருவாகம் | 50,59,54 |
| 12. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் | 50,18 |
| 13. நீதி நிருவாகம் | 9,84,23 |
| 14. சிறைச்சாலைகள் | 11,12,96 |
| 15. காவல் துறை | 79,44,55 |
| 16. தீயணைப்புப் பணிகள் | 3,43,23 |
| 17. கல்வி | 18,76,99 |
| 18. மருத்துவம் | 35,65,82 |



1998 மார்ச் 30]

| (1) | (2) |
|---|---|
| அ. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி | |
| 19. மக்கள் நல்வாழ்வு | 15,95,02 |
| 20. வேளாண்மை | 2,42,98,29 |
| 21. மீனளம் | 3,76,10 |
| 22. கால்நடை வளர்ப்பு | 2,05,46 |
| 23. கூட்டுறவு | 2,04,98 |
| 24. தொழில்கள் | 3,76,18 |
| 25. கைத்தறியும் துணித் தொழிலும் | 9,82,39 |
| 26. கதர்-கிராமத் தொழில்கள் | 10,26,02 |
| 27. ஊரக வளர்ச்சி | 16,74,52 |
| 28. தொழிற்சாலைகள் உள்ளடங்கலான தொழிலாளர் நலன் | 1,69,95 |
| 29. சமூக நலன் | 30,81,55 |
| 30. பட்டியல் பழங்குடியினர், பட்டியல் சாதியினர் முதலியோர் நலன் | 34,77,67 |
| 31. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் நலன் | 4,56,43 |
| 32. வீட்டு வசதி | 11,52,20 |
| 33. நகர்ப்பகுதி வளர்ச்சி | 4 |
| 34. நுகர்பொருள் வழங்கல் | 9,12,97 |
| 35. பாசனம் | 8,83,66 |
| 36. பொதுப் பணிகள்—கட்டடங்கள் | 10,90,64 |
| 38. சாலைகளும் பாலங்களும் | 47,58,10 |
| 39. சாலைப் போக்குவரத்துப் பணிகளும், கப்பல் போக்குவரத்தும் | 1,47,40 |

| (1) | (2) |
|---|---|
| **அ. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி.** | |
| 40. இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 97,85,65 |
| 41. ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும் | 2 |
| 42. பல்வகை | 3 |
| 44. காட்டுவளத் துறை | 16,98,47 |
| 45. இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும் | 51,31 |
| 46. செய்தி திரைப்படத் தொழில் நுட்பவியல் | 1,15,42 |
| 47. ஊரகத் தொழில்கள் | 3,47,67 |
| 48. குடிநீர் வழங்கல் | 9,43,25 |
| 49. நகராட்சி நிருவாகம் | 2 |
| 50. சுற்றுலா | 1,82,11 |
| 51. தமிழ் வளர்ச்சி-பண்பாடு | 5,97,93 |
| 52. சுற்றுச்சூழல் | 1 |
| மொத்தம்—அ. வருவாய்க் கணக்கில் செலவு | **9,02,73,21** |
| **ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு** | |
| 53. வேளாண்மை குறித்த மூலதனச் செலவு | 7 |
| 54. தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு | 1 |
| 55. பாசனம் குறித்த மூலதனச் செலவு | 9 |
| 56. பொதுப் பணிகள்-கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு | 16,40,09 |
| 57. சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு | 4 |
| 58. சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு | 1,74,27,55 |



| (1) | (2) |
|---|---|
| **ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு—தொடர்ச்சி** | |
| 59. காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு | 1 |
| 61. பல்வகை மூலதனச் செலவு | 28,70,45 |
| மொத்தம்—ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு | **2,19,38,31** |
| **இ. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும்** | |
| 62. மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் | 1,08,74,74 |
| பெருமொத்தம் | **12,30,86,26** |

முற்பகல் 11-05

## 2. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (உ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 1998 (ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

[1998 மார்ச் 30

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 7. அரசினர் தீர்மானம்

### சட்டமன்றப் பேரவை விதி 30, 130 மற்றும் 132-ஐத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்று அறிமுகம் செய்யப்பட்ட இரண்டு சட்டமுன்வடிவுகளையும் இன்றே ஆய்வுக்கு எடுத்துக்கொள்வது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (முன்னளி மானிய வாக்களிப்புச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/1998) மற்றும் 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/1998) ஆகியவற்றை இன்றே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்" என்ற தீர்மானத்தை மொழிகிறேன்.



1998 மார்ச் 30]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை. தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

## 8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

### (அ) தமிழ்நாடு நிதி ஒதுக்க (முன்னளி மானிய வாக்களிப்புச்) சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (முன்னளி மானிய வாக்களிப்புச்) சட்டமுன்வடிவு. (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/1998) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (முன்னளி மானிய வாக்களிப்புச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/1998) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் படுகிறது.

[பேரவைத் தலைவர்] [1998 மார்ச் 30

பிரிவுகள் 2, 3 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2, 3 மற்றும் இணைப்புப் பட்டியல், சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (முன்னளி மானிய வாக்களிப்புச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/1998) நிறைவேற்றப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)



1998 மார்ச் 30] [பேரவைத் தலைவர்]

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

### (ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/1998). மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/1998) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் படுகிறது.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல், சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

[பேரவைத் தலைவர்] [1998 மார்ச் 30

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/1998) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.



## 9. பேரவை விதி 110-ன்கீழ் தொழிலாளர் நலத் துறை அமைச்சரின் அறிக்கை

### பி. அண்டு சி. ஆலைத் தொழிலாளர் பிரச்சினை குறித்து தொழிலாளர் ஆணையர் முன்பு நடந்த சமரசப் பேச்சுவார்த்தையில் இருதரப்பினரும் ஏற்றுக்கொண்டு நிறைவேற்றப்பட்ட ஒப்பந்தம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவை விதி எண் 110-ன் கீழ் பேரவைக்கு ஓர் அறிக்கை கொடுக்க அனுமதி வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அனுமதி கொடுக்கப்படுகின்றது. மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

முற்பகல் 11-10

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ் தங்களின் மேலான அனுமதியுடன் இந்த அறிக்கையை சட்டமன்றப் பேரவையில் வாசிக்கின்றேன்.

சென்னையிலே பல மாதங்களாக நீடித்து வரும் பி. அண்டு சி. ஆலைத் தொழிலாளர் பிரச்சினை குறித்து, கழக அரசு பொறுப்பேற்ற பிறகு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொழிற்சங்கத் தலைவர்களுடனும், நிர்வாகத்தினருடனும் 18-11-1996, 23-2-1997, 8-4-1997, 19-9-1997, 29-10-1997, 21-1-1998, 16-3-1998 மற்றும் 28-3-1998 ஆகிய நாட்களில் எட்டு முறை பல மணி நேரங்கள் பேசியதன்பேரில், இறுதியாக 28-3-1998 அன்று இருதரப்பினரின் ஒப்புதலோடு நிறைவேற்றப்பட்ட ஒப்பந்தத்தினை இந்த அவையின் மூலம் தெரிவிக்க விரும்புகிறேன்.

அந்தப் பேச்சுவார்த்தையின்போது முதலமைச்சர் அவர்கள் தெரிவித்த ஆலோசனைகளை இருதரப்பினரும் ஏற்றுக்கொண்டு, தொழிலாளர் ஆணையர் முன்பு நடந்த சமரசப் பேச்சுவார்த்தையில் கீழ்க்கண்ட ஷரத்துக்கள் அடங்கிய ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது. அதன் விவரம் வருமாறு:

#### ஒப்பந்த ஷரத்துக்கள்

1. 14-1-1999 அன்று பின்னி ஆலை மீண்டும் திறக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

2. பின்னி ஆலையைத் திறக்கும்போது நிர்வாகம் தற்போதுள்ள நிரந்தரத் தொழிலாளர்களில் ஆயிரம் தொழிலாளர்களுக்கு மேற்படாமல் சென்னையிலுள்ள பின்னி ஆலையிலேயே பணி வழங்கும்.

3. விருப்ப ஓய்வுத் திட்டத்தின்கீழ் ஓய்வுபெற விரும்பும் ஒவ்வொரு நிரந்தரத் தொழிலாளி மற்றும் பணியாளருக்கு நட்ட ஈட்டுத் தொகையாக ரூபாய் 1.25 இலட்சம் வழங்கப்படும். இதுமட்டுமல்லாமல் சட்டப்படியான பணிக்கொடையும் தனியாகக் கணக்கிடப்பட்டு சேர்த்து வழங்கப்படும்.

மேலே குறிப்பிடப்பட்ட நட்ட ஈட்டுத் தொகை மற்றும் பணிக்கொடை இரண்டையும் இரண்டு தவணைகளாக பின்னி நிர்வாகம் வழங்கும். மொத்தத் தொகையில் முதல் தவணையாக ஐம்பது விழுக்காடு 27-5-1998 அன்றும், இரண்டாவது தவணை 15-9-1998 அன்றும் வழங்கப்படும். இரண்டு தவணைகளிலும் வழங்கப்படும் மேற்குறிப்பிடப்பட்ட தொகை வங்கிக் காசோலையாக வழங்கப்படும்.

4. பயிற்சியாளர்கள் அனைவருக்கும் பணிக்கொடை மற்றும் நட்ட ஈட்டுத் தொகை இரண்டும் சேர்த்து ரூபாய் ஐம்பதாயிரம் மொத்தமாக 27-5-1998 அன்று வழங்கப்படும்.

5. நிர்வாகம், தொழிலாளர்களுக்கு ஏற்கெனவே இரண்டு மாதச் சம்பளம், ரேஷன் மற்றும் மளிகைச் சாமான்கள் வழங்கியதற்காக ஆன செலவு ரூபாய் ஆறு கோடியை தொழிலாளர் மற்றும் பணியாளர்களிடமிருந்து பிடித்தம் செய்யாது. அவ்வாறே, தொழிலாளர்களும் பணியாளர்களும் ஆலை இயங்காத காலத்திற்கு உண்டான சம்பளம் வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை வற்புறுத்த மாட்டார்கள்.

6. அனைத்துத் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பதினைந்து நாட்களுக்கு உண்டான சம்பளம் கருணைத் தொகையாக இந்த ஒப்பந்தம் ஏற்பட்ட ஒரு வார காலத்திற்குள் வழங்கப்படும்.

7. பின்னி ஆலையில் நிர்வாகம் ஆயிரம் தொழிலாளர்களுக்கு மேற்படாமல் வேலை கொடுக்க ஒப்புக்கொண்டது. மேற்குறிப்பிட்ட எண்ணிக்கைக்கு மேல் தொழிலாளர்கள், பயிற்சியாளர்கள் உட்பட பணிக்கு வர விரும்பினால் அந்தத் தொழிலாளர்களை எங்கே பணி அமர்த்துவது என்பதை மாண்புமிகு முதலமைச்சர்



அவர்களின் முடிவிற்கு விட்டுவிடுவதென்றும், அவர் எடுக்கும் முடிவை நிர்வாகமும், தொழிற்சங்கமும் ஏற்றுக்கொள்வதென்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

8. ஆலை திறக்கப்படும் தேதியான 14-1-1999 வரை பணிக்கு வர விரும்பும் ஆயிரம் தொழிலாளர்கள் தொடர்புடைய சம்பளம் உள்ளிட்ட தொழிலாளர்களுடைய பிரச்சினையை முதலமைச்சர் முடிவிற்கு விடுவதென்றும், முதலமைச்சர் எடுக்கும் முடிவை நிர்வாகமும், தொழிற்சங்கமும் ஏற்றுக்கொள்வதென்றும் ஒப்புக் கொள்ளப்பட்டது.

9. விருப்ப ஓய்வுத் திட்டத்தின்கீழ் செல்ல விரும்பும் தொழிலாளர்களுக்கு இந்த ஒப்பந்தம் மூலம் உண்டான முழுத் தொகையும் பட்டுவாடா செய்யப்படும் வரை தொழிலாளர்களின் பணி உரிமை தொடரும்.

10. நிர்வாகத்தின் பணிக்கு அமர்த்தல் உள்ளிட்ட நிர்வாக உரிமைகளில் தொழிற்சங்கம் தலையிடாது. அவ்வாறே, சங்க உரிமைகளில் நிர்வாகமும் தலையிடாது.

11. மேற்கண்ட ஒப்பந்தத்தை முழுமையாக அமல்படுத்திய பிறகு அனைத்து வழக்குகளும் திரும்பப் பெறப்படும்.

இந்த ஒப்பந்தத்தை இரு தரப்பினரும் ஒப்புக் கொண்டு தொழிலாளர் ஆணையர் முன்னிலையில் கையெழுத்திட்டுள்ளனர். (மேசையைத் தட்டும் ஒலி).

## 10. வரவு-செலவுத் திட்டம், 1998-99, பொது விவாதம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1998-99 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தின் மீதான பொது விவாதம். திரு. டி. சுதர்சனம்.

முற்பகல் 11-15

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1998-99 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையினைத் தமிழக முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் 78 நிமிடங்கள், தன்னுடைய 73-வது வயதிலே (குறுக்கீடு) 74-வது வயதிலே நிதானமாக, இளமைத் துடிப்போடு இங்கே சமர்ப்பித்து உரையாற்றினார்கள்.

[திரு. டி. சுதர்சனம்] [1998 மார்ச் 30

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

அப்படிச் சமர்ப்பித்து உரையாற்றியதிலே பல்வேறு நல்ல கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டு இன்றைக்குத் தமிழகத்திலே இருக்கின்ற பல்வேறுபட்ட அறிஞர்கள், ஏழை, எளியவர்கள், வர்த்தகர்கள் என்று அத்தனை பேர்களும் பாராட்டக்கூடிய ஒரு அற்புதமான பட்ஜெட்டாக அது இருக்கிறது என்று தமிழகத்திலே இருக்கின்ற பட்டிதொட்டிகளில் எல்லாம் பேசப்படுகிறது. எனினும் தமிழகத்திலே இரண்டு பேர்கள் மட்டும் அந்த பட்ஜெட்டிலே குறையிருப்பதாகச் சொல்கிறார்கள். ஒருவர், முன்னாள் முதலமைச்சர். மற்றொருவர் அவருக்கு * இருக்கின்ற வீரமணி அவர்கள். அந்த இரண்டு பேர்கள் மட்டுமே இந்த பட்ஜெட்டிலே குறையிருக்கிறது; குற்றம் இருக்கிறது என்று சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள்.

இந்த பட்ஜெட்டிலே இறுதிப் பற்றாக்குறையாக சுமார் 536.67 கோடி ரூபாய் இருக்கிறது. நிகரப் பற்றாக்குறையாக 876.67 கோடி ரூபாய் இருக்கிறது. புதிய வரிகள் மூலமாக 340 கோடி ரூபாய் இந்த அரசுக்குக் கிடைக்கும் என்று சொல்கிறார்கள். அப்படிப் புதிய வரிகள் மூலமாக 340 கோடி ரூபாய்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசுகிறபோது ஒருவரைக் குறிப்பிடுகிறபோது * என்று சொன்னார்கள். அந்த ஒரு வார்த்தை அவைக் குறிப்பிலே இல்லாமல் இருப்பது நல்லது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் திரும்பப் பெற்றுக் கொள்ளுங்கள்.

**திரு. டி. சுதர்சனம்:** * என்ற அந்த வார்த்தையைத் திரும்பப் பெற்றுக் கொள்கிறேன்.

876.67 கோடி ரூபாய் நிகரப் பற்றாக்குறை என்றும், இறுதிப் பற்றாக்குறை 536.67 கோடி ரூபாய் என்றும் சுட்டிக்காட்டியிருக்கின்றீர்கள். புதிய வரிகள் மூலமாக இந்த அரசுக்கு 340 கோடி ரூபாய் கிடைக்குமென்று சொல்லியிருக்கின்றீர்கள்.

* உறுப்பினர் திரும்பப் பெற்றுக் கொண்டதால் அகற்றப்பட்டது.



1998 மார்ச் 30] [திரு. டி. சுதர்சனம்]

ஆம்னி பஸ்களுக்கு விதித்திருக்கின்ற வரியும், இந்தியாவிலே தயாரிக்கப்படுகின்ற வெளிநாட்டு மது வகைகளுக்குப் போட்டிருக்கின்ற வரியும், பான் மசாலாவுக்குப் போட்டிருக்கின்ற வரியும், அதேபோன்று வெளி மாநிலங்களிலேயிருந்து வருகின்ற வாகனங்களுக்குப் போட்டிருக்கின்ற வரியும் யாரும் இன்றைக்குக் குறை சொல்ல முடியாத அளவிற்கு இருக்கிறது. ஆனால், செயற்கை இழை நூலுக்கும் மற்றும் செயற்கை இழைகளுக்கும் விற்பனை வரி 2 சதவிகிதத்திலிருந்து மீண்டும் 8 சதவிகிதமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. எதிர்பார்த்த வருவாய் கிடைக்காத காரணத்தால் விற்பனை வரி மீண்டும் 8 சதவிகிதமாக உயர்த்தப்படுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. எதிர்பார்த்த வருவாய் இல்லை என்று சொல்லும்போது, South India Viscose Company கடந்த 5 மாதங்களாக மூடிக் கிடக்கின்றது. அந்தக் கம்பெனியால் ரூபாய் 2.5 கோடி வரி செலுத்த முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. அதனாலே மற்ற சிறு தொழிலதிபர்களும் பாதிக்கப்படுகின்றார்கள். ஆகவே, இதை அருள்கூர்ந்து அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-20

அதுமட்டுமல்ல, புதிதாக உருவாக்கப்பட்டு வரும் கேளிக்கைப் பூங்காக்கள், கேளிக்கை வரிச் சட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டு, அங்கே செல்வோர்களிடம் வசூலிக்கப்படும் தொகையில் 20 சதவிகிதம் கேளிக்கை வரியாக விதிக்கப்படும் என்று அறிவித்திருக்கிறீர்கள். ஏழை, எளிய, சமுதாயத்திலே பின்தங்கிய மக்கள் எல்லாம் பொழுதைக் கழிக்க எங்கே செல்லலாம் என்று பார்த்து, தற்போது அமைக்கப்பட்டு வரும் கேளிக்கைப் பூங்காக்களுக்குச் செல்கின்றார்கள். சுற்றுலாப் பயணிகள் அங்கே செல்கின்றார்கள். சுற்றுலாப் பயணிகளைக் கவரும் விதத்திலே கேளிக்கைப் பூங்காக்களிலே பல அம்சங்கள் இருக்கின்றன. ஏழையெளிய மக்களுடைய குழந்தைகள் எல்லாம் அங்கே சென்று அந்த விளையாட்டுக்களைக் கண்டு களிக்கிறார்கள். அப்படி அங்கே சென்று அந்த ஏழையெளிய மக்கள் கொடுக்கின்ற பணத்திற்கு மேல் 20 சதவிகிதம் வரி கட்ட வேண்டிய நிலை இப்போதுள்ள அறிவிப்பினால் ஏற்பட்டுள்ளது. இது ஏழை மக்களை மிகவும் பாதிக்கும். அதற்குப் பதிலாக, தமிழக அரசு மக்களுக்கு மிகவும் தீங்கு விளைவிக்கக்கூடிய பொருளான சிகரெட் மீது வரியை உயர்த்திக் கொள்ளலாம். எனவே, கேளிக்கைப் பூங்காக்களுக்குச் செல்வோரிடம் விதிக்க இருக்கும் 20 சதவிகிதம் கேளிக்கை வரியைத் தயவுசெய்து விட்டுவிட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. டி. சுதர்சனம்] [1998 மார்ச் 30

அதேபோன்று, பல்வேறு பொருட்களுக்கு வரிச் சலுகைகளை அளித்திருக்கிறீர்கள். அந்த வரிச் சலுகைகள் மூலமாக ஏழை மக்கள், சாதாரண மக்கள் எல்லாம் மிகவும் சந்தோஷப்படுகின்றார்கள். பல்வேறு பொருட்களுக்கு வரி விலக்குக் கொடுத்திருக்கின்றீர்கள். அதன் காரணமாக, சாதாரண மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தக்கூடிய வகையிலே இந்த பட்ஜெட் அமைந்திருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

இறுதிப் பற்றாக்குறையான 536.67 கோடி ரூபாயை எப்படிச் சரிக்கட்டப் போகின்றீர்கள் என்று பார்க்கின்றபொழுது, நிலுவை வரிகளை முனைப்புடன் வசூலித்தல் மற்றும் சிக்கன நடவடிக்கைகள் மூலம் இப்பற்றாக்குறையை ஈடுகட்டக் கருதப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அப்படிச் சரிக்கட்டுவோம் என்று சொன்னாலும்கூட, விற்பனை வரித் துறையிலே பல்வேறு வழக்குகள் நிலுவையில் உள்ளன. அந்த விற்பனை வரி வழக்குகள் மூலமாக அரசுக்கு 1000 கோடி ரூபாய்க்கு மேலே வருமானம் வரவேண்டியுள்ளது. கடந்த ஆட்சியிலே வர்த்தகர்கள் பல வழக்குகளைப் போட்டிருக்கிறார்கள். கடந்த கால ஆட்சியின்போது வர்த்தகர்களிடம் வணிக வரித் துறை அதிகாரிகள் சென்று, இன்னின்ன குறை இருக்கிறது, அதற்காக நீங்கள் இவ்வளவு வரி கட்ட வேண்டும் என்று சொல்வார்கள். அதற்கு அந்த வர்த்தகர்கள் 'என்ன இவ்வளவு அக்கிரமமாகக் கேட்கிறீர்களே, அநியாயமாகக் கேட்கிறீர்களே, எப்படி நாங்கள் இவ்வளவு வரி கட்ட முடியும்' என்று அதிகாரிகளிடம் அவர்கள் கேட்கின்றபோது, அதற்கு அதிகாரிகள் சொல்வார்கள், 'இப்போது சொல்லப்பட்ட வரியைக் கட்டிவிட்டால் நல்லது. இல்லையென்றால் 'பெனால்ட்டி'யோடு சேர்ந்து இத்தனை இலட்சம் கூடுதல் ஆகிவிடும். அத்துடன், நாங்களும் மேலிடத்திற்கு வரி கட்ட வேண்டியிருக்கிறது. அதனாலே, நாங்கள் சொல்லக்கூடிய வரியைக் கட்டி விடுங்கள் என்று D.C.T.O.-க்களும், C.T.O.-க்களும் சொல்வார்கள். பல்வேறு வர்த்தகர்கள், 'தொலைந்து போகிறது, ஏன் வம்பு' என்று சொல்லி, அதிகாரிகள் சொல்லக்கூடிய வரியினைக் கட்டிவிட்டு, காரியத்தைச் சாதித்துக் கொண்டார்கள். சில வர்த்தகர்கள், அதை மறுத்து, டிரிப்யூனலுக்கு அப்பீல் செய்திருக்கின்றார்கள். எனவே, அந்த வர்த்தகர்களை எல்லாம் அழைத்துப் பேசி, வழக்குகளை பைசல் செய்வதன் மூலம் சுமார் 1000 கோடி ரூபாய்க்கு மேலே இந்த ஆண்டு வசூலாகி விடும். அதன் மூலம் பட்ஜெட் பற்றாக்குறையை ஈடுசெய்ய முடியும் என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1998 மார்ச் 30] [திரு. டி. சுதர்சனம்]

அதுமட்டுமல்ல, சிறுசேமிப்புத் திட்டத்தின் மூலம் 1300 கோடி ரூபாய்க்கு மேலே வசூல் செய்ய வேண்டுமென்று அரசு நிர்ணயம் செய்திருக்கிறது. அதை, 1500 கோடி ரூபாய் என்றுகூட உயர்த்தலாம். சிறு சேமிப்பினை ஊக்குவிப்பதன் மூலம் இந்த அரசுக்கு நல்ல வருமானம் கிடைக்கும். அந்த வருமானத்தை வைத்து, இந்த அரசு சிறப்பானதொரு ஆட்சியைக் கொடுக்க முடியும். அதைப்போன்று, வணிகச் சின்னம் இல்லாத மசாலாப் பொடிகளுக்கான வரி, 16 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாகவும், முத்திரைச் சின்னம் இடப்பட்ட பிற மசாலாப் பொடிகளுக்கு 16 சதவிகிதத்திலிருந்து 11 சதவிகிதமாகவும் விற்பனை வரியைக் குறைத்திருக்கிறீர்கள். ஏழை, எளிய மக்கள் மசாலாப் பொடிகளை உபயோகித்துக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு உதவும் வகையில், எல்லா மசாலாப் பொடிகளுக்கான விற்பனை வரியினையும் 11 சதவிகிதத்திலிருந்து, 4 சதவிகிதமாகக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11-25

அதைப்போல, பிராண்ட் இல்லாத வெண்ணெய் தயாரிப்பவர்கள் நிறைய பேர்கள் இருக்கிறார்கள். அவர்கள் சாதாரண வியாபாரிகள். அவர்களுக்கு விற்பனை வரியிலிருந்து முழு விலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, டாக்டர் அனந்தகிருஷ்ணன் தலைமையிலான குழு இன்றைக்கு பல்வேறு சிபாரிசுகளைச் செய்திருக்கிறது. கல்வித் துறையில் அமைக்கப்பட்ட அந்த உயர்மட்டக் குழுவின் சிபாரிசுகளின் அடிப்படையில், Single Window System கொண்டு வந்து பொறியியல் கல்லூரிகளில் முறைப்படுத்தியிருக்கிறோம். அதனால் இன்றைக்கு மக்கள் நம்மைப் புகழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்த முறை பாலிடெக்னிக்குகளுக்கும் கொண்டு வரப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள்.

இன்ஜினியரிங் கல்லூரியைப் பொறுத்தவரையில், பிளஸ்-2 படிக்கின்ற மாணவர்கள் பரிட்சை எழுதி, அதற்குப் பின்னர் அதற்குரிய மதிப்பெண்களைப் பெற்று, அரசாங்கம் வைக்கின்ற தேர்விலே தேர்ச்சி பெற்று, அதில் பெறுகின்ற மதிப்பெண்களையும் சேர்த்துக் கூட்டிப் பார்த்து, பாடங்கள் ஒதுக்கப்படுகின்றன. ஆனால் அந்த முறை பாலிடெக்னிக்குகளுக்கு சாத்தியமாகுமா என்று நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். 10 ஆம் வகுப்புப் [illegible]கின்ற [illegible]ணவர்களுக்குத் திரும்பவும் ஒரு பரிட்சை வைத்து, [illegible] பரிட்சை[illegible]ய ரிசல்ட்

வந்து, அதற்குப் பின்னாலே, சென்னையிலே இருக்கிற மாணவனுக்கு கோயம்புத்தூரிலும், கோயம்புத்தூரில் இருக்கிற மாணவனுக்கு திருச்சியிலும் இடம் கிடைக்குமானால், எப்படிச் சாத்தியமாகும். பெரும்பாலும் பாலிடெக்னிக்குகளில் படிக்கின்றவர்கள் ஏழை மக்கள். அவர்கள் எவ்வளவு துன்பப்படுவார்கள் என்பதை நீங்கள் எண்ணிப் பார்த்து, அந்த முறையை தயவுசெய்து கைவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அனந்தகிருஷ்ணன் தலைமையிலான அந்தக் குழு நிறையச் சிபாரிசுகளை செய்திருக்கிறது. அந்தக் குழு செய்த சிபாரிசுகளிலே ஒரே ஒரு நல்ல சிபாரிசு எது என்றால், Single Window System என்ற சிபாரிசைத் தவிர வேறு எந்த சிபாரிசும் இந்த நாட்டில் இருக்கிற மக்களுக்கு உதவக்கூடிய சிபாரிசாக இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்ல, அனந்தகிருஷ்ணன் குழுவின் சிபாரிசுகள் செயல்படுத்தப்பட்ட காரணத்தாலே, இன்றைக்கு நூற்றுக்கணக்கான. நூற்றுக்கும் மேற்பட்ட வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையாக இருக்கின்றன. அதையும் தாங்கள் மனதில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, எம்.எல்.ஏ.-வின் தொகுதி வளர்ச்சி நிதி குறித்து. சென்ற ஆண்டு 25 இலட்சம் ரூபாய் நீங்கள் ஒதுக்கியிருந்தீர்கள். சென்ற ஆண்டு 30 இலட்சம் ரூபாயாக உயர்த்திக் கொடுத்திருக்கிறீர்கள். அதை இந்த வளர்ச்சிப் பணிகளுக்குத்தான் செலவு செய்து கொண்டிருக்கிறோம். அதனாலே இந்த ஆண்டு முதல் அருள்கூர்ந்து 30 இலட்ச ரூபாய் என்று உயர்த்தியதை 50 இலட்ச ரூபாயாக உயர்த்தித்தர வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்குப் பல்வேறுபட்ட பிரச்சினைகள் இருக்கின்றன. விவசாயிகளுடைய பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் இருக்கின்றன. ஏர் உழுகின்ற விவசாயிகள், சேற்றிலே கை வைத்தால்தான், சென்னையிலே இருப்பவர்கள் சோற்றிலே கை வைக்க முடியும். அப்படிப்பட்ட விவசாயிகள் இன்றைக்கு மிகவும் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்; துயரப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நெல் அதிகமான அளவு உற்பத்தியாகியிருக்கிறது. சென்ற ஆண்டு இலக்கு 90 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி என்று இருந்ததை, இப்போது 95 இலட்சம் மெட்ரிக் டன் என்று உயர்த்தியிருக்கிறீர்கள். ஆனால் நெல் கொள்முதல் செய்வதற்கு விவசாயிகள், கொள்முதல் நிலையங்களில் சென்று





பார்க்கிறபோது, விவசாயிகளுக்குப் பல்வேறு துன்பங்கள் அங்கே ஏற்படுகின்றன. கொள்முதல் செய்வதற்கு ஆள் இல்லாத நிலை இருக்கிறது. விவசாயிகளுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இந்த அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து. கரும்பு விவசாயிகளுக்கு இப்போது டன் ஒன்றுக்கு 600 ரூபாய் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையிலே டன் ஒன்றுக்கு 1000 ரூபாய் கொடுப்பதாக நாம் சொல்லியிருக்கிறோம். அதன் அடிப்படையிலே, கரும்பு பயிரிடுகின்ற விவசாயிகளுக்கு ஒரு டன்னுக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்கலாம். அல்லது கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். விவசாயிகளுக்கு மின்சாரப் பற்றாக்குறை ஏற்பட்டு இருக்கிறது. இரவு நேரங்களில் மின்சாரம் கொடுக்கிறோம். பகல் நேரங்களில் மின்சாரம் கொடுப்பது இல்லை. பகல் நேரங்களில் மின்சாரம் கொடுக்காத காரணத்தினாலே, இரவில் அவர்களைப் பாம்பு அல்லது பூச்சிகள் கடிக்கின்ற நிலைமைகள் எல்லாம் இருக்கின்றன. அதனாலே, இலவசமாக வழங்குகின்ற மின்சாரத்தைச் சீராக வழங்குவதற்கு நாம் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த நல்ல நேரத்தில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

முற்பகல் 11-30

விவசாயிகளினுடைய பிரச்சினை இந்த நாட்டினுடைய முதுகெலும்புப் பிரச்சினையாக இருந்து கொண்டிருக்கிறது. அவர்களுடைய பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நாம் வழிவகை காண வேண்டும். இன்றைக்கு மத்திய அரசு, விவசாயிகள் டிராக்டர் வாங்குவதற்கு மானியம் கொடுக்கிறது. அந்த மானியம் கொடுக்கின்றபோது, அது சீரான முறையில் விவசாயிகளுக்கு போய்ச் சேருகிறதா என்று பார்த்தால், நிச்சயமாக இல்லை என்றுதான் என்னாலே சொல்ல முடிகிறது. மத்திய அரசு மானியத்தில், சமீபத்தில் கடலூர் மாவட்டத்தில் 1996-97 ஆம் ஆண்டில் ஒரு டிராக்டர் வாங்குவதற்கு 30 ஆயிரம் ரூபாய் மானியம் கொடுக்கப்பட்டது. ஆனால், 1997-98 ஆம் நிதி ஆண்டு நாளையோடு முடிவடைய இருக்கிறது. இதுவரை ஒரு விவசாயிக்குக்கூட மானியம் தரப்படவில்லை. கடலூர் மாவட்டத்தில் விவசாயத் துறை அதிகாரிகளிடம் இதுபற்றிக் கேட்டபோது, சென்னையிலிருந்து உத்தரவு வரவில்லை என்று சொல்கிறார்கள். காலம் கடந்த மத்திய நிதி உதவி மீண்டும் மத்திய அரசுக்கே சென்றுவிடும். இந்த நிலைக்கு யார் காரணம் என்பதைத் தமிழக முதல்வர் அவர்கள் கண்டுபிடிக்க வேண்டும்.

அதேபோல சொட்டு நீர்ப்பாசனம் என்பது நீர் மேலாண்மையை வெற்றிபெறச் செய்ய வைக்கும் திட்டமாகும். இதற்காக ஒதுக்கப்பட்ட பணத்தைச் செலவு செய்யாமல் திருப்பி அனுப்பி இருக்கிறார்கள். விவசாயிகள் வறுமையில் வாடும்போதும், கடன் கிடைக்காமல் சிரமப்படும்போதும், அவர்களுக்கு இலவசமாகக் கிடைக்கும் நிதியினைக்கூட நம்மாலே வழங்க இயலவில்லை என்பதை வருத்தத்தோடு இந்த மன்றத்திலே நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

சமீபத்திலே பெய்த மழை காரணமாகவும், பெரு வெள்ளம் காரணமாகவும், தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் போன்ற மாவட்டங்களிலே இருக்கிற விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டார்கள். அந்த விவசாயிகளுக்கு இன்றைக்கு நெல் உற்பத்தி மிகவும் குறைவாகக் கிடைக்கிறது. அந்தக் காரணத்தினாலே அந்த 3 மாவட்டங்களில் இருக்கிற விவசாயிகள் மிகவும் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அந்த 3 மாவட்டங்களில் இருக்கிற விவசாயிகளுக்கு நிச்சயமாக கூட்டுறவுக் கடன்களை ஓராண்டு காலத்திற்குத் தள்ளி வைக்க வேண்டும். அதேபோன்று, நில வரியும் அவர்களுக்கு ரத்துச் செய்யப்பட வேண்டும் என்று இந்த மாமன்றத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

மின்சாரத் துறையைப் பொறுத்தவரையில் இன்றைக்கு மின்சார வெட்டு வந்து இருக்கிறது. மகாராஷ்டிராவிலிருந்து 200 மெகாவாட் மின்சாரம் கிடைக்கும் என்று மின் துறை அமைச்சர் இங்கே தெரிவித்தார்கள். மகாராஷ்டிராவிலிருந்து 200 மெகாவாட் மின்சாரத்தை நாம் கேட்டு இருப்பதாகச் சொன்னார்கள். ஆனால், பத்திரிகையிலே இரண்டு தினங்களுக்கு முன்னாலே, வடகிழக்கு மாநிலங்களிலே இருந்து 300 மெகாவாட் மின்சாரம் கிடைக்கும் என்று செய்தி வந்து இருக்கிறது. அந்த 300 மெகாவாட் மின்சாரம் வடகிழக்கு மாநிலங்களில் இருந்து நம்முடைய மாநிலத்திற்கு வருவதற்கு ஏற்புடைய மின்சார லைன்கள் இருக்கின்றனவா அல்லது வேறு எப்படி மின்சாரத்தைக் கொண்டுவர முடியும் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். மகாராஷ்டிராவிலிருந்து வேண்டுமானால் மின்சாரம் கர்நாடகத்திற்கு வந்து, கர்நாடகத்திலிருந்து ஸ்ரீபெரும்புதூருக்குக் கொண்டு வருவதற்கு ஏற்கெனவே லைன்கள் போடப்பட்டு இருக்கின்றன. அதுபோல இராமகுண்டத்திலிருந்தும் மின்சாரம் தமிழகத்திற்கு வருவதற்கு ஏற்கெனவே லைன்கள் இருக்கின்றது. ஆனால், ஷில்லாங்கிலிருந்து மின்சாரம் தமிழகத்திற்கு எந்த வழியாக வரும்? விமானத்தில் வருமா,





அல்லது கப்பலில் வருமா என்பதை மின்சாரத் துறை அமைச்சர்தான் விளக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுதர்சனம் அவர்கள் வடகிழக்கு மாநிலங்களிலே இருந்து மின்சாரம் தமிழகத்திற்கு வரப் போவதாக, அவரே, பத்திரிகைகளிலே வந்த செய்தியைப் பார்த்துப் பேசிக் கொண்டு இருக்கிறார். நான் பதில் சொல்ல வேண்டாம் என்று நினைத்தாலும், உறுப்பினர்கள் வற்புறுத்துகின்ற காரணத்தால், நான் அதுகுறித்து விளக்கம் தரக் கடமைப்பட்டு இருக்கின்றேன். தமிழகத்திலே இந்த ஆண்டு எதிர்பாராதவிதமாக மழை அதிகமாகப் பெய்த காரணத்தினாலும், தமிழகம் எங்கும் இருக்கக்கூடிய ஊராட்சி மன்றங்கள், நகராட்சிகளிலே இருக்கக்கூடிய தெரு விளக்குகள் நூற்றுக்கு நூறு எரிகின்ற காரணத்தினாலும் மின்சாரத் தேவை அதிகமாகி இருக்கிறது. அதிகமாகி இருக்கக்கூடிய இந்த 500 மெகாவாட் மின்சாரத் தேவையைச் சமாளிக்க வேண்டுமென்று விரும்பி, நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று சொன்னார். அந்த அடிப்படையிலே 23-ஆம் தேதி மராட்டிய மாநிலத்திற்குச் சென்று துணை முதல்வர் அவர்களைச் சந்தித்து இதுகுறித்துப் பேசி 200 மெகாவாட் மின்சாரம் தமிழகத்திற்குக் கிடைக்க ஒப்பந்தம் செய்யப்பட்டது. இதிலே உடனடியாக 100 மெகாவாட் மின்சாரம்தான் இப்போது நமக்குக் கிடைத்துக் கொண்டிருக்கிறது. ஆந்திராவில் இராமகுண்டம் வழியாக நமக்கு மராட்டியத்திலிருந்து மின்சாரம் வருகின்ற நேரத்தில் அவர்களுடைய மாநிலம் பாதிக்கப்படுமோ என்று மத்திய அரசுக்குப் புகார் செய்த காரணத்தால், மத்திய அரசாங்கத்தினுடைய சி.ஈ.ஏ. என்ற இலாக்கா அதுகுறித்துப் பரிசீலித்து, ஓரிரண்டு நாட்களிலே 200 மெகாவாட் மின்சாரம் தமிழகத்திற்கு முழுமையாகக் கிடைக்க அனுமதியளிப்பதாக வாக்குறுதி தந்திருக்கிறார்கள்.

*முற்பகல் 11-35*

இதற்கிடையில் 26 ஆம் தேதி நம்முடைய மத்திய மின்சாரத் துறை அமைச்சரோடு நான் நேரடியாகத் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, பற்றாக்குறையாக இருக்கக்கூடிய 300 மெகாவாட் மின்சாரத்தை

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1998 மார்ச் 30

'அன்-அலொகேட்டட் ஷேரிலிருந்து', மத்திய அரசு, அதனுடைய தொகுப்பிலிருந்து வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொண்டேன். அதைப் பரிசீலிப்பதாகச் சொன்னார்கள். 26 ஆம் தேதி மாலையிலே நடைபெற்ற தொழில் அதிபர்கள் மாநாட்டில் நான் இதுகுறித்துப் பேசினேன். மறுநாள் காலையில் எல்லாப் பத்திரிகைகளிலும் இந்தச் செய்தி வந்தது.

இதைப் பார்த்த நம்முடைய தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள், அவர்களும் மத்திய மின்சாரத் துறை அமைச்சரோடு தொடர்பு கொண்டு, தமிழகத்திலே உள்ள மின் பற்றாக் குறையைப் போக்க 300 மெகாவாட் மின்சாரம் வழங்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். மறுநாள் நான் இதுகுறித்து மீண்டும் மத்திய அமைச்சரிடத்திலே பேசியபோது, 'முன்னாள் முதலமைச்சரிடத்திலேயிருந்தும் இப்படியொரு வேண்டுகோள் வந்திருக்கிறது, நான் நிச்சயமாக இதுகுறித்துப் பரிசீலிக்கிறேன்' என்று சொன்னார்கள்.

ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, வடகிழக்கு மாநிலங்களிலிருந்து நேரடியாக மின்சாரம் தமிழகத்திற்கு வரக்கூடிய வாய்ப்பு இல்லை. எனவே, நானும் அவரிடத்திலே இதுகுறித்துக் கலந்து பேசி, நம்முடைய மாநிலத்திலே உள்ள நெய்வேலியில் உற்பத்தியாகக்கூடிய மின்சாரத்திலிருந்து இந்த மின்சாரத்தை நமக்கு ஒதுக்கித் தரும்படியும் கேட்டிருக்கிறேன். அதுகுறித்து இன்று மத்திய அரசு அதிகாரிகளிடத்திலே பேசி அவர் உரிய நடவடிக்கை எடுப்பதாகச் சொல்லியிருக்கிறார். இருந்தாலும் அவர் கொடுத்த வாக்குறுதியின்பேரில் நமக்கு நிச்சயமாக 300 மெகாவாட் மின்சாரம். தமிழக அரசு கேட்டுக்கொண்டதன் பேரிலும், மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் கேட்டுக்கொண்டதன் பேரிலும் வழங்கப்படக்கூடும். அதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஏற்கெனவே அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவிற்கொப்ப, விவாதத்தைத் தொடக்கி வைப்பவருக்கு 20 நிமிடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதன் அடிப்படையில் ஏற்கெனவே திரு. சுதர்சனம் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் முடிந்துவிட்டது. என்றாலும், மேலும் மூன்று நிமிடங்கள் தருகிறேன். அதற்குள் அவர் பேசி முடித்துவிடவேண்டும். (குறுக்கீடு) திரு. சுந்தரம், உட்காருங்கள். அடுத்து உங்கள் கட்சி உறுப்பினர் பேசும்போது நீங்கள் பேசலாம்.



1998 மார்ச் 30]

**திரு. பி.ஆர். சுந்தரம்:** Point of Order?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** என்ன Point of Order?.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் சபைக்குத் தவறான தகவலைக் கொடுத்திருக்கிறார்கள். எங்களுடைய பொதுச் செயலாளர் புரட்சித் தலைவி அவர்கள்தான் முதன்முதலாக 25-ஆம் தேதியன்று மத்திய மின் துறை அமைச்சரிடம் பேசி, 300 மெகாவாட் மின்சாரத்தை வாங்கிக் கொடுப்பதற்கு ஒப்புதல் வாங்கியிருக்கிறார்கள். இதைப் பார்த்ததற்குப் பிறகுதான் நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் பேசியிருக்கிறாரேயொழிய, அவர் கூறியது போல இல்லை. மத்திய அமைச்சர் திரு. ரங்கராஜன் குமாரமங்கலம் அவர்கள் ஒப்புதல் கொடுத்த பிறகுதான் எங்களுடைய புரட்சித் தலைவி அவர்கள் பேசினார்கள் என்று கூறியது தவறு. எங்களுடைய தலைவிதான் முதன்முதலாக மத்தியத் 'தொகுப்பிலிருந்து கேட்டு வாங்கினார்கள். 'அதற்குப் பிறகுதான் அமைச்சர் அவர்கள் இதைப் பார்த்துக் கேட்டிருக்கிறார்கள் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தவறான தகவல் கொடுக்க வேண்டிய அவசியத்தில் நான் நிச்சயமாக இல்லை. மாண்புமிகு மத்திய மின் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டால் உண்மை தெரியும். நான் 26-ஆம் தேதியே தொடர்பு கொண்டிருக்கிறேன். அவரே எனக்குக் கடிதம் எழுதியிருக்கிறார். அந்தக் கடிதத்தின் நகலை இங்கே படிக்கிறேன்.

``I am in receipt of your fax dated 27-3-1998 requesting for allocation of additional power to Tamil Nadu".

அதற்குப் பிறகு அவர் சொல்கிறார்,

``A similar request has also been received from Dr. Selvi Jayalalitha".

இவர்கள் 25-ஆம் தேதி கேட்டதாக இங்கே குறிப்பிடவில்லை. முதன்முதலாக, தமிழக அரசுதான் அவரிடத்திலே தொலைபேசி மூலம் கேட்டது. 27-ஆம் தேதி கடிதம் மூலமும் கேட்கப்பட்டது. அது எப்படி இருந்தாலும், அவர்கள் கேட்டதிலும் எனக்கு ஆட்சேபணை இல்லை. நான் மறுக்கவில்லை. நான் முதலிலேயே இங்கே சொன்னேன்; முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவும் கேட்டார் என்று சொல்லியிருக்கிறேன். யார் முதலிலே கேட்டார்கள் என்பது ஒரு சர்ச்சைக்குரிய பிரச்சினை அல்ல. நான் முதலிலே கேட்டேன் என்று

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1998 மார்ச் 30

நான் சொல்கின்றேன். அவர்கள்தான் முதலிலே கேட்டார்கள் என்பதற்கு ஆதாரமிருந்தால் தெரிவிக்கலாம். ஆனால் ஒன்று. யார் கேட்டார்கள் என்பதல்ல; மத்திய அரசு 'கொடுக்கிறேன்' என்று சொல்லி இருக்கின்றது. அதற்கு, அவர்களுக்கும் நன்றி. அதைக் கேட்ட முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவுக்கும் நன்றி.

*முற்பகல் 11-40*

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம், நீங்கள் உட்காருங்கள். இன்னும் 8 உறுப்பினர்கள் பேச வேண்டும். திரு. சுந்தரம், நீங்கள் தயவுசெய்து உட்காருங்கள். திரு. டி. சுதர்சனம் அவர்கள் தொடர்ந்து பேசலாம். நீங்கள் இன்னும் 3 நிமிடங்களுக்குள் பேசி முடித்துவிட வேண்டும்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஒரேயொரு கருத்தை.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் சொன்னால் நீங்கள் உட்கார வேண்டும். நீங்கள் முதலிலே உங்கள் இருக்கையிலே உட்காருங்கள். திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின்சாரத்தைக் கேட்டு வாங்கிக் கொடுப்பதற்கு இங்கே தமிழக அரசு இருக்கிறது. அதுபோல் மத்தியிலேயும் அரசாங்கம் இருக்கிறது. இந்த 2 அரசாங்கங்களும் சேர்ந்து பேசி செய்யப்பட வேண்டிய காரியம் இது. ஆனால் மூன்றாவதாக இருக்கின்றவர்கள் ஏதோ நல்லெண்ணத்தின் அடிப்படையிலேதான் இதிலே பேசியிருக்கலாம். ஆனால், அவர்களுக்கு எவ்வளவு நல்லெண்ணம் இருக்கிறது என்பதைப் பற்றி நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். இங்கு தமிழகத்திலே மத்திய அரசு உடனே தலையிட வேண்டும் என்ற கோரிக்கையினைத் தினம், தினம் வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

நேற்றுக்கூட, முன்னாள் நிதியமைச்சர், 'இந்த அரசு கலைக்கப்பட வேண்டும் என்று நாங்கள் தொடர்ந்து வற்புறுத்துவோம்' என்று சொல்லியிருக்கின்றார்கள். தனியார் தொலைக்காட்சியிலே சொன்னார்கள். எந்தக் காரணத்திற்காக இந்த ஆட்சியைக் கலைக்க



1998 மார்ச் 30] [திரு. டி. சுதர்சனம்]

வேண்டும் என்று அவர்கள் சொல்கிறார்கள் என்று சொன்னால், கோவையிலே வெடிகுண்டுச் சம்பவங்கள் நடைபெற்றன. அந்த கோவை வெடிகுண்டுச் சம்பவங்களுக்குப் பின்னாலே என்ன இருக்கிறது என்பதைப் பற்றி ஆராய்ந்து பார்க்காமல் முன்னாள் நிதியமைச்சர் "இந்த ஆட்சியைக் கலைக்க வேண்டும் என்று தொடர்ந்து வற்புறுத்துவோம்" என்றும், 'அடிக்க அடிக்க அம்மியும் நகரும்' என்றும் சொல்லி இருக்கிறார்கள். அவர்கள் அடிக்க வேண்டிய அவசியமும் இல்லை; அம்மி நகர வேண்டிய அவசியமும் இல்லை.

மத்தியிலே இருக்கின்ற ஆட்சி இன்னும் எத்தனை நாளைக்கு இருக்கும் என்று யாருக்கும் தெரியாத ஒரு நிலை. அந்த ஆட்சி நீடிக்குமா, நீடிக்காதா என்பதைப் பற்றி இங்கே விவாதம் நடத்த நான் விரும்பவில்லை. ஆனாலும் இந்த அரசைப் பார்த்து, இந்த அரசு கலைக்கப்பட வேண்டும் என்று சொன்னால் அதிலே என்ன நியாயம் இருக்கிறது என்று எண்ணிப் பார்க்க வேண்டும். 18 கூட்டணிக் கட்சிகளைக் கொண்டு இருக்கின்ற அந்தந்தக் அரசு, ஒவ்வொரு கட்சிக்கும் ஒவ்வொரு கொள்கை உடைய அரசு. மாநிலங்களிலே இருக்கின்ற பல்வேறு பிரச்சினைகளை முன்வைத்து, அந்தந்த மாநிலங்களிலே வளர்ச்சியைப் பெற்றிருக்கின்ற அந்தந்த கட்சிகள், இன்றைக்கு ஏதோ ஒன்றாகச் சேர்ந்து ஒரு ஆட்சியமைத்து இருக்கிறார்கள். அந்த ஆட்சி அங்கே 'நித்திய கண்டம், பூரண ஆயுசு' ஆக இருக்கின்ற நிலைமையில், இந்த ஆட்சியைப் பார்த்து, கலைக்க வேண்டும், கலைக்க வேண்டும் என்று சொன்னால், அதிலே என்ன நியாயம் இருக்கிறது என்று எண்ணிப் பார்க்க வேண்டும். தேர்தலுக்கு இரண்டு தினங்களுக்கு முன்னாலே கோவையிலே குண்டு வெடித்தது. அந்த வெடிகுண்டு வெடித்ததற்கு என்ன காரணம் என்று நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். 35 இடங்கள் திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் தமிழ் மாநிலக் காங்கிரஸ் கூட்டணிக்கு வந்துவிடும் என்று பத்திரிகை நிருபர்களெல்லாம், பெரிய பெரிய அறிஞர்கள் எல்லாம் கருத்துக் கணிப்பு வெளியிட்ட பின்னாலே, 14 ஆம் தேதி அங்கே குண்டு வெடிக்கிறது.

அதேபோன்று, சரத் பவார் முதலமைச்சராக இருந்தபோது தேர்தலுக்கு 4 தினங்களுக்கு முன்னாலே அங்கே திடீர், திடீரென்று வெடிகுண்டுகள் வெடித்தன. அங்கே திடீர், திடீரென்று வெடிகுண்டுகள் வெடித்ததற்கு, பாரதிய ஜனதாக் கட்சியும், அங்கே இருக்கின்ற சிவசேனா இயக்கமும், அங்கே ஆளுகின்ற கட்சிதான் அதற்குக் காரணம் என்று

[திரு. டி. சுதர்சனம்] [1998 மார்ச் 30

சொன்னார்கள். திரு. சரத் பவார் அவர்கள் ஜஸ்டிஸ் கிருஷ்ணா அவர்கள் தலைமையிலே ஒரு கமிஷனை நியமித்தார்கள். அந்த ஜஸ்டிஸ் கிருஷ்ணா கமிஷன், ஜஸ்டிஸ் கிருஷ்ணா அவர்களுடைய தலைமையிலே இயங்கி அனைத்துக் காரணங்களையும் அறிந்து, ஆராய்ந்து பார்த்து, அந்தக் குண்டு வெடிப்புகளுக்கு பாரதிய ஜனதாதான் காரணம் என்று குற்றம் சாட்டியது. அப்படி பாரதிய ஜனதாதான் காரணம் என்று குற்றம் சாட்டப்பட்ட பின்னாலே அங்கே ஆட்சிக்கு வந்த பாரதிய ஜனதாவும், சிவசேனாவும் அந்த அறிக்கையினைக் குப்பைத் தொட்டியிலே போட்டுவிட்டனவே தவிர, அதன்மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதேபோன்றுதான், இன்றைக்குத் தமிழகத்திலே மட்டும்தான் வெடிகுண்டு வெடித்து இருக்கிறது. பக்கத்திலே இருக்கிற ஆந்திராவிலே வெடிக்கவில்லை; ஒரிசாவிலே வெடிக்கவில்லை; கேரளாவிலே வெடிக்கவில்லை; கர்நாடகத்திலே வெடிக்கவில்லை. தமிழகத்திலே மட்டும் வெடிக்க வேண்டிய அவசியம் என்ன என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். அதாவது, 35 இடங்கள் இந்தக் கூட்டணிக்குக் கிடைத்துவிடும் என்கின்ற கருத்துக் கணிப்புக்களின் காரணமாகத்தான். இன்றைக்கு முஸ்லிம் சகோதரர்களின் தீவிரவாத இயக்கம்தான் இதைச் செய்து கொண்டிருக்கிறது என்று இருந்தாலும்கூட, அந்தத் தீவிரவாத இயக்கத்தைப் பின்னாலேயிருந்து இயக்குகின்ற சக்தி என்ன என்பதைத் தமிழக முதலமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திலே தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) அதுமட்டுமல்ல, இந்தத் தீவிரவாத இயக்கங்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுக்கின்ற சக்தி என்ன என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். நாங்கள்கூட இன்றைக்குத் தேர்தலிலே தோற்று இருக்கிறோம். தோற்றிருந்தாலும்கூட நம்முடைய கூட்டணி பத்து இடங்களிலே வெற்றி பெற்றிருக்கிறது. ஆனால் இந்த ஆட்சியைக் கலைக்க வேண்டும் என்று சொல்கின்றவர்கள், பக்கத்திலே இருக்கின்ற ஆந்திர மாநிலத்திலே, 12 இடங்களிலே வெற்றி பெற்றிருக்கின்ற தெலுங்கு தேசம் ஆண்டு கொண்டிருக்கிறதே, அதைக் கலைப்பதற்கு இவர்கள் முயற்சி செய்வார்களா? அதைப்போல, மகாராஷ்டிரத்திலே பாரதிய ஜனதா அரசு நடந்து கொண்டிருக்கிறதே, தமிழகத்திலே குரல் கொடுக்கின்றவர்கள், அதைக் கலைப்பதற்கும் சேர்த்துத்தானே குரல் கொடுக்க வேண்டும்.



1998 மார்ச் 30] [திரு. டி. சுதர்சனம்]

முற்பகல் 11-45

அதை விட்டுவிட்டு, இங்கே பெரும்பான்மையோடு ஆண்டு கொண்டிருக்கின்ற, லஞ்ச லாவண்யம் இல்லாத, ஊழலற்ற ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிற தமிழக அரசைப் பார்த்து, 'நாங்கள் கலைத்து விடுவோம், முயற்சி செய்வோம்' என்று சொல்வார்களேயானால், இது எதைக் காட்டுகிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அதுமட்டுமல்ல, இன்றைக்கு பாரதிய ஜனதா அரசு மத்தியிலே ஆட்சி செய்து கொண்டிருக்கிறது. மத்தியிலே ஆட்சி செய்து கொண்டிருக்கிற பாரதிய ஜனதா அரசு, காவிரித் தண்ணீர்ப் பிரச்சினை பற்றிப் பேசியபோது, பாரதிய ஜனதாவோடு அங்கம் வகிக்கின்ற இராமகிருஷ்ண ஹெக்டே அவர்கள், தமிழகத்திற்குப் பாதகம் செய்வதையே தொழிலாகக் கொண்டிருக்கிற இராமகிருஷ்ண ஹெக்டே அவர்கள், இன்றைக்கு அங்கே நமக்கு எதிராகக் குரல் கொடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். அந்த அணி எத்தனை நாள் அங்கே இருக்கும்,. தமிழகத்திற்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தாலே என்ன நன்மை செய்ய முடியும் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இன்றைக்கு ஆளுகின்ற பாரதிய ஜனதா சர்க்கார், யாரோடு வேண்டுமானாலும், எவரோடு வேண்டுமானாலும், அவர்களின் சௌகரியத்திற்காகக் கூட்டு சேர்வதற்கு அஞ்ச மாட்டார்கள். ஆந்திர மாநிலத்திலே, சிவபார்வதியோடு கூட்டு சேர்ந்து பிறகு இன்றைக்குச் சந்திரபாபு நாயுடுவினுடைய, நாடாளுமன்ற உறுப்பினர்களுடைய தயவைப் பெற்றிருக்கிறார்கள். அரியானாவிலே பன்சிலாலோடு உடன்பாடு கொண்டு, இன்றைக்கு தேவிலாலுடைய கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சேர்த்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, மத்தியிலே சுக்ராம் என்ற ஒரு அமைச்சர் இருந்தார். தகவல் தொடர்புத் துறையிலே மிகப் பெரிய ஊழல் செய்தார் என்று 13 நாட்கள் நாடாளுமன்றத்தை நடத்தவிடாமல் செய்தது இந்த பாரதிய ஜனதா. ஆனால் இன்றைக்கு இமாச்சலப் பிரதேசத்திலே, அவர் இன்றைக்கு பாரதிய ஜனதா சர்க்காருடைய துணை முதலமைச்சராகப் பொறுப்பு ஏற்றுக் கொண்டிருக்கிறார்; இதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

தமிழகத்திலே ஊழல் குற்றம் சாட்டப்பட்டவர்கள், தமிழகத்திலே இருக்கின்ற பல்வேறு துறைகளிலே அக்கிரமங்கள், அநியாயங்கள் செய்தவர்கள், இன்றைக்கு 300 மெகாவாட் மின்சாரம் வாங்குவதற்கு 'தமிழக மக்கள் அல்லல்படுகிறார்களே, துன்பப்படுகிறார்களே,

துயரப்படுகிறார்களே என்று எண்ணி என்னுடைய மனம் வேதனைப்படுகிறது' என்று சொல்கின்ற முன்னாள் முதலமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்வேன். Indian Made Foreign Liquor—இன்றைக்கு அதிலே 10% விலையை உயர்த்தியிருக்கிறார்கள். ஆனால் ஒவ்வொரு மாதமும் 6 கோடி ரூபாய் முன்னாள் முதலமைச்சரின் வீட்டிற்குச் சென்று கொண்டிருந்ததே, அதை இந்த அரசு வந்தவுடனே ஆண்டு ஒன்றுக்கு 72 கோடி ரூபாயை அரசு கஜானாவிலே சேர்த்தார்களே, இது உண்மையா, பொய்யா என்பதை இங்கே இருக்கின்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் விளக்க வேண்டும் என்பதை நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Point of Order.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் பேசி முடிக்கட்டும். நீங்கள் உட்காருங்கள். உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாதம் ஒன்றுக்கு 6 கோடி ரூபாயை நாங்கள் முன்னாள் முதலமைச்சருக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம், நீங்களும் பெற்றுக் கொள்ளுங்கள் என்று நம்முடைய முதலமைச்சரை ஆறு முதலாளிகள் சந்தித்துக் கேட்டுக் கொண்டபோது, எனக்கு வேண்டாம் அப்படிப்பட்ட பணம். அதை அரசு கஜானாவிலே சேர்த்து விடுங்கள் என்று ஆண்டு ஒன்றுக்கு 72 கோடி ரூபாயை இந்த அரசு கஜானாவிலே சேர்த்த காரணத்திற்காக இந்த அரசைக் கலைக்க வேண்டுமா என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, போக்குவரத்துத் துறையிலே மிகப் பெரிய நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அந்த நஷ்டத்திற்கு யார் காரணம் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். அடிப்படையிலே, போக்குவரத்துத் துறையிலே எவ்வளவு பெரிய முரண்பாடுகள், முறைகேடுகள் எல்லாம் அந்த ஆட்சியிலே நடைபெற்றன என்பதை எல்லாம் நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். போக்குவரத்துத் துறையிலே ஊழல். இன்னும் எந்தத் துறையானாலும் ஊழல். எந்தத் துறையாக இருந்தாலும், இந்த நாட்டு மக்களைப் பற்றிக் கவலைப்படாமல் 5 ஆண்டுகாலம் ஆட்சி நடத்தியவர்கள், மிகப் பெரிய மின்சாரத் திட்டங்களுக்கு எல்லாம் விளம்பரம் போட்டார்கள். பிள்ளைப்பெருமான்நல்லூரிலே மிகப் பெரிய மின்சாரத் திட்டம் வருகிறது என்று சொன்னார்கள்; கடலூரிலே மிகப் பெரிய மின்சாரத் திட்டம்



வருகிறது என்று சொன்னார்கள்; ஜெயங்கொண்டத்திலே மிகப் பெரிய மின்சாரத் திட்டம் வருகிறது என்று சொன்னார்கள். வட சென்னையிலே மிகப் பெரிய மின்சாரத் திட்டம் வருகிறது என்று சொன்னார்கள். இன்னும் பல்வேறுபட்ட திட்டங்கள் எல்லாம் வருகிறது, வருகிறது என்று இந்த அவையிலே சொல்லி, கடைசியில் ஒரு மெகாவாட் மின்சாரத்தைக் கூட, கடந்த 5 ஆண்டு கால ஆட்சியிலே உற்பத்தி செய்ய முடியவில்லை என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

முற்பகல் 11-50

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஏற்கெனவே அதிக நேரம் எடுத்துவிட்டீர்கள். இன்னும் ஒரு நிமிடத்திலே பேசி முடித்து விடுங்கள்.

**திரு. டி. சுதர்சனம்:** இப்படிப்பட்ட நிலைதான் இருந்து கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, இன்னொரு விஷயத்தையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அரசுக்குச் சொந்தமான பப்ளிக் அண்டர்டேக்கிங் இன்ஸ்டிடியூசன்ஸ் 93-க்கு மேல் இருக்கின்றன. இந்த 93 பொது நிறுவனங்களிலே 3 தான் இன்றைக்கு இலாபகரமாக நடந்து கொண்டிருக்கின்றன. மற்ற 90 நிறுவனங்களும் இன்றைக்கு நஷ்டத்திலே இயங்கிக் கொண்டு இருக்கின்றன. அதிலும் குறிப்பாக, என்னுடைய தொகுதியிலே இருக்கிற சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் தொழிற்சாலை, அரக்கோணத்திலே இருக்கிற தமிழ்நாடு ஸ்டீல்ஸ் தொழிற்சாலை மற்றும் டான்செம் போன்ற பல்வேறுபட்ட தொழிற்சாலைகள் இன்றைக்கு நஷ்டத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்றன. தற்போது வெளி மார்க்கெட்டிலே 125 ரூபாய்க்கு சிமெண்ட் கிடைத்துக் கொண்டிருக்கிறது. ஆனால், டான்செம் நிறுவனம் மூலமாக 160 ரூபாய்க்கு நாம் சிமெண்ட்டை பஞ்சாயத்து யூனியன்களுக்கு சப்ளை செய்து கொண்டிருக்கிறோம். அங்கே பெரிய பிரச்சினை இருக்கிறது. எனவே, இதை எல்லாம் மனதில் கொண்டு, அந்தத் தொழிற்சாலைகளின் அதிகாரிகளை எல்லாம் அழைத்து, அவைகளை இலாபத்திலே இயங்க வைப்பதற்கு என்ன செய்யலாம் என்பதைப் பற்றி நீங்கள் விவாதித்து, தெளிவான முடிவிற்கு வரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, என்னுடைய தொகுதியைப் பற்றி இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரம் அதிகமாகி விட்டது. அலுவல் ஆய்வுக் குழுவிலே ஒத்துக்கொண்ட மாதிரி, முதலிலே விவாதத்தைத் துவக்கி வைப்பவர்களுக்கு 20 நிமிடங்கள்தான் கொடுக்கப்படும். ஆனால், நீங்கள் எவ்வளவு நேரம் பேசி இருக்கிறீர்கள் என்பதைப் பாருங்கள். (குறுக்கீடு) சரி, ஒரு நிமிடத்திலே பேசி முடியுங்கள்.

**திரு. டி. சுதர்சனம்:** என்னுடைய தொகுதி பூவிருந்தவல்லி தொகுதி. தற்போது சென்னையிலே நிறைய பஸ் நெரிசல் இருக்கிறது. இத்தகைய பஸ் நெரிசலை நீக்குவதற்கு, என்னுடைய பூவிருந்தவல்லி நகரிலும், ரெட்ஹில்ஸ் பகுதியிலும், தாம்பரத்திலும், மிகப் பெரிய பேருந்து நிலையங்களை அமைப்பதன் மூலமாக, தற்போது நிலவி வரும் பேருந்து நெரிசலைத் தவிர்க்க முடியும். எனவே, அதற்காக பூவிருந்தவல்லியிலே பெரிய பேருந்து நிலையம் உருவாக்கித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல், பூவிருந்தவல்லி பேரூராட்சியை நகராட்சியாக மாற்றிக்கொடுக்கவேண்டும். பூவிருந்தவல்லி தாலுக்கா மற்றும் அம்பத்தூர் தாலுக்கா ஆகிய இந்த இரண்டு தாலுக்காக்களையும் சேர்த்து, ஆர்.டி.ஓ. அலுவலகம் ஒன்றை, பூவிருந்தவல்லியிலே அமைத்துத் தரவேண்டும். பல்லாவரம், ஆலந்தூர் போன்ற இடங்களுக்கு எல்லாம் இன்றைக்குப் பாதாளச் சாக்கடைத் திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். எனவே, ஆவடி நகராட்சிக்கும் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை இந்த ஆண்டிலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, ஆவடியிலே இருக்கிற திருமுல்லைவாயிலில் ஒரு புதிய காவல் நிலையத்தை இந்த ஆண்டு அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டு, என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி.டி. தண்டபாணி.

**திரு. சி.டி. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1998-99 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை இந்த மாமன்றத்தில் வைத்த—இந்தியாவினுடைய தலைசிறந்த ஜனநாயகவாதியும், தமிழ் மக்களுடைய பாதுகாவலருமான டாக்டர் கலைஞர் அவர்கள் வைத்த—நிதிநிலை அறிக்கையில், நான் கலந்து கொண்டு பேசுவதிலே மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

1972 ஆம் ஆண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எல்லாம் கனடா நாடு ஒரு விருந்து வைத்தது. அதிலே பேசிய அந்த நாட்டினுடைய கவர்னர்-ஜெனரல் கிச்மீர் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்களையும்





பாராட்டி, அப்போது முதலமைச்சராக இருந்த, இன்றைய முதலமைச்சர் அவர்களையும் பாராட்டி, உரை நிகழ்த்தினார்கள். அதற்குப் பின் பேசிய, அப்போது நாடாளுமன்ற சபாநாயகராக இருந்த, திரு. எஸ்.ஜி. தில்லான் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

இப்போதைய தமிழ்நாட்டு முதலமைச்சரை "One of the youngest statesmen of India and is a known progressive thinker and able administrator in an Indian State," என்று அவர்கள் —1972-ல், குறிப்பிட்டார்கள். எனவே அப்படிப்பட்ட புகழுக்கு உரிய முதலமைச்சருடைய நிதிநிலை அறிக்கையிலே பேசுவதிலே மகிழ்ச்சியடைகிறேன் என்று மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையைத் துவங்குகின்ற நேரத்தில் நம்முடைய முதல்வர் அவர்கள் தன்னைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். திருக்குவளை என்ற கிராமத்தில் வேளாண் தொழிலில் ஈடுபாடும், இசைத் திறனும் கொண்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட குடும்பத்தில் பிறந்தவன் என்று அவர்கள் குறிப்பிட்டது எல்லோருடைய நெஞ்சத்தையும் நெகிழ வைக்கக்கூடிய வரிகளாகும்.

முற்பகல் 11-55

அதேபோல, ஹிட்லர் ஒரு முறை நாடாளுமன்றத்தில் சொன்னார். "I am supreme. My Aryan race is supreme. Others belong to sub-nation." என்று குறிப்பிட்டார். என்னுடைய ஆரிய இனம்தான் சிறந்தது. நான் பெரியவன், மற்றவர்கள் எல்லாம் தாழ்ந்தவர்கள் என்று குறிப்பிட்டார். அதேபோல இதே சட்டமன்றத்தில் முன்னாள் முதலமைச்சர் குறிப்பிட்டார். நான் ஜாதிகளுக்கு எல்லாம், மதங்களுக்கு எல்லாம் அப்பாற்பட்டவர் என்றாலும்கூட, அவர் சொன்ன வார்த்தையைச் சொல்லிக்காட்ட விரும்புகின்றேன். "நான் ஒரு பாப்பாத்தி" என்று மூன்று முறை குறிப்பிட்டு அதிலே பெருமையும் கொண்டார். அப்படி ஹிட்லர் கொண்ட பெருமையை முன்னாள் முதலமைச்சர் அவர்கள் இங்கே கொண்டார் என்பதையும் நாம் பார்த்தோம். அதற்கு மாறாக நம்முடைய முதல்வர் அவர்கள் தன்னுடைய தன்னிலை விளக்கத்தைச் சொல்லி, அவர்கள் ஒரு நிறைகுடம் என்பதை இந்த நேரத்திலே அவர்கள் காண்பித்திருக்கிறார்கள்.

இந்த வரவு செலவுத் திட்டத்தைப் பத்தாவது முறையாக இங்கே நம்முடைய முதல்வர் அவர்கள் தாக்கல் செய்கிறார்கள். எனக்குத் தெரிந்த பத்திரிகைச் செய்திப்படி நிதியமைச்சர் என்ற வகையில் எந்த

[திரு. சி.டி. தண்டபாணி] [1998 மார்ச் 30

ஒரு நிதியமைச்சரும் 10 முறை இந்த மன்றத்திலே நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்தவர்கள் யாராவது இருப்பார்களா என்றால், நிச்சயமாக இருக்கமுடியாது. அந்த அளவிற்கு அவர்கள் இங்கே இந்த நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்கின்ற அதே நேரத்தில் ஒன்றை மட்டும் நாம் பார்க்கவேண்டும். சென்ற முறை பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் பேசும்போது, அந்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டார்கள். இப்படிக் கிட்டத்தட்ட ரூ.498 கோடி அளவில் பற்றாக்குறை இருக்கிறது, அதை என்ன செய்யப்போகிறீர்கள் என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். அதற்கு நம்முடைய முதலவர் அவர்கள்கூட விளக்கம் அளித்தார்கள். இன்றைக்கு அவருடைய ஆற்றல் மிகுந்த நிர்வாகத் திறமையின் காரணமாக ஊதாரிச் செலவுகளை எல்லாம் குறைத்து, அந்தப் பற்றாக்குறையை அவர்கள் குறைக்கின்ற அளவிற்கு, இந்தத் திருத்தப்பட்ட மதிப்பீடு என்று பார்த்தால் வெறும் ரூ.3.31 கோடிதான் பற்றாக்குறை என்று 1997-98-க்கு அவர்கள் காண்பித்திருக்கிறார்கள். எனவே அப்படிப்பட்ட திறமையை அவர்கள் இங்கே வெளிப்படுத்திச் சொல்லியிருக்கிறார்கள்.

அதேபோல் இந்த வரவு செலவுத் திட்டத்தைப் பொறுத்தவரையில் பத்திரிகைகள் எல்லாம் எழுதியிருப்பதுபோல், இது ஒரு "friendly Budget submitted for common man", என்று குறிப்பிட்டார்கள். ஒட்டுமொத்தமாகப் பார்க்கின்ற நேரத்தில் இது ஒரு 'rural and development-oriented Budget'. சாதாரண கிராம மக்களுக்கும், வளர்ச்சித் திட்டத்திற்கும் அடிப்படையாக இருக்கக்கூடிய ஒரு நிதிநிலை அறிக்கை என்றுதான் நாம் இன்றைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். அந்த வகையிலேதான் அவர்கள் இன்றைக்கு சிறப்பாகச் செய்திருக்கிறார்கள். கிராமப்புற வளர்ச்சிக்கு என்று பார்த்தால் கிட்டத்தட்ட ஊராட்சி மன்றங்களுக்கு நிதி. அதே போல் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நிதி, கிராமப்புற வேலைவாய்ப்புகளுக்கு நிதி என்று பார்த்தால், கிட்டத்தட்ட ரூ.1394.47 கோடி அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதேபோல குடிநீர் வழங்குவது என்பது மிக, மிக முக்கியமான ஒன்று. இந்த வரவு-செலவுத் திட்டத்தில் நம்முடைய கலைஞர், முதல்வர் அவர்கள் மூன்று பிரிவாகப் பிரித்து, இருப்பதற்கு இடம், உண்பதற்கு உணவு, உடுப்பதற்கு உடை என்ற அடிப்படைத் தேவைகளுக்கு மட்டுமல்லாமல், ஒவ்வொரு இடத்திலும் குடிநீர் மிக, மிக முக்கியம் என்ற அடிப்படையிலே அதற்கும் அவர்கள் நிதி ஒதுக்கித் தந்திருக்கின்றார்கள். கிட்டத்தட்ட 6 இடங்களுக்கு இவை தரப்பட்டிருக்கின்றன. திருப்பூர் உட்படச் சேர்த்து ரூ.3,317 கோடி.



1998 மார்ச் 30] [திரு. சி.டி. தண்டபாணி]

குடிநீருக்கும், அதேபோல் பாதாளச் சாக்கடைகள் அமைப்பதற்கும் ரூ.3,317 கோடி இதற்கு ஒதுக்கப்பட்டிருக்கின்றது. குடியிருப்புகள் என்று பார்த்தால் வீடுகள் அல்லது ஏற்கெனவே கட்டப்பட்ட வீடுகள் என்று பார்த்தால் 1,27,832 வீடுகள் கட்டப்பட்டு இருக்கின்றன. இந்திரா வீடு கட்டும் திட்டத்தின் அடிப்படையிலே ஏற்கெனவே கட்டப்பட்டு இருக்கின்றன. இந்த ஆண்டு மட்டும் குடியிருப்பு என்று கட்டப்பட்டிருப்பது, கிட்டத்தட்ட அதற்கு ஒதுக்கப்பட்டிருக்கக்கூடிய தொகை ரூ.5,92,23,000. வீட்டுவசதி வாரியத்தின் சார்பாக நடப்பு ஆண்டிலே இருக்கக்கூடிய திட்டங்கள் அதிலே குறிக்கப்படவில்லை என்றாலும் கூட, சென்னை அருகிலே 6500 பேருக்கு வீடுகள் என்று ரூ.592 கோடி இன்றைக்கு இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது.

நண்பகல் 12-00

சாலைகள் என்ற வகையில், மாநிலச் சாலைகள், நெடுஞ்சாலைகள் என இவை அத்தனையையும் சேர்த்து ரூ.2,017 கோடி ஒதுக்கப்பட்டிருக்கின்றது. மின் திட்டத்திற்காக ரூ.1,618 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. தொழில் வளர்ச்சியும், வேலைவாய்ப்புகளும் என்று பார்த்தால் கடலூரிலே இருக்கக்கூடிய Petroleum Refinery என்கின்ற சுத்திகரிப்பு ஆலைக்கும், திருநெல்வேலியில் போடப் பட்டிருக்கக்கூடிய திட்டத்திற்காக 7,000 கோடி ரூபாயும், ஆக ரூ.10,670 கோடியே 70 லட்சம் ரூபாய் இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. மறைமலை நகரில் ரூ.320 கோடியே 70 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. அதேபோல, சத்துணவிற்குத் தேவையான ரூ.644 கோடி, நம்முடைய உணவு விநியோகத்திற்கு நமக்குத் தரக்கூடிய மானியம் என்ற வகையிலே சொல்லப்பட்டிருக்கக்கூடிய இத்தனை விவரங்களையும் நாம் பார்க்கின்றோம். அதேபோல நெசவாளர்களுக்கு என்று ஓய்வூதியத்தை ரூ.100-லிருந்து ரூ.150 வரைக்கும் அவர்கள் உயர்த்தித் தந்திருக்கிறார்கள். அதனால், அத்தனை நெசவாளர்களும் இன்றைக்கு மகிழ்ச்சியடைகின்றார்கள். இந்தச் சமயத்திலே ஒரு சம்பவத்தை நான் சொல்ல விரும்புகின்றேன். திருப்பூர் நகரிலே நெசவாளப் பெருமக்கள் தங்களுடைய கோரிக்கைகளையெல்லாம் வலியுறுத்தி ஒரு ஊர்வலம் சென்றிருக்கிறார்கள். யாரோ சில சமூக விரோதிகள் அந்த ஊர்வலத்திலே புகுந்து, காவல் துறையினரின் மீது கல் எறிந்து இருக்கின்றார்கள். அதன் காரணமாகத் தடியடியும் செய்யப்பட்டு, கிட்டத்தட்ட 51 நெசவாளர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள். ஆனால், அந்த 51 நெசவாளர்களுக்கும், நடந்த அந்தக் கல் எறிச் சம்பவத்திற்கும் சம்பந்தம் இல்லை. அவர்கள் எல்லாம் நிரபராதிகள். எனவே, நம்முடைய

மாண்புமிகு முதல்வர் அவர்களை நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, அதை விசாரித்து, அந்த 51 நெசவாளர்களையும் விடுதலை செய்வதற்கு உத்தரவிட வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, பாசனத் திட்டத்தை எடுத்துக்கொண்டால்கூட இந்த ஆண்டு செயல்பட்டு வரக்கூடியது என்ற வகையில் 1,346 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. ஏரிகளுக்கு ரூ.115 கோடி. காவிரி மாடர்னைசேஷன் என்று ரூ.10 கோடி. ஆக, ரூ.1,471 கோடி இன்றைக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. இப்படி ஒவ்வொரு துறையிலேயும் சென்ற ஆண்டு கொடுக்கப்பட்டிருப்பதைவிட, இந்த ஆண்டு கிராமங்களுக்கு அதிகப்படியான தொகை வழங்கப்பட்டிருக்கின்றது. இந்த ஆட்சியிலே நீங்கள் பார்த்தீர்களேயானால் கிராமங்களுக்குத் தரப்பட்டு இருக்கக்கூடிய தொகை விவரம் ரூ.212 கோடியே 46 லட்சம். ஆனால், கடந்த ஆட்சியிலே, 1995-96-லே கொடுக்கப்பட்ட தொகை எவ்வளவு என்று பார்த்தால் ரூ.185 கோடியே 5 ஆயிரம். இதற்கும், அதற்கும் எவ்வளவு வித்தியாசம். கிராம வளர்ச்சியில், கிராம மக்களுடைய நலனில் இந்த அரசாங்கம் எந்த அளவிற்கு அக்கறை எடுத்துக்கொண்டிருக்கின்றது என்பதற்கு இவைகள் எல்லாம் எடுத்துக்காட்டுகள். அதேபோல, இந்த வரவு-செலவுத் திட்டத்தைப் பொறுத்தவரையில், ஒரு மாநில சர்க்கார் தரக்கூடிய நிதிநிலை அறிக்கையிலேயிருந்து இது மாறுபட்டிருக்கின்றது. அதற்குக் காரணம், பெரிய வளர்ச்சித் திட்டங்களை எதிர்காலத்திலே எதிர்நோக்கி அந்தக் காரியங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. ஒரு மாநிலம், ஒரு நாடு என்று எடுத்துக்கொண்டால், பல்வேறு துறைகளிலே வளர்ச்சி வந்தாலொழிய, ஒட்டுமொத்தமாக, ஒரு 'கியுமுலேடிவ் டெவலப்மென்ட்' என்று சொல்கிறார்களே, நிச்சயமாக அது நடைபெறுவதற்கு வாய்ப்பில்லை என்கின்ற வகையிலேதான் அப்படிப்பட்ட திட்டங்கள் இன்றைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. நிர்வாகச் சீர்திருத்தத்திற்காக ஒரு அமைப்பு ஏற்படுத்தப்பட்டு, அதற்கு ஒரு குழு போடப்பட்டு, வருவாய்த் துறையிலே அந்தக் குழுவும் தன்னுடைய அறிக்கையைத் தந்திருக்கின்றது. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதை அமைத்ததற்குக் காரணம், வெள்ளைக்காரன் காலத்திலே தொடங்கப்பட்ட அந்த ரெவின்யூ இலாக்கா - அதனுடைய நிர்வாகம் என்பது, பல்வேறு வகையான 'ரெட் டேப்பிசம்' என்று சொல்வார்களே, அதன் காரணத்தால், பொதுமக்களுக்குக் கிடைக்க வேண்டிய சலுகைகள் நேரடியாக விரைவாகக் கிடைக்காத காரணத்தால், இப்படி ஒரு சீர்திருத்தத்தினை அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள்.



பிற்பகல் 12-05

அதேபோல 'லோக்பால் சட்டம்' என்று, ஊழல் தடுப்புச் சட்டம் என்று கிட்டத்தட்ட 30 ஆண்டுகளாக நாடாளுமன்றத்திலே பேசப்பட்டு, அதிலே இருக்கக்கூடிய சங்கடம், இந்த லோக்பால் சட்டத்திலே பிரதமரைச் சேர்த்துக் கொள்வதா, வேண்டாமா என்கின்ற விவாதம் இன்றும் நடந்து கொண்டிருக்கிறது. அதன் காரணமாக இந்தச் சட்டமே வராத சூழ்நிலை ஏற்பட்டு, இன்றைக்கு நம்முடைய முதல்வர் அவர்கள் அதைக் கொண்டுவர வேண்டும், ஊழல் தடுப்புச் சட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்கின்ற வகையிலேதான், இதை அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள்.

1972-லே இதே முதல்வர் அவர்கள் The Tamil Nadu Public Men (Criminal Misconduct) Act என்று கொண்டு வந்தார்கள். அதிலே எப்படிப்பட்டவர்கள், சட்டமன்ற உறுப்பினர்களோ, பொது வாழ்க்கையிலே ஈடுபட்டிருக்கக்கூடியவர்களோ, யாராக இருந்தாலும், யாரும் அவர்கள் மீது புகார் சொன்னால், அவர்கள் மீது விசாரிக்கப்படும் என்று கொண்டு வந்தார்கள். அப்படியெல்லாம் விசாரிக்கக்கூடாது என்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே முடிவு செய்து, அந்தச் சட்டத்தை ரத்துச் செய்துவிட்டார்கள். அதற்குப் பின்னாலே இன்னும் பல்வேறு தகவல் பெறும் உரிமை - Right to Information Act என்பது ஒரு ஜனநாயக நாட்டிலே இன்றைக்கு இருக்க வேண்டிய ஒன்று. பல மாநிலங்களிலே இல்லை, பல நாடுகளிலே இல்லை. வளர்ந்துவிட்ட நாடுகளிலேகூட இல்லை. இன்றைக்கு அமெரிக்காவிலே இருக்கிறது. இங்கிலாந்திலே இருக்கிறது. பக்கத்திலே இருக்கக்கூடிய நேபாளத்திலே இருக்கிறது. அதைத் தவிர, வேறு எந்த நாடுகளிலேயும் இது இல்லை. அப்படிப்பட்ட ஒரு சட்டத்தை மாநில சர்க்கார் இங்கே கொண்டு வந்திருப்பது உள்ளபடியே பாராட்டுதலுக்குரியது. நான் அதை வரவேற்கிறேன்.

தரிசு நிலம் என்கின்ற வகையிலே ஒரு பெரிய புரட்சியை உண்டுபண்ண வேண்டுமென்ற வகையிலேதான், தரிசு நிலங்களை எப்படியாவது எடுத்து, அவைகளையெல்லாம் விவசாயத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்று சொல்லி, பேராசிரியர் டாக்டர் வி.சி. குழந்தைசாமி அவர்களின் தலைமையில் ஒரு குழுவைப் போட்டிருக்கிறார்கள். கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலே நாடாளுமன்றத்திலே இப்படி ஒரு குழு போடப்பட்டது. பழைய முன்னாள் அமைச்சர் மோகன் தாரியா அவர்களுடைய தலைமையிலே

ஒரு குழு போடப்பட்டது. இரண்டு ஆண்டு காலம் ஆயிற்று, அவர் தன்னுடைய அறிக்கையைக் கொடுத்து. மத்திய சர்க்கார் இதுவரைக்கும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இந்த இரண்டு ஆண்டு காலத்தில் அவர்களால் சொல்லப்பட்டுள்ள கணக்கு விவரங்களைக்கூட சரியாகச் சொல்லமுடியாத அளவிற்குக் கிட்டத்தட்ட 187 லட்சம் ஏக்கர் நிலம் இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) இன்னும் 10 நிமிடத்தில் முடித்துக்கொள்கிறேன். ஆகவே, தரிசு நிலங்களை விவசாயத்திற்குக் கொண்டுவர வேண்டும் என்கின்ற வகையிலே முயற்சி செய்கிறார்கள்.

நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில், எனக்குக் கிடைத்த தகவலின்படி—அதிகமாகக்கூட இருக்கலாம்—44 லட்சம் எக்டேர், கிட்டத்தட்ட ஒரு கோடி ஏக்கர் நிலம் இங்கே தரிசாக இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். எனவே அதில் எடுத்துக்கொண்ட முயற்சியினால் நிச்சயமாக எதிர்காலத்தில் விவசாயம் ஒரு தொழிலாக மாறி, 'இண்டஸ்ட்ரி' ஆக மாறி, அது தமிழகத்திற்குப் பொருளாதார வளர்ச்சியையும், ஏழை விவசாயிகளுக்கு நல்ல வாழ்வையும் தரும் என்கின்ற நம்பிக்கை இதிலே இருக்கின்றது.

அடுத்து, பன்னாட்டு விமான நிலையம் ஒன்று தொடங்க உத்தரவிட்டு இருக்கிறார்கள். அதேபோல 100 கோடி ரூபாயிலே வணிக மையம் ஒன்றை Business-cum-financial Centre என்று ஏற்படுத்தியிருப்பது உலகத்திலே இருக்கக்கூடிய பெரிய வியாபாரக் கம்பெனிகள் எல்லாம் இங்கே தொழில் தொடங்குவதற்கு வசதியாக இருக்கும்.

அதேபோல், Bio Technology என்ற வகையிலே புதிய தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்யவும் வகை செய்யப்பட்டிருக்கிறது. முதன்முதலாக ஒரு மாநில சர்க்கார் ஜவுளிக் கொள்கை என்று வைத்திருப்பது இதுதான் முதல் தடவை. ஒரு மாநில சர்க்கார் வழக்கமாக ஜவுளிக் கொள்கைக்கு என்று தனியாகக் குழுவைப் போடுவதில்லை. மத்திய சர்க்கார் சொல்லக்கூடிய கொள்கையைப் பின்பற்றியே காரியங்கள் நடைபெறுவது உண்டு. ஆனால் நம்முடைய முதல்வர் அவர்கள்தான் ஜவுளிக் கொள்கையை வகுப்பதற்கு என்றே இன்றைக்கு ஒரு குழுவை அமைத்திருக்கிறார்கள். ஆகவே, இப்படிப்பட்ட நிலைகளை நான் உள்ளபடியே வரவேற்கிறேன்.





பிற்பகல் 12-10

Edible Oils - சமையல் எண்ணெய்க்கு முழுவதுமாக வரி விலக்கும் செய்திருக்கிறார்கள். இன்றைக்குக் காலையிலே பத்திரிகையைப் பார்த்தால நமக்கெல்லாம் அதிர்ச்சியான ஒரு செய்தி 'எக்கனாமிக் டைம்ஸ்' என்கின்ற பத்திரிகையில். என்ன செய்தி என்றால் வெளிநாட்டிலிருந்து வாங்கக்கூடிய சமையல் எண்ணெய்க்கு மத்திய சர்க்கார் வரி போடப் போகிறது என்கிற ஒரு அதிர்ச்சியான செய்தி. Customs Duty போடப் போகிறார்கள் என்று. அப்படிப் போடுகின்ற காரணத்தினால் என்ன ஆகும் என்றால், விலை நிர்ணயம் செய்யக்கூடியது பூராவும் பம்பாயில் இருக்கக்கூடிய பெரிய வியாபாரிகள். எனவே, அதனுடைய விலை என்னவோ, அதேபோல இந்த விலையையும் நிர்ணயிப்பார்கள். எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் மத்திய அரசை வலியுறுத்தி இறக்குமதி செய்யக்கூடிய சமையல் எண்ணெய்க்கு Customs Duty - சுலால் வரி போடக்கூடாது என்று வற்புறுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக ஒன்றே ஒன்றைச் சொல்லி முடிக்க ஆசைப்படுகிறேன். இங்கே நம்முடைய நண்பர்கள் எல்லாம் குறிப்பிட்டார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சுதர்சனம் அவர்கள்கூடக் குறிப்பிட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் 'உறவுக்குக் கை கொடுப்போம், உரிமைக்குக் குரல் கொடுப்போம்' என்பதுதான் எங்களுடைய லட்சியம். எந்த அரசாக இருந்தாலும், அரசு என்ற வகையிலே நாம் எந்த அரசிடமும் மோதிக்கொள்ள வேண்டும் என்ற விருப்பத்தை நாம் எடுத்துக்கொள்வதில்லை; எடுப்பதும் இல்லை. ஆனால் இன்றைக்கு நண்பர் வாஜ்பாய் அவர்கள் பிரதமராக இருந்தாலும்கூட, அவருக்குச் சில சங்கடங்களை ஏற்படுத்தி அப்படி ஒரு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் வாஜ்பாய் அவர்கள் மறந்துவிட மாட்டார்கள் என்று நான் நினைக்கிறேன். இந்த இந்தியத் துணைக் கண்டத்தில் ஒரு நிரந்தரமான சர்வாதிகாரத்தை முறியடித்து ஜனநாயகத்தை ஏற்படுத்திய பெருமை நம்முடைய தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்குத்தான் உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) அதிலே யாருக்கும் சந்தேகம் வேண்டாம்.

அவசர காலச் சட்டம் இருந்த நேரத்தில் பெரிய தேசியத் தலைவர்கள் எல்லாம் வெளியே இருந்தார்கள், நம்முடைய வாஜ்பாய் உட்பட மரியாதைக்குரிய அன்னை இந்திராகாந்தி அவர்கள் புவனேஷ்வர் காங்கிரஸ் மாநாட்டிலே குறிப்பிட்டார்கள். தேசியத்

தலைவர்களையெல்லாம் நான் சிறையிலே அடைத்து வைத்திருப்பது, அவர்கள் மீது இருக்கக்கூடிய வெறுப்பின் காரணமாக அல்ல. ஆனால் அவர்கள் சில குழப்பங்கள் செய்வார்கள் என்று எதிர்பார்த்துத்தான் சிறையிலே வைத்திருக்கிறேன். ஆனாலும்கூட யாராவது பேச்சுவார்த்தைக்கு வந்தால் நான் நிச்சயமாக அதைப் பரிசிலனை செய்து தேசியத் தலைவர்களை எல்லாம் விடுதலை செய்து, தேர்தலுக்கு நான் உத்தரவிடுகின்றேன் என்று புவனேஷ்வரில் காங்கிரஸ் மாநாட்டிலே பேசினார்கள். அந்த ஒரு வார்த்தையை வைத்து, அவர்கள் குறிப்பிட்டதைப்போல தமிழகத்தில் ஒரு சின்னஞ்சிறு கிராமத்திலே, திருக்குவளை கிராமத்திலே பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திலே பிறந்த கலைஞர் அவர்களுக்குத்தான் தோன்றிற்று. இந்த நாட்டிலே மீண்டும் ஜனநாயக உணர்வுகளை, ஜனநாயகத்தைக் கொண்டுவர வேண்டும் என்றால் என்ன செய்ய வேண்டும் என்று அவர் ஒருவருக்குத்தான் தோன்றி, 1976 ஜனவரி 15, 16 தேதிகளிலே டெல்லியிலே ஒரு மாநாடு கூட்டி அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்து அந்தக் கூட்டத்தில் அது விவாதிக்கப்பட்டது. நண்பர் வாஜ்பாய் அவர்கள் கூட அந்தக் கூட்டத்திலே வந்து கலந்துகொண்டார். கூட்டத்திற்குத் தலைமை வகித்தவர் பெரிய தேசியவாதி சோஷலிச சித்தாந்தங்களைக் கொண்ட அசோக் மேத்தா கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். கடைசியிலே தீர்மானம் வடிக்கப்பட்டது. அந்தக் கூட்டத்தைப்பற்றி விவரமாகச் சொல்வதற்கு நேரம் இல்லாத காரணத்தினால் நான் அத்தோடு விடுகின்றேன். கூட்டத்திலே தீர்மானம் வடிக்கப்பட்டது. அசோக் மேத்தாதான் குறிப்பிட்டார், தீர்மானத்தைக் கலைஞரே எழுதட்டும் என்று. அப்போது நம்முடைய தலைவர்தான் கைப்பட எழுதினார். இந்திரா காந்தி அம்மையாருடைய அந்த அறிவிப்புக்கு ஏற்ப, இந்தக் கூட்டம், மீண்டும் அவர்களோடு பேசி—பேசுவது மட்டுமல்லாமல் தேசியத் தலைவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்; ஓராண்டு அதிகப்படுத்தப்பட்டிருக்கக்கூடிய இந்த நாடாளுமன்றத்திற்கு உடனடியாக தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று நம்முடைய தலைவர் கைப்பட எழுதி அந்தத் தீர்மானம் நிறைவேறி, அதற்கு அடுத்த நாள் மற்ற தலைவர்களோடு அந்தத் தீர்மானம் இந்திரா காந்தி அம்மையாருக்கு வழங்கப்பட்டதற்குப் பின்னாலேதான் இந்த நாட்டில் மீண்டும் ஜனநாயக உணர்வுகள் உயிர் பெற்று தேசியத் தலைவர்கள் எல்லாம் விடுதலை செய்யப்பட்டு, தேர்தல் 1977-லே அறிவிக்கப்பட்டது என்பதை நம்முடைய நண்பர் வாஜ்பாய் அவர்கள் நிச்சயமாக அறிவார்கள்.





அதேபோல மதுரையிலே 'டெசோ' மாநாடு நடந்தது. அந்த மாநாட்டிற்கு அகில இந்தியத் தலைவர்களை எல்லாம் அழைக்க வேண்டும் என்று நம்முடைய தலைவர் அவர்கள் விரும்பினார்கள். என்னைத்தான் அனுப்பி வைத்தார், நம்முடைய நண்பர் வாஜ்பாயையும், மற்ற தலைவர்களையும் சந்திக்க வேண்டும் என்று. நான் அப்போது விமான நிலையத்திலிருந்து நேரடியாக வாஜ்பாய் அவர்கள் வீட்டிற்குச் சென்று "உங்களை 'டெசோ' மாநாட்டிலே கலந்துகொள்ளுமாறு எங்களுடைய தலைவர் அழைக்கிறார்" என்று சொன்னேன். அப்போது அவர் குறிப்பிட்டார். 'கலைஞர் அழைக்கிறார், நான்கலந்துக் கொள்கிறேன்' என்று குறிப்பிட்டார். அந்த மாநாட்டிலே அவர் கலந்துகொண்ட நேரத்திலே பத்திரிகைக்காரர்கள், மற்றவர்கள் எல்லாம் எண்ணிப் பார்த்தார்கள், அந்த மாநாட்டில் தனி ஈழ கருத்துக்கு வேறுவிதமாக அவர்கள் சொல்வார்கள் என்று. அந்த மாநாட்டினுடைய கருத்து—இருக்கக்கூடிய பல குரூப்புகள், பல இயக்கங்கள் ஒன்றாக இணைந்து தமிழர்களுக்காகப் போராட வேண்டும் என்பது அவர்களுடைய நோக்கம். அதிலே அவரே சொன்னார், எல்லா இளைஞர்களையும் வைத்துக்கொண்டு. 'இனிமேல் உங்களுடைய கொள்கை தனி ஈழமாக இருந்தாலும் பரவாயில்லை'. திரு. வாஜ்பாய் சொன்னது, 'தனி ஈழமாக இருந்தாலும் பரவாயில்லை; My only request—I only emphasise on that' என்று அவர் சொன்னார். மேலும் 'Get united and fight for your cause' நான் அதைத்தான் வலியுறுத்துகிறேன், நீங்கள் அத்தனை பேரும் ஒன்றாகச் சேர்ந்து உங்களுடைய காரியத்திற்காக நீங்கள் நிச்சயமாகப் பாடுபடவேண்டும்' என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படிப்பட்ட பல்வேறு பொதுக் காரியங்களில் அவர்கள் ஈடுபாடு கொண்டு நம்முடைய தலைவரோடு இணைந்து அவர் செயல்பட்டு இருக்கிறார் என்பதை....

பிற்பகல் 12-15

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ச. அழகிரி.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுவதைப் பார்த்தால் தனி ஈழத்தை திரு. வாஜ்பாய் அவர்கள் ஆதரித்ததாகச் சொல்கிறார்; அது சரியான கருத்துதானா என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. சி.டி. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இருக்கக்கூடிய இளைஞர்கள், பல்வேறு பிரிவுகளாக இருப்பவர்கள் ஒன்றாக இருந்து செயல்படவேண்டும் என்பதற்காகத் தான் அந்தக் கூட்டம் கூட்டபபட்டது. நாமேகூட அப்போது தனி ஈழத்தை—அந்தப் பிரச்சினையை—திராவிட முன்னேற்றக் கழகம் கூட அது அவர்களுடைய பிரச்சினை, தனி ஈழம் என்பது அவர்களுடைய பிரச்சினை, விரும்பினால் கேட்டுக்கொள்ளட்டும், விரும்பாவிட்டால் விட்டு விடட்டும் என்றுதான் சொன்னோம். அந்த அடிப்படையில் தான் அவரும் குறிப்பிட்டார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. அப்போது அமைக்கப்பட்ட டெசோ, என்பதே Tamil Eelam Supporters Organisation என்பது தான், டெசோ என்பதற்குப் பொருள். தமிழ் ஈழத்தை அப்போது ஆதரித்தவர்கள் எல்லாம் கூடிய மாநாடுதான் அந்த மாநாடு. ஆனால் அந்த மாநாட்டிலே நடைபெற்றது என்னவென்றால், போராளிகளை ஒன்றுபடுத்த எங்களால் முடியவில்லை. ஒவ்வொரு போராளியும் ஒவ்வொரு விதமான கருத்தைச் சொன்னார்கள். அதிலே அப்போதே எல்.டி.டி.ஈ. மாறுபட்ட கருத்தைச் சொன்னார்கள். அப்போது திரு. வாஜ்பாய் அவர்களும், திரு. என்.டி. ராமாராவ் அவர்களும் மிகுந்த ஆதங்கததோடு சொன்னார்கள், இவர்களே ஒற்றுமையாக இல்லை, எப்படி நாம் எல்லாம் இவர்களுக்கு உதவ முடியும் என்று கேட்டார்கள். அதற்குப் பிறகு அவர்களே, அவர்கள் முன்னிலையிலேயே சத்தியம் செய்யச் சொல்லி, ஒற்றுமையாக இருப்போம் என்று சத்தியம் செய்யச் சொல்லி, சத்தியம் செய்து கொடுத்தார்கள். ஆனால் மறுநாள் ஸ்ரீசபாரத்தினம் இலங்கையில் கொல்லப்பட்டார். இதுதான் செய்தி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள். உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தைவிட அதிகமாகி விட்டது. ஒரே ஒரு வரியில் சொல்லி முடியுங்கள்.

**திரு. சி.டி. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்படி இணைந்து செயல்படக்கூடிய சந்தர்ப்பங்கள் எல்லாம் ஏற்பட்டிருக்கின்றன, இன்றைக்கு வேறுவகையாக இருந்தாலும் கூட இந்த நாடாளுமன்றத் தேர்தலைப் பொறுத்தவரையில் நமக்குப் பாதகமான சூழ்நிலை இருந்தாலும், இரண்டு சட்டமன்றத் தொகுதிகளில்





காட்டியுள்ள மக்கள் நம்பிக்கை—கடந்த காலச் செயல்பாட்டுக்கு அங்கீகாரம் வழங்கியிருக்கிறார்கள் என்பதை நாம் இந்த நேரத்தில் பார்க்கவேண்டும். அதனாலேயே இந்த அரசைக் கவிழ்க்கவேண்டும் அல்லது இந்த அரசுக்குத் தொல்லை தரவேண்டும் என்று நினைக்கிறார்கள். ஒரே ஒரு வரியில் பைபிளில் உள்ள ஒரு செய்தியை மட்டும் சொல்லி முடித்துவிடுகிறேன்.

"We are troubled on everyside; yet not distressed; we are perplexed, but not in despair; Persecuted but not forsaken; cast down but not destroyed". அனைத்து வகைகளிலும் தொல்லைகள் இருந்தன. இருப்பினும் அதற்கு வேதனைப்படவில்லை. எங்களுக்குத் திகைப்புகள் ஏற்பட்டன ஆனாலும் நம்பிக்கை இழக்கவில்லை. பல சிரமங்களுக்கு ஆளானோம், ஆனாலும் நாங்கள் கைவிடப்படவில்லை. சறுக்கி இருக்கின்றது, ஆனால் நாங்கள் அழிக்கப்படவில்லை. இந்தத் தலைவருடைய தலைமையில் தொடர்ந்து பணியாற்றுவோம் என்றும், இதை வரவேற்கிறேன் என்றும் கூறி என்னுடைய உரையை முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அளிக்கப்பட்டுள்ள 1998-99 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக என்னுடைய கருத்தைச் சொல்ல விழைகிறேன்.

பொதுவாக நமது இந்த நிதிநிலை அறிக்கை சமூகத்திலே உள்ள பெரும்பாலானவர்களுக்குத் திருப்தி அளிக்கக்கூடிய வகையில் அமைந்திருக்கிறது. தமிழகத்தில் இருக்கக்கூடிய வணிகர்கள், நல்லெண்ணம் கொண்டிருக்கக்கூடிய அரசியல் கட்சிகளுடைய தலைவர்கள் பாராட்டியிருப்பது பெருமிதம் ஆகும். அதிலும்கூட சில கருத்துக்கள், சில வரிகளிலே இதிலே விடுபட்டுப் போயிருக்கின்றன. முதலமைச்சர் சேர்த்துக் கொள்ள வேண்டும். ஆலோசனைகளை ஆக்கப்பூர்வமாக இன்றையதினத்திலே அரசியல் கட்சிகளினுடைய தலைவர்கள் வழங்கியிருக்கிறார்கள். ஏழை எளிய மக்கள் மீது வரிகளைச் சுமத்தாமல், பொருளாதாரத்திலே நலிந்து இருக்கிற மக்கள் வாங்கிச் சாப்பிடக்கூடிய பொருட்களுக்கெல்லாம் வரியை விலக்கி நல்லதொரு பட்ஜெட்டை நமது மாண்புமிகு முதலமைச்சரவர்கள் தந்திருக்கிறார்கள். அவர்களை நான் மனதாராப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-20

குறிப்பாக, மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையாக மாநில அரசு ஊழியர்களுக்கான சம்பளங்கள்; குக்கிராமங்களுக்காக 300 தொடக்கப் பள்ளிகள்; அதேபோன்று தமிழகத்திலே பெரு நகரங்களுக்கும் பாதாளச் சாக்கடை வசதிக்கு 269 கோடி ரூபாய் நிதி; மக்கள் எண்ணிக்கைகேற்றவாறு போக்குவரத்து வசதிகளை அதிகப்படுத்துவது, சென்னைப் பெருநகரத்திற்கு என்று வெள்ளத்தைத் தடுப்பதற்காக 300 கோடி ரூபாய்; அதேபோன்று தொழில் வளங்கள் நிறைந்த திருப்பூருக்கு, குடிநீர், கழிவுநீரகற்றும் பணிகளுக்காக 200 கோடி ரூபாய்; அரசு ஊழியர்கள் ஆவலோடு எதிர்பார்க்கின்ற ஏ1 சிட்டிக்கான அறிவிப்பு; மத்திய அரசு மற்றும் மாநில அரசு ஊழியர்கள் ஆவலோடு சென்னைக்கு ஏ1 சிட்டி அந்தஸ்து வராதா என்று ஏக்கத்தோடு இருக்கக்கூடிய நிலைமை; அதேபோன்று நகரப் பகுதிகளில் ஓலைக் குடிசைகளை மாற்றுகின்ற திட்டம்; அரசினர் மற்றும் அரசு உதவி பெறுகின்ற உயர்நிலைப்பள்ளிகளுக்கு 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை படிக்கின்ற மாணவர்களுக்கு இலவசமாகப் புத்தகங்கள்; அதேபோன்று விதவைகள், நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள், மீனவர்கள், நெசவாளர்களில் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு ரூ. 100 முதல் 150 வரை பென்ஷன்; மக்களுடைய அடிப்படையான வசதிகளைச் செய்து தருவதற்காக ஊராட்சிகளுக்கும் சிற்றூராட்சிகளுக்கும் சுமார் 839 கோடி ரூபாய் நிதி உதவி அளித்தல்; அமைப்பு ரீதியாகத் திரட்டப்படாத தொழிலாளர்களுக்கு வாரியங்கள் அமைத்தல் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சரவர்கள் ஏழை எளிய மக்கள் எதிர்பார்க்கின்ற திட்டங்களை மனத்திலே கொண்டு, இந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்படவிருக்கின்றன என்பது பாராட்டுக்குரியது.

அதோடு மட்டுமல்ல, நினைத்துப் பார்க்கக்கூடியவர்கள்தான் நினைத்துப் பார்க்க முடியும்.. சுதந்திரப் பொன் விழாவை முன்னிட்டு சுதந்திரப் போராட்டத் தியாகிகளை வணங்குகின்ற வகையில் நினைவுபடுத்தக்கூடிய விதத்தில் சுபாஷ் சந்திரபோஸ் அவர்களுடைய சிலை திறந்து வைக்கப்பட்டிருப்பது, அரசியல் சட்டத்தை உருவாக்கிய சட்ட மேதை டாக்டர் அம்பேத்கர் அவர்கள் பெயரில் அம்பேத்கர் மணிமண்டபம் அமைக்கும் பணி தொடங்கப்படும் என்று அறிவித்திருப்பது, பொதுவுடைமைக் கட்சியினுடைய இலக்கிய மேதை ப. ஜீவானந்தம் அவர்கள் பெயரில் ஜீவா நினைவிடம் அமைக்கப்பட்டிருப்பது, வீரன் சுந்தரலிங்கம் நினைவுக் கிராமம், புலித்தேவன் வாழ்ந்த இடத்தைப் புதுப்பிப்பது, இதுபோன்று



தமிழகத்தினுடைய முதலமைச்சரவர்கள் நம்முடைய தேசத்தினுடைய தலைவர்களுக்குப் பெருமை சேர்க்கக்கூடிய விதத்தில் அவர்களையெல்லாம் நினைவுகூரக்கூடிய விதத்தில், எதிர்காலத்தில் நம்முடைய இளைஞர்கள் பார்த்து உணரக்கூடிய விதத்தில் நல்ல திட்டங்களைத் தீட்டி, அவற்றையெல்லாம் நினைவுபடுத்தியிருப்பது வரவேற்கத்தக்கது.

அதேபோன்று விவசாயத் தொழிலாளர்களில், 60 வயது மிகுந்து இருக்கக்கூடியவர்களுக்கு ரூ. 100 முதல் ரூ. 150 பென்ஷன் என்று அறிவித்திருப்பதிலே சில விதிகளை மாண்புமிகு முதலமைச்சரவர்கள் தளர்த்த வேண்டும். மூத்த மகன்கள் இருந்தால் அவர்களுக்கு இந்த நிதிகளைப் பெறுவதில் சில தடைகள் இருக்கின்றன. அதிலே விதிகள் இருக்கின்றன. 60 வயதுக்கு மேற்பட்டிருக்கிறவர்கள் வருவாய்த் துறை அலுவலகத்திலே மனுக்கொடுத்து அலைகிற நிலைகளை மாற்றி, குறிப்பாகச் சட்டமன்ற உறுப்பினர்கள் பரிந்துரை செய்தால், அதையாவது எடுத்துக்கொண்டு அவர்களுக்கு உடனடியாக உதவி வழங்குகின்ற முறையில் சில விதிகளைத் தளர்த்த வேண்டுமென்று நான் அவர்களைக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு மட்டுமல்ல, தமிழகத்தினுடைய மதிக்கத்தக்க இலக்கியவாதிகளில் ஒருவரான நம்முடைய வேலூர் ராகவன் அவர்கள் தமிழில் மொழிபெயர்த்திருக்கிற கார்ல் மார்க்சினுடைய மூலதானம், அவர்களுக்காகக் கொடுக்கப்படுகிற 5 லட்சம் ரூபாய் நிதி, இதையெல்லாம்......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** "மூலதனம்".

**திரு. ஜி. பழனிசாமி:** மூலதனம். அதற்கு 5 இலட்சம் நிதி.

நம்முடைய தமிழ் அறிஞர்களை இன்றைக்கு நினைவுகூர்கின்ற வகையில் காப்புத் தொகையெல்லாம் வழங்கப்பட்டிருக்கிறது.

இதோடு மாண்புமிகு முதலமைச்சரவர்களுக்கு நான் ஒன்று நினைவுகூர்வது, கம்யூனிஸ்ட் கட்சியிலே சில தலைவர்கள் சுதந்திரப் போராட்டத் தியாகிகளாக இருந்து, கம்யூனிஸ்ட் கட்சியிலே இருக்கிற காரணத்தினால் ஏற்கெனவே இருந்திருக்கிற அரசியல் மறந்திருக்கிறது.

திரு. பி. சீனிவாசராவ், சுதந்திரப் போராட்டத்தில், பண்டிதர் நேரு மகாத்மா காந்தி ஆகியவர்களுக்கு வேண்டுகோள் விடுத்து, சென்னையிலே அன்னியத் துணி எதிர்ப்புப் போராட்டத்திலே பங்குகொண்டவர்.

வெள்ளையர்களால் அடித்துக் கூவம் நதியிலே போடப்பட்டு பின்னர் ஒரு பெண்மணியால் பாதுகாக்கப்பட்டு, பல்வேறு போராட்டங்களிலே சிறை சென்றவர், நாடு கடத்தப்பட்டவர். அவர் திருத்துறைப்பூண்டியில் ஆண்டான் அடிமைக்கு உள்ளாகிய விவசாயத் தொழிலாளர்கள், அரிஜன மக்கள் பாதிக்கப்பட்டிருந்த இடத்தில் அந்த மக்களை ஒன்று திரட்டி அவர்களுக்காகப் போராடியவர். அந்த உத்தமத் தலைவருக்கு ஒரு நினைவுச் சின்னமாவது எழுப்ப வேண்டுமென்று சென்ற தடவை மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம் இங்கே கேட்டுக்கொண்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விவரங்களைக் கேட்டிருக்கிறார்கள். அதையும் இதில் இணைத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-25

அதேபோல, தமிழகத்தில் உணவு தானிய உற்பத்தி 94.92 இலட்சம் டன் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று சொல்லியிருக்கிறீர்கள். அதிலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பணிவோடு வேண்டிக் கேட்டுக்கொள்வது—விவசாயிகள் எந்த அளவுக்கு ஆர்வத்தோடு இருக்கிறார்களோ அந்த அளவுக்குத்தான் உணவு தானிய உற்பத்தி செய்ய முடியும். அரசாங்கம் எதிர்பார்ப்பதைவிட, அரசாங்கம் திட்டமிடுவதைவிட, விவசாயிகள் எந்த அளவுக்குச் செழிப்பாக, ஆர்வத்தோடு இருக்கிறார்களோ, அதன்மூலம் தமிழகத்திலே உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெறுவதற்கான வாய்ப்புக்களை உருவாக்க முடியும். ஆனால் சமீபத்தில் தமிழகத்தில் 14 ஆண்டு காலத்திற்குப் பிறகு நடப்பாண்டில் தான் நவம்பர் மாதம் பெருமழை பெரும் பகுதிகளில் பெய்திருக்கிறது.

ஒரு வரலாறு சொல்வார்கள். தஞ்சை மாவட்டம் வெள்ளம் போனால், தமிழகமே விளையும்; தமிழகமே விளைய ஆரம்பித்தால், தஞ்சை மாவட்டம் அழிந்துபோகும். இது நம்முடைய வரலாறு. ஆக, இப்படிப்பட்ட வரலாற்றில் கடந்த நவம்பர் மாதம் தஞ்சை, திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்களில் பெரும் பகுதிகள் பாதிப்புக்குள்ளாயின. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பின்னால் ஒன்றுமே செய்யவில்லையென்று சொல்வதற்கில்லை. சென்ற ஆண்டு வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கின்ற விவசாயிகளுக்கு 45 கோடி ரூபாய் நிவாரணம் வழங்குவதற்கும் 10 கோடி ரூபாய் அளவில் ஆறுகளை ஆழப்படுத்துவதற்கும் என்று பணம் ஒதுக்கினார்கள். நடப்பாண்டில் நவம்பர் மாதத்தில் ஏற்பட்டிருக்கின்ற பெருவெள்ளத்தால்





பாதிக்கப்பட்டவர்களுக்கு 58.95 கோடி ரூபாய் பணம் ஒதுக்கினார்கள். ஆறுகளை ஆழப்படுத்தும் திட்டங்களுக்கு 20 கோடி ரூபாய் பணம் ஒதுக்கித் தந்தார்கள். நேற்றையதினம் என்னுடைய மாவட்டத்தில், என்னுடைய தொகுதியில் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் மற்றும் மரியாதைக்குரிய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் எல்லாம் அந்தப் பணிகளைத் துவக்கினார்கள். விவசாயிகள் ஆர்வத்தோடு அந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டார்கள். நிறைய நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்வது, பொதுப்பணித் துறை நிருவாகத்தில் நீங்கள் இரண்டு ஆண்டு காலமாக 100 கோடி ரூபாய்க்கு மேலாக நிதி ஒதுக்கியும், வெள்ளத்தைத் தடுக்க முடியாத நிலைமை. அதிகமாகத் தண்ணீர் வருகின்றபோது அந்த நிலை ஏற்படுகிறது. ஆகவே, உடனடியாக நீங்கள் 40 கோடி ரூபாய்க்குத் திட்டமிட்டிருப்பதாக பொதுப்பணித் துறையினுடைய அதிகாரிகளெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். எனவே, நீங்கள் குறைந்தபட்சம் அந்த 40 கோடி ரூபாயாவது கொடுத்து இந்த ஆண்டு முழுமை பெற்றால் நிச்சயமாக அந்த விவசாயிகள் மகிழ்ச்சியோடு விவசாயத்திலே ஈடுபடுவார்கள். வேளாண்மை உற்பத்தியிலே ஈடுபடுவார்கள். ஆக, காவிரியிலே ஜூன் மாதம் தண்ணீர் திறக்க வேண்டுமென்பதில்கூட, அந்தப் பணிகளை முடித்து அதற்குப் பின்னால் திறந்தால்கூட நிச்சயமாக அந்த விவசாயிகள் ஆர்வத்தோடு உற்பத்தியில் ஈடுபட முடியும் என்று நான் சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதேபோன்று மூன்று ஆண்டு காலமாக விவசாயிகளுடைய கூட்டுறவுக் கடன்கள், அவர்கள் பெற்றிருக்கின்ற கடன்கள் ஒத்திவைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஒத்திவைப்பதன் மூலமாக விவசாயிகள் அந்தக் கடனிலேயிருந்து விடுபட்டுவிடுவார்கள் என்று யாரும் எண்ணிப் பார்க்க முடியாது. அதற்கு வட்டி, மூன்று ஆண்டு காலமாக வட்டிக்கு வட்டியும் வந்து, முதலும் சேர்ந்து அந்த விவசாயிகளுடைய சொத்து மதிப்பைவிடக் கூடுதலாகக் கடன்களைப் பெற்றிருக்கிறார்கள். ஆக, எப்படி நிம்மதியாக விவசாயம் செய்ய முடியும் என்று தாங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அதேபோல சென்ற தடவை விவசாயிகளுடைய பயிர், 1,39,000 எக்டேர் அந்தப் பகுதியிலே பாதிக்கப்பட்டிருக்கிறது. 79 சதவிகிதம் விவசாயம் முற்றிலும் அழிந்துபோய் இருக்கிறது என்றெல்லாம் அரசாங்கத்தின் மூலமாகக் கணக்குகள் சொல்லப்பட்டிருக்கின்றன. எனவே, கூட்டுறவுக் கடன்களை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள்

[திரு. ஜி. பழனிசாமி] [1998 மார்ச் 30

என்ன செய்யலாம் என்று இங்கே யோசிக்க வேண்டும். அந்த விவசாயிகளுக்கு வாழ்வு அளிக்கக்கூடிய விதத்திலே கூட்டுறவுக் கடன்களை நீங்கள் தள்ளுபடி செய்து கொடுக்க வேண்டுமென்று பணிவோடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு கிஸ்தி வசூல், கூட்டுறவுக் கடன் வசூல்களில் தீவிரமாக அதிகாரிகள் முனைப்புக் காட்டிக்கொண்டிருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்தினுடைய விவசாயிகள் உங்களை மிகவும் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் அந்தக் கூட்டுறவுக் கடன்களைத் தள்ளுபடி செய்து கொடுக்க வேண்டுமென்று நான் மீண்டும் உங்களைப் பணிவோடு வேண்டிக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, ஆயிரம் பேர் இருக்கின்ற கிராமங்களுக்குச் சாலைகள். என்றும் இல்லாத வகையில் ஓராண்டு காலத்திற்குள் கிராமங்களிலே இருக்கின்ற சாலைகள், தார்ச் சாலைகளாக மாற்றப்பட்டு உள்ளன. அனேகமாக எல்லாக் கிராமங்களிலேயும் தார்ச் சாலைகளை இந்த முறை பார்க்க முடிகின்றது. நாங்கள் அதை மறுக்கவில்லை. சாலைகள் அமைப்பதற்கான புதிய இயந்திரங்களை வைத்து இன்றைக்குச் சாலைகள் மேடுபள்ளங்களில்லாத அளவிற்கு, கான்ட்ராக்ட்காரர்கள், ஒப்பந்தக்காரர்கள் தவறு செய்ய முடியாத அளவிற்கு இன்றைய தினத்திலே சாலைகள் அமைக்கப்பட்டிருப்பது உண்மையிலேயே வரவேற்க வேண்டிய ஒன்றாகும்.

*பிற்பகல் 12-30*

அதேபோல, எங்களுடைய மாவட்டத்திலே வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு, சீரழிந்திருக்கிற சாலைகளுக்குக் கொஞ்சம் முன்னுரிமை கொடுத்து, அந்தச் சாலைகளையும் அமைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். பேரூராட்சி, சிற்றூராட்சி ஆகியவற்றில் கழிப்பிடங்களைக் கட்டுவதற்கான திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இந்த அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்காக பல வருடங்களாகக் கோரிக்கைகள் வந்து கொண்டிருக்கின்றன. துப்பரவுப் பணியாளர்களாகப் பணிபுரியக்கூடியவர்களுக்கு, அவர்கள் வைத்திருக்கிற கோரிக்கை என்னவென்றால், எங்களுடைய வேலைகளுக்கு உத்தரவாதம் இல்லாமல் இருக்கிறது என்பதுதான். அரசாங்கம் அளிக்கக்கூடிய சலுகைகளை நாங்கள் பெற முடிவதில்லை என்று சொல்கிறார்கள். சிற்றூராட்சியிலே துப்பரவுப் பணியாளர்களாக இருக்கிற எங்களுக்கு வாழ்வளிக்க



1998 மார்ச் 30] [திரு. ஜி. பழனிசாமி]

வேண்டும்; உத்தரவாதம் வேண்டும் என்று அவர்கள் கேட்டுக்கொள்கிறார்கள். அதையும் நீங்கள் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் சலுகைகளைப் போன்று இவர்களுக்கும் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, இன்றைக்கு இருக்கிற மாநில நெடுஞ்சாலைகள் - நாகப்பட்டினத்திலிருந்து கரூர் வரை, சேலத்திலிருந்து உளுந்தூர்பேட்டை, பாண்டிச்சேரியிலிருந்து கிருஷ்ணகிரி வரையுள்ள சாலைகளை தேசிய நெடுஞ்சாலைகளாக மாற்றியமைத்திருப்பது உண்மையிலேயே வரவேற்க வேண்டிய ஒன்றாகும். அதேபோன்று, தமிழகத்திலே நெடுந்தூரம் இருக்கக்கூடிய சாலைகளைப் புனரமைத்திருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் பாராட்டுகின்றேன்.

அதேபோல், சென்னையிலேயிருந்து கடலூர் வரையிலேயும், சேதுசமுத்திரத் திட்டத்தினுடைய சாலைகளும் சிறப்பாக அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், அதற்குப் பின்னர் இருக்கக்கூடிய கிழக்குக் கடற்கரைச் சாலைக்கான பணிகளை இன்றையதினத்திலே வேகமாகத் தொடங்குவதற்கு நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிடவில்லை. எங்களுடைய பகுதியிலேகூட அந்தச் சாலைகளை அமைப்பதற்காக அளந்து, சர்வே செய்கிற பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிற காரணத்தால், அதற்கான நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறதா என்பது பற்றிய விவரங்கள் எல்லாம் நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப்படவில்லை. அதுபற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதிலுரையில் சொல்வார்கள் என்று கருதுகிறேன்.

அதேபோன்று, காவிரி நதி நீர்ப் பிரச்சினை சம்பந்தமாகப் பல்வேறு விவாதங்கள் இந்த மன்றத்திலே நடந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அந்தக் காவிரி நதி நீர் சம்பந்தமாக சில விளக்கங்களை, அறிக்கைகளைத் தந்திருக்கிறார்கள். அதேபோன்று தேசிய நதி நீர்த் திட்டங்களை எல்லாம் மத்திய அரசு கொண்டு வருகிற இந்தச் சூழ்நிலையில், தென்னக நதிகளை இணைப்பதற்காக, இந்தியாவிலேயே ஒரு முன்மாதிரியான திட்டத்தை உருவாக்குவதற்கு, தமிழக அரசு ஒரு தனித் திட்டத்தை உருவாக்கி, ஒரு தனித் தீர்மானத்தை இந்த மன்றத்திலே நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்ப வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

[திரு. ஜி. பழனிசாமி] [1998 மார்ச் 30

சமீபத்திலே செயற்கை இழை நூல்களுக்கு இரண்டு சதவீதத்திலேயிருந்து 8 சதவீதமாக வரியினை உயர்த்தியிருப்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மறுபரிசிலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதன் மூலமாக இந்தத் தொழில் பாதிப்படைவதற்கான அபாயம் இருக்கிறது. குறைக்க வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

வேலையற்ற இளைஞர்கள் பல்லாயிரக்கணக்கான பேர் தமிழகத்திலே கேபிள் டி.வி. நடத்தக்கூடிய தொழிலிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இன்றைக்கு அனுமதி பெற வேண்டும் என்று சொன்னால், 10,000 ரூபாய் கட்ட வேண்டும் என்று இருக்கிறது. கிராமம், பேரூராட்சி, நகரங்கள் ஆகியவை போன்ற இடங்களிலே இந்தத் தொழிலிலே ஈடுபட்டுக்கொண்டிருக்கிற அவர்கள் கேட்கிறார்கள், மாநகராட்சிக்கு 10,000 ரூபாயாக இருக்கட்டும்;, பேரூராட்சிக்கு 5,000 ரூபாயாக இருக்கட்டும்; கிராமங்களிலே நடத்தக்கூடியவர்களுக்கு 2,000 ரூபாயாக இந்த வரியைக் குறையுங்கள் என்று கேட்கிறார்கள். அதேபோல் ஒரு கேபிள் டி.வி. இணைப்புக்கு 15 ரூபாய் கட்ட வேண்டும் என்று இருக்கிறது. அதை 5 ரூபாயாக ஆக்குங்கள் என்று கேட்கிறார்கள். அவர்கள், 'நாங்கள்கூட தவறு செய்கிறோம், 1000 இணைப்புகள் இருந்தால் 500 இணைப்புகளுக்குத்தான் பணம் கட்டுகிறோம், எனவே அதை 15 ரூபாயிலிருந்து 5 ரூபாயாக மாற்றுங்கள், நாங்கள் முழுமையாகக் கட்டி விடுகிறோம்; இல்லையென்று சொன்னால் எங்களை அதிகாரிகள் துன்புறுத்துகிறார்கள்' என்று அவர்கள் சொல்கிறார்கள். மேலும், இதன் மூலமாக நாங்கள் தவறு செய்யக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது என்றும் சொல்லக்கூடிய நிலைமைகள் இன்றையதினத்திலே இருக்கிறது. அதையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பரிசிலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய தொகுதிக்காக, தொடர்ந்து நான் வலியுறுத்திக் கொண்டிருக்கிற பிரச்சினை, திருத்துறைப்பூண்டி தாலுக்கா அரசு மருத்துவமனை பற்றியதாகும். இது 100 ஆண்டுகளுக்கு முன்பாகக் கட்டப்பட்ட மருத்துவமனை. அது விரிவுபடுத்தப்பட முடியாத நிலைமை இருக்கிறது. அங்கே ஒரு பெரிய மருத்துவமனையை ஏற்படுத்த அனுமதி தரவேண்டும் என்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். சென்ற ஆண்டும் கவன ஈர்ப்புத் தீர்மானம் மூலமாக நான் அதுபற்றிக் கேட்டிருந்தேன்.



1998 மார்ச் 30] [திரு. ஜி. பழனிசாமி]

அதேபோன்று, திருத்துறைப்பூண்டி வட்டத்தை இரண்டாகப் பிரித்து முத்துப்பேட்டையைத் தலைநகரமாகக் கொண்டு ஒரு தனி வட்டமாகத் தொடங்க வேண்டும் என்று நான் உங்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 12-35

கோட்டூர் ஊராட்சி ஒன்றியத்தில் 48 சிற்றூராட்சிகள் இருக்கின்றன. இதனால் அங்கு பணிகளை உடனடியாகச் செய்து முடிக்க முடியாத நிலையிருப்பதால், அதை இரண்டாகப் பிரித்து, இன்னொரு ஊராட்சி ஒன்றியத்தை அங்கு ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது அந்தப் பகுதியினுடைய நீண்டநாளைய கோரிக்கை. (மணியடிக்கப்பெற்றது) எனவே, அதனைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, தீயணைப்பு நிலையங்கள், திருத்துறைப்பூண்டி, முத்துப்பேட்டை மற்றும் கோட்டூர் ஆகிய இடங்களில் உள்ள தீயணைப்பு நிலையங்கள் வாடகைக் கட்டடங்களில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அவைகளுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கூட்டுக் குடிநீர்த் திட்டம். என்றும் இல்லாத அளவுக்கு, திருத்துறைப்பூண்டி, வேதாரண்யம் மற்றும் தலைஞாயிறு போன்ற பகுதிகளில் உள்ள மக்களுடைய நீண்ட நாளைய கோரிக்கையை நிறைவேற்றும் விதத்தில் அங்கு 105 கோடி ரூபாய் அளவிற்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம் தீட்டப்பட்டிருக்கின்றது. அதற்காக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் இதயப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நிதிநிலை அறிக்கையைப் பற்றிச் சொல்லவேண்டுமானால் வெளி நாட்டினுடைய மதுபானங்களுக்கும், பான் மசாலா போன்ற பொருட்களுக்கும் வரி விதித்திருப்பது வரவேற்கத்தக்கது. அதுபோன்று, வெளி மாநிலங்களில் இருந்து வாங்கக்கூடிய கார்களுக்கு வரி விதிக்கப்பட்டிருப்பதும் வரவேற்கத்தக்கது.

கள்ளச்சாராயத்தினால் கிராமப்புறங்களில் கலவரங்கள், சாதிச் சண்டைகள் உருவாகும் தேவையற்ற ஒரு நிலையிருக்கிறது. நம்முடைய மாநிலத்தில் கள்ளச்சாராயம் அதிகமாக இருக்கின்றது. காவல் துறையின்

[திரு. ஜி. பழனிசாமி] [1998 மார்ச் 30

அனுமதியோடு சில இடங்களில் கள்ளச்சாராயத் தொழில் நடக்கிறது. இன்றைக்குக் காவல் துறைக்கு மிகவும் சவாலாகப் பல பிரச்சினைகள் இருக்கின்றன. நம்முடைய மாநிலத்தில் என்றும் இல்லாத அளவுக்குத் தீவிரவாதிகள் தலையெடுத்ததைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் நம்முடைய காவல் துறை முழு வீச்சில் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில், இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறுவதைக் கட்டுப்படுத்துவதற்கு நீங்கள் ஏதாவது ஒரு முறையைக் கையாளவேண்டும். கள்ளச்சாராயத்தை ஒழிக்க என்ன சாராயம் கொண்டு வரலாம் என்று யோசித்துப் பாருங்கள். அதனால் அரசுக்கும் வருமானம் கிடைக்கும். சாதாரண, ஏழை எளிய மக்கள் எதையாவது சாப்பிட்டுவிட்டு அவர்கள் வாழ்வு வீணாகும் நிலைமைகள் இருக்கின்றன. இதற்கு என்ன செய்யலாம் என்பது பற்றி அரசு சிந்திக்க வேண்டும்.

அடுத்து, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அளித்துள்ள வரவு-செலவுத் திட்ட அறிக்கையில், 15,039.46 கோடி ரூபாய் வருவாய் என்றும், செலவுக் கணக்கில் 18,048.04 கோடி ரூபாய் என்றும், பற்றாக்குறை 3008.58 கோடி ரூபாயாக உயரும் என்றும், நிகரப் பற்றாக்குறை 876.67 கோடி ரூபாயாக இருக்கும் என்றும், எதிர்பார்க்கக்கூடிய வரவு 340 கோடி ரூபாயும், இறுதிப் பற்றாக்குறையாக 536.67 கோடி ரூபாய் எனவும் இருக்கும் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்வது என்னவென்றால், இறுதிப் பற்றாக்குறையைச் சரிகட்டுவதற்கு, ஒன்று, அறிவித்த திட்டங்களைக் குறைக்கவேண்டும். இல்லையென்றால், நேர்முக அல்லது மறைமுக வரிகளைப் போடவேண்டும். இரண்டில் ஏதாவது ஒன்றைச் செய்யவில்லை என்று சொன்னால், அறிவித்த திட்டங்களை முழுமையாக நிறைவேற்றிவிட்டோம் என்று சொல்லமுடியாது. அதற்கு ஒரு மாற்றத்தை நீங்கள் செய்தாக வேண்டும். மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடந்த முறை சிக்கன நடவடிக்கையை மேற்கொண்டதன் மூலமும், அதில் முழுக் கவனத்தைச் செலுத்தியதன் மூலமும், ஆடம்பர விழாக்கள், தேவையற்ற செலவினங்கள் ஆகியவற்றைக் குறைத்ததன் மூலமும் இந்த நிதிநிலை அறிக்கை செம்மைப்படுத்தப்பட்டிருக்கிறது.

அடுத்து சிறு சேமிப்புத் திட்டம்; மேற்கு வங்காளத்தை எடுத்துக் கொண்டால் அங்கு 3.8 சதவிகிதம் சிறு சேமிப்பு மூலமாக அதிகம் வசூல் செய்திருக்கிறார்கள். அதுபோன்று கர்நாடகாவில் 2.8 சதவிகிதம் அதிகரித்திருக்கிறது. பஞ்சாபில் 1.8 சதவிகிதம் அதிகரித்து இருக்கிறது. ஆந்திரம், கர்நாடகம், கேரளம் ஆகிய மாநிலங்களில் 2.8 சதவிகிதம்



1998 மார்ச் 30] [திரு. ஜி. பழனிசாமி]

அதிகரித்து இருக்கிறது. ஆனால், தமிழகத்தில் 1.3 சதவிகிதம்தான் அதிகரித்திருக்கிறது. தமிழகத்தில் 18-க்கும் மேற்பட்ட போலி நிதி நிறுவனங்கள் கவர்ச்சிகரமான திட்டங்களை அறிவித்து, சுமார் 240 கோடி ரூபாய்க்கும் மேலாக ஏழை எளிய மக்கள், அரசு ஊழியர்கள் போன்றோரிடம் பணம் வசூல் செய்து, இன்றைக்கு மோசடி செய்திருக்கிறது. அதெல்லாம் கண்டுபிடிக்கப்பட்டும்கூட அந்த நிதி நிறுவனங்களை நம்பிப் பணம் கட்டியவர்களுக்கு, பணம் போய்ச் சேரவில்லை. அரசாங்கம் சிறு சேமிப்புத் திட்டத்தைத் விரிவுபடுத்தி, இன்றைக்கு இருக்கின்ற சிற்றூராட்சிகளில், மக்களால் தேர்தெடுக்கப்பட்ட அந்த அமைப்புகளின் மூலமாக சிறு சேமிப்பை ஊக்கப்படுத்தினால், இதுபோன்ற மோசடிகள் குறைய நல்ல வாய்ப்பு இருக்கிறது.

ஆகையால் சிறு சேமிப்பு ஆர்வம் அதிகப்படுத்தப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். திட்டங்கள் முழுமையாக நிறைவேற்றப்பட வேண்டுமென்று சொன்னால் வருவாயைப் பெருக்க முனைப்போடு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியிருந்தாலும், இன்றையதினத்திலே திட்டங்கள் சரிவர நிறைவேற, உரிய அதிகாரிகளுடைய கண்காணிப்பு அவசியம். ஊழலற்ற முறையில் நடவடிக்கை எடுப்பதற்கு நீங்கள் தெரிவித்திருக்கின்ற நல்ல ஆலோசனைகளையும் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-40

அரசு ஊழியர்களின் ஊதிய விகிதங்களை உயர்த்தியுள்ள இந்நிலையில் அவர்களுடைய உழைப்பை நல்ல முறையில் பயன்படுத்தி, பணிகளை நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும். சில அதிகாரிகளிடத்தில் அலட்சியப் போக்கு காணப்படுகிறது. இதனை எங்களால் காண முடிகிறது. (மணியடிக்கப்பெற்றது) இது தவிர்க்கப்பட வேண்டும். விலைவாசி ஏறாமல் இருப்பதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழகத்திலே பணியாற்றுகின்ற சில அதிகாரிகள் எங்களிடத்திலே பேசுகிறபோது சொல்கிறார்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களில் சிலர் எங்களைத் தரக்குறைவாகப் பேசுகிறார்கள் என்று. அது தவிர்க்கப்பட வேண்டும். சில அதிகாரிகள் தவறு செய்வது உண்மை. சட்ட ரீதியான நடவடிக்கை அவர்கள் மீது எடுக்கப்பட வேண்டும். 10 பேரை வைத்துக்கொண்டு தரக்குறைவாகப் பேசுவது என்பதுதான்

எங்களுக்கு மன வருத்தமாக இருக்கிறது என்று சில அதிகாரிகள் மனம் விட்டு எங்களிடம் சொல்கிறார்கள். இதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. பழனிசாமி அவர்கள் சீக்கிரம் பேசி முடிக்க வேண்டும்.

**திரு. ஜி. பழனிசாமி:** அடுத்து, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மாண்புமிகு அமைச்சர்களெல்லாம் சென்று பார்த்து, பள்ளத்தில் வாழ்கின்ற மக்களுக்கு பக்கத்திலுள்ள மேடான இடங்களில் குடியிருப்பு இடங்களை வாங்கி, வீடுகளைக் கட்டித் தருகிற ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்தி, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாக அந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன, அவர்கள் பள்ளமான பகுதிகளை எல்லாம் சர்வே செய்கிறார்கள். விளக்கம் கேட்டால் போதுமான நிதியில்லை, குறிப்பிட்ட அளவுக்கு நிதி ஆதாரம் இல்லை, ஆகவேதான் இந்த இடங்களைத் தேர்வு செய்கிறோம் என்கிறார்கள். இதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும்.

சமீபத்திலே தாம்பரத்திலே, ரங்கனாதபுரம் என்ற இடத்திலே தீவிரவாதிகளிடமிருந்து வெடிகுண்டுகள் பிடிபட்டதாக பரபரப்பான செய்தி வந்தது. சென்னைக் காவல் துறை அதிகாரி தொலைக்காட்சியில் தோன்றி, இதில் ஈடுபட்டவர்கள் யார், எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள், எந்த வீட்டிலே எப்படி தங்கியிருந்தார்கள் என்ற விளக்கங்களையெல்லாம் அத்தாட்சிகளோடு, - கட்சி உறுப்பினர் அட்டையைக் காட்டிச் சொன்னார்கள். அவர் கூறிய விவரங்களை நானும் கேட்டேன். இன்றைக்கு முன்னாள் முதலமைச்சர், அம்மையார் ஜெயலலிதா அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள், ஒவ்வொரு கட்சியிலும் தீவிரவாதிகள் சிலர் இருக்கலாம். திராவிட முன்னேற்றக் கட்சியிலே உள்ள ஒருவர் தீவிரவாதியாக இருக்கலாம். கம்யூனிஸ்ட் கட்சியிலே உள்ள ஒருவர் தீவிரவாதியாக மாறியிருக்கலாம். காங்கிரஸ் கட்சியிலே உள்ள ஒருவர் தீவிரவாதியாக மாறியிருக்கலாம். அவர்கள் ஏதோவொரு இயக்கத்தில் இருந்திருக்கலாம். சூழ்நிலையின் காரணமாக அவர்கள் மாறியிருக்கலாம். ஒரு அரசியல் கட்சிக்குத் தலைமையேற்று இருப்பவருக்கு நாணயமும், யோக்கியமும் வேண்டும். ஆனால் அதற்கு மாறாக முன்னாள் முதலமைச்சர் இன்றைக்கு எவ்வளவு கேவலமான முறையிலே, பொறுப்பற்ற முறையிலே (குறுக்கீடு) அறிக்கை விட்டிருக்கிறார்.





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு பி.ஆர். சுந்தரம், உங்கள் கட்சி உறுப்பினர் பேசுகிற வாய்ப்பு வரும்போது பதில் சொல்லலாம். நீங்கள் இப்போது உட்காருங்கள். வரிக்கு வரிக்கு எழுந்திருந்தால் எப்படி? (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். திரு. பழனிசாமி, சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** ஒரு அரசியல் கட்சித் தலைவருக்கு உள்ள தார்மீகப் பொறுப்பில்லாமல், பொறுப்பற்ற முறையிலே - மாண்புமிகு முதலமைச்சர் பெயரைச் சொல்வதற்கு மன்னிக்க வேண்டும் - கருணாநிதி, கருணாநிதி என்று 10 தடவை பெயரைச் சொல்லி, வெடிகுண்டு பிடிபட்ட சம்பவத்தில் தொடர்புடையவர்களின் சித்தப்பா, பெரியப்பா திராவிட முன்னேற்றக் கழகத்தில் உறுப்பினர் என்று சொல்லி, கேலிக்கூத்தான வகையிலே, தீவிரவாதத்திற்கு ஆதரவு கொடுக்கின்ற வகையில், எந்த அளவில் அறிக்கை விட்டிருக்கிறார்கள் என்பதை நாட்டு மக்கள் உணர்வார்கள். இது எவ்வளவு மோசமானது என்பதை நாட்டு மக்கள் புரிந்துகொள்வார்கள் என்று சொல்லி, பேச வாய்ப்பு அளித்தமைக்கு, பேரவைத் துணைத் தலைவருக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அனுமதியோடு இந்தப் பதிலைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கிழக்குக் கடற்கரைச் சாலை அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்வது பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டுமென்று உறுப்பினர் கேட்டிருக்கிறார்கள். கிழக்குக் கடற்கரைச் சாலைப் பணியானது கடலூர் வரை முடிவுற்று, கடலூரிலிருந்து 375 கிலோமீட்டருக்கு, உலக வங்கி உதவியோடு, 900 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. Road Sector Project என்ற திட்டத்தின் அடிப்படையிலே அந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-45

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. குழந்தை தமிழரசன்.

[1998 மார்ச் 30

**திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் முகவரியாய், தமிழகத்தின் வரலாறாய், தமிழாய் வாழ்ந்து கொண்டிருக்கும் நமது மாண்புமிகு முதல்வர் அவர்களின் சிந்தையில் உதித்து, அவர்களின் திருக்கரத்தால் 10 ஆவது முறையாக இந்த மாமன்றத்தில் வைக்கப்பட்டிருக்கும் 1998-99 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை, செந்தமிழ நாட்டு செழுமிய தமிழர்களெல்லாம் களிப்புடன் வரவேற்றுக் கொண்டிருக்கிறார்கள். இந்த வேளையில் அந்த உரையின் மீது நடைபெறுகின்ற பொது விவாதத்தில் கலந்து கொண்டு என்னுடைய கருத்துக்களை வைப்பதில் நான் பெருமையடைகின்றேன். அந்த வாய்ப்பை எனக்கு நல்கிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் 10 ஆவது முறையாக இந்த மாமன்றத்திலே இந்த நிதிநிலை அறிக்கையை வைத்திருக்கிறார்கள் என்று நான் அழுத்தமாகக் குறிப்பிட்டதற்குக் காரணம், 10 என்கிற சொல்லுக்கும், எழுத்திற்கும் ஒரு வரலாற்றுத் தொடர்பு இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு, சங்க இலக்கியங்கள் மிகவும் பிடிக்கும். அந்தச் சங்க இலக்கியத்தில்தான் பத்துப்பாட்டு வருகிறது, பதிற்றுப்பத்து வருகிறது. எட்டுத் தொகைக்குள் ஒரு பதிற்றுப் பத்தும், தனியாக ஒரு பத்துப்பாட்டும் வருகிறது. உலகப் பொதுமறையாம் திருக்குறளுக்கு நம்முடைய தலைவர் அவர்கள் ஒரு அற்புதமான உரையை எழுதியிருக்கிறார்கள். திருவள்ளுவருடைய சிலையை வருகின்ற ஆண்டிற்குள் குமரி முனையிலே நிறுவுவதற்கு அவர்கள் முயற்சி செய்து வருகின்றார்கள். அதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தத் திருக்குறளை யாத்த திருவள்ளுவர், தன்னுடைய ஒவ்வொரு அதிகாரத்திற்கும் பத்து குறள்களைத்தான் அடிப்படையாக வைத்து எழுதியிருக்கிறார்கள். உலகத்தின் அதிகமான மக்களுடைய கடவுளாகக் கருதப்படுகின்ற ஏசுநாதர் தன்னுடைய சீடர்களுக்கு, பத்துக் கட்டளைகளைத்தான் வழங்கியிருக்கிறார்கள்.—Ten Commandments—சங்க காலத்திற்குப் பின்னால் 10 ஆவது நூற்றாண்டில்தான் தமிழர்களுக்குப் பெரியதொரு வாழ்வு கிடைத்தது. அதற்குப் பின்னால், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய இந்த ஆட்சியில்தான் தமிழர்களுக்கு ஒரு பெரிய பொற்காலம் நிகழ்ந்திருக்கிறது என்பதை நான் பெருமையோடு இந்த மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மனிதனுக்குள்ள பத்து விரல்கள், தன்னுடைய அதிகப்படியான கடமைகளைச் செய்வதற்குப் பயன்பட்டு வருகின்றன. அதைப்போல,





நம்முடைய முதல்வர் அவர்களுடைய பத்து விரல்களின் அசைவினில் உருவாக்கப்பட்ட இந்த நிதிநிலை அறிக்கை தமிழர்களுடைய வாழ்வில் ஒரு பொற்காலத்தை உருவாக்கியிருக்கிறது என்பதை நான் பெருமைபடத் தெரிவித்துக்கொள்கிறேன். விதி என்பது மூடத்தனம்; விரல்கள்தான் மூலதனம்.

"உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு"

என்று சொல்வார்கள். ஆடை அவிழ்கின்றபோது கைகளிலே இருக்கின்ற விரல்கள்தான் விரைந்து சென்று ஆடையைக் காப்பாற்றும்; கைப்பற்றும். அந்தவிதத்தில் தமிழர்களுடைய மானத்தைக் காப்பாற்றுகின்ற ஒரு நல்ல நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள் என்பதை நான் பெருமைபடச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அந்தப் பத்துக் கட்டளைகள் ஏசுநாதர் கொடுத்தது அல்ல. அவர் உலகத்தில் தோன்றுவதற்கு முன்னாலேயே விண்ணுலகத்திலிருந்து தேவன் அசரீரியாகக் கொடுத்தது என்று பைபிளிலே சொல்லப்பட்டிருக்கிறது.

**திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதை ஏற்றுக்கொள்கிறேன்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குறிப்பைச் சரிப்படுத்துவதற்காக நான் சொல்கிறேன். அசரீரியாக மோசஸ் தீர்க்கதரிசிக்கு வழங்கப்பட்டது. அதுதான் பத்துக் கட்டளைகள்.

**திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 10 மாதம் கவனமாகச் சுமந்து ஒரு தாய் தன் குழந்தையை ஈன்றெடுக்கிறாள். அதைப்போலத்தான் பத்தாவது நிதிநிலை அறிக்கையை நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் மிக்க் கவனமாக, எதிர்காலச் சிந்தனையோடு, வாக்களித்த மக்களுடைய வளமான வாழ்க்கையைக் கருத்தில் கொண்டு, நல்ல பல திட்டங்களை உள்ளடக்கி, அற்புதமான, ஒரு சுகமான பிரசவத்தை - நிதிநிலை அறிக்கையை - தமிழக மக்களுக்கு ஈன்று கொடுத்துள்ளார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. குழந்தை தமிழரசன்] [1998 மார்ச் 30

பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிடுவார்கள்:

"Go to the people; live among them; learn from them; love them; serve them; plan with them"

என்று சொல்வார்கள். மக்களிடம் செல்லுங்கள்; அவர்களோடு பழகுங்கள்; அவர்களோடு பணியாற்றுங்கள்; அவர்களுக்காக உதவிடுங்கள்; அவர்களோடு இருந்து திட்டங்களைச் செய்யுங்கள் என்று சொல்வார்கள்.

பிற்பகல் 12-50

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு பாயின்ட் ஆஃப் ஆர்டர். அந்தப் பழமொழியைச் சொன்னவர், மா சே துங் என்று நான் நினைக்கிறேன். தயவுசெய்து, அதை நீங்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'மக்களிடம் செல்லுங்கள்; மக்களிடம் கற்றுக் கொள்ளுங்கள்' என்கிற இந்தப் பழமொழியைச் சொன்னவர், மாமேதை லெனின்...

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மா சே துங் சொன்னதோ, லெனின் சொன்னதோ, எல்லாவற்றையும் நமக்குத் தெரிவித்தவர் அண்ணா என்ற முறையிலே, அவர் அண்ணா என்று சொன்னார்.

**திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுக்கு லெனினையும் தெரியாது; மா சே துங் அவர்களையும் தெரியாது. எங்களுக்கு அண்ணாவைத் தெரியும்; அண்ணாவிற்குப் பின்னால், அண்ணாவாக வாழ்ந்து கொண்டிருக்கிற மாண்புமிகு முதல்வரைத் தெரியும். ஆதலால், அண்ணா சொன்ன கருத்துக்களை, அண்ணா சொன்ன அந்த வாசகத்தைத்தான் நான் குறிப்பிட்டேன்; நான், அண்ணாதான் இதைச் சொன்னார் என்று சொல்லவில்லை...

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், லெனினைத் தெரியாது; மா சே துங்-ஐத் தெரியாது; ஆனால், கலைஞரைத் தெரியும் என்றார்கள். ஆனால் கலைஞருக்கு, மா சே துங்-ஐயும் தெரியும்; லெனினையும் தெரியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1998 மார்ச் 30]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அது அவருக்கும் தெரியும்.

**திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தலைவருக்குத் தெரிந்தால், அது தொண்டருக்கும் தெரியும். அந்த அடிப்படையிலே அது எங்களுக்கும் தெரியும்.

அடுத்து, இந்த நிதிநிலை அறிக்கையைப் பல்வேறு தரப்பினுடைய தலைவர்களும், பத்திரிகைகளும், பொதுமக்களும், வணிகர்களும் பாராட்டியிருக்கிறார்கள். இந்த மாமன்றத்திலே அமர்ந்திருக்கின்ற பிரதான எதிர்க்கட்சியினுடைய தலைவர் அவர்களும், ஏனைய கட்சிகளினுடைய தலைவர்களும் பெரிதும் வரவேற்றுப் பாராட்டியிருக்கிறார்கள். அவர்கள் குறிப்பிடுகிறபோது, ஆலோசனைகளாக சில கருத்துக்களைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அது எதிர்க்கட்சிக்கே உரிய இலக்கணம். 'நயத்தகு நாகரிகம்' கருதி, ஒரு ஆலோசனை என்ற பெயரில் சில குறைகளைச் சொல்லியிருக்கிறார்கள். முதல்வர் அவர்கள் அவற்றை நல்ல முறையிலே எடுத்துக்கொண்டு, அவர்களுக்கு விளக்கங்களைச் சொல்வார்கள் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிக்கையிலே குறிப்பிட்டிருந்தார்கள்: "This is a friendly budget" என்று குறிப்பிட்டு, அதிலே எழுதியிருந்தார்கள். "With an eye on the poor and middle income groups...." தலைவர் பெயரைச் சொல்கிறேன்; சொல்வதற்கு மன்னிக்கவும், "Mr. Karunanidhi announced sales tax exemption to a range of edible oils" என்று குறிப்பிட்டிருந்தார்கள். அதற்குப் பின்னால், "The Budget has gone soft on software industry. In a bid to boost the industry, Mr. Karunanidhi has provided total tax exemption to computer software", என்று அதிலே குறிப்பிட்டிருந்தார்கள். அதற்குப் பின்னால், "The Budget will certainly be welcomed by small traders". என்றும் அதிலே குறிப்பிட்டிருந்தார்கள். இன்று வந்த அந்தப் பத்திரிகையிலே குறிப்பிட்டு இருக்கிறார்கள்: "Though there were mixed reactions from political leaders, the Budget for 1998-99 presented by Chief Minister Mr. Karunanidhi was well-comed by people, academicians, economists and the working class", என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அதேபோன்று, 'இந்து' பத்திரிகையிலே, 'Trade and Industry' என்று தலைப்பிட்டு, பல்வேறு துறைகளிலே இருக்கிறவர்களும் இதை வரவேற்றதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். "The Madras Chamber of

[திரு. குழந்தை தமிழரசன்] [1998 மார்ச் 30

Commerce and Industry said that the Budget had rightly laid emphasis on rural, agricultural and social developments."

The Southern Indian Chamber of Commerce, the President of Hindustan Chamber of Commerce, Andhra Chamber of Commerce, All India Manufacturers Association, National Chamber of Commerce, Electronic Trade Association ஆகிய பலதரப்பட்ட வியாபாரத் துறையிலே இருக்கிற அத்தனை முன்னணித் தலைவர்களும், இந்த நிதிநிலை அறிக்கையைப் பெரிதும் வரவேற்றிருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்படி எல்லோரும் வரவேற்கிறபோது, சிலர் முற்றிலுமாக இதைக் குறைகூறி, கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். கிராமத்திலே பேசுவார்கள்; முறைதவறி யாராவது பேசினால், நியாயம் தவறிப் பேசினால், சொல்வார்கள்: "இவர்கள் எல்லாம் மண்டையிலே மசாலா இல்லாமல் பேசுகிறார்களோ!" என்று சொல்வார்கள். கிராமத்திலேயும் சொல்வார்கள், நகரத்திலேயும் சொல்வார்கள். இதையெல்லாம் உணர்ந்து பார்த்துத்தான், நம்முடைய தலைவர் அவர்கள், மசாலாவிற்கு அதிகமான அளவிற்கு வரிக்குறைப்புச் செய்திருக்கிறார்கள். நான் பணிவோடு கேட்டுக்கொள்வது, சிலபேர் குறை கூறுகிறார்களே, அவர்கள் எல்லாம் தங்களுடைய உணவிலே இனிமேலாவது, விலை குறைந்துவிட்ட காரணத்தினால், மசாலாவை அதிகமாக வாங்கிச் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் சில பேர், 'தங்கள் வீட்டுக்காரி நல்ல பிள்ளை பெற்றுவிட்டால், எதிர்த்த வீட்டுக்காரி இடுப்பிலே எடுத்துக் குட்டிக்கொள்வதைப்' போல, தமிழ்நாட்டிலே, நம்முடைய முதல்வர் அவர்கள், சிறந்த நிதிநிலை அறிக்கையை, எல்லாத் தரப்பு மக்களும் விரும்புகிற அறிக்கையாகக் கொடுத்துவிட்டார் என்பதற்காக சில காந்தாரிகள், தங்களுடைய வயிற்றிலே அடித்து, எடுத்து இடித்துக்கொள்கிறார்கள். அது ஏன் என்பதை மக்கள் புரிந்துகொள்வார்கள் என்பதை நான் இந்தநேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

'பசி வந்தால் பத்தும் பறந்துபோகும்' என்று சொல்வார்கள். இந்தப் பத்தாவது நிதிநிலை அறிக்கை வந்ததால், தமிழ்நாட்டிலே இருந்து பசியே பறந்துபோய் இருக்கிறது. முன்பெல்லாம் பள்ளியிலே படிக்கின்ற மாணவர்களுக்கு 15 நாட்களுக்கு ஒரு முட்டையை மாண்புமிகு முதல்வர்



1998 மார்ச் 30] [திரு. குழந்தை தமிழரசன்]

அவர்கள் வழங்கி வந்தார்கள். இந்த நிதிநிலை அறிக்கை மூலமாக வாரத்திற்கு ஒரு முட்டை வழங்க வேண்டுமென்று உத்தரவு போட்டு பள்ளிச் சிறார்களுடைய உணவிலே உண்மையான சத்துணவை வழங்கியிருக்கிறார்கள். அது இரண்டு விதங்களிலே பொருளாதாரத்தை மேம்படுத்தியிருக்கிறது. கோழி வளர்ப்பவர்களை ஆதரிக்கின்ற விதத்திலேயும் இந்த நிதிநிலை அறிக்கை வந்திருக்கிறது.

பிற்பகல் 12-55

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 15 நிமிடங்களாவது கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதெல்லாம் முடியாது, ஒரு நிமிடத்தில் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த பட்ஜெட் ஒரு வரிக்குதிரை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் பட்ஜெட் சிறப்பைப் பற்றியே கூறிக்கொண்டிருக்கிறீர்கள். எனவே 10 நிமிடங்கள்தான் உங்களுக்கு.

**திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பட்ஜெட் ஒரு வரிக்குதிரை. வரிக்குதிரையின் மீதிருக்கிற அந்த வரிகளை அழிக்கமுடியாது. ஆனால் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழ்நாட்டிலே பல பொருட்கள் மீதிருந்த வரிகளைத் தன் கை கொண்டு அழித்திருக்கிறார்கள் என்பதைப் பெருமைபட நான் இந்தநேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலே தாய்மார்கள் சமையலுக்கு உபயோகப்படுத்தும் கடலை எண்ணெய், தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய், சூரியகாந்தி எண்ணெய், சுத்திகரிக்கப்பட்ட அத்தனை எண்ணெய்களுக்கும் முற்றிலுமாக வரி விலக்கு அளித்துள்ளார்கள்.

அதேபோன்று, விழியினிடையே பொருத்தப்படும் ஆழி (Intra Occular Lens), மருத்துவத்திற்குப் பயன்படுத்தப்படும் காசினிக் கீரை, மென்பொருள்கள்—Software—21 ஆம் நூற்றாண்டை நோக்கி நாம் சென்று கொண்டிருக்கிறோம். இந்த 21 ஆம் நூற்றாண்டில் கம்ப்யூட்டர்

[திரு. குழந்தை தமிழரசன்] [1998 மார்ச் 30

இல்லாத இடமே இல்லை என்கிற அளவுக்கு கம்ப்யூட்டர் யுகம் இருக்கின்ற காரணத்தினால் அந்தத் துறையை வளர்க்க வேண்டும் என்ற நோக்கத்தில் மென்பொருள் போன்றவைகளுக்கு முற்றிலுமாக வரி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. Hallow blocks-க்கு 16 சதவீதத்திலிருந்து 4 சதவீதம் வரிக் குறைப்பு, பட்டாணிமாவு, தோலிலை, குருணைக்கு வரி விலக்கு, இரப்பர் தொழிலுக்கு வரி விலக்கு, மாணவர்கள் பயன்படுத்தும் நோட்டுப் புத்தகங்களுக்கு வரி விலக்கு, சிறு வியாபாரிகள் 19,000 பேர் நன்மையடையக்கூடிய அளவுக்கு வரி விலக்கு, பேக்கர் உணவு வகை, மசாலாப் பொடி, ஐஸ்கிரீம், தவிடு நீக்கிய எண்ணெய், ஆகியவற்றிற்கும் வரிச் சலுகை முற்றிலுமாகக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அறியாமை மீது மாண்புமிகு முதல்வர் அவர்கள் தன்னுடைய தாக்குதலை, தொடுத்திருக்கிறார்கள். அதை நான் சொல்வதற்குக் காரணம், பள்ளியிலே, கிராமத்திலே இருக்கின்ற மாணவர்கள், சிறார்கள் நல்லமுறையில் படித்தால்தான் இந்த உலகத்திலிருந்து அறியாமையை விரட்ட முடியும். அந்த அடிப்படையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள், 5 ஆம் வகுப்பு வரை படிக்கின்ற மாணவர்களுக்கு இலவசப் புத்தகங்களை வழங்க வேண்டுமென்று உத்தரவு போட்டிருக்கிறார்கள். அதை இந்தத் தமிழக மக்கள் எல்லாம், கிராமத்து மக்கள் எல்லாம் வரவேற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

அதேபோன்று இந்தத் தமிழ்நாட்டிலே இருக்கிற குக்கிராமங்கள் எதிலும் ஆரம்பப் பள்ளிகளே இல்லை என்று சொல்ல முடியாத அளவ்க்கு நிலைமையை மாற்றிட வேண்டும் என்ற அடிப்படையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த வருடம் தமிழ்நாட்டிலே 300 கிராமங்களிலே பள்ளிக்கூடங்களும், வருகிற ஆண்டில் 4 இடங்களில் தொடக்கப் பள்ளிகளும் தொடங்குவதற்கு உத்தரவு போட்டிருக்கிறார்கள். சென்ற ஆண்டு கல்விக்காக நம்முடைய முதல்வர் அவர்கள் 2938 கோடி ரூபாய் ஒதுக்கினார்கள். ஆனால் இந்த ஆண்டு 3568 கோடி ரூபாய் அதற்காக ஒதுக்கியிருக்கிறார்கள். கிட்டத்தட்ட 630 கோடி ரூபாயை மிக அதிகமாக ஒதுக்கிக் கொடுத்திருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது)

தொகுதி பற்றி நிறைய விஷயங்களைச் சொல்ல வேண்டும். தலைவர் போட்ட திட்டங்கள்தான். நிறைய விஷயங்கள் சொல்ல வேண்டும். அதற்காகத்தான் சொல்கிறேன்.



1998 மார்ச் 30]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரமில்லை, அடுத்துப் பேசுகின்றவர்கள் பேசிக் கொள்வார்கள். ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏழையெளிய மக்களுடைய வாழ்க்கையை மேம்படுத்துகிற அளவுக்கு முதல்வர் அவர்கள் திட்டமிட்டிருக்கிறார்கள். அதேபோல, சமூகப் பாதுகாப்புத் திட்டம் என்ற அடிப்படையில் விதவைகள், மீனவர்கள், நெசவாளர்கள், நிலமற்ற விவசாயிகள், மற்றவர்களுக்கெல்லாம் 100-லிருந்து 150 ரூபாய் வரை உதவிப் பணத்தை உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் வட்ட அலுவலகம் சென்று அந்தத் தொகையை வாங்கும்போது பல இடர்ப்பாடுகள் இருக்கின்றன. அதற்காக ஒரே ஒரு அதிகாரிதான் இருக்கிறார். எனவே நான் மாண்புமிகு முதல்வர் அவர்களை வேண்டுகிறேன். இந்த நிதியை வழங்குவதற்கு வட்ட அலுவலகத்தில் அதிகமான அதிகாரிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். ஏனென்றால் மூன்று மாதத்திற்கு ஒருமுறைகூட அந்த மக்களுக்கு அந்தப் பணம் போய்ச் சேருவதில்லை. போஸ்ட் ஆபீசிலும் அந்தப் பணத்தை எடுப்பது என்றாலே கொஞ்சம் சுணக்கம் காட்டுகிறார்கள். இதை மாற்றுவதற்குத் தகுந்த வழிவகையைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, மகனிருந்தால் விதவைத் தாய்க்குப் பணம் கொடுப்பதில்லை என்ற ஒரு உத்தரவு இருக்கிறது. இந்த மன்றத்திலே நான் ஒரு கேள்வி அதுசம்பந்தமாக வைத்திருந்தேன். மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் அதிலே கலந்து கொண்டு கேட்டார்கள். அந்த நேரத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதுபற்றி பட்ஜெட்டிலே அறிவிப்பதாக அறிவித்தார்கள். எனவே மகனிருந்தாலும் பரவாயில்லை என்று, அதை மாற்றி அப்படிப்பட்ட விதவைத் தாய்மார்களுக்கு மாதம் 150 ரூபாயை வழங்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன். தொகுதியைப்பற்றி ஒரே ஒரு நிமிடத்தில் சொல்லிவிடுகிறேன்.

என்னுடைய தொகுதியான விருத்தாசலத்தில் மிக அடிப்படையான மூன்று பிரச்சினைகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். விருத்தாசலம் தொகுதி ஒரு நதியால் இரண்டு பக்கமாக, பிரிக்கப்பட்டுள்ளது. மணிமுத்தாறு மேற்கு, கிழக்கு என்று. எனவே, அங்கே போக்குவரத்தைக் கருத்தில் கொண்டு இந்த வருடம் ஒரு பை-பாஸ் சாலை அமைத்துத் தர

[திரு. குழந்தை தமிழரசன்] [1998 மார்ச் 30

வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இந்த மாநிலத்தினுடைய முதன்மைப் பொறியாளர் அவர்கள் விருத்தாசலத்திலே அந்த இடத்தைப் பார்வையிட்டுவிட்டு வந்திருக்கின்றார்கள். எனவே, அதற்கு ஏற்பாடு செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று, விருத்தாசலத்திலே போக்குவரத்துக் காவல் நிலையமும் மகளிர் காவல் நிலையமும் இந்த ஆண்டு ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 4½ கோடி ரூபாயில் விருத்தாசலத்தில் 'டான்செம்'—தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் மூலமாக தொழிற்சாலை தொடங்குவதற்கு அரசு அதிகாரிகள் மதிப்பீடு செய்து மாண்புமிகு முதல்வரவர்களுடைய ஒப்புதலுக்காக அனுப்பியிருக்கிறார்கள். எனவே, தொழில் துறை மானியக் கோரிக்கையிலே அங்கே அந்தத் தொழிற்சாலை தொடங்குவதற்கு வாய்ப்பு அளிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-00

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1998-99 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையிலே பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கை, சாதாரண ஏழை எளிய மக்கள், நடுத்தர மக்கள், வியாபாரிகள் போன்றவர்கள் எல்லாம் பாராட்டக்கூடிய நிலையில் அமைந்திருக்கிறது. அதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு தமிழ்நாட்டில் உள்ள விவசாயிகள் ஒரு கஷ்டமான சூழ்நிலையிலே இருந்துகொண்டிருக்கிறார்கள். நான் ஒரு வாரத்திற்கு முன்னால் ஊருக்குச் சென்றிருந்த நேரத்தில் அதைப்பற்றி அறிய முடிந்தது. தென் மாவட்டங்களில் மின்சாரம்—மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 3 கட்டமாக வழங்கப்படுவதாக சொல்லியிருக்கிறார்கள்—இரவு நேரத்தில் 10 மணிக்கு மேல் காலை 6 மணி வரையும், பகல் நேரத்தில் 4 மணி நேரத்திற்கும் மின்சாரம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இரவு நேரங்களில் 10 மணி நேரம் என்ற அளவில் விவசாயிகளுக்கு முழுமையாக மின்சாரம் கிடைப்பதில்லை. அதைப்போல பகல் நேரத்திலும் 4 மணி நேரம் முழுமையாக மின்சாரம் கிடைப்பதில்லை. பகலில் வழங்கப்படும்



1998 மார்ச் 30] [திரு. ரா. ஈஸ்வரன்]

4 மணி நேர மின்சாரத்தை 6 மணி நேரத்திற்கு வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு முதல்வர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், விவசாயிகள் இரவு நேரங்களில் வயல்காட்டிற்குச் சென்று, கண் விழித்து நீர் பாய்ச்சுவதால் அவர்கள் பல்வேறு கஷ்டங்களுக்கு ஆளாகிறார்கள். எனவே, அவர்களுடைய கஷ்டத்தைப் போக்கும் வகையில் பகலில் 6 மணி நேரம் மின்சாரம் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இரவு நேரங்களில் மாணவர்கள் படிப்பதற்கு ஏற்ற வகையிலும், சமையல் வேலை செய்யக்கூடிய பெண்களுக்கு உதவுகின்ற வகையிலும் மின்சாரம் வழங்க ஏற்பாடு செய்யவேண்டும். மேலும், வீட்டிலே இருக்கக்கூடிய மாணவர்கள் மற்றும் பெண்கள் இரவு நேரத்தில் 8 மணியிலிருந்து 9 மணி வரை சன் டி.வி. மற்றும் ரெகுலர் டி.வி. பார்க்க முடியாத சூழ்நிலையில் இருக்கிறார்கள். அதையும் கருத்தில் கொண்டு இரவு நேரங்களில் மின்சாரம் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். ஏனென்றால் மின்சாரம் முக்கியமான தேவையாக இருந்து வருகிறது. வீடுகளில் இருக்கக்கூடிய ஏழை மக்கள் மற்றும் விவசாயிகள் இந்தப் பிரச்சினையை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அடுத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தங்களுடைய தேர்தல் அறிக்கையில், கரும்பு உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகளுக்கு டன் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் கொடுப்பதாக அறிவித்திருந்தார்கள். ஆனால் அந்த விவசாயம் செய்யக்கூடிய இடுபொருட்கள், உரம், வேலை ஆள், வெட்டுக்கூலி போன்றவை கடுமையாக ஏறியிருப்பதால் விவசாயிகள் கடும் பாதிப்புக்கு ஆளாகி இருக்கிறார்கள். எனவே, வருகின்ற காலங்களில் அந்த விவசாயிகளுக்கு டன் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மருத்துவத் துறை, பொறியியல் துறை மற்றும் பாலிடெக்னிக் போன்றவற்றில் படிப்பதற்காகக் கிராமங்களிலிருந்தும், பேரூராட்சிகளிலிருந்தும், நகராட்சிகளிலிருந்தும் மாணவர்கள் செல்கிறார்கள். நீங்கள் கிராமப்புறங்களிலிருந்து சென்று படிக்கக்கூடிய மாணவர்களுக்கு இடஒதுக்கீடு அளிக்கும் கொள்கையை ஏற்றுக்கொண்டிருக்கிறீர்கள். பேரூராட்சிகளிலும், நகராட்சிகளிலும் இருந்து சென்று படிக்கின்ற மாணவர்களின் நிலைமையைக் கருத்தில் கொண்டு, பேரூராட்சியிலிருந்து, நகராட்சியிலிருந்து சென்று படிக்கின்ற

[திரு. ரா. ஈஸ்வரன்] [1998 மார்ச் 30

மாணவர்களையும் கிராமங்களிலிருந்து சென்று படிக்கின்ற மாணவர்களாக ஏற்று அதற்கேற்ப ஆணை வழங்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-05*

அடுத்து, ஆதிதிராவிடர், பழங்குடி மக்களுக்காக அனைத்துத் துறைகளிலும் 19 சதவிகித இட ஒதுக்கீட்டின்படி நியமனம் இருக்க வேண்டுமென்பதை உறுதிப்படுத்த, 110 துறைகளிலும், அந்தத் துறைகளின் செயலாளர்கள், தலைவர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களைத் தாங்கள் நியமனம் செய்து, இதுவரை 80 துறைகள் ஆய்வு செய்யப்பட்டு, சுமார் 662 நபர்களுக்கான இடங்கள் கண்டறியப்பட்டிருக்கின்றன. அதில் இப்போது சுமார் 52 பேர் பணியில் அமர்த்தப்பட்டு உள்ளனர். மீதம் 30 துறைகளில் இன்னும் ஆய்வு செய்யப்பட இருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். அனைத்துத் துறைகளிலும் எப்படிக் காலியிடங்களை ஆராய்ந்து அந்த 19 சதவிகிதம் விடுபட்டதை நிவர்த்தி செய்வதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்களோ, அதேமாதிரி ஆதிதிராவிடர் மக்களுக்கும், பழங்குடியின மக்களுக்கும் பதவி உயர்விலேயும் அவர்களுக்கு இட ஒதுக்கீட்டிற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அவர்களை மிகவும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி என்னுடைய வாசுதேவநல்லூர் சட்டமன்றத் தொகுதியில் இரண்டு தாலுகாக்கள் இருக்கின்றன. ஒன்று சிவகிரி தாலுக்கா, இரண்டாவது சங்கரன்கோயில் தாலுக்கா. இந்த இரண்டு தாலுகாக்களுக்கும் நெடுஞ்சாலைத் துறை என்பது ஒரே டிவிஷனாக இருக்கின்றது. சுமார் 740 கி.மீ. இருக்கின்ற இந்த இரண்டு தாலுகாக்களுக்கும் தனித்தனியாக டிவிஷன்களைப் பிரிப்பதற்கு வேண்டிய ஆணையைப் பிறப்பிக்க வேண்டுமென்று மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் மிகுந்த அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த மழைக் காலங்களில் கடுமையாக மழை பெய்து புளியங்குடி மற்றும் சிவகிரி பகுதிகளில் சுமார் 300 விவசாயிகளுக்கும் மேலாக வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு குளங்களில் எல்லாம் இரண்டு அடி, மூன்று அடி அளவிற்கு உடைப்பு ஏற்பட்டிருக்கின்றன. புளியங்குடியில் பாட்டங்குளத்தில் சுமார் 40 விவசாயிகளும், அதுபோல சிவகிரி விசலிங்ககுளத்திலும் உடைப்பு ஏற்பட்டு சுமார் 45 விவசாயிகளும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள்



1998 மார்ச் 30] [திரு. ரா. ஈஸ்வரன்]

பார்வையிட்டும் நிவாரணம் வழங்கப்படவில்லை. இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆகையினால் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் பாதிக்கப்பட்ட அந்த விவசாயிகளுக்கு உடனடியாக நிவாரணம் வழங்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் பொதுப்பணித் துறையிலிருந்து, போன ஆண்டு சுமார் 288 ஏரிகளைப் பழுது பார்ப்பதற்காகவும், தூர் எடுப்பதற்காகவும் அனுமதி வழங்கப்பட்டிருந்தன. அது ஒரு சிறப்பான திட்டமாகும். பல ஆண்டுகளாகப் பல்வேறு குளங்கள் மூடப்பட்டு இருந்தன, மடைகள் அடைக்கப்பட்டிருந்தன, களங்கல் எல்லாம் பழுதடைந்து இருந்தன. இந்த நிலைமையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும் அறிந்து, தொகுதிக்கு ஒரு குளம் என்று 10 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டு இந்தப் பணிகள் எல்லாம் செம்மையாக நல்லமுறையில் நடைபெற்றிருக்கின்றன. இன்னும் அந்தத் திட்டத்தை நீங்கள் விரிவுபடுத்திட வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் கால்வாய்கள், சேனல்கள் எல்லாமே பழுதடைந்து, இந்த ஆண்டு பெய்த மழையில் கடுமையான வெள்ளம் ஏற்பட்டு, அதனை முறையாக மராமத்துச் செய்யாத காரணத்தினால் உடைப்புகள் ஏற்பட்டு விவசாயிகளுக்குக் கடுமையான பாதிப்பு ஏற்பட்டிருக்கின்றது. ஆகையினால், இருக்கின்ற கால்வாய்கள், சேனல்கள் மற்றும் ஏரிகளுக்கு முன்னுரிமை கொடுத்து அந்தத் திட்டத்தை மேலும் விரிவுபடுத்திட வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை மிகுந்த அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் உள்ளார் நீர்த்தேக்கத் திட்டம் ஒரு நீண்ட நாள் கோரிக்கையாகும். அந்தத் திட்டம் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குக் கூட 20 ஆம் தேதி நேரிடையாகப் பார்த்து மனுக் கொடுத்துள்ளேன். 1989 ஆம் ஆண்டு இப்போதைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்கூட நேரிடையாக அந்தத் திட்டத்தைப் பார்வையிட்டு, அதற்குப் பிறகு முந்தைய அரசு அதைக் கிடப்பில் போட்டுவிட்டது. ஆகையினால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதற்கு முன்னுரிமை கொடுத்திட வேண்டும். சுமார் 12000 ஏக்கருக்கு மேல் பாசனம் பெறக்கூடிய வாய்ப்பும் இருக்கின்றது. இரண்டு பக்கங்களிலும் மலை இருக்கின்றது. அந்தத் திட்டத்திற்கான மதிப்பீடு

குறைவாக இருக்கின்றது. அங்கு தண்ணீர்த் தேக்கம் அதிகமாக இருக்கக்கூடிய ஒரு நல்ல திட்டம். ஆகையினால் அந்தத் திட்டத்தை இந்த ஆண்டு நிறைவேற்றிக் கொடுக்கவேண்டுமென்று (மணியடிக்கப்பெற்றது) நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை மிகுந்த அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-10*

என்னுடைய தொகுதியில் புளியங்குடி நகராட்சியில் சுமார் 70,000 மக்களுக்கு மேல் இருக்கிறார்கள். அங்கே ஒரு தீயணைப்பு நிலையம் அமைக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் ஏற்கெனவே நான் மனுக் கொடுத்திருக்கிறேன். காவல் துறை மானியத்தின்போது அதை நிறைவேற்றித் தரவேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை மிகுந்த அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

வாசுதேவநல்லூர் காவல் நிலையத்தில், ஆய்வாளர், உதவி ஆய்வாளர், காவலர்கள் மொத்தம் 25 பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு 6 வீடுகள்தான் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் 19 வீடுகள் தேவைப்படுகின்றன.

சிவகிரி காவல் நிலையத்தில் ஆய்வாளர், உதவி ஆய்வாளர், காவலர்கள் என மொத்தம் 30 பேர்கள் இருக்கிறார்கள். இப்போது அவர்களுக்கு 20 வீடுகள்தான் கொடுக்கப்பட்டுள்ளன. மீதம் 10 வீடுகள் தேவைப்படுகின்றன.

புளியங்குடி காவல் நிலையத்தில் 27 பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு இருக்கக்கூடிய வீடுகள் 19 மட்டும்தான். 8 வீடுகள் இன்னும் தேவைப்படுகின்றன. ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த நிதி ஆண்டில் அந்தக் காவலர்களுக்கு வீடு ஒதுக்கிக் கொடுக்க வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், கிராமப்புறங்களில், வாடகை கொடுத்தால்கூட வீடு கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது.

இராஜபாளையத்திலிருந்து திருநெல்வேலி வரை நெடுஞ்சாலையானது ஒரு வழிச் சாலையாக இருக்கிறது. அதை இரு வழிச் சாலையாக ஆக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சுமார் 60 சதவிகிதம் இரு வழிச் சாலையாக உளளது. மீதம் 40 சதவீகிதம் ஒரு வழிச் சாலையாக உள்ளது.



என்னுடைய தொகுதியில், புளியங்குடி நகராட்சி, சங்கரன்கோவில் நகராட்சி என இரண்டு உள்ளன. என்னுடைய தொகுதியிலிருந்து 15 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கின்றன. அந்த 15 கிலோ மீட்டரில் 4 கிலோ மீட்டர் இரு வழிச் சாலையாக இருக்கிறது. இன்னும் 11 கிலோ மீட்டர் இரு வழிச் சாலையாக ஆக்கப்பட வேண்டும். ஏனென்றால், இரண்டுமே நகராட்சிகள். நிறையப் போக்குவரத்து உள்ள இடங்கள். நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்னால் எப்படி ஒரு வழிச் சாலையாக இருந்ததோ, அதுபோலவே இன்னமும் இருக்கிறது. எனவே, அதை இரு வழிச் சாலையாக ஆக்கித்தர ஏற்பாடு செய்யவேண்டுமென்று மிகுந்த அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து.....

**திரு. ரா. ஈஸ்வரன்:** துணைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடத்தில் பேசி முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** வணிகச் சின்னம் உள்ள மசலாப் பொடிகளுக்கு 4 சதவீதம் வரி விதித்திருக்கிறீர்கள். அதை 1 சதவிகிதமாகக் குறைக்க வேண்டும். வணிகச் சின்னம் இல்லாத மசாலாப் பொடிகளுக்கு வரியை அறவே நீக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, தேங்காய்க் கொப்பரைக்கு விதிக்கப்படும் வரி 2 சதவிகிதத்திலிருந்து ஒரு சதவிகிதமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. கிராமப்புறங்களில் சாதாரணக் கொப்பரையில் இருந்து தேங்காய் எண்ணெய் காய்ச்சப்படுகிறது. எனவே, அதற்கும் வரியை அறவே நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதி வாசுதேவநல்லூரில், நெடுஞ்சாலைத் துறையில் சுமார் 20 கி.மீ. தூரம் நெடுஞ்சாலை ரொம்பவும் மோசமாக உள்ளது. அதைச் சீர் செய்வதற்கு நிதியுதவி வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இராஜபாளையம் முதல் புளியங்குடி வரை நெடுஞ்சாலையில் பெரிய பாலங்கள் பழுதடைந்துள்ளன. கடந்த ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தில் மிகவும் மோசமடைந்து விட்டன. செங்கோட்டை, குற்றாலம் மற்றும் கேரள மாநிலத்திற்கு அவ்வழியாகப் பேருந்துகள் நிறையச் செல்லுகின்றன. எனவே, அவற்றிற்கு முன்னுரிமை கொடுத்து, அந்தப் பாலங்களைப் புதுப்பிக்க நிதி உதவி செய்திட வேண்டுமாய் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை மிகுந்த அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.....

[1998 மார்ச் 30

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. செங்கை சிவம்.

***திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1998-99 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேசுவதற்கு வாய்ப்பளித்த அன்புத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், தங்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கை கலைஞருடைய அட்சய பாரத்திரமாக, ஏழை எளிய மக்களுடைய நோய் தீர்க்கும், பிணி தீர்க்கும் மாமருந்தாக அமைந்திருப்பதோடு மட்டுமல்லாமல், பெருமிதப் பகட்டான திட்டங்களை மேற்கொள்வதற்கு முன்னுரிமை தருவதைத் தவிர்த்து, பொது மக்களுக்கு அத்தியாவசியமான உணவு, உடை, உறைவிடம், குடிநீர், சாலைகள், கல்வி, சுகாதாரம் போன்ற திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. அதுமட்டுமல்லாமல், சமையல் எண்ணெய்க்கு முழுமையாக வரி விலக்கு, மாணவர்கள் பயன்படுத்துகிற நோட்டுப் புத்தகங்களுக்கு வரி விலக்கு, மசாலா போன்ற பொருட்களுக்கு வரிக் குறைப்பு போன்றவை வரவேற்கத்தக்கது. அதுமட்டுமல்லாமல், பஸ் கட்டண உயர்வை ஒரு கிலோ மீட்டருக்கு இரண்டு காசாகக் குறைத்து, இன்றைக்கு அனைவரும் பாராட்டுகின்ற வகையிலே முதல்வர் அவர்கள் அறிவித்து இருப்பது வரவேற்கத்தக்கது.

*பிற்பகல் 1-15*

அடுத்து, நம்முடைய தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே விதி 110-ன்கிழ் ஓர் அறிக்கை வைத்தார்கள். கடந்த 21 மாத காலமாக மூடியிருந்த பி. & சி. பஞ்சாலை என்னுடைய பெரம்பூர் தொகுதியிலே அமைந்திருக்கிறது. அந்தப் பஞ்சாலைத் தொழிலாளர்களுடைய அவதியைப் போக்குகின்ற வண்ணம் குறிப்பாக நம்முடைய முதல்வர் அவர்கள் 8 முறை பேசினார்கள். கடந்த சனிக்கிழமை மட்டும் 3 மணி நேரம், 3½ மணி நேரம் அமர்ந்து, இந்த ஒரு பிரச்சினையைப் பற்றி மட்டும் முழுக்க முழுக்கத் தொழிலாளர்களுக்காகவே பேசினார்கள். இப்போது அந்தப் பிரச்சினை தீர்க்கப்பட்டு, ஓய்வு பெறுபவருக்கு நட்ட ஈட்டுத் தொகையாக 1 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் அளிப்பது, கிராஜுவிட்டி அளிப்பது போன்ற பல நன்மைகளைத் தொழிலாளர்களுக்கு அறிவித்திருப்பதை நான் வரவேற்கிறேன்.



1998 மார்ச் 30] [திரு. செங்கை சிவம்]

இது என் தொகுதியில் எனக்கு இருக்கின்ற பெரும் பிரச்சினையாகும். சென்னையிலே இருக்கின்ற அந்தப் பெரிய பிரச்சினையைத் தீர்த்து வைத்த நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்களுக்கும், இதற்கு உறுதுணையாக இருந்த நம்முடைய சுகாதாரத் துறை அமைச்சர் மாண்புமிகு ஆற்காட்டார் அவர்களுக்கும், தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அருமை மாண்புமிகு இரகுமான்கான் அவர்களுக்கும் இந்த நேரத்தில் மக்கள் சார்பாக, தொழிலாளிகளின் சார்பாக என்னுடைய மனமார்ந்த வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பெரும்பாலான பின்னி ஆலைத் தொழிலாளர்கள் என்னுடைய தொகுதியிலும் வசிக்கிறார்கள். எனவே, என் தொகுதி சார்பாகவும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. செங்கை சிவம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னையில் உள்ள 14 தொகுதிகளிலும் பின்னி தொழிலாளர்கள் இருக்கிறார்கள், சேப்பாக்கம் உட்பட.

இன்றைக்குத் தனியார் மின் உற்பத்தி நிறுவனங்களுக்கு அரசு அனுமதித்து இருந்தாலும்கூட, பேசின் பிரிட்ஜில் 800 கோடி ரூபாய் செலவிலே 196 மெகாவாட் திறன் கொண்ட மின் உற்பத்தி நிலையம் வருகிற நிதியாண்டில் தொடங்கப்பட இருக்கிறது. உண்மையில் சொல்லப்போனால், கடந்த ஆட்சிக் காலத்தில் எதற்கும் 10 சதவிகிதம், 15 சதவிகிதம் பணம் கொடுத்தால்தான் காரியம் நிறைவேற்ற முடியும் என்ற நிலைமை போய், ஆச்சரியம் என்னவென்றால், குறிப்பிட்டுச் சொன்ன ஆறே மாத காலத்திலே 100 சதவிகிதம் பணிகள் முடிவுற்று, வருகிற நிதியாண்டிலே உற்பத்தி தொடங்க இருக்குமளவுக்குத் திட்டத்தினைச் செயல்படுத்த வழிவகுத்திருக்கின்ற மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், நம்முடைய மின் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, கடந்த 22 மாத காலத்தில் 15,576 கோடி ரூபாய் செலவில், பல தொழிற்சாலைகள் நம்முடைய தமிழ்நாட்டிற்கு வருவதற்குக் காரணமாக இருந்த, நம்முடைய முன்னாள் தொழில் துறை மத்திய அமைச்சர் அருமை முரசொலி மாறன் அவர்களுக்கும், முதல்வர் அவர்களுக்கும் இந்த நேரத்திலே என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின்கீழ், கடந்த ஆண்டு 53,000 பேர் பயன் பெற்றிருக்கிறார்கள். இந்த ஆண்டு 60,000 பெண்கள் பயன்பெறுகின்ற அளவில் உயர்த்தியிருக்கின்ற காரணத்தால், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய முதல்வர் அவர்களின் சீரிய திட்டத்தின்கீழ் 1971-ல் உதயமானது குடிசை மாற்று வாரியம். கடந்த ஆண்டு 2000 வீடுகள் கட்டுவதற்கு அனுமதியும், இந்த ஆண்டு 3000 வீடுகளைக் கட்டுவதற்கு அனுமதியும் வழங்கி இருக்கின்ற முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு, மிகப் பெரிய திட்டம் ஒன்றைக் குடிசை மாற்று வாரியம் 1-2-1998-லே அறிவித்திருக்கிறது. இதற்கு ஏனோ விளம்பரம் இல்லாமல் போய்விட்டது. அது என்ன திட்டம் என்று சொன்னால், 45,000 வீடுகள் நகர்ப்புறத் திட்டம்—எம்.யூ.டி.பி. திட்டத்தின் மூலமாக, விலை நிர்ணயம் செய்யப்பட்டு, அப்படி நிர்ணயம் செய்யப்பட்ட விலைக்கு ஏற்றவாறு ஸ்டாம்ப் டூட்டி செலுத்தி, சேல் டீட் செய்ய வேண்டும். அப்படிச் செய்யவேண்டுமானால் ஒரு வீட்டிற்கு 25,000 ரூபாய் மதிப்பீட்டில் ஸ்டாம்ப் டூட்டி செலுத்த வேண்டும் என்கின்ற நிலை இருந்தது. நம்முடைய அரசு, அமைச்சரவையில் முடிவெடுத்து, கலைஞர் அவர்கள் பெருமிதத்தோடு 1-2-1998-ல் 45,000 வீடுகளுக்கும், ஒவ்வொருவரும் 100 ரூபாய் ஸ்டாம்ப் டூட்டி கட்டினால்போதும் என்ற ஒரு நிலையை உருவாக்கியது குறித்து, சென்னையிலே இருக்கிற குடிசைவாழ் மக்கள் பெரிதும் பாராட்டுகிறார்கள். இதை நம்முடைய குடிசை மாற்று வாரியம் ஒரு விளம்பரமாகச் செய்தால் நலமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

பிற்பகல் 1-20

கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரில், 58 ஆயிரம் அடுக்குமாடி வீடுகளைச் சொந்தமாக ஆக்கிக் கொடுத்து இருக்கிற நம்முடைய கலைஞர் அவர்கள், இன்றைக்கு அந்தத் திட்டங்களை எல்லாம் நிறைவேற்றி இருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், இன்றைக்குக் கிருஷ்ணா நதி நீர்பற்றி இந்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டு இருக்கிறது. 1997-ல் 2.09 டி.எம்.சி கிருஷ்ணா நதி நீர் நமக்கு கிடைத்தது. ஆனால், இடையிலே ஏற்பட்ட குழாய் வெடிப்பின் காரணமாக அல்லது லீக்கேஜின் காரணமாக அந்தப் பணிகள் நிறுத்தப்பட்டு இருந்தாலும்கூட ஜூலை மாதம் மீண்டும் அந்தத் தண்ணீர் கிடைக்கின்ற வாய்ப்பு





இருக்கிறது என்று அறிவிக்கப்பட்டு இருக்கிறது. இருந்தாலும் அந்தக் கிருஷ்ணா நதி நீர் நமக்கு வந்தால், அந்தத் தண்ணீரைச் ரெட்ஹில்ஸ், சோழவரம் போன்ற பகுதிகளில் சேமித்து, அதை சுத்திகரிக்கச் செய்து, சென்னையில் இருக்கிற பட்டேல் நகர், வியாசர்பாடி, கொளத்தூர், சூளைமேடு, நந்தனம், கண்ணப்பர் திடல், வேளச்சேரி, வள்ளுவர் கோட்டம் ஆகிய இடங்களில் மண்டலங்களாகப் பிரித்து நீர் வழங்குகிற மேல்நிலைத் தொட்டிகளைப் பல கோடி ரூபாய் செலவில் அமைக்க இருப்பது மற்றும் என்னுடைய தொகுதியிலே வியாசர்பாடியிலேகூட 13 கோடி ரூபாய் செலவில் மேல்நிலைத் தொட்டி கட்டி, அங்கே தண்ணீரைச் சேகரித்து அனைத்துப் பகுதிகளுக்கும் கொடுப்பதற்காக, 2002-ல் சென்னையில் இருக்கும் ஒருவருக்கு மட்டும் 140 லிட்டர் தண்ணீர் கிடைக்கிற அளவுக்கு இன்றைக்கு வழிவகைகள் செய்யப்பட்டு இருப்பது மிகவும் வரவேற்கத்தக்கது. ஆனால், இன்றைக்கு 70 லிட்டர் தண்ணீர்தான் சென்னையில் இருக்கிற மக்கள் பெற்றுக்கொண்டு இருக்கிறார்கள். அதேநேரத்தில் டில்லி, மும்பை போன்ற பெருநகரங்களில் ஒவ்வொருவருக்கும் 120 லிட்டர் தண்ணீர் நாள் ஒன்றுக்குக் கிடைக்கிறது. எனவே, நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்வது, குறைந்தது இந்தத் தண்ணீர் ஜூலை மாதம் கிடைக்கின்ற அளவுக்கு இருந்தாலும்கூட, அதிகபட்சம் ஒருவருக்கு 100 லிட்டர் தண்ணீர் வீதம் சென்னை மக்களுக்குக் கிடைக்க வழி வகைகள் செய்ய வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

சென்னை கடற்கரையிலிருந்து லஸ் வரையிலே விரைவு இரயிலின் முதலாவது கட்டுமானப் பணிகள் 260 கோடி ரூபாய் செலவிலே நிறைவேற்றப்பட்டன. இரண்டாவது கட்டப் பணிகள்—10.2 கி.மீ. நீளமுள்ள வேளச்சேரி வரையிலான அந்தப் பணிகள் தொடங்கப்பட மதிப்பீடு செய்து இன்றைக்கு தொடங்கப்பட இருக்கிறது. நான் மாண்புமிகு முதல்வர் அவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்வதெல்லாம், மூன்றாவது கட்டமாக வேளச்சேரியிலிருந்து கிண்டி, கிண்டியிலிருந்து கோயம்பேடு, கோயம்பேட்டிலிருந்து வில்லிவாக்கம் வரையிலே ஒரு சர்க்குலர் மெட்ரோ இரயில் விடப்படுமானால், நிச்சயம் சென்னையிலே நெரிசல்கள் குறையும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல், ஆதிதிராவிடர்-பழங்குடியின மக்களுக்குக் கடந்த ஆண்டில் 334 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. ஆனால், நடப்பாண்டிலே

[திரு. செங்கை சிவம்] [1998 மார்ச் 30

434 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, அது கல்வி போன்ற எல்லாப் பணிகளுக்கும் அவர்களுக்கு இன்றைக்குப் பயன்படும் வகையிலே அமைக்கப்பட்டு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் ஒரு நிமிடத்தில் பேசி முடிக்க வேண்டும்.

**திரு. செங்கை சிவம்:** முடித்து விடுகிறேன். இன்றைக்கு அரசுப் பணிகளிலே இருக்கிற தேக்க நிலையைப் போக்கி, அந்த இடங்கள் தாழ்த்தப்பட்ட, பழங்குடியின மக்களுக்கு முழுமையாகப் போய்ச் சேர வேண்டும் என்பதற்காக, ஒரு ஹை பவர் கமிட்டி அமைத்து, அதிலே என்னைப் போன்றவர்களை எல்லாம் உறுப்பினர்களாக்கி, இன்றைக்கு அதன் மூலம் 662 பணியாளர் காலி இடங்கள்—அவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய இடங்கள் கண்டுபிடிக்கப்பட்டு, 54 இடங்களில் பணி நியமனங்கள் செய்யப்பட்டு இருக்கின்றன. ஆனாலும்கூட, இது முழுமையான அளவுக்கு இல்லாத காரணத்தால், நான் என்னுடைய யோசனையாகச் சொல்லிக்கொள்ள விரும்புவது, இது முழுமையாக நிறைவேற்றப்பட வேண்டுமேயானால், பதவி உயர்விலும் இட ஒதுக்கீடு இருந்தால்தான் இதை முழுமையாகச் செய்ய முடியும் என்பதை நான் இந்த நேரத்திலே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

ஆதிதிராவிட மக்களுக்கு என்று இருக்கின்ற தாட்கோ நிறுவனத்திற்கு நீங்கள் தனியாக பேங்க் அந்தஸ்து கொடுத்து வைத்தால்தான், அதன் மூலம் நேரடியாக ஆதிதிராவிட மக்கள் பலன்களைப் பெறுவதற்கான வாய்ப்பு இருக்கும் என்று இந்த நேரத்திலே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

அம்பேத்கர் அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்கப்படும் என்ற ஒரு நிலையை நீங்கள் இந்த நிதிநிலை அறிக்கையில் கொண்டுவந்து இருப்பதை நான் வெகுவாக வரவேற்கிறேன்.

விதவைகள், ஆதரவற்ற பெண்கள், ஊனமுற்றோர் ஆகியோர்களுக்கு உதவித்தொகை ரூ.100-லிருந்து ரூ.150 வரை உயர்த்தி வழங்கி, அது இன்றைக்கு எல்லோருக்கும் கிடைக்க வழிவகை செய்ததை நான் வரவேற்கிறேன்.

அரசு ஊழியர்களுக்கு 40 சதவீத ஊதிய உயர்வு வழங்கியதோடல்லாமல், அவர்கள் கேட்டபடி, அதை 1-1-1996 முதல் ரெட்ராஸ்பெக்டிவ் எஃபக்ட் ஆக வழங்கிய முதல்வர் அவர்களுக்கு



1998 மார்ச் 30] [திரு. செங்கை சிவம்]

இந்த நேரத்தில் அந்த ஊழியர்களின் சார்பாக என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

பிற்பகல் 1-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன். பத்து நிமிடங்களில் பேசி முடிக்கவேண்டும்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் நிதியமைச்சர் என்ற நிலையிலே தன்னுடைய பவள விழா ஆண்டிலே அளித்துள்ள பத்தாவது நிதிநிலை அறிக்கை மீது, அன்புத் தலைவர் ஐயா மூப்பனார் அவர்கள் தோற்றுவித்த தமிழ் மாநில காங்கிரஸ் சார்பிலே பேசுவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

1971 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 25 ஆம் நாள் தன்னுடைய நிதிநிலை அறிக்கையை டாக்டர் கலைஞர் அவர்கள் படைத்தபோது என்ன சொன்னார்கள் என்று படித்துப் பார்த்தேன். 'ஆளுங்கட்சிக்கு வாக்களித்தவர்கள், வாக்களிக்காதவர்கள் அனைவரும் சேர்ந்துள்ளது தான் அரசு. இந்த மன்றத்தின் அகமும் புறமும் கூறப்படும் ஆக்கம் நிறைந்த நல்ல கருத்துக்களையும், மன்றத்தை அணி செய்யும் நல்ல ஆலோசனைகளையும் இவ்வரசு வரவேற்று, அவற்றைக் காய்தல், உவத்தல் இன்றி ஆராய்ந்து ஆவன செய்ய முற்படும்' என்று அவர்கள் அன்றையதினம் அந்த நிதிநிலை அறிக்கையின் முன்னுரையிலே குறிப்பிட்டிருக்கின்றார்கள். அந்த அளவுக்கு மிகுந்த இணக்கமான ஒரு மன நிலையிலே தன்னுடைய பத்தாவது நிதிநிலை அறிக்கையை இங்கே அளித்துள்ள தமிழக முதல்வர் அவர்களுக்கு, தமிழ் மாநிலக் காங்கிரஸ் சார்பாக நான் பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

'பல்வேறு கவர்ச்சித் திட்டங்களை அறிவிக்கும் நிதிநிலை அறிக்கையாக இருக்கிறதே தவிர' என்று ஆரம்பித்து, முன்னாள் முதலமைச்சர் குறை கூறியிருக்கிறார்கள். கவர்ச்சித் திட்டங்கள் என்று சொன்னதன் மூலமாக, கலைஞர் அவர்களுடைய நிதிநிலை அறிக்கை மக்களைக் கவர்ந்த பட்ஜெட் என்று அவர்கள் ஒப்புதல் வாக்குமூலமாக அளித்திருக்கிறார்கள் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இது இதயசுத்தியோடு சமர்ப்பிக்கப்பட்ட பட்ஜெட் இல்லை என்று இன்னொரு தலைவர் கூறியிருக்கிறார். இதயசுத்தி யாருக்கு வேண்டும்

என்று அவரும் எண்ணிப் பார்க்க வேண்டும். சாதாரண மக்களுக்கு, ஏழை எளிய மக்களுக்கு, நடுத்தர மக்களுக்குப் பயன்படக்கூடிய பட்ஜெட்டாக இருக்கிறது என்பதைப் பலரும், பத்திரிகைகளும், பாராட்டுகிறார்கள். கலைஞர் அவர்களின் இந்த நூலின் முன்னுரையை இந்த நேரத்தில் சற்று நினைத்துப் பார்க்கின்றேன். 'நாடாளும் பொறுப்பை மக்கள் மீண்டும் நாலாவது முறையாக என்னிடம் வழங்கியுள்ள நிலையில், நாலாவது பாகத்தை, அதாவது தன் சுய வரலாற்றுப் புத்தகத்தை நானே எழுதுவேனோ அல்லது நான் எழுதாமலேயே நாட்டு மக்கள் இதயத்தில் இந்த வரலாற்றுக் குறிப்புகள் வரிகளாக வடிவம் கொள்ளுமோ, அதை நிர்ணயிக்கப்போவது இயற்கைதானே' என்று ஏக்கத்தோடு, ஒரு இதயசுத்தியோடு கலைஞர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள். அவர் சொல்கின்ற இயற்கையும், நான் நம்புகின்ற இறைவனும் அந்த வாய்ப்பினை அவருக்கு நிறைவாக நல்கவேண்டுமென்று வாழ்த்துகின்றேன், வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பல்வேறு சிறந்த திட்டங்களை — இல்லத்தரசிகள் எல்லாம் மகிழும் வண்ணம், சமையல் எண்ணெய்க்கு வரி விலக்கு, 1 முதல் 5 ஆவது வகுப்பு வரை படிக்கின்ற சிறார்களுக்கு இலவசப் பாடப் புத்தகங்கள் என்பன போன்ற, பல்வேறு மக்களுக்குப் பயன் அளிக்கக்கூடிய திட்டங்களை இதில் அறிவித்திருக்கிறார்கள். அதே நேரத்திலே தமிழ் நூல்களுக்கு எல்லாம் முன்னோடியாக விளங்கிய அமரர் கல்கி அவர்களுடைய நூல்களையும், மணவழகர் என்று போற்றிப் பாராட்டத்தக்க அளவுக்குத் திழந்த திரு.வி.க. அவர்களுடைய நூல்களையும் அரசுடைமையாக்கி, இந்த அரசு தமிழுக்கும், தமிழர்களுக்கும் சிறப்புச் செய்திருக்கிறது.

இந்த நேரத்தில் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். நம்முடைய பாரதப் பிரதமர் திரு. வாஜ்பாய் அவர்கள் இரண்டு தினங்களுக்கு முன்பு கூறிய கூற்று ஒன்றை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். பலமான மத்திய அரசு தேவை என்பதைப் போல, பலமான மாநில அரசும் தேவை என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இன்றைய தமிழக அரசைவிட ஒரு பலமான மாநில அரசு இனிமேல் அமைய முடியாது என்பதை அவர் எண்ணிப் பார்த்துத்தான் இதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

ஆனால் புதிதாகப் பொறுப்பேற்றிருக்கின்ற மத்திய அமைச்சர் ஒருவர் சொல்லியிருக்கிறார். 'தமிழ்நாட்டில் தட்டினால் தங்கம், வெட்டினால் வெள்ளி என்று இருந்த நிலையில், இப்போது தோண்டினால்



வெடிகுண்டு' என்று திருவாய் மலர்ந்து அருளியிருக்கிறார்கள். ஒருவேளை இப்போது அவர் உறவு வைத்திருக்கிற இடத்தில் வேண்டுமானால், வெட்டினால் வெள்ளி கிடைக்கலாம். தோண்டினால் தங்கம் கிடைக்கலாம். ஆனால் அதற்காக இப்போது இந்த அரசு எடுக்கின்ற கடுமையான நடவடிக்கைகளைப் பாராட்ட மனமில்லாமல், ஒரு பொறுப்புள்ள மத்திய அமைச்சர் இவ்வாறு கூறுவது நம்முடைய தமிழக மக்களைத் திசை திருப்புவதாகும் என்பதைக் கூறிக் கொள்கிறேன். இந்த அரசு இரும்புக் கரம் கொண்டு எடுக்கும் நடவடிக்கைகளை, அவசரச் சூழ்நிலைகளை அனுசரித்துக் காவல் துறை எடுக்கின்ற நடவடிக்கைகளை அந்த மத்திய அமைச்சர் அவர்கள் மனம் திறந்து பாராட்டியிருக்க வேண்டும். அதுதான் முறையும் கூட. அதைவிடுத்து, குறை சொல்வது பொருத்தமாக இருக்காது என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

நிறைகளைப் பாராட்டுகின்ற அதே நேரத்தில், நம்முடைய துறைகளில் இருக்கின்ற அதிகாரிகள் காட்டுகின்ற மெத்தனத்தை இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். பொதுவாக, பத்திரிகைகளைப் பொறுத்தவரையில் நம்முடைய....

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்அனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசாங்கம் செய்கின்ற பல்வேறு திட்டங்கள் பற்றித் தவறுதலான ஒரு பிரச்சாரம் செய்யப்பட்டு வருகிறது. எனக்கு முன்னால் பேசிய எங்கள் கட்சியின் பொருளாளர் திரு. டி. சுதர்சனம் அவர்கள்கூட, 300 மெகாவாட் மின்சாரம் கிடைப்பதற்குக் காரணமானவர் முன்னாள் முதலமைச்சர்தான் என்ற ஒரு தவறான பிரச்சாரத்தை முறியடிக்கும் வண்ணம் அவர்கள் பேசினார்கள். அதற்குத் தகுந்த விளக்கத்தை நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்கள் அளித்தார்கள். அதே நேரத்தில் ஒரு வாரப் பத்திரிகையிலே, வாரம் இருமுறை வெளிவரும் ஒரு பத்திரிகையிலே கிருஷ்ணா நதி நீர் நம்முடைய சென்னைக்கு வரவேயில்லை என்று சொல்லும் வண்ணம் ஒரு பாக்ஸ் செய்தியைப் போட்டு நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதாக அவர்கள் ஒரு கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். கிருஷ்ணா நதி நீர்...

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கே, எப்போது நான் சொன்னேன் என்று குறிப்பிலே இருக்கிறதா? நான் அந்த மாதிரி எப்போதும் சொன்னதேயில்லை.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆனால் நீங்கள் சொன்னதாகச் சித்தரித்து ஒரு தவறான கருத்தினை நம்முடைய அரசின் மீது சிலர் திட்டமிட்டுப் பரப்பி வருகிறார்கள் என்பதற்காகக் குறிப்பிட்டேன். அப்படி அந்தத் தவறான எண்ணங்களைத் தமிழக மக்களிடமிருந்து போக்கும் வண்ணம் ஒரு விவரமான அறிக்கையினை, கிருஷ்ணா நதி நீர் பற்றி, நம்முடைய சபையிலே வைக்கலாம் என்பதை நான் என்னுடைய ஆலோசனையைக் கூற விரும்புகிறேன்.

மின்சாரத்தைப் பொறுத்தவரையில், 'சம்சாரம் இல்லாமல்கூட இருக்கலாம், ஆனால் மின்சாரம் இல்லாமல் இருக்க முடியாது' என்கின்ற நிலைமை இன்றைக்கு இருக்கின்றது. அதே நேரத்திலே, நாங்கள் மருத்துவத்திலே சொல்லுவோம்; நாடியைப் பற்றிச் சொல்லும்போது 'Regularly regular; irregularly irregular' என்று சொல்லுவோம். அதேபோன்று மின்சாரம் இப்போது irregularly irregular ஆக, ஒழுக்கம் இல்லாமல் ஒழுக்கம் இல்லாமல் இருந்துகொண்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். பல வல்லுநர்களுடைய ஆலோசனைகளைக் கேட்டு இதை உடனடியாகச் சீர் செய்ய வேண்டுமென்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தனியார் துறையிலே இருக்கின்ற பல்வேறு captive plans அவர்களிடத்திலே இருக்கிற அந்த உற்பத்தித் திறனைப் பயன்படுத்தி, சாதாரண மக்களுக்கு, டொமஸ்டிக் கரண்ட் என்று சொல்லப்படுகின்ற, வீடுகளுக்கு வழங்குகின்ற மின்சாரத்தைச் சரி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல நீண்ட காலத் திட்டங்களை நாம் மனதில்கொண்டு நிறைவேற்ற வேண்டும். Time server என்று சொல்லப்படுகின்ற உடனடித் திட்டங்களைச் செயல்படுத்துகின்ற அளவில் நிலக்கரியைத் துணையாகக் கொண்டு செயல்பட வேண்டிய வட சென்னை, தூத்துக்குடி போன்ற திட்டங்களை நாம் முக்கியமாகச் செயல்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொரு முக்கியமான பிரச்சினையைப் பற்றியும் இங்கே நான் குறிப்பிட்டாக வேண்டும். 1991 ஆம் ஆண்டு தேர்தலின்போது நம்முடைய





தமிழக முதலமைச்சர் அவர்கள் விசைத்தறிப் பிரச்சினை குறித்து ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்கள். அன்றைக்கும், இன்றைக்கும் வேலூர் மாவட்டச் செயலாளராக இருக்கின்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. முகம்மது சகி அவர்களுக்கும் ஒரு கடிதத்தை எழுதி அதிலே அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள் "விசைத்தறிக்கு மின்சாரம்— நெசவாளர்களுக்கு மனம் மகிழத்தக்க வண்ணம் நான் ஒரு முடிவை எடுத்து அறிவிப்பேன்" என்று அவர்கள் அந்தக் கடிதத்திலே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் ஆந்திராவிலே, நமது அண்டையிலே இருக்கின்ற அந்த மாநிலத்திலே 5 எச்.பி. கொண்ட மோட்டார் களுக்கெல்லாம் 100 பைசா முதல் 120 பைசா வரைதான் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. ஆனால் நம்முடைய மாநிலத்திலே மிகுந்த அளவிலே 250 பைசா வரை வசூலிக்கப்படுகிறது. ஆகவே, இந்தப் பிரச்சினை குறித்து, ஏறக்குறைய 25 இலட்சம் மக்கள் தொகை கொண்ட நெசவாளர் குடும்பங்களுடைய வாழ்வினைக் கருத்தில்கொண்டு, இன்றைக்கு அவர்களுடைய வாழ்விலே சூழ்ந்திருக்கின்ற இருளையகற்றும் வகையிலே நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்கள் இதிலே அதிக அக்கறை எடுத்து, ஒரு சீரான மின் கட்டணம் விதித்து அவர்களுக்கு ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மேலும், கை ரிக்ஷாக்களை நம்முடைய தமிழ் மாநிலத்திலே ஒழித்த பெருமை நம்முடைய முதலமைச்சருக்கு உண்டு. நாங்கள் மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகிரி அவர்கள் தலைமையில், பொதுக் கணக்குக் குழுவின் மூலமாக கல்கத்தாவிற்குச் சென்றபோது அங்கிருக்கின்ற சபாநாயகர் அவர்கள் மிகுந்த அக்கறையோடு கேட்டார்கள்; தமிழகத்திலெல்லாம் எப்படிக் கை ரிக்ஷாவை ஒழித்து விட்டீர்கள் என்று கேட்டார்கள். ஏனென்றால், கல்கத்தாவில் இன்றைக்குக்கூட கை ரிக்ஷா இருக்கிறது. நாங்கள் கேட்டோம், பொதுவுடைமை பாராட்டுகின்ற உங்கள் மாநிலத்திலே கை ரிக்ஷா இன்னும் இருக்கிறதே என்று கேட்டோம். அதற்கு அவர், அங்கே கை ரிக்ஷா இழுப்பவர்கள் எல்லாம் கல்கத்தாக்காரர்கள் அல்ல—வங்காளிகள் அல்ல— அவர்களெல்லாம் பீகாரைச் சேர்ந்தவர்கள் என்று அவர்கள் சொன்னார்கள். ஆகவே, கை ரிக்ஷாக்களை எப்படி சைக்கிள் ரிக்ஷாக்களாக மாற்றினோமோ, அதேபோல அந்த கைத்தறிகளையெல்லாம் விசைத்தறிகளாக மாற்றுகின்ற உயர்ந்த ஒரு நோக்கத்தை, திட்டத்தைத் தமிழக அரசு செயல்படுத்த வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏற்கெனவே இருக்கின்ற கைத்தறிப் பிரச்சினைகளை.....(குறுக்கீடு)

[1998 மார்ச் 30

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்கள் சொல்வது தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியினுடைய கொள்கையா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாடாளுமன்ற மரபிலே உறுப்பினர்களுக்கென்று ஒரு சுதந்திரம் இருக்கிறது. அவர்கள் தொகுதிப் பிரச்சினைகளைப் பேசும்போது, கட்சிக்காக அந்தக் கொள்கை என்று சொல்ல வேண்டிய அவசியம் கிடையாது. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், நீங்கள் தொடர்ந்து பேசுங்கள்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல இடங்களிலே கைத்தறியை விட்டுவிட்டு விசைத்தறிக்குச் செல்லவே முடியாது என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்கள் அந்தப் பிரச்சினையைத் தம்முடைய சொந்தக் கருத்து என்றுகூடச் சொல்லாமல் அதை மறுத்துவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-35*

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கைத்தறியை விசைத்தறியாக மாற்றுவது என்பது மிகப் பெரிய காரியம் இல்லை. ஏனென்று சொன்னால், சாதாரணமாகக் கைத்தறி போட்டவர்கள்தான் இன்றைக்கு விசைத்தறியாளர்களாக மாறிக் கொண்டிருக்கிறார்கள். அதை நான் என்னுடைய சொந்தக் கருத்தாகத்தான் சொல்கிறேன். தமிழ் மாநிலக் காங்கிரஸினுடைய கருத்தாகக்கூட நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருடைய பார்வைக்கு நான் இதைச் சமர்ப்பிக்கின்றேன். கைத்தறி நெசவாளர்கள்தான், இயந்திரமயமாதல் முறையிலே, 1 எச்.பி, அல்லது 1/2 எச்.பி. என்ற அளவிலேதான் தாங்கள் வாழுகின்ற வீட்டிலே, புறக்கடையிலே இருக்கின்ற இடத்திலே, அவர்கள் வாழுகின்ற இடத்திலே, இந்தத் தொழிலைச் செய்கிறார்கள். இது பெரிய தொழிற்சாலை அல்ல, தொழிற்கூடங்கள் அல்ல. சாதாரணமாக இருக்கின்ற ஓட்டு வீடுகளிலே, ஓலை வீடுகளிலேதான் இந்த விசைத்தறி இயங்கிக் கொண்டிருப்பதை என்னுடைய பகுதிக்கு வந்தால் பார்க்கலாம்.

அந்த வகையில், இந்த நிலைமையை ஆராய்ந்து விசைத்தறி நெசவாளர்களுக்கும், அதைப்போல இருக்கின்ற கைத்தறி நெசவாளர்களுக்கும் பல சலுகைகளை தமிழக அரசு செய்ய



1998 மார்ச் 30] [டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்]

வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். 'ரிபேட்' தொகையை உடனடியாக வழங்கி, கைத்தறி நெசவாளர்களையும், கூட்டுறவுச் சங்கங்களின் நெசவாளர்களையும் காப்பாற்ற வேண்டும். அதோடு அந்தந்த ஆண்டு வழங்க வேண்டிய 'ரிபேட்'-ஐ அந்தந்த ஆண்டே வழங்க வேண்டும். நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலே பணிபுரியும் அரசு ஊழியர்களின் சம்பளத்தை அரசு ஏற்க வேண்டும் அல்லது அரசு திரும்பப் பெற்றுக்கொண்டு, தேர்ந்து எடுக்கப்பட்ட நிர்வாகம் முழுமையாகச் செயல்பட ஆவன செய்ய வேண்டும். 3.3 சதவிகித வட்டி மானியம் முழுவதையும் உடனடியாகப் பட்டுவாடா செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திலே இருக்கும் கோ-ஆப்டெக்ஸ் கொள்முதல் ஜவுளிக்கான 'ரிபேட்' தொகையை கோ-ஆப்டெக்ஸே அரசிடம் கோரிப் பெற்றுக்கொள்ள வேண்டும். நஷ்டத்திலே இருக்கும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தணிக்கைக் கட்டணம் செலுத்துவதிலிருந்து வரி விலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல இலவச வேட்டி, சேலைத் திட்டதை முழுமையாகக் கைத்தறிக்கு ஒதுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். சிட்டா நூலுக்கு விதிக்கப்படுகின்ற 2 சதவிகித வரியையும் தமிழக அரசு விலக்கிக்கொண்டு, மற்ற மாநிலங்களில் இருப்பதைப் போல, ஒரு சிறந்த நிர்வாகத்தை உருவாக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கை சிவம் சொன்னதைப் போல, பூந்தமல்லி நெடுஞ்சாலை மார்க்கத்திலே, கல்கத்தாவிலே இருப்பதைப்போன்ற மெட்ரோ ரெயில் திட்டத்தைத் தமிழக அரசு செயல்படுத்தினால், நிச்சயமாக அது பயணிகள் நெருக்கத்தை நெடுஞ்சாலையிலே குறைக்கும் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதிப் பிரச்சினையாக சிலவற்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். நெசவாளப் பெருமக்கள் மிகுந்துள்ள பள்ளிப்பட்டு தொகுதியிலே, கூட்டுறவுத் துறையிலே ஒரு கூட்டுறவு நூற்பாலையைத் துவக்க வேண்டும். அதே நேரத்தில், விவசாயப் பெருமக்கள் நிறைந்திருக்கின்ற ஈச்சலம் பகுதியிலே புதிய கால்நடை மருத்துவமனை ஒன்றை அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை விடுக்க விரும்புகிறேன்.

[டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்] [1998 மார்ச் 30

ஆர்.கே.பேட்டை ஊராட்சி ஒன்றியத்திலே இருக்கின்ற அம்மையார்புரம் கிராமத்திலே ஒரு புதிய புறக்காவல் நிலையத்தைத் தமிழக அரசு இந்த ஆண்டு ஏற்படுத்தித் தர வேண்டும் என்று நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். வட எல்லைத் தியாகிகளைப் பொறுத்தவரையில், தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். ஏறக்குறைய 220 உறுப்பினர்களே இருக்கக்கூடிய அந்தத் தியாகிகளுடைய கோரிக்கையை நிறைவேற்றி, அவர்கள் தங்களுடைய எஞ்சிய வாழ்நாளிலே பலனை அனுபவிக்கும் வண்ணம், அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்க, தமிழக அரசு ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, நலிந்து இருக்கின்ற கூட்டுறவுச் சங்கங்களை, கைத்தறிச் சங்கங்களை மேலும் உயிர்ப்பித்து மிகச் சிறப்பானதொரு நிலையை கைத்தறித் துறையிலே ஏற்படுத்த வேண்டுமென்று தமிழக அரசைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

போக்குவரத்துத் துறையைப் பொறுத்தவரையில், 'மினி பஸ்' என்றவொரு சிறந்த திட்டத்தை சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே தமிழக அரசு அறிமுகப்படுத்தியது. 16 கிலோ மீட்டர் செல்லக்கூடிய இந்த வண்டிகள் திட்டம் வெற்றி பெற்று இருக்கிறதா என்றால் நிச்சயமாக இந்தத் திட்டம் வெற்றி பெறவில்லை என்றுதான் கூற வேண்டும். ஏறக்குறைய 300 விண்ணப்பங்கள் வந்து, 14 சிறிய பேருந்துகளுக்குத்தான் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அதிலே இருக்கின்ற குறைபாடுகளைக் கண்டறிந்து, இந்தச் சிறிய பேருந்துகளை கிராமங்களுக்கிடையே ஓட்ட அனுமதிப்போமேயானால், நிச்சயமாக மிகச் சிறந்த பேருந்து வசதி கிராம மக்களுக்குக் கிட்டும் என்பதில் ஐயமில்லை என்று கூறி, நிறைவான வாய்ப்பை அளித்த தங்களுக்கு நன்றி கூறி என் உரையை நிறைவு செய்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (31-3-1998) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-39 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.



# 11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

70. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தில் 1, 3 மற்றும் 6 ஆகிய அட்டவணைகளில் திருத்தங்கள் செய்வது குறித்து வணிக வரிகள் மற்றும் அறநிலையத் துறையின் 27-3-1998 ஆம் நாளிட்ட 94 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

71. யாதொரு வணிகராலும் சில பொருள்களுக்கென்று செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்கு அளித்தும், சில இனங்களுக்காகச் செலுத்தத்தக்க வரியில் வேறுபாடு செய்தும், வணிக வரிகள் மற்றும் அறநிலையத் துறையின் 27-3-1998 ஆம் நாளிட்ட 95 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

72. இம்மாநிலத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள 100 சதவீதம் ஏற்றுமதி நோக்கம் கொண்ட பிரிவுகள் மற்றும் சென்னை ஏற்பனை விற்பனை மண்டலத்தில் அமைந்துள்ள பிரிவுகள் ஆகியவற்றிற்கு விற்பனை செய்யப்படும் கச்சாப் பொருள்களுக்காக யாதொரு வணிகரும் செலுத்த வேண்டிய வரியைப் பொறுத்தவரையில், வரி விலக்கு அனுமதிப்பது தொடர்பாக, வணிக வரிகள் மற்றும் அறநிலையத் துறையின் 21-11-1997 ஆம் நாளிட்ட 528 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

73. 1996 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிகள் பணி விதிகளை வகுப்பது குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 26-9-1996 ஆம் நாளிட்ட 237 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 432(2) பிரிவு, 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) 431(2) பிரிவு, 1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1994) 11(3) பிரிவு, 1994 ஆம் ஆண்டு திருநெல்வேலி

[1998 மார்ச் 30

மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 28/1994) 11(3) பிரிவு மற்றும் 1994 ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 29/1994) 11(3) பிரிவு ஆகிய பிரிவுகளின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

74. 1996-97 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (சேலம் கோட்டம்-1) லிமிடெட்டின் இருப்பதைந்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

75. 1996-97 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (சேலம் கோட்டம்-2) லிமிடெட்டின் பத்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

76. 1996-97 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம் கோட்டம்-1) லிமிடெட்டின் இருபத்திரெண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

77. 1996-97 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம் கோட்டம்-2) லிமிடெட்டின் பதினைந்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

78. 1996-97 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (மதுரை கோட்டம்-4) லிமிடெட்டின் பதினொன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

79. 1996-97 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (மதுரைக் கோட்டம்-3) லிமிடெட்டின் பதினான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).



1998 மார்ச் 30]

**ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்**

18. 1998-99 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண் 1 முதல் 61 வரையிலான விரிவான மானியக் கோரிக்கைகள் (61 புத்தகங்கள்).

19. 1998-99 ஆம் ஆண்டிற்கான கடன் செலவுகள் குறித்த விரிவான மானியக் கோரிக்கை.

20. 1998-99 ஆம் ஆண்டிற்கான் பொதுக் கடன்—திருப்பிச் செலுத்துதல் குறித்த விரிவான மானியக் கோரிக்கை.

21. 1998-99 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண் 36—பொதுப்பணிகள்—கட்டிடங்கள் குறித்த விவரங்கள் (ஆங்கிலம்)

22. 1998-99 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண் 38—சாலைகள், பாலங்கள் குறித்த விவரங்கள் (ஆங்கிலம்).

23. 1998-99 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண் 55—பொதுப்பணிகள்—கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு மற்றும் பணிகள் குறித்த விவரங்கள் (ஆங்கிலம்).

24. 1998-99 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண் 56—சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு மற்றும் பணிகள் குறித்த விவரங்கள் (ஆங்கிலம்).

25. 1998-99 ஆம் ஆண்டின் வருவாய் குறித்த விரிவான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள்.

26. 1998-99 ஆம் ஆண்டிற்கான ஆண்டு நிதிநிலை அறிக்கை.

27. 1998-99 ஆம் ஆண்டிற்கான நிதி நிலைக் குறிப்பு. (பகுதி 1)

28. 1998-99 ஆம் ஆண்டிற்கான நிதி நிலைக் குறிப்பு (பகுதி 2)

29. 1998-99 ஆம் ஆண்டிற்கான நிதி நிலைக் குறிப்பின் இணைப்புகள்.

30. 1998-99 ஆம் ஆண்டுத் திட்டம் (வரவு-செலவுத் திட்ட இணைப்பு) 1998-99 ஆம் ஆண்டு விரிவான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளின் துணை வெளியீடு.

31. 1998-99 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட உரையின் இணைப்புகள்

[1998 மார்ச் 30

32. 1998-99 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட விளக்க நூல் (தமிழ், ஆங்கிலம்).

33. 1998-99 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு (தமிழ், ஆங்கிலம்).

34. 1998-99 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை குறித்த முதலமைச்சர் மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்).

35. 1998-99 ஆம் ஆண்டின் உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி (தமிழ், ஆங்கிலம்).

36. 1998-99 ஆம் ஆண்டு உடனடிச் செலவுக்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு (தமிழ், ஆங்கிலம்).

37. தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் மற்றும் வணிக வரிகள் மற்றும் அறநிலையத் துறையின் II (1)/வ.வ.அ.நி/22(அ-10)/97 ஆம் அறிவிக்கை திருத்தப்பட்டவாறானதன்கீழ் பதிவு செய்யப்பட்ட வணிகர்களிடமிருந்து வாங்கப்படும் காகிதத்தைப் பயன்படுத்தித் தயாரிக்கப்படும் மாணவர்கள் பயன்படுத்தும் நோட்டுப் புத்தகங்களுக்கும், நகலெடுக்கும் புத்தகங்களுக்கும் 1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனைச் சட்டத்தின்கீழ் செலுத்தத்தக்க வரியைச் செலுத்துவதிலிருந்து விலக்களித்தும் வணிக வரிகள் மற்றும் அறநிலையத் துறையின் 27-03-1998 ஆம் நாளிட்ட 96 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

38. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (ஐந்தாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை).

39. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (ஆறாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை).

—0—

24857.